கா தூண்டேன் தோழி

அருணா



திருமண தடை

★

கா தூண்டேன் தோழி

அருணா ஹரி



நூல் விவர அட்டவணை

நூலின் பெயர்	: கனா கண்டேனடி தோழி
ஆசிரியர்	: அருணா ஹரி
உரிமை	: ஆசிரியருக்கு
மொழி	: தமிழ்
முதல் பதிப்பு	: டிசம்பர், 2012
தாள்	: 11.6 kg. வெள்ளைத் தாள்
நூலின் அளவு	: 1 x 8 கிரவுன்
அச்சு எழுத்து	: 11 புள்ளி
மொத்தப் பக்கங்கள்	: 288
பைண்டிங்	: சாதா அட்டை
நூல் வெளியிடுவோர்	: ஆர்.ஆர். நிலையம் 62/1, முத்து தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014.

விலை: ரூ.120.00

கணினி அச்சு	: வேலன் லேசர் - 94441-01753
அச்சிட்டோர்	: உதயம் ஆப்செட், சென்னை-2.



கனா கண்டேனடி தோழி

ஆசிரியரின் பிற வெளியீடுகள்

கண்டேன் ராதையை	100.00
பூ பூக்கும் தருணம்	90.00
உன்னிடம் மயங்குகிறேன்	115.00
வீணையடி நீ எனக்கு	60.00
திருமகள் தேடி வந்தாள்	50.00

கனா கண்டேனடி தோழி



1

இணையத்தில் ஈ-மெயில் செய்தியைப் படித்த வந்தனா ஒரு நிமிடம் அதிர்ந்து போனாள். அவளால் அந்தச் செய்தியை முழுமையாக நம்ப முடியவில்லை.

ஆனால் அதை ஒன்றுமில்லை என்று ஒதுக்கியப் படுத்தவும் மனம் இடம் கொடுக்கவில்லை.

இது ஒரு பள்ளி மாணவியின் எதிர்காலம் சம்பந்தப் பட்ட விஷயமாயிற்றே? உண்மையோ? பொய்யோ? என்னவென்று பார்க்காவிட்டால் நிம்மதி ஏற்படாது என்று தோன்றிற்று. இருந்தாலும் சட்டென பள்ளி நிர்வாகத்தின் மேல் நடவடிக்கை எடுக்கவும் இயலாது. பள்ளியின் மேல் சுமத்தப்பட்ட பழி உண்மையென

நிருபிக்கப்பட வேண்டும். அப்போதுதான் நடவடிக்கை எடுக்க முடியும்.

மாவட்டத்தில் குறுகிய காலத்தில் பெயர் பெற்ற பள்ளி அது. மாணவர்கள் அங்கே இடம் வாங்க பலத்த போட்டி போட வேண்டி வந்தது. அப்படியிருக்கையில் பள்ளி நிர்வாகமே பொதுத்தேர்வில் பணத்தைப் பெற்றுக்கொண்டு காப்பியடிக்க உதவுமா?

அந்த நோ்மையற்ற செயல் அவர்களின் நற்பெயரை சீர்குலைத்துவிடும் என அவர்களுக்குத் தெரியாதா? அவர்களுக்கு அவப்பெயர் ஏற்படுத்த எதிரிகள் செய்யும் சூழ்ச்சியா? எதிரியின் சூழ்ச்சியாய் இருந்தால்... ம்ஹூம் மெயிலில் பெயர், முகவரி இல்லாத மொட்டைக் கடிதமாய் அது வரவில்லை.

அந்தப் பள்ளியில் படிக்கும் மாணவியே செய்தியை அனுப்பி இருந்தாள். பணத்தைப் பெற்றுக் கொண்டு வேண்டிய மாணவர்களுக்கு தேர்வு எழுத நிர்வாகமே விடைகளை எழுதிக் கொடுப்பதாகவும், அதனால் உண்மையாக உழைத்துப் படிக்கும் தனது இடம் பறி போவதாய் மிகுந்த மன உளைச்சலில் தவிப்பதாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர்தான் இந்த விஷயத்தில் தலையிட்டு காப்பியடிப்பதை தடை செய்து தன் எதிர் காலத்தைக் காப்பாற்ற வேண்டும் என வேண்டி கேட்டுக் கொண்டிருந்தாள்.

மாணவியின் தவிப்பு நியாயமானதுதான். ஆனால் மாணவி உண்மையானவளா? என அறிய வேண்டியிருந்தது. கணினியைத் தட்டி அந்தப் பள்ளியின் தேர்வு எழுதும் மாணவமணிகளின் பெயர் விவரப்பட்டியலை ஆராய்ந்தாள். சரிதான். அவள் பெயரும் தேர்வு

எண்ணும் சரியாய் இருந்தன. இனி தள்ளிப் போடக் கூடாது. நேரில் சென்று அதை ஆய்ந்தே ஆகவேண்டும்.

அது மாவட்ட ஆட்சியாளரான தன் கடமை: ஜீப்பில் ஆய்விற்குப் புறப்பட்டால் அவர்கள் எச்சரிக்கை ஆகி விடுவார்கள். எனவே ஆர்ப்பாட்டமில்லாமல் அமைதியாய் ஒருவருக்கும் சந்தேகம் வராமல் எச்சரிக்கையோடு சென்று உண்மையைக் கண்டறிய வேண்டும் என தீர்மானித்துக் கொண்டாள். அலுவலக காரை விடுத்து தன் தோழியின் காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

வாசலில் நின்ற காவலாளி யாரையும் உள்ளே அனுமதிக்கவில்லை. தேர்வு ஆரம்பிக்கும் வரை சற்று தள்ளியே நின்று கொண்டிருந்துவிட்டு காரை கதவருகே ஓட்டிச் சென்றாள். சன்னல் கதவை கீழ் இறக்குகையில் காவலாளி அவளை அடையாளம் கண்டு தயங்கி, பதறி கதவைத் திறந்தான்.

நுழைந்ததும் இன்டர்காமை உபயோகப்படுத்தக்கூடாது என எச்சரித்துவிட்டு உடன் வந்திருந்த அலுவலர் இருவரில் ஒருவரை அவனருகே நிற்க வைத்துவிட்டு உள்ளே நுழைந்தாள்.

கதவருகே இருந்த மாணவன் கீழே குனிந்திருந்த விதம் சந்தேகத்தை ஏற்படுத்த சட்டென உள்ளே நுழைந்து தேர்வுத்தாளை எடுத்துப் பார்த்தாள். அடியில் விடை எழுதப்பட்ட ஒளிநகல் இருந்தது. எல்லாம் ஒரு மதிப்பெண் விடைகள்.

கையும் களவுமாய் பிடிக்கப்பட்ட மாணவனுடன் அலுவலக அறையை நோக்கி நடந்தாள். தேர்வு ஹாலில் இருந்த ஆசிரியர் பேச்சிழந்து நடுநடுங்கிப் போயிருந்தார். அலுவலகத்தில் நுழைந்த பொழுது மேலும் வசமாக

மாட்டிக் கொள்ளும் நிலையே! ஜெராக்ஸ் இயந்திரத்தில் நகல் எடுக்க வைக்கப்பட்டிருந்த கேள்வித்தாள்; மற்றும் விடைத்தாள் ஒருபுறம் இருந்தது. இன்னொருபுறம் கொத்தாய் மாணவர்களுக்கு தர எடுக்கப்பட்ட விடைத் தாள்களுடன் ஆசிரியர் ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

''எங்கே உங்கள் தலைமை ஆசிரியர்?''

''அவர் விடுப்பில் சென்றிருக்கிறார்.''

''பொறுப்பாசிரியர் எங்கே?''

''உதவி தலைமை ஆசிரியர் தான் பொறுப்பில் இருக் கிறார்.''

''கூப்பிடுங்கள் அவரை.''

காவல் நிலையத்திலிருந்தும், பிரஸ்ஸில் இருந்தும் காவலரும், பத்திரிகையாளரும் வந்து விட்டனர். அரசு ஆசிரியருக்கு உடனடியாக சஸ்பெண்ட் ஆர்டர் கொடுக் கப்பட்டது. தலைமை ஆசிரியர் பொறுப்பில் இருந்த வரை கைது செய்ய உத்தரவிட்டனர். மாணவர்கள் தேர்வு பாதிக்காதவாறு இவ்வளவும் நடந்தேறியது.

மறுநாள் தேர்வு எழுத மாணவர்களுக்கு வேறு இடம் ஏற்பாடு செய்துவிட்டு பள்ளியை மூடி சீல் வைத்தாள். வந்தனாவைச் சுற்றி ப்ளாஷ் லைட்டுகள் மின்னின; கண்களைக் கூச மூடிக் கொண்டாள்.

''வந்தனா அக்கா.''

சடக்கென்று கண்களைத் திறந்தாள். எதிரே சத்யா நின்று கொண்டிருந்தாள். கைகளில் முகம் பார்க்கும் கண்ணாடியை வைத்துக் கொண்டு முகத்தில் ஒளியை அடித்தாள்.

''ஹேய்! என்ன இது சின்னக் குழந்தையாட்டம்?''

''அக்கா சீக்கிரம் பஸ்ஸை விட்டிறங்கு. எல்லாரும் இறங்கி விட்டார்கள். நன்றாக தூங்கிவிட்டாயா?''

''ம்! ஓர் இனிமையான கனவு!''

''என்ன கனவு என நான் சொல்லட்டுமா?''

''ம். கலெக்டராகி அட்வென்ஜர் ஏதாவது செய்திருப் பாய். சரிதானே?''

''ஏய்! எப்படிக் கண்டுபிடித்தாய்?''

''அட போக்கா! எனக்குத் தெரிஞ்சு உனக்கு வரும் ஒரே கனவு கலெக்டர் ஆவதுதான். ம்... உன் கனவில் ஸ்மார்ட்டா யாரும் வரமாட்டாங்களா? ஒரு ரன்பீர்கபீர் வராட்டி கூடப் போகுது. உன்னையே சுத்தி சுத்தி வர்ற கைஸ் ஒருத்தர்கூட இல்லியா?''

''ம்ஹூம். இது சரியில்லை கண்ணம்மா?''

''உன் கனவை ஒருத்தரும் புரிஞ்சுக்கிட்ட மாதிரியே தெரியலை. உன்னை பில் கலெக்டர் ஆகக் கூட அப்பா விடமாட்டார். அவள் சொன்னது உண்மைதான். பெரி யப்பா அவளை பி.ஏ. வரை படிக்க விட்டதே பெரிய விஷயம். அதனால் தான் தன் ஐ.ஏ.எஸ். கனவு நனவாக கோயம்புத்தூரில் இருந்து வேறு ஊருக்கு செல்ல தீர்மானித்து இருந்தாள். மேற்படிப்பு படித்துக் கொண்டே ஐ.ஏ.எஸ்ஸிற்கு தயாராக எண்ணி இருந்தாள்.

ஏற்கனவே ஐ.ஏ.எஸ். முதன்மைத் தேர்வு எழுதியிருந் தாள். எனவே செலவு அதிகம் ஆகாது. ஊரில் ஏதாவது வேலையைத் தேடிக் கொண்டு மேற்படிப்பு படிக்க முடிவு செய்தாள்.

பெரியம்மாவிடம் தன் நிலையைச் சொல்லி எப்படி யாவது சம்மதம் வாங்கிவிட வேண்டும். பெரியப்பா என்றும் அவளை சொந்தமாக என்ன... ஒரு மனுஷியாகவே மதித்தது கிடையாது. ஆதரவற்று அவரை நாடி வந்தவள் எவ்வளவு துன்பங்களை அனுபவித்தாள்!''

''அக்கா! உனக்கு விஷயம் தெரியுமா? வீட்டில் உனக்குக் கல்யாணம் செய்து வைக்க அப்பா ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்.''

என்ன பெரியப்பாவால் அவள் பட்ட அவமானங்கள், கஷ்டங்கள் கொஞ்சம் நஞ்சமல்ல. அப்படிப்பட்டவர் அவளுக்கு திருமணம் செய்து வைப்பாரா என்ன?

ஆனாலும் சொந்த தம்பி மகள் என்ற பாசம் உள்ளுக்குள் இருக்கிறதோ? எதுவும் வேண்டாம். நான் முதலில் படிக்க வேண்டும். கலெக்டர் ஆகவேண்டும். அதுவரையில் வேறு எந்த சிந்தனையும் கிடையாது.

பெரியப்பா பேச்சை மீற முடியாது. பெரியம்மாவின் வார்த்தையை பெரியப்பா கேட்க மாட்டார். ஆனாலும்... கல்யாணத்திற்கு சம்மதிக்கக் கூடாது. ஏதாவது சொல்லி தடுத்துவிட வேண்டும்.

'சே! என்ன முட்டாள்தனமான சிந்தனை?' பெரியப்பா அவ்வளவு சீக்கிரம் செலவு செய்து திருமணம் வைத்து விடுவாரா என்ன? ஆதாயம் இல்லாமல் சுயநலம் இன்றி இன்றுவரை அவர் எதையும் செய்தது இல்லையே? ஒற்றை ரூபாய் கூட அடுத்தவருக்கு தர மனசில்லாதவர். இவளுக்கு மட்டும் கொடுத்து விடுவாரா என்ன? அதனால் எதுவும் நடக்காது. சத்யா தப்பாக எண்ணியிருப்பாள்.

வீட்டிற்குச் சென்றபொழுது சத்யா சொன்னது தப்பில்லை. அவள் எண்ணம் தான் தவறு என்று புரிந்தது. பெரியம்மா வீட்டில் இல்லை. வீடு முழுக்க மாவிலை தோரணமும் மாக்கோலமுமாய் விளங்கியது. ''பண்டிகை என்றாலே உன் வீடு அமர்க்களமாய் பளிரிடும். உனக்குக் கல்யாணம் என்றால் உன் பெரியம்மா சும்மா விடுவாரா என்ன? நீ ரொம்ப அதிர்ஷ்டக்காரிடி! கோடீஸ்வர மாப்பிள்ளை உன்னைப் பார்த்து அசந்து போய் ஜாதகம் பார்த்திருக்கிறார்: நீ கிடைச்சால் அவரோட அதிர்ஷ்டம் அதிகரிக்கும் என்று ஜோசியர் சொன்னதும் உன் பெரியப்பாவை தேடிப்பிடித்து கல்யாணத்திற்கே ஏற்பாடு பண்ணிட்டார். பைசா செலவில்லாமல் கோடீஸ்வரனை எல்லாரும் செய்து கொள்ள முடியுமா? பூர்வ ஜென்மத்தில் புண்ணியம் செய்திருந்தால்தான் நல்ல கணவன் கிடைப்பான். இனியாவது உனக்கு விடிந்தால் சரி.''

''அத்தை என்ன சொல்கிறீர்கள்? நான் மேற்படிப்பிற்காக நுழைவுத் தேர்வு எழுதச் சென்று வருவதற்குள் இது என்ன கலாட்டா? பெரியம்மா எப்படி இதற்கு ஒத்துக் கொண்டார்கள்?''

''உன் பெரியம்மா அவ்வளவு சீக்கிரம் சம்மதிப்பாரா என்ன? பக்கத்து வீட்டில் இருந்தாலும் உன் வீட்டில் நடப்பது அனைத்தும் எனக்கும் தெரியும்தானே? அரைகுறை மனசோடு தான் சம்மதித்தார். உன் பெரியப்பாவிற்கு தெரியாமல் என்னிடம் ஒரு விஷயமும் சொன்னார். பையனை உனக்குப் பிடித்தால்தான் கல்யாணம் செய்து வைப்பாராம்.

உனக்கு இப்படி ஒரு மகராசி ஆதரவாய் இருக்கிறாளே! உனக்காக அவள் எதுவும் செய்வாள். நகைச்சீட்டில்

உனக்கு ஒரு ஜோடி தோடு வாங்கத்தான் சென்றிருக்கிறாள். வீட்டுக்காரர் வருவதற்குள் வந்து விடுவதாகக் கூறிச் சென்றாள். இன்னும் காணோம். சரி, சரி! நீ உள்ளே போ. உன் பெரியப்பா வந்தால் இருக்கிற கோபத்தை எல்லாம் உன் மேல் தான் காண்பிப்பான்.'' வந்தனா உள்ளே சென்றாள்.

''அக்கா! உனக்குக் கல்யாணம் என்றால் எனக்கு எவ்வளவு ஜாலியாக இருக்கிறது தெரியுமா? புது டிரஸ் வாங்கித் தருவார்கள். மாப்பிள்ளை மாமாவிடம் நான் என்ன எல்லாம் பேச வேண்டும் என்று யோசனை செய்து கொண்டிருக்கிறேன். மாமா எப்படியிருப்பார்? சின்ன மருமகள் 'தேவா' மாதிரி இருக்க வேண்டும். அப்பத் தான் நான் கல்யாணத்திற்கு ஒத்துக் கொள்வேன்.''

''ஏய் ரொம்ப டி.வி. பார்க்கிறாயா? பாடம் படிப்ப தில்லையா?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. நான் உன் தங்கை; கெட்டிக்காரியாக்கும். சின்ன மருமகள் மட்டும் தான் பார்க்கிறேன். பாவம் அக்கா! ராதிகா! எவ்வளவு கஷ்டப் படுகிறாள் தெரியுமா? அவள் கூப்பிட்டால் கிருஷ்ணரே நேரில் வந்து பேசுகிறார். அவர் கிட்டேயே கஷ்டத்தை எல்லாம் போக்கச் சொல்ல வேண்டியது தானே? அவள் எதுவும் கேட்க மாட்டேன் என்கிறாள்.''

''கடவுள் நமக்கு அறிவையும், சக்தியையும் கொடுத் திருப்பது கஷ்டத்திலிருந்தும், பிரச்சனையிலிருந்தும் வெளிவரத்தான். நாம் தான் போராட வேண்டும். நல்ல செயல்களுக்கு கடவுள் யார் மூலமாவது நமக்கு உதவு வார். உன் சுமையை கடவுள் மேல் சுமத்தாதே.''

''நீ பெரிய அழகி தான். அதைவிட மிக அன்பானவள். உன்னை தேவா மாதிரி ரொம்ப நேசிக்கிற மாமா தான் வேண்டும். நிஜமாகச் சொல்கிறேன் அக்கா! மாப்பிள்ளை மட்டும் எனக்குப் பிடிக்கா விட்டால் கண்டிப்பாக நீ கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது சரிதானே?''

''ரொம்ப சரிதான்! நான் கல்யாணம் செய்து கொண்டு ''நீ கலெக்டரானால் நான் தான் உனக்கு பி.ஏ. டூல் ஓ.கே.யா.''

''நூறு சதவீதம் சம்மதம்.''

வாசலில் நிழலாடியது. சத்யா எட்டிப் பார்த்தாள்.

''அக்கா, அம்மா உனக்கு மெஹந்தி போட ஆள் அனுப்பி இருக்கிறார்கள். பின் பக்கம் போய் உட்கார்ந்து கொள்ளலாம். அங்கேதான் யாரும் வரமாட்டார்கள். தொந்தரவு இல்லாமல் இருக்கும்.''

''சூ! இதெல்லாம் எதற்கு?''

''உனக்கு வேண்டாம் என்றாலும் எனக்கு வேண்டும் அக்கா. நீ போ, நான் வருகிறேன். உன் கையில் மெஹந்தி இட்டால் எத்தனை அழகாய் இருக்கும் தெரியுமா? நான் இதற்கு எவ்வளவு நாள் ஆசைப்பட்டிருக்கிறேன் தெரியுமா? சின்னச் சின்ன விஷயங்களில் கூட நாம் சந்தோஷப் படலாம்: பூ மலர்வது ஒரு சந்தோஷம். குழந்தையின் சிரிப்பு ஒரு மகிழ்ச்சி புது டிரஸ் போட்டால் ஒரு சந்தோஷம் என்று நீதானே சொல்வாய்? அதுபோல மருதாணி இட்டுக் கொள்வதும் இனிமையான விஷயம்தான்.''

அவளை இழுக்காத குறையாய் அழைத்துச் சென்றாள்.

''ஸ்! என்ன வெயில்! சத்யா வந்தனா எங்கே?'' என கேட்டுக் கொண்டே அம்மா உள்ளே வர.

சத்யாவிற்கு தன் அம்மாவை சீண்டிப் பார்க்கும் ஆவல் வந்தது. ''என்னப்பா இன்னும் அக்கா வரலையா? உன் கூட வருவாள்னு நினைத்தேன்.''

''ஐயய்யோ! இன்னும் வரலையா? என்னாச்சு தெரிய லையே? பஸ் ஏதும் ரிப்பேரா? டிராபிக் ஜாம் ஆயிடுச்சா? இந்நேரம் அவள் வந்திருக்க வேண்டுமே? பஸ் ஸ்டாண் டுக்குப் போய் பார்த்துட்டு வர்றியா?''

''ம்ஹூம்! சரியான மக்கு அம்மா! அக்கா ஏன் வரலைன்னு ஒரு போன் பண்ணினால் தெரியாதா? இதுக்கு பஸ் - ஸ்டாண்ட் போகணுமா? மெஹந்தி போடறவங்க வந்துட்டாங்க. அக்கா வருவதற்குள் நான் போய் மெஹந்தி போட்டுக் கொள்ளப் போகிறேன். நீயே போன் பேசிக் கொள்!''

அவள் ஓடிவிட்டாள்.

''இந்தப் பெண் இப்படித்தான். ஓர் உதவி செய்ய மாட்டாள். எந்நேரமும் விளையாட்டும், சிரிப்பும் தான். வந்தனாவிற்கு ஒரு நல்லது நடக்காதா? என நான் ஏங்கிக் கொண்டிருப்பது இவளுக்கு எங்கே புரியப் போகிறது. இவர் மனசில இப்பொழுது தான் துளி ஈரம் கசிந்து இருக்கிறது. அந்த ஈரம் காய்வதற்குள் வந்தனா விற்கு நல்லபடியாய் ஏதாவது ஏற்பாடு செய்துவிட வேண்டும். நல்ல இடத்தில் திருமணம் செய்து வைத்து விட்டால் போதும். என் கவலை விட்டது. அவள் புத்தி சாலிப் பெண்; எந்த இடத்திலும் சந்தோஷமாக இருந்து கொள்வாள். இவரிடமே சுகம் சுளிக்காமல் அவள் இருக்க வில்லையா? சொந்த தம்பி மகளை பாசத்துடன் ஆதரிக்கா விட்டாலும் கடிந்து கொள்ளாமலாவது இருந்து இருக் கலாம். ஏனோ அவளை கண்டாலே இவருக்கு

ஆகவில்லை. அவள் பணத்தை எல்லாம் அனுபவித் தாலும் அன்பு காட்ட துளி மனசில்லாமல் ஏன் இவருக்கு போனது? இருக்கட்டும்; ஏதோ கோடீஸ்வரன் இவளைப் பார்த்து ஆசைப்பட்டு மணக்கக் கேட்டதும் எப்படி உடனே ஒத்துக் கொண்டார்? தன்னையறியாமல் பாசம் உள்ளுக்குள் இருக்கிறதோ? எது எப்படியோ இனியாவது கடவுள் கண் திறக்கட்டும். அருமையான வாழ்க்கை அவளுக்கு அமையட்டும்.

வாசலில் கார் வரும் சத்தம் கேட்டது. வரிசையாக விதவிதமாய் ஐந்து கார்கள் வந்து நின்றன. 'ஐயோ! இவ் வளவு ஆர்ப்பாட்டமாய் வருகிறவர்கள் என் கண்மணியை நன்றாக வைத்துக் கொள்வார்களா? அன்பில்லாத வாழ்க்கை அவளுக்கு அமைந்து விடக்கூடாது.' உள்ளுக் குள் இனம் புரியாத கலவரம் எழுந்தது. இருந்தும் இன் னொருபுறம் வந்தனா இன்னும் வந்து சேரவில்லையே? இந்தக் கோபக்கார மனிதனிடம் கடிபட நேருமோ என் பதைவிட நல்ல வாழ்க்கையை அவள் நழுவ விட்டு விடக் கூடாதே என்ற ஏக்கமும் தோன்றியது.

உள்ளுக்குள் ஆயிரம் எண்ணங்கள் ஓடினாலும் மலர்ச்சியுடன் வந்த விருந்தினர்களை வரவேற்க விரைந் தாள்.

வெற்றிலை பாக்கு, பூ, சந்தனம், குங்குமம் கொடுத்து அவள் கணவன் அவர்களை வரவேற்றுக் கொண்டிருந் தான்.

வரிசை வரிசையாய் உறவினர்கள் பலவிதமான சீர் வரிசைகளுடன் நுழைந்தனர். சீர் தட்டுகளை வைத்ததும் ஹாலே நிரம்பி வழிவது போல் இடமின்றிப் போனது.

''ஏய் பார்த்தியாடி பட்டுப்புடவை. நகைன்னு எவ்வளவு சீர்வரிசை வைத்திருக்கிறார்கள். வந்தனா அதிர்ஷ்டக்காரி தான். இல்லாவிட்டால் அந்த அனாதைக்கு இப்படியொரு வாழ்க்கை அமையுமா?''

''ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்? நாம் இருக்கும்பொழுது அவள் எப்படி அனாதை ஆவாள்.''

''சும்மா வாய்க்கு வாய் அவளைப் பற்றி ஏதாவது சொல்லாதே. எனக்கு தான் அவளே ஆகாதே! என்னிடம் விதண்டாவாதம் செய்யாமல் போய் வந்தவர்களை கவனி.''

சீர்வரிசைகளை அறையினுள் அடுக்கி வந்தவர்கள் அமர ஹாலில் இடம் ஏற்படுத்திக் கொடுத்தாள். ஜமுக்காளம் விரித்து ஆண்களும், பெண்களும் அமர்ந்த பிறகு இவர்களில் யார் மாப்பிள்ளை? என கண்களால் துழாவினாள். அதற்குள் யாரோ ''பொண்ணைக் கூட்டி வாங்க பரிசம் போடணும்'' என்றார்கள்.

'ஐயோ! இன்னும் வந்தனா வந்து சேரவில்லையே? இவரிடம் என்ன சொல்லி சமாளிப்பேன்?' என பெரியம்மா தவிக்க,

''இருங்க நாங்க எதையும் நேரம் காலம் பார்க்காமல் செய்யறது இல்லை. எங்க ஜோசியர் குறிச்சுக் கொடுத்த நேரம் வருவதற்கு இன்னும் முக்கால் மணி நேரம் இருக்கிறது. அந்த நேரம் வந்ததும் பெண்ணைப் பார்த்துக் கொள்ளலாம்.

'அம்மாடி?' என்பது போல் மூச்சு விட்டுக் கொண்டு சத்யாவை விட்டு வந்தனாவை பார்க்கச் சொல்ல வேண்டும். மாப்பிள்ளை யார் என்று இன்னும் தெரியவில்லையே?

யாராய் இருக்கும்? வந்திருக்கும் எல்லாரும் நடுத்தர வயதில் இருந்தார்கள். அவர்களில் நடுநாயகமாக அறுபது வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் அமர்ந்திருந்தார்.

வயதுக்கு சற்றும் பொருந்தாமல் உடை அணிந்து இருந்தார். சிறு பையன்கள் அணியும் டீ ஷர்ட் - பட்டு வேஷ்டிக்குப் பொருந்தாமல் உறுத்தியது. கழுத்தில் சுண்டு விரல் மொத்தத்தில் முறுக்குச் செயின். கை விரல்களில் கட்டை விரலைத் தவிர அனைத்து விரல்களிலும் டாலடிக்கும் வைர மோதிரங்கள். யார் இவர்? மணமகனின் தந்தையோ? எண்ணும்பொழுதே உள்ளே வந்த செல்வி,

''அம்மா! யார் இவர்? நடமாடும் நகைக்கடையாய் வந்திருக்கிறாரே! மாப்பிள்ளையோட தாத்தாவா?''

''உஷ்! மெதுவா பேசுடி? வந்தனா வந்துவிட்டாளா?''

அவள் பதில் சொல்வதற்குள், ''சத்யா சீக்கிரம் எல்லாருக்கும் டிபன் கொடுக்கச் சொல்லி அம்மாவிடம் சொல்'' உத்திரவிட்டு பெரியப்பா வெளியே சென்றார்.

''அதெல்லாம் வேண்டாங்க. மாமாவுக்கு சர்க்கரை, இரத்த அழுத்தம் இருப்பதால் அதெல்லாம் சாப்பிடுவது இல்லை. சும்மா அவங்க அம்மாவையும் வந்து உட்காரச் சொல்லுங்க. கொஞ்ச நேரம் பேசிக்கிட்டு இருக்கலாம்'' - என்றாள்.

முன்பே நல்ல நேரத்தில் பெண்ணைப் பார்க்கலாம் எனக் கூறிய அதே பெண்மணி. அந்தம்மா பேச்சு தான் வீட்டில் எடுபடும் போல? இவள்தான் மாமியாரோ? ரெட்டை நாடி உடம்பு, சாதாரணமாக பேசினாலே அதட்டுவது போல் தோன்றும் குரல். முதியவருக்கு இணையாய் இல்லை.

ஒன்றிரண்டு கூடுதலாகவே நகைகளை அடுக்கு அடுக்காய் அணிந்திருந்தாள்.

''நான்தான் மாமாவுக்கு உசிரு. எனக்காக மாமா எதையும் செய்வாரு. நான் வந்தவேளை அதிர்ஷ்ட தேவதை கூரையை பொத்துக்கிட்டு அவருக்கு செல்வத்தை கொடுக்க ஆரம்பிச்சுடுச்சு. அதனால மாமா எல்லாத்தையும் என் கையால தான் தொடங்குவார். ஊருக்குள்ளார் தொடர் கடை வச்சு தொழில் நடத்திக்கிட்டு இருக்கோம். எனக்கு அவரை கவனிக்கவே நேரம் இல்லை. தொழிலை திறமையாய் கவனிக்க நம்பகமான ஆள், அவருக்கு உதவியாய் தேவைப்பட்டது. அப்பதான் சித்ரா வந்துச்சு; அருமையாய் நிர்வாகம் பார்த்துச்சு. அவரும் ஆசைப்பட்டாரு; அதனால் நான்தான் ரெண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணி வச்சேன். ரெண்டு பேரும் நல்லா இருக்கோம். ஆளுக்கொரு பங்களா இருக்கு.''

முதியவரின் மனைவி பேசிக்கொண்டே போனாள்.

''அட மாப்பிள்ளையோட அப்பாவுக்கு ரெண்டு தாரமா? இது என்ன? சிக்கல் ஏதும் இருக்குமோ?''

''மாப்பிள்ளை வரலியா? ஹோட்டலிலேயே இருக்கிறாரா?''

''ஆங்! என்ன இப்படிக் கேட்டுப்புட்டீங்க? சும்மா கேலி பண்ணுகிறீர்களா? அல்லது விஷயம் தெரியாதா? என்னவாய் இருந்தாலும் இப்ப நான் சொல்லிடுறேன் கேட்டுக்கிடுங்க. மாமாவுக்கு அறுபது முடிஞ்சுடுச்சு! அவருக்கு அறுபதாம் கல்யாணம் பண்ணிடலாம்னு ஜோசியர் கிட்டே கேட்டப்ப தான் சொன்னாங்க. அவ

ருக்கு மாரக தோஷம் இருக்கிறதாவும், அதனால இருபது வயசுக்குள்ள இருக்கிற பெண்ணை மூன்றாம் தாரமா திருமணம் செஞ்சுகிட்டா சரியா போயிடும்னு சொன்னாங்க. அப்பதான் உங்க பொண்ணைப் பார்த்தாரு. பார்த்ததும் மையலாயிட்டார். கல்யாணம் கட்டிக்கிட்டா உங்க பொண்ணைத்தான் கட்டணும்னு உறுதியா இருந்தார். அதனால கவலைப்படாமல் கட்டிக் கொடுங்க; கண்ணும் கருத்துமாய் பார்த்துகிடுவார்.''

ஆத்திரம், ஏமாற்றம், அழுகை, இயலாமை இவற்றால் பெரியம்மாவால் சட்டென எதுவும் பேசமுடியவில்லை. சட்டென்று எழுந்து உட்புறம் சென்றார். நல்லவேளை வந்தனாவின் பெரியப்பா அங்கே இருந்திருக்கவில்லை. இருந்திருந்தாலும் கையில் கிடைத்ததை எடுத்து அவர் மண்டையில் இரண்டு போட்டிருப்பாரா என்ன?

''சத்யா, உன் அக்கா இங்கே வரவேண்டாம். அவள் எங்காவது போகட்டும். இங்கே இருப்பது புதைகுழி. சீக்கிரம் ஓடிச்சென்று அவளை கண்டுபிடிக்க முடியாத ஊருக்கு போகச் சொல்.''

''என்னம்மா சொல்கிறீர்கள்?''

''ஆமாம்டி! கட்டையிலே போற கிழவனுக்கு மூன்றாம் தாரமாய் என் கண்மணியைக் கல்யாணம் செய்து கொடுக்கணுமாம்! என்ன அநியாயம்? சர்க்கரை இரத்த அழுத்தம் இப்படி ஊர் பட்ட வியாதிகளை வைத்திருப்பவன் சிறு பெண்ணை கல்யாணம் செய்து கொண்டால் ஆயுசு நீண்டுடுமா? அல்லது வியாதிதான் குணமாயிடுமா? படுபாவி! பாழும் கிணத்தில் பச்சை பசும் கிளியை தள்ளிவிட விட்டு விடுவேனா? என்னைக் கட்டிக்கிட்டவனை எதிர்க்க முடியாவிட்டாலும், நான் ஒன்றும்

முட்டாள் அல்ல. என் கண்மணியைக் காப்பாற்றி விடுவேன். இவனுங்களை விரட்டுவது பெரிய காரியம் இல்லை. ஆனால் உன் அப்பா? தெரிஞ்சே படு குழியில் தள்ளத் தயாராய் இருந்தாரே? இவரை நம்பி இனி வந்தனாவை இங்கு வைத்துக் கொள்ளக் கூடாது.''

''அம்மா! அக்கா முன்பே வந்துட்டாங்க. நான் தான் உங்ககிட்டே கொஞ்சம் விளையாடினேன்.''

''சரி சரி! அவள் வராதது போலவே இருக்கட்டும். அங்கேயே... இல்லையில்லை பக்கத்து வீட்டு அத்தைக்கிட்டே நான் தகவல் சொல்லி அனுப்புறேன். சீக்கிரம் இங்கிருந்து கிளம்பி...''

''என்ன பெரியம்மா?'' என வந்தனா வந்தாள்.

அவளை இழுத்துக் கொண்டு பெரியம்மா பக்கத்து வீட்டிற்குள் பின் வழியாய் நுழைந்தாள். ''போதும் வந்தனா! இனி இவரை நம்பி ஏமாந்து போகாதே. இங்கிருந்து கிளம்பு. திருச்சியில் என் தோழி இருக்கிறாள். அவ கிட்ட போயிடு. என்கிட்டே பேசவோ, கடிதம் எழுதவோ முயற்சிக்காதே. வாழ்க்கையில் நெரிய வழியில் ஜெயிக்க முயற்சி செய். கடவுள் உனக்கு துணையிருப்பார். இரு வருகிறேன்.''

உள்ளே சென்றவள் அவள் துணிகளையும், சான்றிதழ்களையும் அவசர அவசரமாக எடுத்து வந்து கொடுத்தாள். ''இப்பொழுது புறப்பட்டால் யார் கண்ணிலாவது நீ பட்டு விடக்கூடும். உன் பெரியப்பா தீவிரமாகத் தேடுவதற்குள் நீ கிளம்ப வேண்டுமே? பஸ், இரயில் நிலையம் சென்றால் மாட்டிக் கொள்ள நேரிடுமே? என்ன செய்வது?''

''அக்கா, நீங்க கவலைப்படாதீர்கள். நான் காரில் எங்க உறவுக்காரங்களைப் பார்க்க திருச்சி செல்கிறேன்.


அதனால் நானே வந்தனாவை விட்டு விடுகிறேன். நீங்க முதலில் உங்க தோழிகிட்டே பேசிடுங்க. வந்தனா அலைபேசியிலேயே பேசினால் யாரிடமும் மாட்டிக் கொள்ள வேண்டாம்.''

''நீ சொல்வதும் சரிதான்'' என்றவாறு தன் தோழியை தொடர்பு கொள்ள முயன்றாள். 'நீங்கள் தொடர்பு கொண்ட எண்ணை சரி பார்க்கவும்' என அலைபேசி சொல்ல...

''இப்ப என்ன செய்வது? நேரமும் இல்லை. நீங்கள் புறப்படுங்கள். அவர் உரக்க ஏதோ கத்துகிறார். நான் போய் அவரை சமாளிக்கிறேன். கண்ணே! உன்னை கடவுள் காப்பாற்றுவார்.''

''பெரியம்மா!....'' என இழுத்தவளை, ''தயங்காமல் புறப்படு. இல்லாவிட்டால் உன் வாழ்க்கை வீணாகிவிடும். கிழவனுக்கு மூன்றாம் தாரமாய் உன் பெரியப்பா கட்டி வைத்து விடுவார். பேசி நேரத்தை வீணாக்காதே! போ.''

கண்ணீருடன் வந்தனா பக்கத்து வீட்டு அத்தையுடன் காரில் புறப்பட்டாள். அவளுக்கு கையசைக்கக்கூட முடியாமல் பெரியம்மா அவளை தேடுவது போன்ற பாவனையுடன் உள்ளே நுழைந்தாள்.



2

''உமா! சித்தார்த் கிட்டே பேசிட்டியா? என்ன தான் சொல்கிறான்?''

"இன்னும் இல்லேம்மா! அவர்தான் சித்தார்த் கிட்டே பேசினார். என்ன பேசினாங்கன்னு தெரியலை. அவனை சுதந்திரமாய் விட்டுடுவோம்; அவன் ஒண்ணும் இன்னும் சின்னக் குழந்தை இல்லேன்னு சொல்கிறார்."

"மகேஷிற்கும், உனக்கும் கல்யாணம் ஆகி எட்டு வருடங்கள் ஆகிவிட்டன. சின்னவனுக்கு பண்ண வேண்டாமா? எவ்வளவு நாளைக்கு தான் அவனாக சம்மதிப்பான் என்று காத்திருப்பது?

தன் அண்ணனுக்கு உன்னைத் தேர்ந்தெடுத்தவன் தனக்கு ஒருத்தியைத் தேர்ந்தெடுக்க ஏன் இப்படி தாமதிக்கிறான்? அவன் மனசில் என்னதான் இருக்கிறது? அவனோட தோழிதானே நீ? உன்னிடமாவது அவன் உண்மையைச் சொல்வான் தானே? வயசான காலத்தில் எங்கள் பொறுப்புகளை எல்லாம் சரியாக முடித்தால் தானே எங்களுக்கு நிம்மதியாக இருக்கும்.

பெரியவன் மருத்துவராக ஆசைப்பட்டான்; இவன் கலெக்டராக விரும்பினான். இரண்டு பேருமே குடும்பத் தொழிலுக்கு வரவில்லை. இருந்தும் கொஞ்சம் கூட முகம் சுளிக்காமல் நாங்கள் அனுமதிக்கவில்லையா? டிராவல்ஸை மருமகப் பிள்ளையை வைத்து அவன் அப்பா கவனிக்காமலா போய்விட்டார்? வீடு நிறைய பிள்ளைகள் இருந்தால் தானம்மா நன்றாயிருக்கும். நீயும், மகேஷும் ஒரு பிள்ளை போதும் என முடிவு செய்து விட்டீர்கள்! அண்ணன், தங்கை, அக்கா, தம்பி, சித்தி, சித்தப்பா, அத்தை, மாமா, பெரியப்பா, பெரியம்மா என்ற உறவுகள் எல்லாம் ஒரு குழந்தை குடும்பத்தில் அடுத்த தலைமுறைக்கு எப்படி கிடைக்கும்? ஏற்கனவே இயந்திர வாழ்க்கை ஆகிவிட்டது. இதில் உறவுகளும்

பிடிப்புகளும் குறைந்து போனால் துளிர்க்க வேண்டிய அன்பு மலராமல் மனசு வெறுமையாகிவிடும். மனநல பிரச்சனைகளும் நிறைய வரும்.

ஏழு தலைமுறைக்கு சொத்து இருந்தாலும் வெற்று வாழ்க்கை வாழக்கூடாது. நாமும் நம் சுற்றமும் வளமும், செழுமையாக வாழ வேண்டும். மகிழ்ச்சியாக வாழ்வதில் தான் வாழ்க்கையின் அர்த்தம் இருக்கிறது. வாழ்க்கையில் இன்ப துன்பங்களைச் சமமாகச் சிரித்த முகத்துடன் ஏற்றுக் கொள்ளும் ஸ்ரீகிருஷ்ணனைப் போல வாழ முடிந்தால் எவ்வளவு நிம்மதியாய் இருக்கும்? அந்தக் கடவுள் மாற்றத்தை சித்தார்த் மனத்தில் ஏற்படுத்தட்டும் என நான் காத்திருக்கப் போவதில்லை. இன்றைக்கு மாலை கண்டிப்பாய் தரகர் சொன்ன வீட்டிற்கு பெண் பார்க்கத்தான் போகிறோம்; அவனும் கண்டிப்பாக வரத்தான் வேண்டும் என்று நான் சொல்லியதாக உன் நண்பனிடம் கூறிவிடு. இன்றைக்கு என் பேச்சை எப்படி மீறுகிறான்? என பார்த்து விடுகிறேன்."

"இன்றைக்கு தானே அம்மா, அவர் ஊரிலிருந்தே வந்திருக்கிறார். இன்னும் இரண்டு நாள் போகட்டும். அவரை சரி செய்து கொள்ளலாம்."

"உமா, உன் கொழுந்தனைப் பற்றி உனக்குச் சரியாகத் தெரியாது. இரண்டு நாள் விட்டுப் பிடித்தால் இல்லாத வேலையைக் காரணம் காட்டி மூட்டை முடிச்சுடன் கிளம்பி விடுவான். எனக்கு எத்தனை வருடங்களாய் கடுக்காய் கொடுத்து வருகிறான். அவன் மனசில் யாராவது இருக்கிறாளா? என்றாவது கேளேன்? அழகும், அறிவுமாய், கம்பீரமாய் ஆறடி உயரத்தில் போகும் இவனைப் பார்த்து எத்தனை பேர் ஆசைப்படுகிறார்கள்?

அவர்களில் ஒருத்தரைக் கூடவா இவனுக்குப் பிடிக்க வில்லை? சித்தார்த் என பெயர் வைத்தால் அந்த புத் தனைப் போல பற்று இல்லாமல் போய்விடுமா? என் மருமகளைப் பார்க்க எவ்வளவு கனவு கண்டு கொண் டிருக்கிறேன். என் இரண்டு மருமகள்களை கண்போல பார்த்துக் கொள்ள வேண்டும் என ஆசைப்படுகிறேன்.

என் சின்ன மாமியாருக்கு எட்டு மருமகள்கள்; அத் தனை பேரையும் அருமையாக பார்த்துக் கொண்டார். ஒவ்வொரு மருமகளும் அவரை அப்படி கொண்டாடி னார்கள். எனக்கு அப்பொழுதிலிருந்தே என் மருமகள் களையும் நான் சிறப்பாய் கொண்டாட வேண்டும் என்று போராசை. என் சின்ன மகனுக்கு தான் அம்மாவின் ஆசை புரிய மாட்டேன் என்கிறது. ஆண் பிள்ளைகளுக்கு பெண் மனசு சட்டென புரிவதில்லை. அவன் அப்பா, அண்ணன் ஒருத்தர் கூட என் கட்சிக்கு துணையாய் வரமாட்டேன் என்கிறார்கள். நீயாவது அவனுக்கு என் ஆசையை எடுத்துச் சொல்லி புரிய வையம்மா?''

''தாயில்லாமல் வளர்ந்த எனக்கு மாமியாரே தாயைப் போல அமைந்திருக்கிறார். உங்க நல்ல மனசுக்கு ஏற்ற மாதிரி எல்லாம் நன்றாக நடக்கும். நான் சித்தார்த்திடம் பேசுகிறேன்; நீங்கள் கவலைப்படாதீர்கள்.''

''அவன் மாடியில தான் இருக்கிறான்; போய் பேசேன். கலெக்டர் ஐயாகிட்டே மருமகள் வேணும்னு மனு கொடுக்க ஓர் வயசான அம்மா காத்துக்கிட்டு இருக்காங் கன்னு சொல்லு.''

''யார் அந்த வயசான அம்மா? ஜானகி உன்னோட துள்ளல் நடையைப் பார்த்து நான் சிறு பெண் என்றல் லவா நினைத்துக் கொண்டிருக்கிறேன்.''

''ஆமாம், ஆமாம்! அம்பது வயசு டீன்ஏஜ் பெண். நான் சொல்வதை நீங்கள் தான் காதில் போட்டுக் கொள் வதில்லை. என் மருமகளிடம் ஆற்றாமையைச் சொல் லிக் கொண்டிருந்தேன்.''

''ஏன் ஜானகி மனதைப் போட்டு உழட்டிக் கொள் கிறாய்? அதது நேரம் காலம் வந்தால் தானாய் நடக் கும்.''

''இப்படியே எவ்வளவு காலத்திற்கு காத்திருப்பது? எதற்கும் நாம் முயற்சி செய்து கொண்டே இருக்க வேண் டும். அப்போது தான் காலம் கனிந்து வரும் பொழுது வெல்ல முடியும்.''

''அடிசக்கை! மகளே! உன் சமர்த்து! மகன் மனசை மாற்ற முயற்சி செய்.''

''உமா! உன்னோட ஷர்ட்டை எங்கே வைத்திருக் கிறாய்?''

''இதோ வருகிறேன். அவரை மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு சித்தார்த்திடம் பேசுகிறேன் அத்தை!''

''சரிம்மா போய் மகேஷை கவனி.''

சித்தார்த் லேப்-டாப்பை ஆன் செய்தான். செய்ய வேண்டிய வேலைகளை கவனித்துச் செய்து விட்டு விரல்கள் தன்னை அறியாமல் மடிக்கணினியை வருட அதில் ஓர் அழகான இயல்பான இளம் பெண் படம் வந்தது.

'எங்கிருக்கிறாய் பெண்ணே? என்றைக்குத்தான் என் முன்னே வருவாய்? உனக்காக நான் காத்துக் கொண் டிருப்பது உனக்குப் புரியாதா? உன் மனசில் நான் இல்லையா? வினாடியில் மழைத் துளியைப் போல என்

மனசை நனைத்து விட்டுச் சென்று விட்டாய். உலகத்தில் எந்த சந்தோஷமான விஷயத்தைப் பார்த்தாலும் எனக்கு உன் நினைவு தான் வருகிறது. பூக்களைப் பார்த்தாலும் குழந்தையின் சிரிப்பைப் பார்த்தாலும், தளும்பி கரையை நனைக்கும் நீரைப் பார்த்தாலும் நீ தான் என் கண் முன்னே வருகிறாய். எப்படி எதற்கும் மசியாத என் மனதை உன் வசப்படுத்தினாய்? நான் இப்படி தவிப்பது உனக்குத் தெரியுமா? உன் மனதிலும் அன்பிருந்தால் நீ என்னிடம் வந்து சேர்ந்து விடுவாய் தானே? உன்னை முதன் முதலாய் சந்தித்த தினத்தை நினைக்காத நாளே இல்லை.'

தலை நகரத்தில் குடியரசு தின அணிவகுப்பில் தேசிய மாணவர் படை சார்பாய் (NCC) கலந்து கொள்ள வந்திருந்தாள். சித்தார்த் வடகிழக்கு மாநில முதலமைச்சருடன் பிரதமரைச் சந்திக்க வந்திருந்தான். அவன் நண்பன் சுநீல் தேஷ்முக்கின் சகோதரி வீட்டிற்குச் சென்றபொழுது தான் அவளைப் பார்த்தான்.

''சித்தார்த் எப்படியிருக்கிறது உன் மாவட்ட நிர்வாகம்?''

''வழக்கம் போல் இடையூறுகள் இருந்தாலும் நன்றாகவே செல்கிறது.''

''போடா! எனக்கு வெறுப்பாய் இருக்கிறது. சில சமயம் இல்லை... பல சமயங்களில் அரசியல்வாதிகளை கையாளுவதில் மிகுந்த சிக்கல் நிறைந்த விஷயமாய் இருக்கிறது. பிடிக்காத, செய்யக்கூடாத விஷயத்தைச் செய்ய நேர்கையில் மன உளைச்சல் அதிகமாகிறது. நீ கொஞ்சம் கவனமாய் இருடா! தீவிரவாதிகள் பிரச்சனை உள்ள பகுதி வேறு.''

''ம்! இருபுறமும் கூரான கத்தியைக் கையாளும் கவனத்தோடு செயல்படுகிறேன். பிரச்சனையும் தீர வேண்டும்; இழப்பும் இருக்கக் கூடாது என முயற்சி செய்கிறேன்.''

இருவரும் பேசிக் கொண்டே வீட்டிற்குள் செல்ல முயன்றபொழுது...

''துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா?'' பாடல் ஒலித்தது. கை தன்னிச்சையாய் அலைபேசியை எடுத்தது. ஆனால் அதில் எந்த அழைப்பும் வரவில்லை. ''யார் இங்கே இவ்வளவு அருமையாகப் பாடுகிறார்கள்? நான் என் ரிங்டோன் என நினைத்து ஏமாந்து போனேன்.''

''என்.சி.சி. ஸ்டூடண்ட்ஸ் குடியரசு தின ஃபரேடேக்கு வந்திருக்கிறார்கள். அதோ அங்கே தான் தங்கியிருக்கிறார்கள். அதில் இருவர் சவுத் - இண்டியன்ஸ். அவர்களில் ஒருத்தி தான் பாடுகிறாள் என நினைக்கிறேன்.''

குரலில் இருந்த வசீகரமும், ராகமும், பாவமும் அவர்களை நகர விடாமல் அங்கேயே பிடித்து நிறுத்தியது.

''என்ன சுநீல், உன் ப்ரெண்டை வாசலிலேயே நிறுத்தி விட்டாய்? உள்ளே அழைத்து வா.''

''அச்சா தீதி! பாட்டைக் கேட்டுக் கொண்டே நின்று விட்டோம்.''

''சித்தார்த் நம் வீட்டிற்கு வந்தே வெகு காலமாகி விட்டது. இப்படியே நின்றால் அம்மா என்னை கோபிப்பார். சீக்கிரம் உள்ளே வாருங்கள். பாட்டை எப்பொழுது வேண்டுமானாலும் கேட்டுக் கொள்ளலாம். டெல்லியில் நிறைய தமிழர்களும் இருக்கிறார்கள். அழகான அருமை

யான பாடல் பாடுபவர்களை டி.வி. சுவிட்சை ஆன் செய்தாலே பார்க்கலாம். கேட்கலாம்; அதுதான் சேனலுக்கு சேனல் பாட்டுப் போட்டி நடந்து கொண்டிருக்கிறதே!''

''சரிதான்'' என இருவரும் சிரித்தவாறே உள்ளே சென்றனர்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கழிந்திருக்கும்.

வாசலில் டிரம்ஸ் ஒலியுடன் ஊர்வலம் செல்லும் சத்தம் கேட்டது.

''விசாகா கல்யாண ஊர்வலம். மாப்பிள்ளை செல்கிறார் என நினைக்கிறேன். வாங்க பார்க்கலாம். இங்கிருந்து மூன்றாம் வீடுதான். மாடியிலிருந்து பார்த்தால் நன்றாகத் தெரியும்.''

சுநீல், சித்தார்த்துடன் பால்கனிக்குச் சென்றான். ''ஹேய்! அதோ அவளைப் பாரேன். அவள் தான் பாடியிருக்க வேண்டும். சவுத் இண்டியன் பொண்ணுங்களே! க்யூட் தான்.''

இவர்களுக்கு மறுபுறம் அவள் தன் தோழிகளுடன் நின்றிருந்தாள். சட்டென மின்சாரம் துண்டிக்கப்பட்டது. கல்யாண வீட்டிற்கு அருகில் இருந்த வீட்டில் திடீரென தீப்பிடித்து எரிய ஆரம்பித்து இருந்ததை அப்போது தான் கவனித்தார்கள். அந்த வீடும் கல்யாண வீட்டினரை சேர்ந்தது தான். நல்லவேளை அங்கே ஒருவரும் இல்லை. எல்லாரும் இங்கே நின்று கொண்டிருந்தனர்.

அப்போது தான் அவள் கத்தினாள். ''ஐயோ குழந்தை!'' அனைவரின் கவனமும் அங்கே செல்ல... இரண்டரை வயது குழந்தை ஒன்று தீப்பிடித்த வீட்டின் மாடியி

லிருந்து வெளிவர முடியாமல் அழுவது கேட்டது. எல்லாரும் தவித்த பொழுதே அவள் மாடியின் மீது ஏறிவிட்டிருந்தாள். குழந்தையை தாவி தூக்கிக் கொண்டாள். ஆனால் திரும்பவும் மாடிப்படியின் வழியே வர முடியாமல் தீச்சுவாலை அங்கு சூழ்ந்து விட்டிருந்தது. சட்டென அவள் செயல்பட்டாள். அந்த அறைக்குள் இருந்து திரைச்சீலையை உருவி முறுக்கி கயிறாக்கி மாடி கைப்பிடிச் சுவரின் பூ இடைவெளியில் இறுகக் கட்டினாள். பின் அதைப் பற்றிக் கொண்டு மிக இலாவகமாய் குழந்தையுடன் கீழே இறங்கலானாள்.

அது கீழே இறங்க போதுமான உயரம் இல்லைதான். இருந்தாலும்... தப்பிப்பதற்கு அதைத் தவிர வேறு வழியும் இல்லை. கீழே விழுந்தாலும் குறைந்த உயரத்தில் இருந்து தான் விழ நேரும்; ஆனாலும் குழந்தையை எப்படியும் காப்பாற்றி விடலாம் என நம்பிக்கையுடன் அவள் செயல்பட்டாள். சித்தார்த் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நிற்கவில்லை. அவள் எண்ணம் புரிந்தாற் போல் அவள் கீழே விழும் இடத்திற்கு நேராய் போய் நின்றான். ஹீரோவின் சாகசம் போல் தனியொருவனாய் அங்கே போய் நிற்கவில்லை. ஷாமியானா பந்தல் படுதாவுடன் நான்கைந்து பேருடன் அங்கே விரைந்து சென்று படுதாவை விரித்து குழந்தையுடன் குதித்த வளை தாங்கிப் பிடித்தனர். இன்னொரு புறம் நெருப்பை அணைக்க பலர் பல வழிகளில் முயன்று கொண்டிருக்கும் பொழுதே தீயணைப்பு வண்டி வந்து சேர்ந்தது. பெரும் இழப்பு ஏற்படாமல் நெருப்பு அணைக்கப்பட்டது. குழந்தையை உரியவர்களிடம் ஒப்படைத்த பிறகு நகர்ந்தவளை சித்தார்த் கூப்பிட்டான். ''எக்ஸ்க்யூஸ் மீ'' ஆனால் அவள் அதை கவனிக்கவில்லை. சுநீல்

அருகே வந்து அவன் தோள் மேல் கைப்போட்டான். ''நாளைக்கு நாம் அணிவகுப்பு நடக்கும் பொழுது பார்க் கலாம் வா. இப்பொழுது அவளை தொந்தரவு செய்ய வேண்டாம்.''

''ஒன்றுமில்லை. அவளுக்கு காலில் சுளுக்குப் பிடித் திருக்கும் எனத் தோன்றுகிறது. அதனுடன் அணிவகுப்பில் கலந்து கொள்வது கடினம்.

''அவள் மன உறுதியைத்தான் நேரில் பார்த்தோமே? அதனால் எந்தப் பிரச்சனையுமே அவள் சமாளித்துக் கொள்வாள்.'' மறுநாள் அணிவகுப்பில் சுநீல் சொன்னது போலவே எந்தவித தொய்வுமின்றி கம்பீரமாக நடைபயின் றாள். சித்தார்த் தான் வைத்த கண் வாங்காமல் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவளுடன் பேசத்தான் சந்தர்ப்பம் வாய்க்கவே இல்லை. பிரதமரை சந்திக்க முதலமைச்சருடன் அவன் செல்ல வேண்டியிருந்தது. அதை முடித்துவிட்டு சென்ற பொழுது அவள் போய்விட்டிருந்தாள். வீட்டினருக்கு ஏதாவது வாங்கலாம் என அவன் கடைக்குச் சென்ற பொழுது மறுபடியும் அவளைப் பார்த்தான். தன் தோழி யுடன் வந்திருந்தாள்.

''ஹலோ!'' திரும்பியவள் அவனைப் பார்த்து புன் னகைத்து ''தேங்க்யூ'' என்றாள்.

''எதற்கு?''

''கீழே விழுந்து அடிபடாமல் காப்பாற்றி விட்டீர்களே? அதற்குத்தான்.''

''நீங்கள் குழந்தையைக் காப்பாற்றிய சாகசத்திற்கு முன்னால் இது ஒன்றுமில்லை. அது சரி கால் சுளுக்கு

எப்படியிருக்கறது? சுளுக்கையும் மீறி அணிவகுப்பில் அசத்தி விட்டீர்கள். வாழ்த்துக்கள்.''

''ஆகா! எப்படி சரியாய் சுளுக்கு என்று கண்டு பிடித்தீர்கள்? என் தோழியின் ஒட்டை வாயை அறிந்து விட்டீர்களா?''

''பாருங்கள் சார்! நான் ஏதாவது உங்களிடம் பேசி னேனா? இருந்தும் எனக்கு ஒட்டை வாய் என்ற பட்டம். ஏதோ துணைக்கு வந்தாள். ஒரு புடவை வேண்டாம்... என் செலவில் ஒரு கர்ச்சீப் கூட வாங்கமாட்டேன் என்கிறாள். அவள் சுளுக்கு இன்னும் சரியாகவில்லை. இருந்தும் வெற்றிகரமாய் அணிவகுப்பை முடித்து விட்டாள். இரவு நாங்கள் ஊருக்குப் புறப்பட வேண்டும். அதற்கு முன் கல்யான வீட்டில் நாங்கள் அவசியம் வர வேற்பில் கலந்து கொள்ளச் சொல்லி அன்புடன் வலி யுறுத்தி உள்ளார்கள். அதற்குத் தான் எனக்கு புடவை வாங்க வந்தோம். இவளை ஒன்று வாங்கிக் கொள்ளச் சொன்னால் மிகவும் பிகு செய்கிறாள்.''

''கொள்கையை யாருக்காகவும் விட்டுக் கொடுக்க முடியாது கண்மணி.''

''போ, பெரிய கொள்கை? தோழிகளுக்கிடையில் எதுவும் குறுக்கே வரக் கூடாது தெரியுமா?''

''நீ இங்கிருந்தால் இன்னும் ஏதாவது சொல்வாய். முதலில் கிளம்பு. சார்! நாங்கள் வருகிறோம்.''

அவர்கள் சென்றுவிட்டார்கள். ஃபேன்டா ஆரஞ்சில் காஷ்மீர், சில்க் கண்ணைப் பறித்தது. அதற்கு பொருத்த மாய் கறுப்பில் ஆரஞ்சு வண்ண சரிகை வேலைப்பாடு செய்த ரெடிமேட் ப்ளவுஸ். அவளுக்கு எத்தனை

பொருத்தமாய் இருக்கும்? எண்ணிய மறுவினாடியே வாங்கி விட்டான்.

மாலை சுநீல் வீட்டிற்கு சென்றபொழுது.

''ஹேய் சித்தார்த்! அந்த ஹீரோயின் இப்பொழுது தான் இங்கு வந்து விட்டுப் போனாளாடா! உன்னைத் தான் பார்க்க வந்திருப்பாளாக்கும்!'' சித்தார்த் சின்னதாய் புன்னகைத்தான்.

''நிஜம் தான்! அவள் கண்கள் உன்னைத்தான் தேடின. இன்னும் இரண்டு பேரும் பேர் கூடத் தெரிந்து கொண்டு இருக்க மாட்டார்கள். ஆனால்... உன்னைக் கண் தேடுதே நிலைமைக்கு வந்தாகி விட்டது. அது எப்படிடா? இன்னும் என்னால் நம்ப முடியவில்லை. நம் டிரெய்னிங் பீரியடில் உன் மேல் ஏறக்குறைய பைத்தியமாய் சுற்றிய தான்யாவிடம் நீ இயல்பாய் விலகிப் போனாய். ஆனால் எப்படி ஓர் வினாடிப் பார்வையில் இவள் உன்னை கவர்ந்து போனாள் என்று எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது! நீ மறுக்க முடியாது மச்சான். சின்ன வயசிலிருந்து நான் உன்னை அறிந்து இருக்கிறேன். ஆனால் என் வீட்டிற்கு ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன. வலுக்கட்டாயமாய் அக்கா வீட்டிற்கு அழைத்து வந்தேன். ம்..... நடக்கட்டும்... நடக்கட்டும்...''

''சும்மா இரப்பா.''

''சரி, சரி வா! கல்யாண வீட்டில் இருந்து நான்கு முறை ஆள் வந்து அழைத்து விட்டார்கள். அந்தச் சாக்கை வைத்து உன் ஆளையும் பார்த்து விட்டு வரலாம்.''

மறுக்கவே தோன்றாமல் சுநீலுடன் சென்றான். உள்ளே நுழைந்ததும் கண்கள் அவளைத்தான் தேடின.

பால்கனியில் நின்று யாருடனோ பேசிக கொண்டிருந்தாள். அதனருகே ஸ்டூலில் ரோஜா இதழ்கள் தட்டில் நிறைத்து வைக்கப்பட்டிருந்தது.

''தீதி'' எனக்குரல் கேட்டு அவள் சட்டென திரும்ப அவள் கைப்பட்டு பூத்தட்டு சிதறி அருகே வந்திருந்த சித்தார்த்தன் மேல் ரோஜா இதழ்கள் கொட்டின. நிமிர்ந்து பார்த்தவன் மலர்ந்து போனான். நின்று கொண்டிருந்தவள் அவள் அல்லவா? அவள் 'ஸாரி' சொல்ல எத்தனித்த பொழுது அவன் ''தேங்க்யூ'' என்றான். 'என்ன?' என ஆச்சரியம் தோன்ற இறங்கி வந்தவளை ''கனமான தட்டை என் தலையில் போட்டு மண்டையை உடைக்காமல் பூவை கொட்டி காப்பாற்றியதற்குத்தான்!''

தன்னை மறந்து வாய் விட்டுச் சிரித்தாள். கண்களை விலக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் காப்பாற்றிய குழந்தையின் தாய் ஒரு வெள்ளித் தட்டில் ஆரஞ்சு வண்ண காஷ்மீர் சில்க் புடவையும் நகைப் பெட்டியுமாய் அருகே வந்தாள்.

''பத்து வருடங்கள் ஏங்கிக் காத்திருந்து, அலைந்து, தவித்து பிறந்த குழந்தையின் உயிரை நீ இன்றைக்குக் காப்பாற்றி தந்து விட்டாய். இதற்கு நன்றி நாங்கள் வாழ்நாள் முழுவதும் சொல்ல வேண்டும். உன்னை என் தங்கையாக நினைத்து இந்த சிறு பரிசைத் தருகிறேன். நீ எந்தக் காரணமும் சொல்லி மறுக்காமல் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் இது எங்கள் அன்பின் அடையாளம்.''

அவள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அந்தத் தாய் ஒத்துக் கொள்ளவில்லை. முடிவில் நகையை மறுத்து விட்டு புடவையை மட்டும் எடுத்துக் கொண்டாள்.

புன்னகையுடன் சித்தார்த் அந்தப் பெண்மணிக்கு நன்றி சொன்னது அவள் காதில் விழுந்தாலும் காரணம் புரியவில்லை.

ஆடல் பாடலுடன் விழா நிகழ்ச்சி களைகட்டியது. சின்னவர், பெரியவர் வயது வித்தியாசமில்லாமல் அனை வரும் ஆடிப் பாடினர்.

அவளும் ''அக்கேலி தும்...'' எனப் பாடினாள்.

''வாரே வாஹ்!'' என கைத்தட்டி ஆரவாரித்தனர். அவள் புறப்படும் வரை சித்தார்த் அங்கேயே நின்று கொண்டிருந்ததை சுநீல் உள்ளார்ந்த சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் அவனிடம் வந்து விடைபெற் றாள். எப்படிச் செல்கிறார்கள் என விசாரித்துவிட்டு புகைவண்டி நிலையம் வரை சென்று கையசைத்து வழி அனுப்பியவனை சுநீல் முதுகில் தட்டி,

''மாப்பிள்ளை! நீ தலைகுப்புற கவிழ்ந்து விட்டாய்! என்று இப்பதான்டா புரிகிறது. ம்ஹூம் ஒரு மாவட்ட கலெக்டர் டீன்-ஏஜ் பையனை விட மோசமாகி விட் டாய். அவளுடன் பேசினாயே பெயர், முகவரி தான் விசாரிக்கவில்லை. அட்லீஸ்ட் போன் நம்பராவது வாங்கி னாயா? பின் எப்படியடா அவளை தொடர்பு கொள் வாய்? டைம் - பாஸிற்காக பெண்களிடம் நீ பழகுபவன் இல்லை. அப்படியிருக்க இது என்னடா முட்டாள்தனம்?''

'அவள் மனம் தெரியாமல் நான் எதையும் முடிவு செய்ய விரும்பவில்லை. அவளுக்கும் என் போல் ஈர்ப்பு இருந்தால் கண்டிப்பாய் என்னைத் தேடி வருவாள். அன்பு இருக்குமா? நிச்சயம் இருக்க வேண்டும்; இருக்கும் அவள் கண்களில் அன்பு தெரிந்தது. அவை பொய் சொல்லாது. வாயிலிருந்து வார்த்தைகள் வேண்டுமானால் வராமல் இருந்திருக்கலாம். ஆனால் கண்கள் பேசின. நான் வழி அனுப்ப உடன் வருவதாகச் சொன்னவுடன் உன் கண்கள் மலர்ந்ததைப் பார்த்தேன். விழி அசைக் காமல் வண்டி புறப்படும் வரை பார்த்ததை உணர்ந் தேன். வெகுதூரம் செல்லும் வரை உன் கையசைப்பும் தொடர்ந்ததையும் பார்த்தேன். நீ உன் மனதை உணரும் வரை காத்திருப்பேன்.'

''என்ன யோசனை?'' என்று அன்று சுநீல் கேட்ட அதே கேள்வியுடன் எதிரே உமா நின்றிருந்தாள்.

பழைய நினைவுகளின் கனவில் ஆழ்ந்திருந்த சித்தார்த் மூடியிருந்த கண்களைத் திறந்தான்.

''தூக்கமா? கனவா? நீ இப்ப ப்ரீ தானே? உன்னோடு கொஞ்சம் பேசலாமா?''

''உமா! அண்ணன் ஹாஸ்பிட்டல் கிளம்பி விட் டாரா? நீ செல்லவில்லையா?''

''நான் இன்றைக்கு ஒரு நாள் போகாவிட்டால் மருத்துவமனை நிர்வாகம் ஒன்றும் கெட்டுவிடாது. அத்தை உன்னிடம் பேசச் சொன்னார்கள்.''

''உமா! நீ மருத்துவமனையில் புது மாற்றங்கள் செய் திருக்கிறாயாமே? அண்ணன் மிகவும் பாராட்டினார். உன்னைப் பற்றி பேசும் பொழுது எவ்வளவு பெருமை யாக பேசினார் தெரியுமா? அவர் உன் மேல் வைத்திருக் கும் அன்பு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல் கிறது. இன்னொரு குட்டி இளவரசியோ, இளவரசனோ இந்த வீட்டிற்கு வரப் போகிறார்களா என்ன?''

அவள் முகம் சிவந்து போனது.

''சூ! நான் என்ன கேட்க வந்தால் நீ என்னை திசை திருப்ப இப்படி பேச்சை மாற்றுகிறாய்? சித்தார்த் அத்தை ரொம்ப வருத்தப்படுகிறார்கள். உனக்குத் திருமணம் செய்து வைக்க ஆசைப்படுகிறார்கள். நீதான் பிடி கொடுக்க மாட்டேன் என்கிறாய். ஏன் இப்படி? உன் மனதில் யாராவது இருக்கிறார்களா? அப்படியிருந்தால் அவரிடமாவது அல்லது என்னிடமாவது சொல்லி இருப் பாயே? எங்கள் கல்யாணத்தைக்கூட நீதானே நிச்சயித் தாய்?''

''விடு உமா! வேறு ஏதாவது பேச்சு இருந்தால் பேசேன்'' என்றவன் 'இந்தப் பேச்சிற்கு பயந்து கொண்டு தான் வீட்டிற்கே வராமல் இருந்தேன்' என தனக்குள் எண்ணிக் கொண்டான்.

''சித்தார்த் இந்த முறை நீ என்ன சொல்லியும் தப்பிக்க முடியாது. இன்று மாலை ஆறு மணிக்கு திருவானைக் கோவில் செல்கிறோம். அத்தை மட்டுமல்ல, வீட்டி லுள்ள அனைவரும் இதில் உறுதியாக இருக்கிறார்கள். அவர்கள் வீட்டிற்கு பெண் பார்க்க வருவதாகச் சொல்லி விட்டார்கள். அத்தை வாக்கு கொடுத்து விட்டார்கள். அதை யாரும் மீறுவது சரியில்லை. கட்டாயம் நீ அத்தை யின் வாக்குறுதியை காப்பாற்றுவாய் என நம்பிக்கை இருக்கிறது'' அமைதியாக நின்றவனிடம் ''யார் வீட்டுப் பெண் என்று கேட்க மாட்டாயா சித்தார்த்? நம்ம கனகம் அத்தைக்கு சொந்தக்காரங்க தான். வீட்டிற்கு ஒரே பெண். படித்திருக்கிறாள். வேலைக்குச் செல்கிறாள். அதுவும் சொந்தக்காலில் நிற்க வேண்டும் என்ற தன்னம் பிக்கையில் தான். பெண்ணின் அப்பா தொழில் அதிபர். அம்மா வீட்டு நிர்வாகம் செய்கிறவர். உன்னை தங்கள்

பிள்ளை போல் நினைத்துப் போற்றுவார்கள் என தாரகர் சொன்னார்.''

''உமா, ப்ளீஸ்! இத்துடன் விட்டு விடேன். எனக்கு திருமணம் செய்து கொள்ளும் ஆசை வந்தால் நானே உன்னிடம் சொல்கிறேன். மாலை என்னால் உங்களுடன் எங்கும் வர முடியாது.''

''பெண் பார்க்க வந்தாலே கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற கட்டாயமும் கிடையாது. அம்மாவின் மனசு நோகாமல் இருக்க சும்மாவாவது வந்து விட்டுப் போ.''

''அது சரியாய் இருக்காது உமா. நான் பார்க்கின்ற முதல் பெண்ணே என் மனைவி. அதனால் நான் எங்கும் வருவதற்கு இல்லை. முடிந்தால் இந்த நிகழ்ச்சியையே தடுத்துவிடு. இல்லாவிட்டால் நீங்கள் மட்டும் சென்று வாருங்கள்.''

''அது எப்படி? அம்மாவிடம் நான் என்ன சொல்லி இதை நிறுத்த முடியும்? அவர்கள் மனதைக் காயப்படுத்த என்னால் முடியாது.''

''நீதான் எனக்கு எப்படியாவது உதவி செய்ய வேண் டும். பெண்ணை இப்படி சந்திப்பதில் எனக்கு விருப்ப மில்லை என்றும், இயல்பாய் இன்னொரு முறை பார்த் துக் கொள்வதாகவும் கூறி மாலை சந்திப்பை நிறுத்தி விடு. மேலும் இன்னொரு விஷயம். நான் வீட்டில் இருந்தால் அம்மா என்னைக் கட்டாயப்படுத்தக்கூடும். அதனால் நான் வெளியே செல்லப் போகிறேன். நண் பன் வீட்டிற்குச் சென்றால் அம்மா என்ன செய்வார்கள்?''

''போ! சித்தார்த் உன்னைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. எனக்கு என்னவோ உன் மனதில் யாரோ

ஒரு பெண் இருக்கிறாள் என்று நிச்சயமாகத் தோன்று கிறது. நம் வீட்டில் யாரும் உன் விருப்பத்திற்கு குறுக்கே நிற்கப் போவதில்லை. அப்படியிருந்தும் அதைச் சொல் லத் தயங்குகிறாய்; உண்மையை ஏன் மறைக்கிறாய்?'' அவ னிடமிருந்து பதில் வரவில்லை. அவன் முகத்தைப் பார்க்க அதில் ஒரு மெல்லிய புன்னகை. பெருமூச்சுடன் நகர்ந்தாள்.

சித்தார்த் எதிர்பார்த்தது சரிதான். அவன் அம்மா அன்றைக்கு தன்னுடன் பெண் பார்க்க அழைத்துச் செல்வதில் உறுதியாய் இருந்தார். நண்பன் வீட்டிற்குச் செல்ல இருந்தவன் அம்மா போன் செய்து அவனையும் தொந்தரவு செய்து விடுவார் என உணர்ந்து தன் எண் ணத்தை மாற்றிக் கொண்டு ஸ்ரீரங்கம் பெருமாள் கோவி லுக்குச் சென்றான். செல்லை சுவிட்ச் ஆஃப் செய்து விட்டு சக்கரத்தாழ்வாரை சுற்றிக் கொண்டிருந்தான். மனசுக்குள் ஏதோ ஓர் நிறைவு எழுந்தது. இனம் புரியாத பரவசம் தோன்ற சந்நிதியை விட்டு வெளியே வந்தான். சுகந்தமான மணம் வீசியது. குளிர்ந்த தென்றல் மெல்ல வருடியது. சின்னதாய் தூறல் பன்னீராய் தூவ... அப்போது தான் அவளைக் கண்டான். புத்தம் புதிதாய் மலர்ந்திட்ட மலரைப் போல. அவள்... அவள்... எந்த வினாடியும், நிமிடமும் நினைவிலிருந்து நீங்காத அவளே தான்!



3

முத்துமணிக்கு எதிலும் மனசே செல்லவில்லை. அவள் கணவன் கே.எஸ். என அழைக்கப்படும் கல்யாண

சுந்தரம் மிகப்பெரிய குவாரிக்குச் சொந்தக்காரர். கல் லுடன் பழகிப் பழகி கல்லாகவே இறுகிப் போனவர்.

அவரிடம் அவள் அன்பாக பழகியதைவிட பயந்து நடுங்கி வாழ்ந்ததுதான் அதிகம். மனிதர் எப்பொழுது கோபப்படுவார் என்றே தெரியாது. எந்நேரமும் கடு கடுத்த முகம்தான். அவரைப் பொறுத்தவரை மனைவி ஒரு கௌரவ சின்னம். அவ்வளவுதான்!

அதற்கு அணிமணி பூட்டி விழாக்களில் நிறுத்துவார்; தன் செல்வ வளத்தை பறைசாற்றுவார். அத்துடன் முடிந்து போயிற்று. உயிரற்ற பொருளுக்கு கிடைத்த மரியாதைகூட முத்துமணிக்கு கிடைத்தது இல்லை. அருமைப் பெண் மகிளாகூட அவளை இப்பொழுது மதிப்பது இல்லை.

சிறு வயதில் இருந்து அவள் விடுதியில் வளர்ந்ததால் என்றைக்கோ விடுமுறை நாட்களில் பார்க்கும் அடிக் குரலில் மிரட்டும் தந்தையும், தொட்ட தொண்ணூறுக் கும் பயப்படும் தாயும் அடியோடு பிடிக்காமல் போயினர். படிப்பில் ஓகோ என்று இல்லாவிட்டாலும் முதல் வகுப் பில் பாஸ் செய்யும் மாணவியாய் இருந்தாள். கணினி படிப்பு முடித்ததும் பரீட்சை எழுதி தேறி பெங்களூரு மென்பொருள் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்து விட்டாள்.

கையில் மாதம் அரை இலட்சம் சம்பளம் வாங்கி னாள். அதனால் வீட்டு நினைவே அவளுக்கு சுத்தமாய் அற்றுப் போனது. திருச்சி திருவானைக்கோவிலில் பிறந்த பெண் கலிஃபோர்னியாவில் பிறந்த பெண் போல உருமாறி விட்டிருந்தாள். அவளுக்கு திருமணம் செய்ய வேண்டுமென்று பல்வேறு பயங்களுக்கு இடையே தன்

கணவனை இடைவிடாது நச்சரித்துக் கொண்டிருந்தாள் முத்துமணி.

'எறும்பு ஊர கல்லும் தேயுமல்லவா?' அவர் மனசும் தேயும் நிலை வந்தது. பல்வேறு ஊர்களில் கிரானைட் குவாரி நடத்தி வந்தார்; வட மாநிலங்கள். அண்டை மாநிலங்கள் அதில் அடக்கம். நாலா பக்கமும் ஓங்கி வளர்ந்து நிற்கும் நெடுநெடுவென்ற மலைகளும், மரகத பட்டாடை போர்த்தியது போல் பச்சைப் பசேல் என இருக்கும் வயல்வெளிகளும், நெல், கரும்பு, வாழை போன்ற இயற்கை எழில் கொஞ்சும் ஏரியா அவர் கண் பட்டால் போதும் அவரது குவாரி குத்தகையாகிவிடும். உலகத்தரம் வாய்ந்த 'காஷ்மீர் ஒயிட்' கிரானைட் கல்யாணசுந்தரத்தின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தியது.

கல்யாணசுந்தரம் கே.எஸ். ஆனார். தமிழ்நாட்டில் இருந்தால் கூடிய சீக்கிரம் பிரச்சனை வரும் என அவரது உள்ளுணர்வு சொல்ல தொழிலை வெளிமாநிலங்களுடன் நிலை நிறுத்திக் கொண்டார்.

அவர் எதிர்பார்த்தது போல 13 பக்க அறிக்கையால் கிரானைட் பாதை சரிய ஆரம்பித்தது. மாவட்ட ஆட்சியர் வெளியிட்ட அறிக்கை பூகம்பத்தை கிளப்ப ஆரம்பித்தது தான் ஜெயிப்பதற்காக இவரும் பல்வேறு தகிடுதத்தங்களை செய்திருக்கிறார். கால்வாய்கள், வயல்கள், வண்டிப்பாதைகள், கண்மாய்கள், குளங்கள் என அரசுக்குச் சொந்தமான அத்தனை இடங்களிலும் குவாரிகள் அமைத்துக் கற்களை சட்ட விரோதமாக வெட்டி கடத்திக் கொண்டு இருக்கிறார்.

பல கண்மாய்கள் இருந்த இடமே தெரியாத அளவிற்கு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு விட்டதால் நீரின்றி

விவசாயம் செய்ய முடியாமல் வந்த விலைக்கு விற்று விட்டு கூலி வேலைக்குப் போன விவசாயிகள் எத்தனை பேர்? பல ஆயிரம் ஏக்கரை பாழாக்கி சொந்தமாக்கிக் கொண்டு விட்டார்.

தொடர்ந்து பல வருடங்களாக 'அதிக அளவில் அந்நியச் செலாவணி ஈட்டித் தரும் நிறுவனம்' என அவரது நிறுவனம் விருது ஜனாதிபதி கையால் வாங்க முயற்சித்துக் கொண்டு இருக்கும் நேரத்தில் சிக்கல் ஆரம்பித்து இருக்கிறது.

நேர்மையான ஆளை விலைக்கு வாங்க இருபது கோடி ரூபாய் கொடுத்தால் போதுமா? பணத்திற்கு மயங்காதவர்களை வேறு வழி கையாண்டு மடக்கி இருக்க வேண்டாமா? ஏறக்குறைய மாஃபியாக்களை போலத் தான் கே.எஸ்ஸும் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார். பல இடங்களில் கிரானைட் கற்களை பதுக்கி வைத்திருக்கிறார். அவற்றை எல்லாம் அரசு மோப்பம் பிடிப்பதற்கு முன் விற்று காசாக்க வேண்டும். மாவட்ட ஆட்சியரின் விவசாயிகளின் எதிர்ப்புக்குரல் கிரானைட் மாஃபியாக்களுக்கு முன் ஒன்றுமே இல்லாமல் போனதை சுட்டிக் காட்டியிருந்தது. கே.எஸ்ஸிற்கு கிலியை ஏற்படுத்தியது.

தனக்கு ஒரு பலமான ஆள்பவர் துணைவேண்டும் என நினைத்தார். அவரது தொழில் மாநிலத்தை தாண்டி தேசிய அளவில் இருந்ததால் மேலிடத்தை வளைக்க யாரைப் பிடிக்கலாம்? என யோசித்தார். இளைஞராய் புத்திசாலியான செல்வாக்குள்ள யாராவது ஆள் மாட்டுகிறார்களா? என கூர்ந்து தேடியபொழுது, மாவட்ட ஆட்சியராய் திறம்பட செல்வாக்குடன் செயல்பட்டுக் கொண்டிருந்த சித்தார்த் கண்ணில் பட்டான்.

தேசிய அளவில் அவனது செல்வாக்கு உயர்ந்து கொண்டிருந்ததை தவறாமல் கவனித்து ஆதாயத்தை கணித்துக் கொண்டிருந்தார். பிரச்சனை மிகுந்த இடத்தில் எல்லாம் துணிச்சலாக செயல்பட்டு சேதம், கலவரமில்லாமல் சுமுகமாக பிரச்சனைகளைத் தீர்வு கண்டவிதம் இவர் மனதில் நம்பிக்கையை உருவாக்கியது.

பணம் கொடுத்து வளைக்க முடியாதவனை எப்படிக் கையாளலாம்? என யோசித்துக் கொண்டிருந்த பொழுது தரகர் போட்டோ, ஜாதகத்துடன் அவர் பெண்ணிற்கு வரன் கொண்டு வந்தார். அதில் சித்தார்த் போட்டோவை பார்த்த கணமே தீர்மானித்தார். 'இவன் தான் என் மாப்பிள்ளை! எப்படியாவது என் பெண்ணைக் கொடுத்து இவனை வளைத்துப் போட வேண்டும். நல்லவேளை என் பெண் அவள் அம்மாபோல் கொஞ்சம் அழகாக பிறந்து விட்டாள்.

என்ன விலை கொடுத்தாவது சித்தார்த்தை வாங்கி விட வேண்டும். மேலிட செல்வாக்குள்ள கலெக்டர் மூலம் தன் பணத்தை சொத்தை பாதுகாக்கலாம். மேலும் மேலும் கோடீஸ்வரன் ஆகலாம்.' அழகான ஆசைக் கனவு நிறைவேறுவதற்கு எதுவும் செய்வதற்குத் தயாராகி விட்டார்.

மெல்ல சாமர்த்தியமாக தரகரிடம் பேசி மாப்பிள்ளை வீட்டினரை பெண் பார்க்க ஏற்பாடு செய்து விட்டார். பெண் பார்க்க வைத்து விட்டால் அவர்களை பேச்சிலேயே கவிழ்த்து விடலாம் என உறுதியான எண்ணத்துடன் செயல்பட்டார்.

அவர் பெண்ணை ஊரிலிருந்து வரவழைக்கும் பொறுப்பை மனைவியிடம் கொடுத்து விட்டார். அவ

தானே பெண் கல்யாணம் என்று தொணத்திக் கொண்டிருந்தாள். ஆனால் அவர் பெண் என்ன லேசுப்பட்டவளா? அவரைப் போன்ற முரட்டுத்தனம் அவளிடமும் இருக்குமென அவர் எடைபோடவில்லை.

ஊர், உலகத்தை எல்லாம் எப்படி ஏமாற்றலாம் என திட்டமிட்டுக் கொண்டிருந்தபொழுது மகிளா இவர்களை மறந்தே போயிருந்தாள். முத்துமணி பலமுறை போன் செய்து வற்புறுத்திய பிறகு ஊருக்கு வர ஒத்துக் கொண்டாள். இன்றைக்கு வருவாள், நாளை வருவாள், மறுநாள் வருவாள், காலை, மதியம், மாலை எப்படியும் சரியான நேரத்திற்கு வந்து விடுவாள் என எதிர்பார்த்துக் கொண்டே இருந்தனர்.

''எங்கேடி இனனும் உன் பொண்ணைக் காணோம்? நல்லா வளர்த்து வைத்திருக்கிறாய்! ஆடு, மாடு, நாய் கூட சரியான நேரத்திற்கு வந்து சேர்ந்துவிடும். ஆனால் உன் பெண் அகம்பாவம் பிடித்தவள். உன்னை மாதிரியே வாயைத் திறக்காத அழுத்தக்காரி. அமுக்கினி மாதிரி இருந்துகிட்டே பல வேலைகளை செய்து விடுவாள். அரை இலட்சம் சம்பாதிக்கிற திமிர். கோடிக்கணக்கில் நான் யாருக்காக சொத்து சேர்க்கிறேன்? எல்லாம் உங்களுக்காகத்தானே? ஆம்பிளை என்றால் அப்படி இப்படித் தான் இருப்பேன். அதையெல்லாம் உன் பெண்ணிடம் போட்டுக் கொடுத்தாயா? இந்தக் கல்யாணம் எப்படியாவது நடக்க வேண்டும். இல்லாவிட்டால் நான் பொல்லாதவன் ஆகிவிடுவேன். என்னைப் பற்றி உனக்கு நன்றாகத் தெரியுமல்லவா? உன் பெண்ணிடம் கொஞ்சம் பதமாய் சொல்லி எச்சரித்து வை.

என்னை ஏமாற்ற எந்த கொம்பனாலும் முடியாது. இந்த விஷயத்தில் நீயும், உன் பொண்ணும் என்னை ஏமாற்ற

முயல வேண்டாம். நான் இந்தக் கல்யாணத்தின் மூலம் பல திட்டங்களைத் தீட்டியுள்ளேன். எல்லாம் சரியாக நடக்க வேண்டும். உன் முட்டாள்தனத்தை வெளிக்காட்டும் வேலை எதுவும் செய்து விடாதே. அக்கம் பக்கம், உன் உற்றார் உறவினர் எவரிடமும் நீ இந்த விஷயம் முடியும் வரை மூச்சு விடக்கூடாது என நான் சொல்லி இருந்தது ஞாபகம் இருக்கிறதல்லவா? யாரிடமும் நீ அதிகம் பேச்சு வைத்துக் கொள்ள வேண்டாம். நான் சொல்வதற்கு மட்டும் தலையசைத்தால் போதும். என்ன புரிந்ததா? என்ன இதற்கும் போய் தலையசைத்துக் கொண்டு இருக்கிறாய்? வாயைத் திறந்து பதில் சொல்ல முடியாதா?

உன்னை மாதிரி ஒருத்தியை வைத்துக் கொண்டு நான் எப்படித்தான் காரியத்தை நடத்தப் போகிறேனோ? அவள் வந்ததும் முதலில் அவள் காலை ஒடித்துப் போட வேண்டும். மனுசனை எப்படி டென்ஷனில் வைத்திருக்கிறாள். சீக்கிரம் வந்து தொலைய வேண்டியது தானே? போன் போட்டால் சுவிட்ச் ஆஃபில் இருந்து தொலைக்கிறது. வேறு யாராவது அவள் தோழி எண் தெரிந்தால் போன் செய்து கேட்டு வை. நான் சற்று வெளியே போய்விட்டு வருகிறேன்.''

அவர் வெளியே செல்வதற்கும் தரகர் வருவதற்கும் சரியாக இருந்தது.

''வாங்க வெயில் நேரத்தில் வந்திருக்கிறீர்கள். உட்காருங்கள். குளிர்பானம் கொண்டு வருகிறேன்.''

குளிர்பானத்தை வாங்கிக் குடித்துவிட்டு, ''என்னம்மா பாப்பா ஊரில் இருந்து வந்து விட்டதா? அவங்க சாயந்திரம் வந்துடுவாங்க. தயாராய் இருங்க. ரொம்ப

கஷ்டப்பட்டு இந்த சம்பந்தத்தை ஏற்பாடு செய்து இருக்கிறேன். எந்தக் குழப்பமும் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

அப்புறம் ஐயா உங்களை கோபிச்சுக்கிடுவார். மாப்பிள்ளை அம்மாவுடைய பிடிவாதத்தினால் தான் 'அவர்கள் இன்றைக்கு இங்கு வருகிறார்கள். அதனால் சந்தர்ப்பத்தை சரியாய் பயன்படுத்திக் கொள்ளுவது உங்கள் கையில் தான் இருக்கிறது. பெரிய இடம், பெரிய பதவி, அருமையான சூப்பர் ஹீரோ மாதிரி பையன். உங்க பொண்ணு மகாராணி மாதிரி காலாட்டிக் கொண்டு அதிகாரம் செய்யலாம். அவங்களுக்கு பொண்ணு கொடுக்க நீ நான்னு போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள். அதுதான் காதும். காதும் வைத்த மாதிரி அவர்களை இங்கே அழைத்து வருகிறேன். பாப்பா இருந்தால் கூப்பிடுங்க. இரண்டு வார்த்தை பேசிட்டு போயிடுறேன்.''

'என்ன சொல்வது? இன்னும் அவள் வந்து சேரவில்லையே? உண்மையைச் சொல்லி விடலாமா? அதனால் ஏதாவது பிரச்சனை வருமா? அவரிடம் கேட்காமல் ஏதாவது சொல்லி விட்டால் பின்னால் என்னால் சமாளிக்க முடியாது. இப்போதைக்கு ஏதாவது சொல்லி சமாளிக்க வேண்டியதுதான்.'

''ஆ! பாப்பா பயணம் வந்த களைப்பு போக படுத்துத் தூங்கிக்கிட்டு இருக்கு. சாயந்திரம்தான் அதைப் பார்க்கப் போகிறீர்களே?''

''அது சரிதான். நல்லா ஓய்வு எடுக்கட்டும். மாப்பிள்ளையை ஒரே பார்வையில் அசத்திட வேண்டும். ஏற்பாடு சிறப்பாய் இருக்கட்டும். பெரிய குடும்பம்:

பெருந்தன்மையானவங்க. ஐயா இந்த இடத்தை எப்படியாவது முடிச்சிடச் சொல்லியிருக்கிறார். நான் வருகிறேன்.''

முத்துமணி தொடர்ச்சியாக மகிளாவிற்கு போன் செய்து அலுத்துப் போனாள். 'ஐயோ! இந்த மனிதனை நான் எப்படி சமாளிப்பேன்? இந்தப் பெண் ஏன் இப்படி செய்கிறாள்? இத்தனை வயதாகியும் இவரை இன்னும் அவள் புரிந்து கொள்ளவில்லையே? மனிதனுக்குக் கோபம் வந்தால் கொலை செய்யவும் தயங்க மாட்டாரே? வரட்டும். வரட்டும். அவளை சரியாய் கவனித்துக் கொள்கிறேன். காலா காலத்தில் கல்யாணம் செய்து கொண்டு வாழ்வை நிறைவு செய்ய வேண்டாமா? சம்பாதிக்கும் பணத்தைக்கூட வீட்டில் தருவதில்லை. ஆசைக்கு இரண்டு வருடங்கள் வேலை பார்த்தது போதும். அவள் சம்பாதித்து இங்கு என்ன வாங்கப் போகிறாள்? அவள் அப்பா சம்பாதிப்பதையே செலவழிக்க ஆளில்லை. இப்படி அநாதரவான நிலையில் அவள் ஏன் வாழவேண்டும்? வரட்டும்; எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு கட்டுகிறேன்.'

உள்ளே போய் வேலைகளை கவனித்தவள் உள்ளும் புறமும் நூறு முறை அலைந்திருப்பாள். 'ஏன் இன்னும் மகிளா வந்து சேரவில்லை. நான் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு அலைவது அவளுக்கு எங்கே புரியப் போகிறது? புரிந்திருந்தால் இந்நேரம் வந்து சேர்ந்திருக்க மாட்டாளா? அவள் தோழி ஒருத்தியின் தொலைபேசி எண்ணும் தெரியவில்லை. அவர் வந்து வானத்துக்கும் பூமிக்கும் குதிக்கப் போகிறார். அட! அந்த அலுவலக காலண்டரில் தொலைபேசி இருக்குமே? அவ

வேலை செய்யும் அலுவலக காலண்டர் தானே? அது வருடா வருடம் தவறாமல் அவள் அனுப்பி வைப்பது இதைத்தானே? சரி பேசிப் பார்க்கலாம்.

அலைபேசியை எடுத்து அந்த எண்ணை தொடர்பு கொண்டாள். எடுத்துப் பேசியவள் ஆங்கிலத்தில் பேச முத்துமணி ''வணக்கம். என் பெண் மகிளாவுடன் பேச வேண்டும்'' எனக் கூற போனை வேறு யாரோ வாங்குவது கேட்டது.

''ஹலோ! யார் பேசறீங்க?''

''நான் மகிளாவோட அம்மா பேசுகிறேன். அவள்கிட்டே பேச வேண்டும்.''

''ஆன்ட்டி, நான் சியாமளா பேசுகிறேன். மகிளா வேறு கம்பெனிக்கு வேலைக்கு போய் ஆறு மாதம் ஆகிவிட்டதே! நீங்க மறந்து போய் பழைய கம்பெனிக்கே நம்பர் போட்டு விட்டீர்களா? மகிளா எப்படியிருக்கிறாள்? நானே அவளைப் பார்த்து வெகு நாட்கள் ஆகின்றது. நீங்கள் எப்படியிருக்கின்றீர்கள்? வீட்டில் எல்லாரும் நன்றாக இருக்கிறார்களா? என்ன ஆன்ட்டி?

''ம்... ஒன்றும் காதில் விழவில்லை. சரி வேலையிருக்கிறது. நான் பிறகு பேசுகிறேன்.''

அவள் வைத்துவிட்டாள். ஆனால் மகிளாவின் தாய்தான் அப்படியே ஸ்தம்பித்துப் போய்விட்டாள். 'என்ன வேறு கம்பெனிக்கு போய்விட்டாளா? அதுவும் ஆறுமாதம் ஆகிறதா? எதையுமே அவள் சொல்லவில்லையே? எங்கள் பெண் எங்கோ தொலைந்து போய் விட்டாளா? என்ன நடக்கிறது என்றே தெரியவில்லையே? பாவி மகளே! உனக்காக கோடிக்கணக்கில் சொத்துடனும்

வசதி வாய்ப்புடனும் காத்துக் கொண்டிருக்கிறோமே! எங்கள் அருமை ஏன் உனக்குத் தெரியாமல் போனது. மாப்பிள்ளை வீட்டார் வேறு வந்து விடுவார்கள். அவர்களை எப்படிச் சமாளிப்பது? அவர்களுக்கு முன்னால் இந்த மனிதரை எப்படி எதிர்கொள்வது? என்ன செய்யப் போகிறாரோ? ஐயோ! நான் என்ன செய்வேன்? கடவுளே இவர் கோபத்திலிருந்து காப்பாற்று! எந்த அவமானமும் விருந்தினர் முன்னிலையில் ஏற்படாமல் காப்பாற்று கடவுளே!

ஆ! அவர் வந்து விட்டார் போலிருக்கிறதே! என்ன ஆகப் போகிறதோ?'

"எய்! இன்னும் உன் மகள் வந்து சேரவில்லையா? உன்னை உதைத்தால் சரியாகிவிடும். உன்னை போடுற போடில் அவள் கதறிக் கொண்டு வரப்போகிறாள்." என தாதரவென்று உள்ளே இழுத்துச் சென்று எரிகின்ற அடுப்பினுள் அவள் கையைக் காட்டினார்.

"ஆ! அம்மா" என முத்துமணி அலற...

"என்னாச்சு அம்மா? பால் பாத்திரத்தில் சுட்டுக் கொண்டீர்களா? நீங்க நகருங்க. நான் பார்க்கிறேன்" என வேலைக்காரி சொன்ன பிறகு தான் முத்துமணி சுய நினைவிற்கு வந்தாள்.

'நல்லவேளை கண்டது கனவு. கடவுளே அப்படி எதுவும் நடந்து விடக்கூடாது. என்னை இக்கட்டிலிருந்து நீதான் காப்பாற்ற வேண்டும்.'

வாசலில் 'முத்துமணி' என யாரோ அழைக்கும் குரல் கேட்டது. 'கேட்ட குரலாக இருக்கிறதே? யார்?' என யோசித்தவாறே சென்றாள். வாசலில் கனகம் ஓர் இளம்

பெண்ணுடன் நின்றிருந்தாள். 'ஐயோ! இவள் ஏன் இந்த நேரத்தில் வந்தாள்? இது ஏதுடா புதுப் புது வம்பாய் எனக்கு முளைத்துக் கொண்டிருக்கிறது. அவர் வேறு வீட்டிற்கு பெண் பார்க்க வருவது யாருக்கும் தெரியக் கூடாது என்றிருக்கிறார். முக்கியமாய் கனகத்திற்கு தெரியக்கூடாது என பலமுறை வலியுறுத்தியிருக்கிறார். கனகம் இரண்டு பக்கமும் சொந்தக்காரி. அவளுக்கு தெரியாமல் கல்யாணத்தை நடத்த முடியுமா? பெண் பார்க்கும் நிகழ்ச்சியே அவளுக்குத் தெரியாமல் நடத்த முடியாது போலிருக்கிறதே? இவளை எப்படி அப்புறப்படுத்துவது? அதற்குள் அவர் வந்துவிட்டால் நான் தொலைந்தேன். என் வாழ்க்கையே புலம்பலாகப் போய்விட்டது.

"என்ன முத்துமணி அப்படியே திகைச்சுப் போய் நிற்கிறாய்? அண்ணன் எங்கே? அவரை நான் அவசரமாய் முக்கியமாய் பார்க்க வேண்டும்."

"அவர் முக்கிய வேலையாய் வெளியே போயிருக்கிறார் அண்ணி. ஏன் என்ன விஷயம்?"

"இந்தப் பெண் எனக்கு உறவினள். இவளுக்கு ஒரு வேலை வேண்டும். அதனால் அண்ணனைப் பார்த்துப் போகலாம் என்று வந்தேன்."

"இருங்க. முதலில் ஏதாவது குடியுங்க. ஜூஸா? காபியா?"

"காபியே போதும். அண்ணனை இருந்து பார்த்துட்டுப் போகிற முடிவில் தான் வந்திருக்கிறேன்."

"ஐயய்யோ!" வாய்விட்டே முத்துமணி சொல்லிவிட...

"என்ன முத்துமணி...?"

''அவர் ஒரு முக்கியமான ஃபைலை தேடி எடுத்து வைக்கச் சொன்னார். நான் மறந்தே போய் விட்டேன். இப்போது தான் ஞாபகம் வந்தது.''

''அண்ணன் முன் கோபி. நீ போய் தேடு அண்ணி. நான் இங்கேயே இருந்து அண்ணனைப் பார்த்துவிட்டுப் போகிறேன்.''

'ஐயோ! உடும்புப் பிடியாய் ஒரே விஷயத்தைப் பிடித்துக் கொண்டு கழுத்தறுக்கிறாளே! எப்படி இவளை வெளியேற்றப் போகிறேன்?' உள்ளே சென்றவள் பல முறை வாசலை எட்டிப் பார்த்தும் கனகம் கிளம்புவதாக இல்லை. சீக்கிரம் கிளம்பேன் என சொல்ல முடியாமல் தவித்தாள். ''அண்ணி, உங்களைப் பார்க்க வேண்டும் என்று வசந்தா அக்கா சொன்னாங்க. என்ன அவசரமோ தெரியவில்லை.''

''அடடா! முத்துமணி நான் மறந்தே போனேன். அவள் பேரக்குழந்தைக்கு மருந்து அரைச்சுக் கொடுக்க கூப்பிட்டு இருந்தாள். மாம்பழச் சாலையில் தானே இருக்கிறாள். நான் ஒரு எட்டு பார்த்து விட்டு வருகிறேன் அம்மா, மகாலெஷ்மி, நீ இருந்து அண்ணனைப் பார்த்து விட்டு வருகிறாயா? வழி தெரியுமல்லவா?''

''சரிங்க பெரியம்மா'' கனகம் கிளம்பினாள்! 'எப்படியோ கிளம்பினாளே! இந்தப் பெண் இருந்தால் இருந்து தொலைத்து விட்டுப் போகிறாள் என விட வேண்டியதுதான்.'

வீட்டிலிருந்த அலங்காரங்களை ஒருமுறை பார்வை யிட்டாள் முத்துமணி. ஹாலில் பெரிய ஸோபாக்கள் இரண்டு கிடந்தன. நடுவில் கார்ப்பெட் விரித்து இருந் தாள். அதை இன்றைக்கு தான் எடுத்து விரிக்கிறாள். அவள் கணவனுக்கு காசை செலவழிப்பது பிடிக்காது.

புது செருப்பு வாங்கிவிட்டு அது தேய்ந்து விடும் என கையில் எடுத்துச் செல்பவர். ஒன்றுக்கு இரண்டு கார் இருந்தாலும் அவரை அறியாத ஊர்களுக்கு பஸ்ஸில் பிர யாணம் செய்பவர். எந்தெந்த வழிகளில் எப்படியெப்படி பணம் சேர்க்க முடிந்தாலும் பணத்தை சேமித்து விடு வார்.

அவருக்கு மகள் சம்பளத்தையும் வாங்கி வேறு பொருள்களில் முதலீடு செய்வது ஆசையாக இருந்தாலும் அவள் அதை விரும்பாததால் தங்கமாக வாங்கி வைத் திருந்தார். இந்த விஷயம்கூட அவர் மனைவிக்குத் தெரி யாது. கணக்கில் வராமல் எவ்வளவோ சொத்துக்களை வாங்கி வைத்திருந்தார். ஒன்றுக்கு மூன்று குடும்பங்கள் மனைவிக்குத் தெரியாமல் வைத்திருந்தது போலவே எல்லா விஷயங்களையும் வைத்திருந்தார். வாழ்வில் அவரது இலட்சியம் ஒன்றுதான். பணம், பணம், பணம் மட்டும்தான். அது மட்டும் இருந்தால் போதும்; எதுவும் வாங்கி விடலாம். ஆனால் எல்லா சொத்துக்களையும் அவர் பெயரில் இருந்தால் பிரச்சனை வரும் என்று பினாமி பெயரில் வைத்திருந்தார்.

முத்துமணியின் அலைபேசி ஒலித்தது. மகிளாவின் அப்பாவோ? என பயத்துடன் எடுத்தாள். தரகர் தான் பேசினார். மாப்பிள்ளை வீட்டினர் வர சற்று தாமதமாகும் எனக் கூறினார். 'அம்மாடி' என சற்று மூச்சு விட்டாள். 'அதற்குள் மகிளா வந்து சேர்ந்து விட்டால் நன்றாக இருக்கும். ஆசைப்படுவது எல்லாம் நடந்து விடுகிறதா என்ன?'

வேலைக்காரியிடம் சொல்லி கனகாவுடன் வந்த பெண்ணை புத்தக அறையில் உட்காரச் சொன்னாள்.

அதன் பிறகு அவளை சுத்தமாக மறந்தே போனாள். தரகர் கே.எஸ்ஸிற்கும் தகவல் தந்திருந்ததால் அவரும் அரக்கப் பரக்க வீடு வந்து சேரவில்லை.

தொடர்ந்து மகளை தொடர்பு கொள்ள முத்துமணி முயன்று கொண்டிருந்தாள். வேறு ஒருவராய் இருந்திருந்தால் அலுத்துப் போய் போனை போட்டு உடைத்திருப்பார். அவள் மகிளாவின் அம்மா அல்லவா? அதனால் எப்படியும் மகிளாவுடன் பேசிவிட தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருந்தாள்.

'என்ன ஆச்சோ? வரும் வழியில் பஸ் எதுவும் கோளாறு ஆகி விட்டதோ? பிள்ளை தொடர்பு கொள்ள முடியாமல் தவிக்கிறாளோ? அந்தக் காலத்தில் வீடு, தெருவைத் தாண்டி நாங்கள் எங்கும் சென்றதில்லை. எங்கள் பெற்றோரும் இப்படி கவலைப்பட வேண்டியிருக்கவில்லை.

வீடு, பள்ளிக்கூடம் பின் பல்லாங்குழி, கட்டாங்கல் என சந்தோஷமாகத் துள்ளித் திரிந்த காலம் எல்லாம் இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு எங்கே கிடைக்கிறது? இவர்கள் எதையோ பெறுவதற்கு சொந்தங்களையும் உறவுகளையும் தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள். இளைய தலைமுறை அளவிற்கு அறிவில்லாமல் இருக்கலாம்.

அறியாமையில் கூட ஓர் இன்பம் இருந்தது. எதைப் பற்றியும் கவலைப்படாமல் பட்டாம் பூச்சிகளாய் ஆனந்தமாய் நாங்கள் வாழ்ந்த காலம் என் மகளுக்குக் கூட வாய்க்கவில்லை. இவரை மணந்து கொள்ளும் வரை நான் சுயமாய் சிந்திக்கத் தெரிந்த மனுஷியாய் தான் இருந்தேன். இன்று இந்த வீட்டில் இருக்கும் உயிரற்ற பொருட்களில் ஒன்றாய் தான் இருக்கிறேன். என் மகள்

என்னுடன் ஒட்டாமலே போய் விட்டாள். இவருக்கு பயந்து நடுங்கி சமாளிப்பதிலேயே என் கவனம் இருந்து விட்டதால் அவளை வளர்ப்பதில் கோட்டை விட்டு விட்டேன். என் தோழியாக, ஆறுதலாக, தூணாக இருந்து இருக்க வேண்டிய பெண் இன்று என் கவலைக்குரியவள் ஆகிவிட்டாள்.

என் பெண்ணை இனி மீட்க முடியுமா? அவளுக்கு என்னைப் போல் இல்லாமல் ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துத் தரவேண்டும். இன்று பெண் பார்க்க வருவதாகச் சொன்ன குடும்பம் மிக நல்ல குடும்பம்: பாரம்பரியம் மிக்க குடும்பம். பையன் அருமையானவன் என விசாரித்தவர்கள் அனைவரும் சொல்லி விட்டார்கள். பையனும் போட்டோவில் பார்க்க கண்படும் போல் இருக்கிறான். அவர் எதற்கு இந்த இடத்தில் சம்பந்தம் பண்ண ஆசைப்பட்டாலும் அது இருந்து விட்டுப் போகட்டும். நான் என் மகள் நன்றாக வாழ இந்த இடம் அமைய வேண்டும் என ஆசைப்படுகிறேன். எல்லாம் நல்லபடியாக நடக்க வேண்டும். இந்த இடம் முடிவாக வேண்டும். இரண்டு பையன்கள்; பிக்கல் பிடுங்கல் இல்லாத குடும்பம்.

தனியாகவே மகிளா வளர்ந்து விட்டாள். கூட்டுக் குடும்பம்; கூட்டம் அவளுக்கு சரி வராது. அவளுக்கு வருகிறவன் அவளை உள்ளங்கையில் வைத்துத் தாங்க வேண்டும். அவளை அருமையாகக் கொண்டாட வேண்டும். மனமறிந்து நடந்து கொள்ள வேண்டும். சின்ன வயதில் இந்தக் குடும்பத்தில் அவளுக்கு கிடைக்காத அன்பையும், அரவணைப்பையும் தர வேண்டும்: அவளை, அவள் உணர்வுகளை மதிக்க வேண்டும்:

இப்படி எத்தனையோ ஆசைக் கனவுகளை நான் சுமந்து கொண்டிருக்கிறேன். சீக்கிரம் வந்து விடு மகிளா. உனக்கெதுமான வாழ்க்கை உனக்காக காத்திருக்கிறது கண்மணி. வா, வா, வந்துவிடு.'

வாசலில் கார் சத்தம் கேட்டது. மகிளாவின் அப்பா தான்.

''முத்துமணி! சீக்கிரம் வா. ஆலம் சுரைத்து வை. மாப்பிள்ளை வீட்டார்கள் வந்து விட்டார்கள். சந்தனம், குங்குமம், வெற்றிலை, பழத்தட்டை எங்கே வைத்தாய்? இன்னும் சுறுசுறுப்பு உனக்கு பத்தாது. எத்தனை சொன்னாலும் அசமஞ்சம் மாதிரியே இருப்பாய்.''

பேசாமல் விடுவிடென அவர் கேட்ட அனைத்தையும் எடுத்து வைத்தாள். ''பன்னீர் தூவி எங்கே? அதை கேட்டால் தான் வைப்பாயா? சொந்தமாய் சிந்திக்கவே தெரியாதா? சொல்வதையும் நீ ஒழுங்காக செய்ய மாட்டாய். கரடியாய் நான் கத்தி கத்தி தொண்டை காய்ந்தது தான் மிச்சம். சாப்பாடு தட்டுக்களை எடுத்து வைத்தாயா? மாப்பிள்ளை வீட்டிலிருந்து நான்கு பேர் தான் வருகிறார்கள். அவர்களோடு தரகர் வரவில்லை. அவர் யார் வீட்டுக் கல்யாண கமிஷனை வாங்கப் போய் இருக்கிறார். நீ பாட்டிற்கு கணக்கு வழக்கில்லாமல் சாப்பாட்டை தயார் செய்து விடாதே. வீணாகிப் போய்விடக் கூடும்.''

அவர் சொல்லிக் கொண்டிருந்த பொழுது முத்துமணிக்கு வேறொரு விஷயம் ஞாபகம் வந்தது. கனகம் வந்ததைச் சொல்லா விட்டால் மாப்பிள்ளை வீட்டார் முன்னாலே கூட அவளுடன் தகராறு செய்வார். எனவே சொல்லிவிட வேண்டும் என முடிவு செய்து, ''என்னங்

உங்களைப் பார்க்க கனகம் வந்....'' என சொல்லி முடிப்பதற்குள் கோபமாய் அவளிடம் பாய்ந்தார்.

''எத்தனை தரம் படிச்சு, படிச்சு உன்கிட்டே சொன்னேன். யாரிடமும் சொல்லி தொலைக்காதே என்று. அதுவும் கனகத்திடம் போய் சொன்னாயா? அவள் மாப்பிள்ளைக்கு சொந்தக்காரி வேறு. நம் குடும்பத்தைப் பற்றி நல்லபடியாகச் சொல்வாள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. சரியான ராங்கிக்காரி. உன் மரமண்டைக்குச் சொல்வது எதுவும் காதில் ஏறாதா?''

''அவள் இங்கே இல்.....லீங்க. ஒருவழியாய் சமாளித்து அனுப்பி விட்டேன். அவளுக்கு எந்த விஷயமும் தெரியாது. நாங்கள் யாரும் எதுவும் சொல்லவில்லை.

''அப்புறம் எப்படி வந்தாளாம்? யட்சிணி அனுப்பி வைத்தாளாக்கும்?''

''இல்லை. அவள் உறவுப் பெண்ணொருத்திக்கு வேலை கேட்டு உங்களைப் பார்க்க வந்திருந்தாள். அவளைத் திருப்பி அனுப்புவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது.''

அவள் மேலும் ஏதோ சொல்வதற்குள் மாப்பிள்ளை வீட்டினர் வந்து விட்டனர். அவர்களை வரவேற்று உட்கார வைத்து விட்டு டிபன் கொண்டு வர மனைவியை ஏவினார். உள்ளே போன முத்துமணி 'மகிளா எங்கே எனக் கேட்டால் என்ன செய்வது?' என கைகளைப் பிசைந்து கொண்டு சமையல் கட்டிலேயே நின்றாள்.

'இந்த அறிவு கெட்டவள் என்ன செய்கிறாள்?' என பார்க்க உள்ளே வந்தவர் பல்லை நறநறவெனக் கடித்தார்.

''என்...ன...ங்...கு.. இன்னும்... மகிளா... வர..லை.''

''என்ன?'' கடுங்கோபத்துடன் கேட்டவர் ஹாலில் அமர்ந்திருப்பவர்கள் நினைவுக்கு வர, 'முதலில் அவர்களை சமாளித்துவிட்டு இவளை பிறகு கவனிக்கலாம்' என்ற முடிவுடன்,

''டிபனை எடுத்துக் கொண்டு வாயைத் திறக்காமல் வா'' எனச் சென்றார்.

புத்தக அறையில் அமர்ந்திருந்த பெண் புத்தகத்தில் ஆழ்ந்து இருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. இருட்டி விட்டதே சொல்லிவிட்டுக் கிளம்பலாம் என வெளியே வந்தாள்.

''இதோ பெண்ணே வந்துவிட்டாளே! வாம்மா, வா வந்து தயங்காமல் இங்கே உட்கார்'' என்று சித்தார்த்தின் அம்மா சொன்னபொழுது தான் கே.எஸ். அவளை கவனித்தார்.

'யார் இவள்?' கணவனின் கேள்வி புரிந்து ''கனகத்துடன் வந்த பெண்'' என மெல்ல கிசுகிசுத்தாள் முத்து மணி.

அவளுக்கு எதுவும் புரியவில்லை. ஆனாலும் அழைத்தவர்களின் அருகில் சென்று கரம் குவித்து ''வணக்கம்'' சொன்னாள்.

''உன் பேர் என்னம்மா?''

''மகாலெஷ்மி.''

''பேருக்கு ஏற்ற மாதிரி மகாலெஷ்மி மாதிரித்தான் இருக்கே.''

அவள் வெட்கத்துடன் தலைகுனிந்து கொண்டாள். ''மகாலெஷ்மி'' என கே.எஸ். கூப்பிட்டார். திரும்பிப்

பார்த்தவளிடம் ''அம்மா கிட்டே இருந்து டிபன் தட்டுகளை வாங்கி அவங்களுக்குக் கொடும்மா'' என்றார்.

மறுக்காமல் தட்டுகளை வாங்கி புன்னகையுடன் பரிமாறினாள் மகாலெஷ்மி. ஒன்றும் விளங்காமல் முத்து மணி அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்தாள்.

உண்மையிலேயே பிரமிக்கத்தக்க அழகுடன் அந்த மகாலெஷ்மி விளங்கினாள்.

காலையிலிருந்தே மன உளைச்சலில் இருந்த முத்து மணிக்கு முதலில் பார்த்த பொழுது அவள் அழகோ, அடக்கமோ புலப்படவில்லை. மனம் முழுசும் மகிளா இருக்கும் பொழுது அவள் மகாலெஷ்மியை பார்ப்பது எங்கே? ஆனால் பார்க்க பார்க்க அவளுக்கே பிடித்துப் போன பொழுது மாப்பிள்ளை வீட்டினரை கேட்பானேன்?

அவர்கள் மதிமயங்கி வெள்ளித்தட்டில் பட்டுப்புடவை பூ, பழத்துடன் அவள் கையில் கொடுத்துவிட்டு உறுதியான முடிவுடன் புறப்பட்டனர்.



4

'வந்தனா இன்னும் வரவில்லை' என்று தன் மனைவி சொன்னதை அவளது பெரியப்பா நம்பத் தயாரில்லை. 'பெரியம்மா சொல் வேதவாக்கு ஆயிற்றே! அவளை மீறி எதுவும் செய்ய மாட்டாள். இவளும் தன் மகளைப் போலவே வளர்த்து இருக்கிறாள். வந்தனாவிற்கு ஒன்று என்றால் இவளுக்குத் தானே வலிக்கும். அதனால்

தானே தன் மனைவிக்கே முழு விவரம் தெரிவிக்காமல் வைத்திருந்தார். தெரிந்தால் திருமணம் நடக்கவிடாமல் தடுத்து விடுவாளே. திருமணத்தன்று தெரிந்தால் ஒன்றும் செய்ய முடியாது என்று தான் மறைத்து வைத்திருந்தார். ஆனால் நல்ல நாள் என்று மாப்பிள்ளை வீட்டினர் முதல் நாளே நிச்சயம் செய்ய வந்தது அவரது குட்டை வெளிப்பட வைத்து விட்டது.

ஐ.ஏ.எஸ். கோச்சிங் கிளாஸ் போக வேண்டும் என வந்தனா ஆசைப்படுவது அவருக்குத் தெரிந்து தான் இருந்தது. ஆனால் தன் தம்பி மகளுக்காக தம்பிடி அளவு கூட அவர் உதவ விரும்பவில்லை. தன் அப்பாவின் இரண்டாவது மனைவியின் மகனையே ஏற்றுக் கொள்ளாத பொழுது அவனுடைய மகளை எப்படி ஏற்றுக் கொள்வார்? எத்தனை இடைஞ்சல் கொடுத்தாலும் வந்தனா பெரிது படுத்தவில்லை. பெரியம்மாவின் தாயன்பினை அதைத் தாங்கிக் கொண்டாள். அவள் பணத்தை அவர் முழுதாக எடுத்துக் கொண்டாலும் அது தனக்கு மட்டுமே சொந்தமானது என்பதில் நிச்சயமாய் இருந்தார்.

'இவ்வளவு நேரம் வந்தனா வந்திருக்க வேண்டும். வரவில்லையென்றால் இவள் ஏதாவது தகிடுதத்தம் செய்து இருக்க வேண்டும்.' எல்லா இடத்தையும் சந்தேகத்தோடு உற்றுப் பார்த்தார். பெட்டி அப்படியே தான் இருந்தது. துணிமணிகளும் ஏறக்குறைய மாற்றம் இல்லாமல் இருந்தது.

ஆனாலும்... ஏதோ ஒன்று குறைந்தது போன்ற உணர்வு தோன்றிக் கொண்டே இருக்க தெளிவாய் புரிந்து போனது. 'சான்றிதழ்களை எடுத்துக் கொண்டு எங்கேயோ ஓடிவிட்டாள்.'

"ஓடுகாலி. எவனுடன் ஓடினாளோ."

"அப்படியாவது இளைஞனை அவள் கல்யாணம் பண்ணிக் கொண்டால் சரி" என மெல்ல பெரியம்மா முணுமுணுக்க...

"என்ன சொல்கிறாய்? சத்தமாய் பேசு."

"ஒன்றுமில்லை" என்றவளை முறைத்துப் பார்த்தார்.

'அந்தக் கழுதைக்கு இவளும் உடந்தை இருக்கட்டும். இருக்கட்டும். எங்கே ஓடிவிடப் போகிறாள்? அவளை இழுத்து வந்து இவள் கண் முன்னே நிறுத்துகிறேன்' என கறுவிக்கொண்டே.

"மாப்பிள்ளை கொஞ்சம் உள்ளே வாருங்கள். தனியாய் பேசணும்" என கிழவனாரை கூப்பிட்டார்.

"பெரியவரே தடுமாறி இடிச்சுக்காமல் கொஞ்சம் பார்த்து வாங்க" என பதிலுக்கு பெரியம்மா நொடித்தாள். உள்ளே வந்த மாப்பிள்ளை கிழவனிடம் "கல்யாணத்தில் இஷ்டமில்லாமல் பொண்ணு தன்னோட சர்ட்டிபிகேட்டை எடுத்துக்கிட்டு வீட்டை விட்டு ஓடி விட்டாள்."

பெரியம்மாவின் முகத்தில் ஏற்பட்ட மாற்றத்தை பெரியப்பா புரிந்து கொண்டார். 'ஏ! கிழவா! மானம் ரோசம் இருந்தால் சீக்கிரம் இங்கிருந்து கிளம்புடா' என பெரியம்மா எண்ண அந்தக் கிழவரோ, "பொண் மிரள்றது சகஜம் தான். நீங்க சொல்லுங்க. உங்களுக்குச் சம்மதம் தானே?" என.

"பின்னே? சம்மதம் இல்லாமல் உங்களை வரச் சொல்வேனா? ராஜகுமாரி போல் வாழப் போவது அந்தப் பெண்ணிற்குப் புரியவில்லை."

''அதனால் என்னங்க! நீங்க உங்க முடிவிலே உறுதியாய் இருக்கீங்க தானே?''

''நிச்சயமா! அவள் உங்களுக்கு தான்.''

''அப்ப விடுங்க. அவள் எங்கே போனாலும் நிச்சயம் கண்டு பிடிச்சுடலாம். நம்ம கிட்டே இல்லாத பணபலமா? ஆள் படையா?''

''சரிதான். நீங்க என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். அவளை எப்படியாவது கொண்டு வந்து சேர்த்து விடுங்கள்.''

''நான் கொண்டு வந்த சீர்வரிசைகளை எடுத்து உள்ளே வையுங்கள்.''

''அது இருக்கட்டும். பெண் இலேசுப்பட்டவளல்ல. உங்களைக் கல்யாணம் செய்துகொள்ள பகிரங்கமாக எல்லார் முன்னிலையிலும் மறுப்பாள். போலீஸ் கம்ப்ளெய்ண்ட் செய்யக்கூடத் தயங்க மாட்டாள். புத்திசாலிப் பெண்.''

''நமக்கும் புத்திசாலி பொண்ணுகூட விளையாடப் பிடிக்கும். நான் கொண்டு வந்த நகையை எடுத்து உள்ளே வையுங்கள். நகையுடன் இளம் பெண் ஓட்டம் என பத்திரிகையில் செய்தி கொடுத்துடலாம். எங்கேயிருக்கிறாள் என செய்தி தன்னாலே வந்து சேர்ந்து விடும்.''

''உடனே செய்தி போட ஏற்பாடு செய்யுங்கள்.''

வந்தனாவின் பெரியம்மா உடனே பதறிப் போனாள். எப்படியாவது இந்த விஷயத்தை வந்தனாவிடம் தெரிவிக்க வேண்டும். எச்சரிக்க வேண்டும். பெரியப்பா வந்தவர்களை அனுப்பும் வேலையில் கவனமாய் இருந்த பொழுது வந்தனாவை அலைபேசியில் தொடர்பு

கொண்டாள். விவரங்களை தெரிவித்துவிட்டு அவசர அவசரமாக வெளியே வந்தாள். எதிரே அவள் கணவன், நின்று கொண்டிருந்தார். ''யாரிடம் போன் பேசினாய்?''

''இல்லையே.''

''அப்படியா!... போனை பார்த்தால் உன் பொய் தெரிந்து போய்விடும். வசமாக மாட்டிக் கொள்வாய்.''

அறைக்குள் போய் அவர் போனை எடுப்பதற்குள் சத்யா அதை எடுத்து வந்தாள்.

''சத்யா, இங்கே கொடு அந்த போனை.''

''ஏம்பா? நான் கேம் விளையாட வேண்டும்.''

''நீ முதலில் சொன்னதைச் செய்.''

''போங்கப்பா'' என சிணுங்கிக் கொண்டே கொடுத்தாள்.

அலைபேசியை வாங்கி அழைப்பு பதிவை அழுத்திப் பார்த்தார். அதில் எந்த அழைப்பும் பதிவாகவில்லை.

'சே! எப்படியோ தப்பி விட்டாள்' என எண்ணிய வாறே திருப்பிக் கொடுத்தார். யாரும் அறியாவண்ணம், எங்கே மாட்டிக் கொள்ளப் போகிறோமோ? என பயந்து கொண்டிருந்த தன் தாயைப் பார்த்து இலேசாய் கண் சிமிட்டினாள் சத்யா.

புரிந்து நிம்மதியாய் மூச்சுவிட்டாள். வந்தனாவிற்கு கேட்பதற்கு ஆள் இல்லை: தன்னை விட்டால் வேறு கதியில்லை என்பதால் தான் துணிந்து பாவம் செய்ய ஏற்பாடு செய்தவர்: அவள் தப்பித்ததை விரும்புவாரா? தான் நினைத்ததைச் செய்ய வேறு வழிகளை யோசிக்க ஆரம்பித்தார்.

ஜ.ஏ.எஸ். முதன்மை தேர்வை வந்தனா ஏற்கனவே எழுதி இருந்தாள். அதற்கான முடிவு வீட்டிற்கு தானே வரும்; அவள் படிப்பில் மிக கெட்டிக்காரி என்பதில் அவருக்கு மிக நம்பிக்கை இருந்தது. எப்படியும் தேர்வு முடிவை அறிய அவள் ஏதாவது வழியில் தொடர்பு கொள்வாள்: அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம் என அவர் முடிவு செய்த நேரத்தில் வந்தனா திருச்சியை அடைந்திருந்தாள். உண்மையில் திருச்சியில் அவள் இருப்பதை பெரியப்பாவால் ஊகிக்க முடியாது என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது.

பெரியம்மாவின் திருச்சி தோழியைப் பற்றி அவளே இன்றுதான் அறிந்து கொண்டிருக்கிறாள். அனாவசியப் பேச்சு, அலட்டல் எதுவும் பெரியம்மாவிடம் இருந்தது இல்லை. யாரும் தயங்காமல் தங்கள் பிரச்சனைகளை பெரியம்மாவிடம் பகிர்ந்து கொள்வார்கள். விஷயம் எங்கும் வெளியே செல்லாது என்ற நம்பிக்கை. அதனாலேயே அவரிடம் மனம் விட்டு எல்லாரும் பேசுவார்கள். தேவையில்லாத ஒரு வார்த்தைக்கூட அவர் நாவில் இருந்து வெளிவந்தது இல்லை. பெரியம்மா பெரியப்பாவின் பேராசை, அல்பத்தனம் இவற்றையெல்லாம் சகித்துக் கொண்டு வாழப் பழகி விட்டார்.

கனகவல்லி என்ற தன் தோழிக்கு பெரியம்மா தகவல் கொடுத்து விட்டதால் அவளைச் சந்தித்த பொழுது அன்புடன் வரவேற்றாள். வந்தனாவைக் கொண்டு வந்து விட்டு பக்கத்து வீட்டு ஆனந்தி நடந்த விஷயத்தை கூற ஒரு நிமிடம் அதிர்ந்தே போனாள். தன் தோழியை நினைத்து ஒரு நிமிடம் பெருமிதமே ஏற்பட்டது. படிக்கிற காலத்தில் இருந்த தன் தோழியை மறுபடியும் நினை

படுத்தியது. தன்னை பள்ளிக்குப் படிக்க அனுப்ப தன் அப்பாவிடம் வந்து கெஞ்சிக் கூத்தாடி அழைத்துச் சென்றவள் கண் முன்னே எழுந்து நின்றாள்.

இன்றைக்கு தன்னால் சுயமாக வாழ முடிகிறது என்றால்... அது அன்றைக்கு அவள் தன் கல்வியை தடை படாமல் பார்த்துக் கொண்டதால்தான். வாழ்க்கையில் கனகாவின் கணவர் இறந்தபொழுது கல்விதான் கை கொடுத்தது. அரசாங்க வேலையில் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்று அமைதியாக வாழ வந்தனாவின் பெரியம்மா தான் பிள்ளையார் சுழி போட்டார். ஒரே மகனை கௌரவமாக வளர்த்து வெளிநாட்டில் வேலை பார்க்கும் அளவிற்குக் கல்வி கொடுக்க தன்னம்பிக்கையும் தைரியமும் வந்தது பொருளாதார சுதந்திரத்தினால் தான்.

அது படிப்பால் கிடைத்த வரம். தன் வாழ்க்கையை வளப்படுத்தியவள் கால ஓட்டத்தில் சாதிக்காமல் போனாலும் தன் மனித நேயத்தை இழக்காமல் ஒரு சிறு பெண்ணை சொந்த மகளாகவே அருமையாய் வளர்த்திருக்கிறாளே. அது மட்டுமல்லாமல் அவளின் வாழ்விற்காக தன் கணவனிடம் போராடியிருக்கிறாள். கண்டிப்பாய் அவளுக்கு தானும் உதவ வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள். உலகத்தில் உண்மையான நட்பு எதையும் எதிர்பார்க்காது என்பதை வந்தனா வந்த ஓரிரு நாட்களிலேயே உணர்ந்து கொண்டாள்.

அவளை மகளிர்க் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு சேர அழைத்துச் சென்றாள். அவளுடைய சான்றிதழ்கள் அவளுக்கான சிறப்பான சிபாரிசாய் அமைந்து கல்லூரியில் இடம் கிடைத்தது.

"எனக்கு ஒரு பார்ட் டைம் வேலை வாங்கித் தாருங்கள். என் உழைப்பில் நான் வாழவேண்டும். என் இலட்சியத்தை நோக்கி பயணம் செய்ய நான் தயாராகி விடுவேன். பாதுகாப்பான இடமாக பெரியப்பா சட்டென்று நுழைய முடியாத இடமாக இருக்க வேண்டும். என் படிப்பு முடியும் வரை அவர்கள் கண்களில் தென்படாமல் இருக்க வேண்டும். என் இலட்சியத்தில் ஜெயித்து விட்டால் அவர்களால் என்னை ஒன்றும் செய்ய முடியாது."

"உனக்கு எவ்வளவு பெரிய துரோகம் செய்திருக்கிறார் உன் பெரியப்பா. அவர் மேல் உனக்குக் கோபமே வரவில்லையா?"

"அவர் வீட்டில் இடம் தராவிட்டால் நான் என்ன செய்து இருக்க முடியும் ஆன்ட்டி? வெறும் சொத்து, பணத்தை மட்டும்தான் நான் இப்பொழுது இழந்திருக்கிறேன். கள்ளமில்லா தாயன்பு பெரியம்மாவிடம் அனுபவித்து இருக்கிறேன். சத்யா போன்ற அருமை தங்கையின் அன்பில் மூழ்கி இருக்கிறேன். யாரும் இல்லாதவர்களுக்குதான் அன்போட அருமை தெரியும்.

அதனால் அன்பை மட்டுமே நானும் கொடுக்க விரும்புகிறேன். அன்பு இல்லாத சமுதாயத்தில் வாழ்வது எவ்வளவு கொடுமை? அன்பை அள்ளிக் கொடுத்தால் கெட்ட எண்ணங்களும் மறைந்து போகும். மனித நேயம் இல்லாவிட்டால் மனிதனாக வாழ்வதற்கே தகுதியற்றவர்களாக மாறி விடுவது போலத்தான் அன்பு இல்லாமல் வாழ்வதும். அதனால் பெரியப்பா மேல் கோபம் வரவில்லை. ஆனால் 'துஷ்டரை' கண்டால் தூர விலகும்

குணம் உண்டு. மற்றவரை குறை சொல்லி எதுவும் ஆகப் போவதில்லை. மனதை தூய்மையாய் வைத்துக் கொள்வதை விட வலிமையாய் வைத்துக் கொள்ள வேண்டும் என பெரியம்மா அடிக்கடி சொல்வார்கள். மகாத்மாவாக வாழ முடியாவிட்டாலும் மனிதனாக வாழ முயற்சிக்கலாம் தானே?"

"அருமையான பெண்ணாய் வளர்ந்திருக்கிறாய். எந்த கஷ்டமும் உன் மனதை துன்புறுத்தியதே இல்லையாம்மா?" "எதையும் நான் சுமந்து கொண்டும் இருப்பதில்லை; எந்த விஷயத்தையும் மனதில் போட்டுக் குழப்பிக் கொள்வதும் இல்லை. வாழ்க்கையை அதனதன் போக்கில் எளிதாக எடுத்துக் கொள்வதே பழக்கமாகி விட்டது. நம்மைக் கஷ்டப்படுத்திக் கொள்வதால் பிரச்சனை தீரப் போவதில்லை. மனநலமும் கெட்டுப்போகும்; உடல் நலமும் வீணாகும்.

மனம் அற்புதமானது. அதை தெய்வீகமாக்கிக் கொள்வதும், குப்பை மேடாக்கிக் கொள்வதும் நம்மிடம்தான் உள்ளது. மனத்தை வசப்படுத்தி விட்டால் எதையும் சாதிக்கலாம். வெறுமை நிரம்ப இடம் கொடுக்கக் கூடாது. மனம் சங்கடப்படும் விஷயம் நடந்தால் நான் சும்மா உட்கார மாட்டேன்; ஏதாவது வேலை செய்வேன். அதுவும் முடியா விட்டால் கால் வலிக்க வலிக்க நடப்பேன். அழுகை, வலி வேதனை எதையும் அடக்க முயல்வதில்லை. வெளிப்படுத்தி விட்டு அதோடு மறந்து போவேன். உணர்வுகள் இல்லாமல் வாழ முடியாது. உணர்ச்சி வசப்பட்டால் இழப்புகள் தான் அதிகமாகும்.

சுயக்கட்டுப்பாடு, சுய ஒழுக்கம் எல்லாவற்றையும் கல்வி எனக்குக் கற்றுக் கொடுத்து இருக்கிறது. கல்லூரி பயிற்சியிலும் சொல்லிக் கொடுத்து இருக்கிறார்கள்.

அப்படியே அவளை கட்டிப் பிடித்துக் கொண்டாள் கனகவல்லி. இரண்டு நாட்கள் கடந்து போனதே தெரிய வில்லை. பல இடங்களில் வந்தனாவிற்கு வேலைக்கு முயற்சி செய்தார்கள். ஆனால் அவள் படிப்பதற்கு வசதி யாக எந்த வேலையும் அமையவில்லை. அன்றைக்கு அவளுக்கு பிறந்த நாள் என அறிந்து கனகவல்லி அவளை அழைத்துக் கொண்டு ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவிலுக்குப் புறப்பட்டார். பெருமாளையும், தாயாரை யும் சேவித்துவிட்டு சக்கரத்தாழ்வாரை தரிசிக்க வந்த பொழுது மனசுக்குள் என்றுமில்லா இனிமை சூழ்ந்தது போல் உணர்ந்தாள். அர்ச்சனைக்குக் கொடுத்து விட்டு,

''மகாலெஷ்மி மகம் நட்சத்திரம்'' என்றாள். தீபா ராதனை முடிந்து திரும்பியபொழுது எதிரே முகம் நிறைந்த புன்னகையுடன் ''ஹாய்'' என சித்தார்த் நின்று கொண்டிருந்தான்.

அதே புடவை. ஆரஞ்சு வண்ணத்தில் ஜரிகை வேலைப்பாடு செய்த கறுப்பு நிற ப்ளவுஸ் பேன்டா கலர் காஷ்மீர் சில்க்கில் வளையத்தில் ஊஞ்சலாடும் ஜிமிக் கியில் அவன் சிந்தையை ஆக்கிரமித்து இருந்த தேவதை கனவுகளின் ராணி, மனத்தில் மலர்ந்த ரோஜா, புத் துணர்வு ஊட்டும் விட்டமின், செயல்பட வைக்கும் உத் வேகம் நின்று கொண்டிருந்தாள். சிறகுகள் இல்லாமல் மனம் பறந்து கொண்டிருந்தது. ''ஹாய்'' என அவளும் புன்னகைத்தாள்.

''எப்ப ஊரிலிருந்து வந்தாய் சித்தார்த்?''

''நல்லாயிருக்கீங்களா சித்தி?''

''ம். நன்றாக இருக்கிறேன். எனக்கென்னப்பா குறைச்சல் பையன் வெளிநாட்டில் இருக்கிறான். நான் தான் ஊரை

விட்டுப் போக மனசு வராமல் ஒட்டிக் கொண்டிருக் கிறேன். அது இருக்கட்டும். இவளை உனக்கு எப்படித் தெரியும்?''

''நானும் மகாவும் டெல்லியில் சந்தித்து இருக்கிறோம். 'right to serve, learn to serve' மேடத்திடம் இருந்து தான் கற்றுக் கொள்ள வேண்டும். குடியரசு தின அணிவகுப் பில் கலந்து கொள்ள வந்திருந்தவள் தீயில் மாட்டிக் கொண்ட குழந்தையைக் காப்பாற்றினாள். அன்றைக்கே நட்பானோம்.''

''சித்தார்த் உங்களைப் பற்றி அடிக்கடி செய்தித் தாள்களில் படித்தேன். தினமும் பிரச்சனைகளோடு கண் விழித்து பிரச்சனைகளோடு தூங்கும் மாநிலத்தில் திறமையாக பிரச்சனைகளைக் கையாளும் மாவட்ட ஆட்சியராய் இருப்பதற்கு வாழ்த்துக்கள். அரசுப் பணி களில் அரசியல்வாதிகளின் குறுக்கீடு தவிர்க்க முடியாத விஷயமாக இருக்கும்பொழுது மக்களுக்கு நல்லது செய்வது மிகப் பெரிய விஷயம்தான். நீங்கள் கலெக்டர் என்று சொல்லவே இல்லையே?''

''நீ கேட்கவே இல்லையே!''

சட்டென சிரித்துவிட்டு ''ஆனாலும் நீங்கள் கலெக்ட ருக்குரிய பந்தா எதுவும் செய்து கொள்ளவில்லையே! ரொம்ப எளிமையாக பழகினீர்கள் ஓடிவந்து உதவினீர் கள். பின்னர் செய்தித்தாளைப் பார்த்து தான் உங்களைப் பற்றி அறிந்து கொண்டேன்.''

''சித்தி, மகாவை உங்களுக்கு எப்படித் தெரியும்? சொந்தக்காரப் பெண்ணா?''

"அப்படித்தான் வைத்துக் கொள்ளேன். மற்றதும் அது ஒரு பெரிய கதை. அவள் கல்யாணம்..." என ஆரம்பித்தவர் வந்தனா என்கிற மகாலெக்ஷ்மியின் முகத்தைப் பார்த்துவிட்டு அப்படியே நிறுத்தி பேச்சை மாற்றினார்.

"அவளை பெண் பார்க்க வருகிறார்கள். அவளுக்கோ அதில் ஆர்வமில்லை."

"எங்கே? யார்? எப்பொழுது? பெண் பார்க்க வருகிறார்கள் சித்தி? இன்றைக்கா?"

"விடப்பா! அவளுக்கு பிடிக்காத விஷயத்தை ஏன் பேச வேண்டும்?"

'பெண்ணே! இன்றைக்கு பெண் பார்க்கப் போவது கனகம் சித்தியின் கொந்தக்காரப் பெண் என்று உமா சொன்னாளே! அது நீதானா? வருவது நான் என்று உனக்குத் தெரியாதல்லவா? என்னை நீ மறுத்து விடுவாயா? இனி கல்யாணம் வேண்டாம் என்று உன்னால் மறுக்க முடியுமா? என்னைப் பார்த்ததும் மலர்ந்து விரிந்த உன் கண்களைப் பார்த்தேன். அவை பொய் சொல்வதில்லை என எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

அன்றைக்கு பெயர் கூட இருவரும் ஒருவரைப் பற்றி மற்றொருவர் நன்றாகவே அறிந்திருக்கிறோம். அணிவகுப்பில் கலந்து கொண்டவர்களின் விவரப் பட்டியலில் இருந்து உன் பெயர், கல்லூரிப் பற்றி நான் தெரிந்து கொண்டது போல் என்னைப் பற்றி நீ செய்தித்தாள்களில் அறிந்து கொண்டாயா? நான் வேலை பார்ப்பது வடமாநிலத்தில்; அந்த செய்திகள் இங்கு வரும் செய்தித்தாள்களில் வராது. நான் யார்? எங்கு அங்கு வந்தேன்? என விசாரித்து மெனக்கெட்டு தான் செய்திகளைத்

தேடிப் படித்திருப்பாய். அன்றைக்கு நான் வாக்கிக் கொடுத்தது இல்லையில்லை... உன்னிடம் மற்றவர் மூலம் மறுக்க முடியாமல் கொடுக்க வைத்தப் புடவையில்... நீ! ஆகா... மனைக்குள் எற்படும் ஆனந்தம் அலாதியானது.

இதில் நீ எத்தனை அழகாய் இருக்கிறாய்? உன் பாதங்கள் தரையில் பட்டுக் கொண்டிருக்கிறதா? அல்லது மிதந்து கொண்டிருக்கிறதா? உன் மீது செலுத்திய பார்வையை மீட்க முடியவில்லை. விழிகளை மறுபுறம் அசைக்க முடியவில்லை. என்ன மாயம் செய்தாய் பெண்ணே? கண்கள் காந்தம் போல் கவருகின்றனவே!' என அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனிடம் கனகவல்லி,

"இவளுக்கு கலெக்டர் ஆகவேண்டும் என்று ஆசை. நான் இங்கேயே கொஞ்சம் நேரம் உட்கார்ந்து இருக்கிறேன்; வயசு ஆச்சு அல்லவா? முழங்கால் வலி வந்து விட்டது. கோவிலை சுற்றி காட்டிக் கொண்டே வலி வந்து விட்டது. கோவிலை சுற்றிக் காட்டிக் கொண்டே எப்படி? என்ன? எங்கே? படிக்க வேண்டும் என்று ஆலோசனை சொல்லேன்."

"கண்டிப்பாக சித்தி! நிச்சயம் கலெக்டரம்மா ஆகி விடுவாள் என உறுதி தருகிறேன். நான் கைவிடுவேனா? வா மகா."

"இன்றைக்கு அவளுக்கு பிறந்த நாள்" என போகிற போக்கில் சித்தி சொன்னதை சித்தார்த் நன்றாகவே கவனித்து விட்டான்.

"இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்!"

''நன்றி. சொல்லுங்கள்; எவற்றையெல்லாம் படிக்க வேண்டும்?''

''எவ்வளவு நாட்களுக்குப் பிறகு பார்க்கிறோம். இதில் பேசுவதற்கு வேறு விஷயங்களே இல்லையா?''

அவனிடமிருந்து பதில் வராமல் போகவே அவளை திரும்பிப் பார்த்தாள். மணலில் நடப்பதற்கு ஏற்ப போடப் பட்டிருந்த பந்தலில் கீழ் அமர்ந்தான். தட்டில் ஓர் சிறுமி முல்லைப் பூவை எடுத்துக் கொண்டு செல்ல... அவளை அழைத்தான்.

விலை பேசாமல் முல்லைச் சரத்தை வாங்கினான். அவளிடம் கொடுக்க... சற்றுத் தயங்கினாள். ''பிறந்த நாள் கொண்டாடும் பெண்ணிற்கு என் சிறிய பரிசு''

நன்றி சொல்லி வாங்கிக் கொண்டாள்.

மௌனமாய் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''நான் உங்களைப் பற்றி அறிந்து கொண்டதில் எந்த ஆச்சரியமும் இல்லை. என்னைப் பற்றி எப்படி தெரிந்து கொண்டீர்கள்?''

''மாவட்ட ஆட்சியர் பெற முடியாத விவரம் உண்டா? ஆனால்... நாம் சந்தித்துக் கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்கள் ஆகிவிட்டன.''

''நாட்கள் ஓடியதே தெரியவில்லை. படிப்பில் தீவிரமாக இருந்ததால் மற்ற விஷயங்கள் எதுவும் மனதில் பதியவில்லை. எங்கோ ஓர் மூலையில் நான் மறுபடியும் உங்களை சந்திப்பேன் எனத் தோன்றிக் கொண்டே இருந்தது. அதற்குக் காரணம் புரியவில்லை. நான் அதைத் தேடவும் முயற்சிக்கவில்லை. ஆசைகளையோ.

தேவையற்ற கனவுகளையோ வளர்த்துக் கொண்டது இல்லை. கிடைத்ததை சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ளும் மனம் அமைந்து விட்டது.''

''ஏன் அப்படிச் சொல்கிறாய் மகா? 'கனவு காண்' என பெரியவர்கள் சொன்னதை அறிந்தது இல்லையா?' உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளுக' வள்ளுவர் தாத்தா சொன்னது படித்தது இல்லையா?''

சிரித்தவள், ''என் கையில் இருக்கும் விஷயங்களைப் பற்றி தான் உயர்வடைவதை எண்ணிப் பார்க்க வேண்டும்; கனவு காண வேண்டும். அதனால்தான் கல்வியில் என் கவனத்தை செலுத்தி விட்டேன்.''

''ஏன் அருகில் இருப்பவரைப் பற்றியும் உயர்வாக நினைக்கலாம்; கனவு காணலாம்.''

''அதெப்படி...?'' என்றவள் அவன் கனிந்த பார்வையில் சிவந்தாள்.

''வாழ்க்கையில் உயர வேண்டும். சொந்தக்காலில் நிற்க வேண்டும்; சாதிக்க வேண்டும்; நாலு பேருக்கு நல்லது செய்ய வேண்டும் எல்லாம் சரிதான். அதற்காக மனத்தை பாலைவனமாக்கிக் கொள்ளக்கூடாது. அன்பு தான் மனதை பசும் சோலையாக்கும்.''

''அன்பை வெளிக்காட்டிக் கொள்ளா விட்டால் அங்கு அன்பு இல்லை என்று ஆகிவிடுமா? எந்த சூழ்நிலையில் எது முக்கியமோ அதைத் தான் செய்ய வேண்டும். சில செயல்கள் செய்ய வேண்டிய காலத்தைத் தவற விட்டால் அது வரலாற்றுப் பிழையாகி விடும்.''

நீ உன் மனசில் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய்? உன்னை சந்தித்த நாளில் இருந்து உன்னை

நினைக்காத நாளில்லை. ஆனால் உன் மனதில் எந்தவித நினைவோ, ஈர்ப்போ இல்லையா? பொய் சொல்லாதே கண்ணம்மா! கல்யாணக் கனவுகள் உனக்கு மட்டும் எழவில்லையா? இருபது வயதில் கனவு காணாமல் என்றைக்கு கனவு காணப் போகிறாய்? விழித்து விடு பெண்ணே! உண்மையை உணர்ந்து விடு.''

''என்ன சித்தார்த்? ஒன்றும் பேசாமல் மௌனமாகி விட்டீர்கள்! கிளம்புவோமா? ஆன்ட்டி தேடுவார்கள்.''

''ஏன்? அவர் சொல்லித்தானே வந்தோம்? அதனால் அவசரப் படாதே; போகலாம்.''

''மன்னித்துக் கொள்ளுங்கள். எனக்கு ஒவ்வொரு மணித்துளியும் பொக்கிஷம். 'எள்ளத்தனை பொழுதும் பயனின்றி இராதென்றன் வாழ்வினிலே' என கலை வாணிக்கு வாக்குக் கொடுத்து இருக்கிறேன். அவள் எனக்கு வாழ்வதற்கான சக்தியை வழங்கிக் கொண்டிருக் கிறாள். கலெக்டர் ஆவது என் இலட்சியக் கனவு. அதை அடையும் வரையில் வேறு சிந்தனை கிடையாது. திட்ட மிட்ட இலக்கை அடைய இடைவிடாத முயற்சி, செயல் தேவை. ஒவ்வொரு வினாடியும் அதைப் பற்றி யோசிக்க, சிந்திக்க எண்ண செயல்படுத்த துடித்துக் கொண்டிருக் கிறேன். சிந்தனை, சொல், செயல் எல்லாம் என் கனவை நோக்கியே இருக்கின்றன. அவை திசை திரும்ப நான் எப்போதும் அனுமதிப்பது இல்லை. மதிப்பிற்குரிய உங்களின் நேரத்தையும் நான் வீணாக்கிக் கொண்டு இருக்கிறேன்.''

''என் நேரத்தைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம் உன் நேரம் வீணானால் நீ போ.''

''ப்ளீஸ், கோபமா?''

''நான் எதற்கு உன் மேல் கோபப்பட வேண்டும்? அந்த உரிமை எனக்கு இல்லை.''

''கண்டிப்பாய் உங்களுக்கு உரிமை உண்டு. எனக்கு ஒரு நல்ல ப்ரெண்ட்டாய் இருக்க மாட்டீர்களா?''

''நண்பனா... ஆ? நண்பனிடம் பேசுகிற மாதிரி யாகவா பேசுகிறாய்? உன் தோழியிடம் இப்படித்தான் பேசுவாயா?''

''உங்களிடம் பேசுகின்ற அளவிற்குக்கூட தோழியிடம் நான் பேசியது இல்லை. எனக்கு நெருங்கிய சிநேகிதிகள் இருந்தது இல்லை. உண்மைதான்; நம்புங்கள்.''

''நீ பொய்யைச் சொன்னால் கூட நான் நம்புவேன். இருக்கட்டும். என் கேள்விக்கு பதில் சொல்லேன். உன் கவனம் திசை திரும்பும் அளவிற்கு இப்பொழுது என்ன நேர்ந்தது.''

முகம் சிவந்து மௌனமானாள்.

''இன்னும் சரியாய் எனக்குப் புரியவில்லை. உங் களைத் தாண்டி என்னால் சிந்திக்க முடியவில்லை. எல்லாவற்றையும் மறந்தாற்போன்ற உணர்வு வருகிறது. வேறு எந்த நினைவும் வரவில்லை.

சில மணி நேரங்களிலேயே இப்படி என்றால்... நான் விலகிச் செல்வது தான் சரி.''

அவன் பார்வை அவளை ஆராய்ந்து கொண்டிருந்தது.

'உன் மனதில் ஓடும் எண்ணங்களை என்னால் அறிய முடியும். உன்னையறிந்தவன் நான். உனக்கு உன்னைக் கண்டே பயம் வந்து விட்டது. உன் மனதில் என் நினைவு

சுழன்று கொண்டிருக்கிறது. என்னை நோக்கி ஈர்க்கப் படுகிறாய். ஓடு, ஓடு இன்னும் எத்தனை நாட்களுக்கு இப்படி ஓடுவாய்? இன்று மாலை நான் உன்னை சந்திக்கப் போகிறேன். என் அன்பை, என் குடும்பத்தினரின் பாசத்தை உன்னால் மறுக்க முடியுமா?'

அப்போது அவன் அலைபேசி ஒலித்தது. எடுத்துப் பார்த்தான். அழைத்தது உமா தான். பிறகு பேசிக் கொள்ளலாம் என அதை அணைத்தான்.

பின் அவளிடம், ''உனக்குப் படிப்பதற்கு சில புத்தகங்களை அனுப்பி வைக்கிறேன்'' என்றான்.

''நன்றி. ரெஃபரன்ஸ் புத்தகங்களைப் பற்றிச் சொன்னால் நூலகத்தில் நான் தேடி எடுத்துக் கொள்வேன்.''

''நான் கொடுத்தால் வாங்கிக் கொள்ள மாட்டாயா? நூலகத்தில் வேறு யாரேனும் புத்தகத்தை எடுத்துச் சென்றிருந்தால் நீ காத்திருக்க நேருமே? பரவாயில்லையா? இப்படியெல்லாம் நேரம் வீணாகலாம் தானே?''

''இனிமேல் அப்படிச் சொல்ல மாட்டேன் போதுமா?'' என அவள் சிரித்த வினாடியை அப்படியே செல்லில் படம் பிடித்தான். அதை உமாவின் செல்லிற்கு ''கண்டேன் கனவுத் தோழியை'' எனச் செய்தியுடன் அனுப்பினான்.

விரல்களால் மணலில் கோலமிட்டுக் கொண்டிருந்த வந்தனா அவன் வேறு ஏதோ செய்தி அனுப்புகிறான் என்றே எண்ணி பேசாமல் இருந்தாள்.

மறுபடியும் அலைபேசி அழைத்தது.

சட்டென்று அவன் உடம்பில் ஓர் விறைப்புத் தோன்றியது.

''யெஸ் சார்! ஜஸ்ட்டார்ட் இம்மீடியட்லி சார்!'' எனப் பேசினான். பிறகு அலைபேசியை உள்ளே வைத்தவாறு,

''மகா, என்னை உடனே புறப்பட்டு வரச்சொல்லி முதலமைச்சர் கூப்பிடுகிறார். நான் கிளம்ப வேண்டும்'' என எழுந்து அவள் எழ கை நீட்டினான். தன்னையறியாமல் அவள் கையும் அவனை நோக்கி நீண்டது. வலக்கரத்தை பற்றிக் கொண்டு எழுந்தபொழுது சிலிர்ப்பு இருவருக்குள்ளும் தோன்றியது.

''இன்றைக்கு உனக்கு ஓர் இனிய அதிர்ச்சி கொடுக்கலாம் என்றிருந்தேன்.''

''இதற்கு மேலும் இன்னொன்றா? கிளம்புங்கள் முதலில்.''

''ஓகே ஸீயூ!'' என்றவன் கனகவல்லியிடம் சொல்லிக் கொண்டு கிளம்பி போய்விட்டான். மனக்குள் அவளுக்கு இனிமை நிரம்பியிருந்தது. எது எப்படியிருந்தாலும் இந்த பிறந்த நாளை மறக்கவே முடியாது! எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து இங்கு வந்து சேர்ந்து இருக்கிறாள். இனி வரும் காலமாவது இனிமையான காலமாக மாறுமா? எந்தச் சூழ்நிலையிலும் சந்தோஷமாக இருக்கின்ற பெண் அவள். இங்கும் அருமையாக வாழமாட்டாளா? என்ன?

பின்தான் கனகவல்லி அவள் வேலை விஷயமாக யாரை பார்க்கலாம் என தான் யோசித்ததைச் சொன்னாள்.

''எனக்கு உறவுக்காரர் இருக்கிறார். கே.எஸ். குவாரிப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறாயா? கிரானைட் எக்ஸ்போர்ட் செய்கிறார். அவரிடம் பாதுகாப்பாக இருக்கும். செல்வாக்கான மனிதர். இப்பொழுதே அவரைப் பார்க்கப் போகலாம் வா.''

''சரிங்க பெரியம்மா'' என அவளும் கிளம்ப இருவரும் பேருந்தில் ஏறினர். விதி அவளை தன் பாதையில் கயிறு கட்டிக் கொண்டு இழுப்பது போல் இழுத்துச் சென்றது. மாயக்கயிறு இழுப்பதை அறியாமல் அவளும் சென்று கொண்டிருந்தாள். என்ன நடக்கப் போகிறது என்பதை அவள் எப்படி அறிவாள்?



5

வந்தனா என்கிற மகாலெஷ்மிக்கு அங்கு நடந்தது பாதி புரிந்தும் புரியாத மாதிரி இருந்தது. 'அவர்கள் ஏன் பட்டுப்புடவையுடன் வெள்ளித் தட்டை தன்னிடம் தரவேண்டும்? தன்னை இந்த வீட்டுப் பெண் என்று எண்ணி விட்டார்களா?' என அவள் எண்ணமிடும் பொழுதே 'நல்லவேளை இந்தப் பெண் வந்து மாப்பிள்ளை வீட்டார் முன் அவமானப்படாமல் காப்பாற்றினாள்.

ஆனால்... அவர்கள் இவளை பெண் என்று நினைத்து ஆனந்தத்துடன் சென்று இருக்கிறார்களே? என் மகளும் அழகி தான். ஆ! இந்தப் பெண் பேரழகிக்கும் மேலாய் அல்லவா இருக்கிறாள்? இவளைப் பார்த்த கண்களுக்கு மகிளாவைப் பிடிக்குமா? அவளை மருமகளாக்கிக் கொள்ள சம்மதிப்பார்களா? மாப்பிள்ளை வரவில்லை. அவர் இவளைப் பார்த்திருந்தால் தான் பிரச்சனை. அவர் வரும் சமயத்தில் மகிளாவை மட்டும் காட்டிவிட்டால்... பின் அவர் வீட்டினர் எப்படி மறுக்க முடியும்? சே! இந்த

மகிளாப் பெண் வந்திருந்தால் இப்படி ஒரு பிரச்சனை நேர்ந்து இருக்குமா?' என முத்துமணி நினைத்தாள்.

அவளே சில நிமிடங்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் கணவனது கோபத்தை மறந்து விட்டிருந்தாள். கே.எஸ். மௌனமாக இவர்களை எடைபோட்டுக் கொண்டிருந்தார்.

'அறிவு கெட்டவள்! ரதி போன்ற பெண்ணை பெண் பார்க்க வரும் நேரத்தில் யாராவது வீட்டிற்குள் அனுமதிப்பார்களா? மகிளாவும், இவளும் சேர்ந்து நின்றிருந்தால் அவளை நிராகரித்துப் போயிருப்பார்கள். ஆனாலும் இவள் மூலம் எனக்கு பயன்தான் விளைந்திருக்கிறது. பெண் பிடித்து சம்மதம் தெரிவித்து விட்டார்கள். இனி என் திறமையைக் காட்ட வேண்டியதுதான். எப்படியாவது மகிளாவை அந்தக் குடும்பத்தில் கொண்டு போய் சேர்த்துவிட வேண்டும். இந்தக் கழுதை வேறு வீட்டிற்கு வராமல் ஆட்டம் காண்பித்துக் கொண்டிருக்கிறது. அதை முதலில் கவனிக்க வேண்டும். மேலும் இவளை முதலில் இங்கிருந்து துரத்த வேண்டும்.'

''ம்க்கும்'' என தொண்டையை கனைத்தார்

''வணக்கம் சார்! கனகவல்லி பெரியம்மா உங்களிடம் வேலை கேட்க என்னை அழைத்து வந்தார்கள்.''

''என்னம்மா, அந்நியர் மாதிரி சார் போட்டுப் பேசுகிறாய்? கனகம் எனக்கு தங்கை; நீயும் என் உறவுப் பெண்ணாகத் தானே இருப்பாய்?''

''இல்லை; நான் அவருக்கு உறவுக்காரப் பெண்ணில்லை.''

''இருக்கட்டும். அவள் அழைத்து வந்தால் வேண்டப்பட்டவர்களாய் தான் இருக்கும். நீ என்னை உறவு சொல்லியே அழைக்கலாம்.''

''சரிங்க அங்கிள்.''

''உனக்கு வேலை வேண்டுமா? படித்தவனுக்கு எங்கே அம்மா வேலை கிடைக்கிறது? இருந்தாலும் கடத்திற்காக முயற்சித்துப் பார்க்கிறேன். எந்த உதவியும் கேட்காதவள் கேட்கும்பொழுது நான் மறுக்க முடியுமா? அவளை என் சொந்த தங்கையாகத் தான் நினைக்கிறேன். பக்கத்திலேயே இருந்தும் அவள் இந்த வீட்டிற்கு வருவதே இல்லை. பச்சைத் தண்ணீர் கூட குடித்ததே இல்லை. அவளுக்காகவாவது நான் உனக்கு உதவி செய்ய வேண்டும். நீ இரண்டு இல்லையில்லை நான்கு வாரம் கழித்து வா. நான் ஏதாவது வேலை கிடைக்குமா? என பார்த்து வைக்கிறேன்.''

''ஓகே அங்கிள்; ஆன்ட்டி நான் வருகிறேன்.'' அவ கிளம்பிச் சென்று விட்டாள். விருந்தினர்க்கு டிபன், காப கொடுத்து உபசரித்தவர்கள்; வெகு நேரம் காத்திருந்த அவளுக்கு ஒரு வாய் தண்ணீர் கூட தரவில்லை. உட் கார் என்று உபச்சாரமாய் ஒரு வார்த்தை கூறவில்லை வீட்டிற்குச் சென்றதும் கனகவல்லி நடந்ததை விசாரித் தாள்.

பின் ''விடும்மா! வேறு இடத்தில் உனக்கு வேலை தேடலாம்'' என்றாள். அனுபவம் அவளுக்கு மனிதர்களை எடைபோடக் கற்றுக் கொடுத்திருந்தது. அவர் சாக்கு போக்கு சொல்வது வேலை வாங்கித் தருவதற்கு அல்ல இஷ்டமில்லாத விஷயத்தை கஷ்டமில்லாமல் தட்டி கழிப்பதற்குத் தான் என்பதை புரிந்து கொண்டாள்.

மறுநாள் காலை பதினோரு மணியளவில் மகிள சின்ன, சக்கரப் பெட்டியை இழுத்துக் கொண்டு வீட் னுள் நுழைந்தாள்.

ஜீன்ஸ், டாப்ஸும் எண்ணெய் பசையற்ற போனி டெய்ல் கூந்தலுமாய் குயிங்கம் மென்று கொண்டிருந்த வளை ''எங்கேடி போய் தொலைத்தாய்? உனக்கு எத் தனை முறை போன் செய்வது? ஒரு பதிலும் இல்லை: செய்தியும் இல்லை. உன்னோட ஆபீஸுக்கு போன் போட்டால் நீ வேலையை விட்டுப் போய்ட்டதா சொல் றாங்க. நீ உன் மனசில் என்னதான் நினைத்துக் கொண் டிருக்கிறாய்? பெற்றவள் பரிதவிப்பு உனக்கு எங்கே புரியப் போகிறது? என்ன ஆச்சா? ஏது ஆச்சோ என்று நான் தவித்தது உனக்குத் தெரியவே தெரியாது. நீ எங்கிருக்கிறாய்? என்ன செய்கிறாய்? என தெரிந்து கொள்ள முடியாமல் வினாடிகள் யுகங்களாகி நெருஞ்சி யாய் குத்தி விட்டன. உனக்கு என் தவிப்பு இப்பொழுது புரியாது. நாளைக்கு நீ தாயாகி உன் பிள்ளை வரவிற்காக காத்திருக்கும் பொழுது தான் புரியும்.''

''உஸ்! நிறுத்தம்மா! வெரி ஃபோர். இதற்கு பயந்து கொண்டு தான் நான் இங்கே வருவதே இல்லை. நானே அவஸ்தைப்பட்டுக் கொண்டு வந்திருக்கிறேன். வந்த வளை உட்காரச் சொல்லக்கூட முடியாமல் வாசலி லேயே நிறுத்தி வைத்து எத்தனை கேள்வி கேட்கிறாய்? ரொம்ப அசதியாய் இருக்கிறது. நான் உள்ளே போகட் டுமா? அல்லது திரும்பி அப்படியே ஊருக்குப் போகட் டுமா?''

''ஐயோ! ஏன்டி இப்படிப் பேசுகிறாய்? என் அன்பு உனக்குப் புரியமாட்டேன் என்கிறது. நேற்றைக்கு காலை வரவேண்டியவள் இன்று பிற்பகலில் வந்த சேர்ந்தால் பெற்றவள் கேள்வி கேட்க மாட்டாளா?''

''பதினோரு மணி உனக்குப் பிற்பகலா? நேற்று நான் வந்த பஸ் ஆக்ஸிடென்ட் ஆகிவிட்டது. அதனால்

மருத்துவமனைக்கு சென்று விட்டு வருகிறேன். இதையாவது நம்புவாயா? யாராவது சாட்சி சொன்னால் தான் நம்பிக்கை வருமா?''

''என் கண்ணே! என்னம்மா ஆச்சு? எங்கே அடி பட்டது? முகமே வெளிறிப் போய் கிடக்குது. கண்கள் பஞ்சடைச்ச மாதிரி இருக்கிறது. காது மந்தித்து குரல் மெலிந்து கிடக்கிறது. ஏதாவது சாப்பிட்டாயா? இல்லையா? ரொம்ப மெலிஞ்சிட்டடி! டாக்டர் கிட்ட போகலாமா?''

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். வரும வழியில் சாப்பிட்டு தான் வந்தேன். என்னைக் கொஞ்ச நேரம் தொந்தரவு செய்யாமல் தூங்க விட்டால் சரி. உன் வீட்டுக்காரர் வருவதற்குள் உன் என்கொயரியை முடித்து விடு. அவர் வேறு அறுத்து தள்ளி விடுவார். அவர் தொணதொணப்பைத் தாங்கவே முடியாது.''

''சரி மேலே போய் தூங்கு. பிறகு பேசிக் கொள்ளலாம்'' பெண்ணைப் பார்த்ததும் முத்துமணிக்கு வயிற்றில் பால் வார்த்தாற் போல் நிம்மதியாய் இருந்தது. ஆனால் வேறு எந்தக் கேள்வியும் கேட்கத் தோன்றவில்லை. பிரச்சனைகள் மகிளா வந்து விட்டதால் தீர்ந்து விடும் என உறுதியாகத் தோன்றியதால் நிம்மதியாக மற்ற வேலைகளைப் பார்க்கச் சென்றாள். கே.எஸ். வந்த பொழுதும் கவலை, பயமின்றி பெண் வந்த செய்தியைக் கூறினாள். ''பாவம் அவள்! வரும் வழியில் வண்டி விபத்தில் சிக்கிடுச்சாம். உள்காயம் பட்டிருக்கும் போல; மருத்துவரிடம் காண்பித்துவிட்டு அரக்க பரக்க ஓடி வந்திருக்கிறாள். இப்படி அவள் போய் கஷ்டப்பட்டு வேலை பார்க்க வேண்டுமா? அந்த சனியன் பிடிச்ச வேலையை விட்டு தொலை என்றால் கேட்கிறாளா?''

கே.எஸ்ஸின் பலகீனத்தைப் பார்த்து சரியாய் கல் எறிந்தாள்.

''இப்ப அவள் வேலைக்குச் செல்வதால் என்ன நஷ்டம் வந்து விட்டது. அவள் அறிவுக்கு கை நிறைய சம்பாதிக்கிறாள். இப்படி எத்தனை பேர் பிள்ளைகள் பணத்தை அள்ளிக் கொண்டு வருகிறார்கள்? நாட்டில் வேலையில்லாதோர் இலட்சக்கணக்கில் இருக்கிறார்கள். கோடீஸ்வரனின் பெண் இலட்சக்கணக்கில் பணம் சம்பாதிப்பது நமக்கு பெருமை தான். வெட்டிச் செலவும், தண்டச் செலவும் செய்கின்ற பணக்கார வீட்டுப் பிள்ளைகளின் மத்தியில் என் பெண் இரத்தினம். அதனால் வேலையை விடு; வீட்டிலேயே கிட போன்ற பேச்சுகளை நீ நிறுத்திவிடு. நீ போய் அவளை கவனி. நான் மற்ற ஏற்பாடுகளைப் பார்க்கிறேன்.''

''நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?''

''கிளம்பும்போதே கேட்கிறாயே? உருப்பட்டாற் போலத்தான். மாப்பிள்ளையும், பெண்ணும் தனியாகச் சந்தித்துப் பேச வைக்கப் போகிறேன். நம் பெண் கெட்டிக்காரி. அவனை வளைத்து விடுவாள். அற்புதம் வீட்டினரின் மறுப்பு எதுவும் எடுபடாது.''

''பார்த்து... பிரச்சனை எதுவும் வராமல் செய்யுங்கள்.''

''நீ வாயை வைத்துக் கொண்டு சும்மாயிரு. ஏதேனும் பேத்தி வைக்காதே. உன் உளறல்களை கேட்க நான் தயாராய் இல்லை'' என அவளிடம் நறநறத்துவிட்டு கிளம்பினார்.

அறைக்குள் சென்று அடித்துப் போட்டாற் போல் உறங்கிக் கொண்டு இருக்கும் மகளைப் பார்த்தாள்.

அளவுக்கு மீறி களைத்த முகம், துவண்ட உடம்பு, ஏனோ இனம் புரியாத கவலையையோ, துன்பத்தையோ முத்துமணிக்கு ஏற்படுத்தியது. என்ன காரணம் என்று அவளுக்குப் புரியவில்லை. மெல்ல கட்டிலின் தலை மாட்டில் அமர்ந்து அவள் தலையை கோதி விட்டாள். புரண்டு படுத்தவள் இலேசாய் தூக்கம் கலைந்து "ம். என்ன?" என்றாள்.

"சீக்கிரம் கல்யாணத்தை பண்ணிக்கிட்டு குழந்தை குடும்பம்னு செட்டில் ஆகும்மா?"

"நெவர். குழந்தை குட்டியா? நோ. த்திற்கு ஸெரிலாக் ஊட்டி, டயபர் மாத்தி, டோக்கன் வாங்கிக் காத்திருந்து ஆஸ்பத்திரியில் காட்டி வளர்க்க என்னால் முடியாதும்மா! என்னால் இப்ப தூங்கத்தான் முடியும். ஆளை விடு" என திரும்பி தலையணையைக் கட்டிக் கொண்டு உறங்க ஆரம்பித்தாள்.

'குழந்தை செல்வம் எல்லாருக்கும் கிடைத்து விடாது அதற்கு புண்ணியம் பண்ணியிருக்க வேண்டும். நல்ல பிள்ளைகளை பெற அதைவிட மிகப் பெரிய புண்ணியம் செய்திருக்க வேண்டும். புண்ணியம் நாம் செய்யும் நல்ல செயல்களிலிருந்து வருகிறது. உன் அப்பா என்ன செய்து இருக்கிறார் என்பது அவ்வப்போது உன் செயல்களை பார்த்தாலே புரிந்து போகிறது.' என பெருமூச்சு விட்டார்

அதே நேரம் விமானத்தில் புறப்பட்டு விட்டிருந்த சித்தார்த்திற்கு நினைவெல்லாம் வீட்டிலேயே இருந்தது 'மகாலெஷ்மியை போய் பெண் பார்த்து உறுதி செய்து வந்து விட்டார்களா? அவளைப் பார்த்ததும் பிரமித்து போவார்கள். ஒன்றரை வருடங்களாக என் நினைவிலும் கனவிலும் வசீகரித்து கொண்டிருந்தவள் இன்

நேரிலும் அனைவரையும் கவர்ந்து இருப்பாள். என்ன மாதிரியான பெண் அவள்! அடக்கத்துடன் கூடிய அமைதியான மனதை வருடும் அழகு! ஏனோ விழி அசைக்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. அறிவும், ஆற்றலும் நிறைந்தவள். சாதிக்க எண்ணுகிறாள். நிர்வாகம் என்பது சுலபமான தல்ல. சவால்கள் நிறைந்தது. அதை அடைய நினைக் கும் என் கண்மணியே! உனக்கு என் வாழ்த்துக்கள்!

நிறைய தமிழர்கள் சிவில் சர்வீஸ் பணிக்கு வரவேண் டும். நம்முடைய பெருமையும், திறமையும் எல்லாராலும் அறியப்பட வேண்டும்: போற்றப்பட வேண்டும். மத்தளம் கொட்டி வரிசங்கம் நின்றூத நான் உன்னை மணக்கும் முன் நீ உன் இலட்சியத்தில் வெற்றி பெற வேண்டும்.

பிற மாநிலங்களை விட நம்மவர்கள் திறமைக் காட்டி நிர்வாக பணிகளுக்கு வந்தால் தான் உரிமைகளை நிலை நாட்ட முடியும். அதனால் உன்னைப் போன்ற திறமை சாலிகளை நான் வரவேற்கிறேன். நீ வெற்றி பெற உனக்கு பக்கபலமாக, மனவலிமை ஊட்டும் நம்பிக்கை யாக இருப்பேன் கண்ணம்மா!

சிவில் சர்வீசஸ் தேர்வு எழுதுகின்றவர்களுக்கு மக்க ளிடம் இயல்பாகப் பழகும் குணம் இருக்க வேண்டும். சேவை மனப்பான்மை வேண்டும்: பிறர் சொல்வதை, குறைகளை முதலில் காது கொடுத்து மனம் ஒன்றிக் கேட்க வேண்டும். பின் அவர்களின் பிரச்சனைகளுக்கு நல்ல தீர்வை உடனடியாகக் காணும் திறன் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்ற வேண்டும்.

இவை அனைத்தும் உன்னிடம் இருக்கின்றன. கண்டிப்பாய் நீ ஜெயிப்பாய்! நீ வெற்றி பெறாவிட்டால் பின் யார் வெற்றி பெறுவார்கள்? உன் கண்களில் சுடர் விடும் ஆர்வம் உன் வெற்றியை பறைசாற்றிக் கொண் டிருக்கின்றன. சே! கிளம்பிய அவசரத்தில் உன் மொபைல் எண்ணை வாங்க மறந்து விட்டேன். மறக்காமல் புத்தகத் களை கனகம் அத்தை முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என முடிவு செய்தவாறே விமானத்திலிருந்து இறங்கி காத்திருந்த ஜீப்பில் ஏறி புறப்பட்டான்.

உமாவிற்கு ப்ளூடூத்தில் அவன் அனுப்பிய வந்தன் வின் போட்டோவை பார்த்த கணமே அவன் அம்மா, அப்பா, அண்ணன் அனைவருமே முடிவு செய்து விட் டனர். அவள் தான் அந்த வீட்டு மருமகள் என்று அவளைப் பற்றி அவன் வீட்டிற்கு வந்ததும் அரித்து எடுத்து விட்டனர்.

"அம்மா! அவசரமாய் முதலமைச்சர் என்னை புறப் பட்டு வரச் சொல்லி இருக்கிறார். மிக முக்கியமான வேலை. மகாலெஷ்மி கனகம் அத்தைக்கு சொந்தக்கார பெண்தான். அவளை கோவிலில் அத்தையுடன் பார்த் தேன்; ஏற்கனவே எனக்கு அவளை நன்றாகத் தெரியும். நான் வராவிட்டாலும் பரவாயில்லை. நீங்கள் பேசி திருமணத்திற்கு நாள் குறித்து விடுங்கள்." என கூறிவிட்டுக் கிளம்பி விட்டான்.

ஜானகிக்கு உள்ளம் கொள்ளா மகிழ்ச்சி. மகன் மன மாறியதற்குக் கடவுளுக்கு நன்றி கூறினாள். பெண் ணைப் பார்த்து பிறகோ அது இரட்டிப்பு மகிழ்ச்சியானது "இவளை மனதில் வைத்துக் கொண்டு தான் எ பையன் திருமணத்திற்கு பிடி கொடுக்காமல் இரு

தானா? இதை முன்பே சொல்லியிருந்தால் என்ன? என் மேல் அவனுக்கு நம்பிக்கை இல்லையா? அவன் விருப்பத்திற்கு குறுக்கே நிற்கவோ, தடை போடவோ மாட்டோம் என்று அவனுக்குப் புரியாதா?"

"அப்படியில்லையம்மா! அவளைப் பார்த்தவுடன் சித்தார்த்திற்கு பிடித்து விட்டது. பேசிப் பழக இருவர்க் குமே போதிய காலம் கிடைக்கவில்லை. மேலும் அவளைப் பற்றிய விவரங்கள் மற்றும் அவள் விருப்ப மும் தெரியாததால் ஒன்றும் சொல்லாமல் குழம்பிக் கொண்டிருந்திருக்கிறார்."

"என்னம்மா இது? இவன் இந்த காலத்து பிள்ளை தானா? காலையில் பார்த்து மதியம் பேசி மாலையில் கல்யாணம் செய்து கொள்ளும் காலத்தில்... என் பிள்ளையை கெட்டிக்காரன் என்றல்லவா? நினைத்தேன். அதுவும் இவனைப் போய் எந்தப் பெண்ணாவது மறுப் பாளா? எதில் அவன் குறைந்து போய் இருக்கிறான்? அழகு, அறிவு, கம்பீரம், செல்வாக்கு, வசதி, நல்ல குடும்பம் இத்தனைக்கும் மேலான அருமையான குணம் இவ்வளவு இருந்தும் அவள் மனசின் விருப்பத்தை அறிந்து கொள்ள முடியவில்லையா? மகாலெஷ்மி மட்டும் என்ன? என் மகன் அதிர்ஷ்டக்காரன் என சொல்லும் அளவிற்கு தான் இருக்கிறாள். இப்படி ஒரு அருமையான ஜோடி இணைவதில் இவ்வளவு நாள் காத்திருந்தது போதும். இனி சீக்கிரம் அவர்கள் இருவருக்கும் கல்யாண ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்."

"அது ஒன்றும் பெரிய விஷயம் இல்லையம்மா! சித்தார்த் ஊரிலிருந்து வந்ததும் பெண் வீட்டிற்குப் போய் நிச்சயம் செய்துவிட்டு வந்து விடலாம். அப்புறம்

அம்மா, சித்தார்த் அறையை சில மாற்றங்கள் செய்யச் சொல்லியிருக்கிறார். நீங்களும் கொஞ்சம் வந்து பார்த்து விடுங்களேன்.''

''அவன் ரசனை உனக்கு தானம்மா தெரியும். என்னை ஏன் கூப்பிடுகிறாய்?''

''அவர் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார். உங்கள் ஆலோசனையும் கேட்டுக் கொள்ளும்படி.''

''இப்பொழுது எதற்கு அம்மாவை காக்கா பிடிக்கிறான்? நான் தான் ஏற்கனவே அவன் விருப்பத்திற்கு சம்மதம் சொல்லி விட்டேனே?'' எனச் சொல்லி சிரிக்க உமாவும் சிரித்தபடி அவருடன் மாடியேறினாள். அவன் அறை எப்பொழுதும் ஒழுங்காக இருக்கும். எல்லா பொருள்களும் அதனதன் இடத்தில் கொஞ்சம் கூட கலையாமல் இருக்கும். அவன் பயன்படுத்திய சுவடு கூடத் தெரியாது.

''இதில் என்ன மாற்றம் செய்ய வேண்டுமாம்?''

''அலமாரியில் இருக்கும் புத்தகங்களை பார்சலாகக் கட்டி யாருக்கோ பரிசளிக்க வேண்டுமாம்.''

''என்ன? புத்தகங்கள் அவன் உயிர் ஆயிற்றே? அவ்வளவு சீக்கிரம் அவன் தேடித்தேடி வாங்கிய புத்தகங்களை பரிசளித்து விடுவானா என்ன?''

''ஒருவேளை பரிசுக்குரியவர் அவன் இதயத்துக்கு உரியவரோ? என்னவோ?''

''இருக்கும் இருக்கும். மகாலெஷ்மியை மறுபடியும் சந்திக்கும் வரை நம்மிடம் மூச்சு விடாதவன்லவா ஆமாம். இந்த வார்ட் ரோப்பில் என்ன இருக்கிறது

அவன் துணிமணிகள் தானே? பின் ஏன் பூட்டியிருக்கிறது?''

''அதன் சாவியை என்னிடம் கொடுத்துப் போயிருக்கிறார்.''

''சீக்கிரம் திற. அப்படி என்ன பொக்கிஷம் இருக்கிறது? எனப் பார்த்து விடலாம்.'' திறந்ததும் அப்படியே அசந்து போனார்கள்.

விதவிதமான அழகு அழகான புடவைகள் நேர்த்தியாய், மடிப்பு கலையாமல் அடுக்கப்பட்டிருந்தன. அத்தனையும் பயன்படுத்தாத புதுப் புடவைகள். இந்தியாவில் எத்தனை மாநிலங்கள் உள்ளனவோ அத்தனை மாநிலத்திலும் பெயர் போன வகை வகையான புடவைகள். அழகும், வண்ணமும், செய்நேர்த்தியும் கண்ணைப் பறித்தன. வாங்கியவர் ரசனை கருத்தைக் கவர்ந்தது. ''யாருக்கு இத்தனை அருமையான புடவைகள் வாங்கி வைத்திருக்கிறான்? அதுவும் திடீரென்று இவ்வளவு புடவைகள் எதற்கு?''

''அம்மா இவை திடீரென வாங்கப்பட்டவை அல்ல. சித்தார்த் ஒவ்வொரு ஊருக்கும் சென்ற பொழுது வாங்கி வந்திருக்கும் புடவைகள். கடந்த ஒன்றரை வருடங்களாக அவ்வப்போது அவர் நமக்கும் புடவைகள் வாங்கி வந்திருக்கிறார். ஞாபகம் இருக்கிறதா?''

''ம்.... ம்... நன்றாகவே ஞாபகம் வந்துவிட்டது. நெல்லுக்கு இறைத்த நீர் இங்கே புல்லுக்கும் பாய்ந்து இருக்கிறது.

இருக்கட்டும், இருக்கட்டும். என் பிள்ளை இப்படி தலையைச் சுற்றி மூக்கைத் தொட்டிருக்க வேண்டாம்.

அம்மா ஒரு பெண்ணைப் பார்த்தேன்; பித்தம் தலைக் கேறி விட்டது என்று அன்றே தெரிவித்து இருந்தால் வலைப்போட்டு தேடி மணமுடித்து இருக்க மாட் டேனா? ஒன்றரை வருடங்களை வீணாக்கி விட்டானே?''

''இவற்றையெல்லாம் நமக்குத் தெரியாமல் மகாலெஷ்மி யிடம் கொடுக்க மனம் இல்லாமல் இப்படி அறையைச் சுத்தம் செய்யும் வேலையை கொடுத்தாராக்கும்?''

''அம்மாடி! நீ சொல்வது ரொம்ப சரி. நன்றாக இருக் கும் அறையில் என்ன மாற்றம் செய்வது? நீ அவனுக்கு போனை போட்டு உன் அறையை நன்றாகச் சுத்தம் செய் தாகி விட்டது. எங்களுக்கு புரிய வேண்டிய விஷயங்கள் ரொம்ப சரியாகவே புரிந்து விட்டன. நாங்கள் எங்கள் வேலையை துரிதமாகவே பார்க்கிறோம் எனச் சொல்லி விடு.''

''அம்மா, நிச்சயதார்த்தத்திற்கு என்ன என்ன செய்ய வேண்டும்? யார் யாரைக் கூப்பிட வேண்டும்? ஹோட் டலில் நிச்சயதார்த்தத்தை வைத்து விடுவோமா?''

''ஆமாம்; மிகவும் சிறப்பாகச் செய்ய வேண்டும். எவ்வளவு நாட்களுக்குப் பிறகு என் கனவு நனவாகி வருகிறது. அதனால் எல்லா சொந்தக்காரர்களையும் அழைத்து பத்திரிகை அடித்து பரிசம் போட வேண்டும். கல்யாணத்திற்கு அவனுக்கு வேண்டியவர்கள், அதி காரிகள், செல்வாக்குள்ள மனிதர்கள் வருவார்கள். அப்பொழுது தம் சொந்தக்காரர்களை சிறப்பாக கவனிக்க முடியாது. அதனால் நிச்சயதார்த்தத்திலேயே நன்றாக அவர்களை கவனித்து விட வேண்டும். பெரிய பஸ் வைத்து கிராமத்திலிருந்து நம் சொந்தக்காரர்களை

அழைத்து வர வேண்டும். ஒவ்வொருவருக்கும் மதிப்பிற் குரிய பரிசு வழங்கி கௌரவிக்க வேண்டும்.''

''நீங்கள் என்ன சொன்னாலும் அப்படியே செய்து விடலாம்.''

''இரு, இரு! அதற்கு முன் சம்பந்தியிடம் பேச வேண் டும். உன் அப்பாவிடம் சொல்ல வேண்டும் உமா.''

''அவர் என்ன சொல்லப் போகிறார்? கட்டாயம் சந் தோஷப்படுவார். அவருக்கு நான் வேறு அல்ல; சித்தார்த் வேறு அல்ல. நாங்கள் இருவரும் ஒன்றாகப் படித்த காலத்தில் இருந்து அப்படித்தான். அவர் வெளிநாட்டில் இருந்தாலும் சித்தார்த் என்னுடன் நட்பாக இருந்ததால் கவலையில்லாமல் இருந்தார். எங்கள் நட்பை மிக உயர்வாக மதித்தவர்; சித்தார்த் தன் அண்ணனுக்கு பெண் கேட்டபொழுது துளிகூட மறுப்பின்றி சம்மதித் தவர். அவனை தன் மகன் போலத் தான் பார்க்கிறார். அவன் விருப்பத்திற்கு அவர் என்றும் எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்.''

''என்ன இருந்தாலும் முதலில் அவருக்கு தான் விஷயத்தைத் தெரிவிக்க வேண்டும். அவருக்கு நேரில் போய் சித்தார்த்தை விஷயத்தைத் தெரிவிக்கச் சொல்ல லாம்.''

''அப்பாவிடம் நான் போனில் விஷயத்தைச் சொல்லி விடுகிறேன்.''

''உடனே பேசு உமா.''

''சரிம்மா'' எனக் கூறிவிட்டு அலைபேசியில் தொடர்பு கொண்டாள்.

''ஆகா! வாழ்த்துக்கள்! ரொம்ப சந்தோஷமான விஷயம். நான் கூட இந்தியா வருகிறேன். ரமா தான் ரொம்ப துடுக்குப் பெண்ணாய் இருக்கிறாள். அவள் கல்யாணத்தையும் முடித்து விட்டால் என் கடமை முடிந்தது.''

''அவளுக்கு என்னப்பா அவசரம்? இப்பொழுது தானே 14 வயது அவளுக்கு ஆகிறது? என்ன அவசரம்? நன்கு படித்து வயதும் முதிர்ந்து பக்குவம் வரட்டும். நாங்கள் எல்லாம் சேர்ந்து நல்ல மாப்பிள்ளை பார்த்து திருமணம் செய்து வைக்கிறோம். நீங்கள் கவலைப் படாதீர்கள்.''

''நீ சொன்னால் சரிதான். உன் பாட்டிக்கும் வயதாகிக் கொண்டு வருகிறது. இந்தக் காலத்தில் டீன் ஏஜ் பிள்ளைகளைக் கையாளுவது கடினமாக இருக்கிறது. நீதான் அவளை அவ்வப்பொழுது கண்காணித்துக் கொள்ள வேண்டும். நானும் ஊரில் இருப்பதில்லை.''

''அப்பா நீங்கள் அதெல்லாம் கவலைப்பட வேண்டாம். அவள் அப்படியொன்றும் தப்பு செய்கிற பெண்ணில்லை. மீடியா, இன்பர்மேஷன் வளர்ச்சிகளைப் பார்த்து இளைய தலைமுறை கெட்டுப் போய்விடுகிற மாதிரி எல்லா பெரியவர்களும் கவலைப்படுகிறார்கள். ஆனால் சரியான வழிகாட்டியாய் நட்புறவுடன் பழகும் பெரியவர்கள் இருக்கும் இடங்களில் எந்த தவறும் நேருவது இல்லை. நல்ல எண்ணங்களை விதைப் போம்; நன்மையே விளையும்.''

''நீ ரொம்ப பக்குவமாகி விட்டாய்.''

''எல்லாம் அத்தையிடம் இருந்து தான் கற்றுக் கொண்டேன். என்னை மகளாக கொண்டாடுகிறார்கள். இங்கு

அன்பு, பாசம், மரியாதை, மதிப்பு, அரவணைப்பு எல்லாம் கிடைக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக நான் நானாக, சுயமாக இருக்க முடிகிறது. இது எனக்குக் கிடைத்த வரம்.''

''போதும் அம்மா போதும். என் மனம் நிறைவடைந்து விட்டது. உன்னைப் போலவே ரமாவுக்கும் நல்ல இடம் அமைய கடவுளை நான் வேண்டிக் கொள்கிறேன். ஊருக்கு வந்ததும் நானே வீட்டிற்கு வருகிறேன். சித்தார்த் கல்யாணத்தை ஜாம், ஜாம் என்று நடத்துவோம். வீட்டில் சம்பந்திகளை மிகவும் விசாரித்ததாகச் சொல். மாப்பிள்ளை மகேஷிடம் நான் பேசுகிறேன். என் பேரன் எப்படியிருக்கிறான்? உங்களையெல்லாம் நான் ரொம்பத் தவற விடுகிறேன்.

வயசான காலத்தில் தான், எல்லாரையும் மனசு தேடுகிறது. பேசாமல் இந்த முறை வேலையை விட்டு விட்டு வந்து விடும் முடிவில் இருக்கிறேன் என்னம்மா சொல்கிறாய்?''

''எது உங்களுக்கு சந்தோஷம் தருமோ அந்த விஷயத்தை நீங்கள் தயங்காமல் செய்யுங்கள் அப்பா.'' எனப் பேசி விட்டு வைத்தாள்.

''உன் அப்பா வந்ததும் நேரில் பேசிவிட்டு நிச்சயதார்த்தம் செய்து கொள்ளலாம். அவர் எப்படியும் வந்து சேர பதினைந்து இருபது நாட்கள் ஆகும் தானே? தரகரிடம் விஷயத்தை பெண் வீட்டிற்குச் சொல்லி அனுப்பி விடுகிறேன்.''

மகிளா வந்து ஒரு வாரம் ஓடி விட்டது. தினமும் சாப்பிட்டு சாப்பிட்டு தூங்குவதே அவள் வேலையாய்

இருந்தது. தாயின் அன்பு கவனிப்பில் அவள் உடம்பில் சற்று புரதச்சத்துக் கூடி மினுமினுப்பு ஏறியிருந்தது. தன் தந்தையிடம் இரண்டு லட்ச ரூபாய்க்கான செக்கைக் கொடுத்தான். அவ்வளவு தான் அவர் புளகாகிதம் அடைந்து விட்டார்.

"அப்பா! நான் வேலை பார்க்கும் அலுவலகத்திற்குப் பக்கத்தில் நிலம் விலைக்கு வருகிறது. நீங்கள் வந்து பார்த்துவிட்டு பிடித்திருந்தால் வாங்குங்கள். விலையும் கொஞ்சம் தான். வாங்கி வைத்திருந்து விற்றால் கூட நமக்கு இலாபம்தான்."

"எந்த இடம்? அமைவிடம், நிலத்தோட படம் இருந்தால் வாங்கி அனுப்பு. பிறகு முடிவு செய்யலாம்."

"நிறைய பேர் அந்த இடத்திற்கு போட்டி போடுகிறார்கள். என் தோழியுடைய தந்தை உங்களை கேட்கச் சொன்னார். உடனே கொஞ்ச பணம் முன் தொகையாக கொடுத்து விட்டால் போதுமாம். ஐந்து கோடி ரூபாய் மதிப்புள்ள இடம்."

"எவ்வளவு கொடுக்க வேண்டும்?"

"பத்து இலட்ச ரூபாய்."

"சரி, இந்தா பாஸ் புக். இடத்தை வாங்க முன் பணம் கொடுத்து விடு. மாப்பிள்ளை வீட்டினர் கல்யாணத்தை நடத்த இன்னும் சில மாதங்கள் ஆகும் போலிருக்கிறது. அதுவரை சம்பாதிப்பதை ஏன் நிறுத்த வேண்டும்? இன்னும் சில இலட்சங்களை பெறுவதை நாமே உதறக் கூடாது. நீ சீக்கிரம் ஊருக்குக் கிளம்பு. வேலையை தக்க வைத்துக் கொள்ள வேண்டும். இன்றைய காலத்தில் வேலை குதிரைக் கொம்பாக இருக்கிறது."

"இன்றைக்கு இரவே புறப்படுகிறேன் அப்பா" என மகிளா அன்பு மகளாய் தந்தைச் சொல் தட்டாமல் ஊருக்குப் புறப்பட்டாள். முத்துமணிக்கு அவளை அனுப்புவதில் இஷ்டமே இல்லை. இருந்தாலும் தவம் கருத்துக்குத்தான் அங்கே மதிப்பே இல்லையே? பின் எப்படி மகள் மட்டும் அதனை காது கொடுத்துக் கேட்பாள்.



6

காலையில் எழுந்து வந்தவளைப் பார்த்து, "என்ன சீக்கிரம் எழுந்து விட்டாய் வந்தனா? இரவு முழுக்க கண் விழித்துப் படித்துக் கொண்டிருந்தாய். இன்னும் கொஞ்சம் நேரம் தூங்கக் கூடாதா? தினமும் இருபது மணி நேரம் தொடர்ந்து படிக்கிறாய். முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சிப் பெற்ற பிறகும் இவ்வளவு கடுமையான உழைப்பு உனக்குத் தேவையா?"

"இன்னும் மெயின் தேர்வுக்கு அதிக நாட்கள் இல்லை. வேலை கிடைத்து அந்த வேலைக்குச் சென்றால் படிக்கும் நேரம் குறைந்து போகும். அதனால் நேரம் கிடைக்கும் பொழுதே படிப்பு குறித்து எடுத்துக் கொள்கிறேன். அன்றாட நாட்டு நடப்புகளை செய்தித்தாள்கள், பத்திரிகைகள் மூலமாக அறிந்ததை தனித்தனி ஃபைல் ஆக தயார் செய்து வைத்திருக்கிறேன். பயிற்சி செம்மைப் படுத்தும். ஆர்வத்துடன் தொடர்ந்து நன்றாக பயிற்சி செய்தால் தேர்வில் வெற்றி பெற்று விடுவேன். கல்லூரி காலத்தில் இருந்து என்னைத் தயார்ப்படுத்திக் கொண்டு

வந்திருக்கிறேன். அதனால் தான் முதல் நிலைத் தே
வில் முதல் முயற்சியிலேயே தேர்ச்சி பெற முடிந்தது.
இன்னும் என் பயிற்சி விரிவடைய வேண்டும்.

சித்தார்த் அனுப்பிய புத்தகங்கள் எனக்கு மிகவும்
உபயோகமாய் உள்ளன. அவருடைய அலைபேசி எண்
ணிற்கு போன் செய்தால் எப்போதும் சுவிட்ச் ஆஃப் என்றே
வருகிறது. பார்சலில் அவரது எண் இருந்தது. அதற்கு
தான் போன் செய்தேன்.

''இன்றைக்கு செய்தித்தாளில் அவனைப் பாராட்டி
செய்தி வந்திருக்கிறது பார்த்தாயா?''

''இல்லை பெரியம்மா! அவருக்கு முதலில் என்
நன்றிகளை தெரிவிக்க வேண்டும். பேசாமல் மாவட்ட
ஆட்சியர் அலுவலகத்திற்கே போன் செய்து விடவா?''

''எதற்கும் முயற்சி செய்து பார். வேறு ஏதாவது உதவி
வேண்டுமானாலும் செய்வான்.''

சொன்னது போலவே முயற்சி செய்தான். நெட்டி
லிருந்து அவன் வேலை செய்யும் வட மாநில கலெக்டர்
ஆபீஸ் நம்பரை எடுத்து அவனுக்கு போன் செய்தாள்.

போன் போனது. ஆனால் எடுத்தது அலுவலகப்
பணியாள். வேறு ஏதோ புரியாத மொழியில் பேச இவள்
ஆங்கிலத்தில் சொன்னது புரியவே இல்லை. மறுபடியும்
அவனது ஈமெயில் முகவரியைத் தேடி நன்றி செய்தி
அனுப்பினாள். மறுவினாடியே அவனிடமிருந்து பதில்
வந்தது. ''ஹாய்! ஹவ் ஆர் யூ?''

''ஐ வாண்ட் யுவர் காண்டாக்ட் நம்பர்'' என இவள்
பதில் அனுப்பினாள். அலுவலக மொபைல் எண்ணை
அனுப்பினான். அதில் அவள் தொடர்பு கொண்டாள்

தன் தனிப்பட்ட எண்ணில். அவள் 'ஹலோ' என்றதுமே
கட் செய்து விட்டு தொடர்பு கொண்டான். ''சில பாது
காப்பு காரணங்களுக்காக அலைபேசி எண்ணைத் தர
முடியவில்லை.''

''சு! இதைப்பற்றி நீங்கள் விளக்கம் வேறு தர வேண்
டுமா? ரொம்ப நன்றி. உங்கள் புத்தகங்கள் வந்தன.
எனக்கு மிகவும் உபயோகமாய் இருக்கிறது. மெயின்
தேர்வுக்கு தயாராகிக் கொண்டிருக்கிறேன்.''

''எத்தனை முறை நன்றி சொல்வாய்? சிவில் சர்வீசஸ்
பணியில் உள்ள அனைத்தும் அதிக சவால் மிகுந்த
பணிகளாகும். ஐ.ஏ.எஸ். அதிகாரியாக பணியேற்றால்
ஒரு துறையில் மட்டும் பணிபுரிய முடியாது. வேறு வேறு
துறைகளிலும் பணியாற்ற வேண்டியிருக்கும். அந்தந்த
துறையின் தேவைக்கு ஏற்ப செயல்பட வேண்டும். பல
சிரமங்கள் வரும். எல்லாவற்றையும் சமாளிக்க கற்றுக்
கொள்ள வேண்டும். பல்துறைப்பட்ட தெளிவான
அறிவும் வேண்டும். முந்தைய ஆண்டுகளில் கேட்கப்
பட்ட வினாத்தாள்களை உன் இணைய தள முகவரிக்கு
அனுப்பி வைக்கிறேன். மாதிரி வினாத்தாள்களையும்
பார். விடை ஏதேனும் தெரியாவிட்டால் தொடர்பு கொள்.''

''நன்றி, நன்றி.''

''இப்போது தானே சொன்னேன். எனக்கு நன்றியெல்
லாம் வேண்டாம்.''

''பின் என்ன வேண்டும்?''

''உன் அன்பு வேண்டும்.''

''.....''

''என்ன பேச்சே காணோம்?''

"ஒன்றுமில்லை."

"தேர்வில் பதில் அளிக்கும் பொழுது சாதாரணமாக பதில் அளிக்காமல் நல்ல அறிவுத்திறனுடன் பதில் அளிக்க வேண்டும். அவை மிக சிறப்பாக மற்றவர்களின விடைகளில் இருந்து வேறுபட்டு கனிந்து இருக்க வேண்டும். நம்பிக்கையுடன் பயிற்சி செய். உனக்கு ஒரு சஸ்பென்ஸ் காத்திருக்கிறது. அதை நேரில் தான் சொல்வேன்.

காலையில் முக்கியமான மீட்டிங் இருக்கிறது கண்ணம்மா குட்நைட் ஸ்வீட் ட்ரீம்ஸ்" என அவன் போனை வைத்தான்.

அப்படியே பிரமித்துப் போய் அமர்ந்திருந்தாள் வந்தனா. 'என்ன சொன்னார்? கண்ணம்மாவா? அல்லது தன் பிரமையா? ம்ஹூம் தூக்க கலக்கத்தில் ஏதேனும் கனவு கண்டிருப்பேனா? அப்படித்தான் இருக்கும். ஒரு வினாடி எனை மறந்து உறங்கிப் போயிருக்கிறேன். அவர் பாடம் படிப்பதைப் பற்றி அல்லவா பேசிக் கொண்டிருந்தார்? கனவு காணாத மனமே நான் முதலில் என் இலட்சியத்தில் வெல்ல வேண்டும். போலியோவால் தாக்கப்பட்ட வில்மா ஒலிம்பிக் தடகளப் போட்டியில் மூன்று தங்கம் வெல்லவில்லையா? நான் நன்றாகத் தானே இருக்கிறேன். ஐ.ஏ.எஸ். தேர்வும் எனக்கு தடகளப் போட்டி மாதிரிதான். இதில் ஓடி வென்றால் தான் வாழ்க்கையில் ஜெயிக்க முடியும். எங்கும் ஓடி ஒளியாமல் தலை நிமிர்ந்து பிறர் போற்ற வாழ முடியும். வினாடிகளைக் கூட வீணாக்காமல் நான் உழைக்க வேண்டும். கனவுகளே இன்னும் சிறிது காலம் கழித்து வாருங்கள்"

என படிக்கப் போனாள். குளிர்ந்த நீரில் முகத்தை கழுவிக் கொண்ட புத்துணர்ச்சியுடன்.

சந்தோஷமாய் உறங்கிப்போன சித்தார்த்திற்கு விடிந்த பொழுது செய்தியுடன் காத்திருந்தது. உமாவின் அப்பா ஊரிலிருந்து வருவதால் நேரில் சந்தித்து திருமண விஷயத்தைப் பற்றி பேசச் சொல்லி அம்மா செய்தி அனுப்பியிருந்தார். இன்றைய மீட்டிங் முடிந்ததும் பெங்களூரு செல்ல வேண்டும் என முடிவு செய்து கொண்டான்.

அன்றைய கூட்டம் வெகுநேரம் நீடித்துவிட்டது. முடிந்ததும் நேரே விமானம் ஏறி பெங்களூரு கிளம்பினான். அவன் சென்ற நேரம் ஒன்பது மணியாகி விட்டிருந்தது. சுநீல் இப்பொழுது கர்நாடகாவில் பணியாற்றியதால் தன் நண்பனை சந்திக்க விமான நிலையத்திற்கே வந்து விட்டான்.

"எவ்வளவு நாட்களாகி விட்டதடா! நாம் சந்தித்து; வா வீட்டிற்கு போய் விடலாம்; சாப்பிடுவதற்கு அங்கு ஏற்பாடு செய்யலாம்."

"உன் மனைவி வீட்டில் இல்லையே. பிரசவத்திற்கு சென்று இருக்கும்போது நம் இரவு உணவை இங்கே ஹோட்டலில் முடித்துக் கொண்டு செல்லலாம்."

அருகில் இருந்த ஹோட்டலில் நுழைந்தனர். உணவுக்கு ஆர்டர் கொடுத்து காத்திருக்கையில் ஹோட்டல் பஃபேயில் பல இளம் ஜோடிகள் கை கோர்த்து ஆடிக் கொண்டிருந்ததைப் பார்த்தனர்.

"எல்லாம் ஐ.டி. பணம் எக்கச்சக்கமாய் சம்பாதிக்கும் இளைஞர்களும். இளைஞிகளும் இளமையை இப்படி அனுபவிக்கிறார்கள். இது எல்லாம் காலத்தின் மாற்றம்."

என்று பக்கத்து இருக்கைக்காரர் கூறிக் கொண்டிருந்த பொழுதே அங்கே காவி உடை தரித்தவர்கள் கோஷ மிட்டவாறே வந்து ஒயின் மயக்கத்தில் ஆடிக் கொண் டிருந்தவர்களை அடித்து விரட்டினர். அதில் ஒரு பெண் எக்கச்சக்க மயக்கத்தில், ''ஹாய் கூ ஆர் யூ? எங்க சுதந்திரத்தில் நீ தலையிடாதே. எங்க அப்பன் கூட இதில் மூக்கை நுழைக்க நாங்க அனுமதிப்பது இல்லை'' எனக் கூச்சலிட்டாள்.

பத்திரிகை செய்தி சேகரிப்பவர் அங்கே வந்திருந்தார். அடிதடி, கூச்சல், குழப்பமாய் கொஞ்ச நேரம் அந்த இடம் களேபரமாய் இருந்தது. சுநீல் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்க, இரண்டே வினாடிகளில் பறந்து வந்து சண்டையிட்டவர்களை அகற்றி கைது செய்து அமை தியை நிலை நாட்டினார்கள். ''பார்த்தாயா சித்தார்த்? நம் பண்பாடும், கலாச்சாரமும் எங்கே போய்க் கொண்டு இருக்கின்றது என்று?

இந்த இளம் வயதிலேயே தண்ணியடித்து பழகினால் அவர்கள் வருங்காலம் என்ன ஆகும்? இவர்களை நம் பித்தான் வருங்காலத்தில் நாடு இருக்கிறது என எண் ணும் போதே வெட்கக் கேடாக இருக்கிறது. ஒரு பக்கம் ஊழல் இலஞ்ச லாவண்யம், மறுபக்கம் இது போன்ற கலாச்சார சீர்கேடுகள்; சுயநலத்தை தவிர எதைப் பற்றி யுமே சிந்திக்காத தலைவர்கள்; இதுவா நம் நாடு? எனத் தோன்றுகிறது. எல்லாவற்றையும் எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது. வெற்றி தோல்வி பற்றிக்கூட சிந்திக்க முடியாத அளவிற்கு நாளும் புதுபுதுப் பிரச் சனைகள் முளைத்துக் கொண்டிருக்கின்றன.''

''வருத்தப்படாதே சுநீல். இது நமக்கு வைக்கப்பட் டிருக்கும் பரிசோதனை இந்த சவால்களை மன உறுதி யுடன் வெல்வோம். நீதியும், நேர்மையும் தோற்றுப் போகாது. நம் கடமையை தவறாமல் செய்வோம்.''

''சரி விடுடா. என்னாச்சு? உன் டீம் கோள் கண்டு பிடித்து விட்டாயா? உன்னை மாதிரி குட் பாய்க்கு சீக்கிரம் டீம் கோள் கிடைக்க வேண்டும். ஹேய்! என் னப்பா ப்ளாஷ் அடிக்கிறது முகத்தில்? சம்திங்... சம்திங்...''

''ம். ஏறக்குறைய நிச்சயம் முடிய வந்தாகிவிட்டது.''

''ஜமாய்டா மாப்பிள்ளை. வாழ்த்துக்கள்'' எனக் கட்டிக் கொண்டான்.

''நாளைக்கு மங்களூரு பாஜ்பே விமான நிலையம் செல்ல வேண்டும். மாமா வருகிறார். ரமாவையும் வேறு அழைத்துச் செல்ல வேண்டும்.''

''பாஜ்பே விமான நிலையம் சிறு சிறு மலைகள் நிரம் பிய மேடான பகுதியில் அமைந்திருப்பதால் 'டேபிள் டாப் ஏர்போர்ட்' என்கிறார்கள். நம்ம அவென்யூவில் வசிக்கும் ஓய்வுப் பெற்ற விமானி அது அபாயகரமான அமைப்பு என்கிறார். காரணம் கேட்டதற்கு தரை இறங்கிய விமானம் தாறுமாறாக ஓடி நிலை குலையும் நிலை வந்தால் உடனே மீண்டும் விமானத்தை மேலே எழுப்ப முடியா தாம். ஏனென்றால் ஓடுதளம் ஒரு குறிப்பிட்ட எல்லை யோடு முடிந்து பள்ளத்தாக்கு துவங்கி விடுகிறது.''

''சரிப்பா நான் கிளம்புகிறேன். முடிந்தால் நாளை சந்திப்போம்.''

மறுநாள் பாஜ்பே விமான நிலையத்தில் உமாவின் அப்பாவை வரவேற்க ரமாவுடன் நின்று கொண்டிருந்

தான். மூன்று வருடங்களுக்குப் பிறகு தன் தந்தையை சந்திக்கப் போகும் உற்சாகத்தில் ரமா துள்ளிக் கொண்டிருந்தாள். அதோ விமானம் தரையிறங்கியது: ஓடுதளத்தில் ஓடியது. ஆ! இது என்ன? வேகம் குறையாமல் சென்று கொண்டே இருக்கிறதே! வரையறுக்கப்பட்ட தூரம் தாண்டியும் ஓடுகிறதே! விமானத்தில் ஏதாவது கோளாறா? எண்ணும்பொழுதே தொடர்ந்து ஓடி, வேலி ஊசி, சுவரை உடைத்து பள்ளத்தில் பாய்ந்தது அந்த போயிங் -ஏர் இந்தியா விமானம்.

விழுந்த வேகத்தில் இரண்டாகப் பிளந்து எரிய ஆரம்பித்தது. வானைத் தொட்ட புகை மண்டலத்தில் 158 உயிர்கள் உறவினர் கண் முன்னே தப்பிக்க வழியில்லாமல் கருகிப் போனார்கள். ''அப்பா'' என அலறிக் கொண்டு தீயில் பாய முயன்றவளை இறுகப் பற்றிக் கொண்டான் சித்தார்த்.

கதறி, பதறி, குலை நடுங்கி அப்படியே மயங்கிச் சரிந்தாள் ரமா. சுநீலுக்கும், வீட்டிற்கும் தகவல் தெரிவித்துவிட்டு ரமாவை மருத்துவமனையில் சேர்த்தான். பின் திரும்பி வந்து உமாவின் அப்பா உடலை, கருகிப் போன கையில் இருந்த அவன் பரிசளித்த ரிஸ்ட் வாட்சை வைத்துக் கண்டு பிடித்தான். விமானம் டயர் வெடித்ததாலோ லேண்ட் ஆன சமயம் வால் பகுதியில் ஏற்பட்ட பிரச்சனையாலோ விபத்திற்கு உள்ளாகி இருக்கலாம் என்றனர்.

சந்தேகத்திற்கான பதிலை கறுப்புப் பெட்டிதான் சொல்ல வேண்டும். ஏடுகட்ட முடியாத இழப்பு! மறுபடியும் மருத்துவமனைக்கு சென்றபொழுது சுநீல் அங்கு

வந்து இருந்தான். ''ஸாரிடா'' என்றவனிடம் ''இன்னும் நிறைய உடலை அடையாளம் காண முடியவில்லை. டி.என்.ஏ. சோதனைக்கு ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். முடிவு வர ஒரு வாரம் ஆகுமாம்'' என்றான்.

ரமா கண் விழித்து இருந்தாள். அவனைப் பார்த்ததும் கட்டிக் கொண்டு ''மாமா'' என தேம்பி விசும்பி அழ சமாதானம் செய்ய முடியாமல் தவித்தான்.

''இங்கே பாருடா! உனக்கு நாங்கள் எல்லோரும் இருக்கிறோம். அப்பா இல்லை என்று நினைக்காதே. நான் இருக்கிறேன் உனக்கு. அப்பா இறந்து போனதாக நினைக்காதே! அவர் வெளிநாட்டில் இருப்பதாக எண்ணிக் கொள். எல்லாம் கடந்து போகும். அழக்கூடாதும்மா. நல்லப் பெண்ணல்லவா நீ!'' ஆறுதல் தேறுதல் பல கூறி அவனை வீட்டிற்கு அழைத்து வந்தான்.

உமாவை மகேஷ் உடனிருந்து கையணைப்பில் தேற்றிக் கொண்டிருந்தான். மாமியாரும், மாமனாரும் பேரக் குழந்தையை கவனமாகப் பார்த்துக் கொண்டனர். காரியங்கள் சுநீல் உதவியால் மடமடவென்று நடந்தேறின. சித்தார்த் எல்லாருக்கும் தேவையானதை பார்த்துச் செய்து கொண்டிருந்தான். முக்கியமாக ரமாவை தனி கவனத்துடன் ஆறுதல் படுத்திச் சாப்பிட வைத்து அவள் வருத்தத்தைப் போக்கும் வண்ணம் பேசி கண்களில் தெரிந்த பயம் நீங்க தலையை வருடி விட்டான். இதையெல்லாம் ரமாவின் பாட்டி கவனித்துக் கொண்டிருந்தார். மகன் போன இழப்பை விட ரமாக்குட்டியை என்ன செய்வது? என்ற கவலைதான் அதிகம் இருந்தது.

''அப்பா சித்தார்த் கல்யாணத்தை நடத்துவது பற்றி எத்தனை ஆசையாய் பேசினார்? இன்றைக்கு அவரே இல்லாமல் போய்விட்டாரே'' என உமா அழுதாள்.

''ரமா'' என பாட்டிக் கூப்பிட என்றைக்கும் அவர் சொன்னதைக் கேட்காத ரமா இன்றைக்கு உடனே எழுந்து போனாள்.

''உன் அக்கா உங்க மகேஷ் மாமாவுடன் கிளம்பி விடுவாள்...''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. அக்கா என்னை விட்டுப் போகமாட்டாள்.''

''அது சரி. பத்து நாள் உன்னுடன் இருப்பாள். காரியம் முடிந்ததும் அவள் குடும்பத்தைப் பார்க்கப் போகாமல் உன்னையே தாங்க முடியுமா? அப்புறம் நீதான் அனாதை மாதிரி கிடக்க வேண்டும். நான் வயசானவள்; எத்தனை நாளைக்கு உனக்குத் துணையாய் இருக்க முடியும்? என் காலத்துக்குப் பிறகு உனக்கு துணை யார்?''

''ஆமாம்! எனக்குத் துணை யார்?'' என குழம்பிப் போய் திரும்பிக் கேட்டாள். ''காலா காலத்திலே கல்யாணம் பண்ணிக்கோ!''

''கல்யாணமா? யாரை பண்ணிக்கொள்வது? எனக்கு அவனைப் பிடிக்க வேண்டாமா?''

''ஏன் சித்தார்த்தை உனக்குப் பிடிக்கவில்லையா? உன் அப்பா வேறு அவனிடம் உங்கள் கல்யாணத்தைப் பற்றி பேசியிருக்கிறான். என் மகனின் ஆசையை நிறை வேற்ற வேண்டாமா? சித்தார்த்தை விட்டுடாதே; கெடி யாய் பிடிச்சுக்கோ. அதுதான் உன் எதிர்காலத்திற்கு நல்லது. இல்லாவிட்டால் உன் வாழ்வே இருண்டு விடும்.''

சித்தார்த், மகேஷ் இருவரும் வேலையிருந்ததால் கிளம்பி விட்டனர். உமாவும் அவள் மாமனார், மாமி யாரும் உடனிருந்தனர். அதனால் ரமாவிற்கு சற்று ஆறுதலாயிருந்தது. இவர்களும் ஊருக்குச் சென்று விட்டால் தனியாக எப்படியிருப்பது? என்ற பயம் அவளை சூழ ஆரம்பித்தது. பத்தாம் நாள் காரியத்திற்கு சித்தார்த் வந்து விட்டு மாலை கிளம்ப முயன்ற பொழுது அனைவரும் சூழ்ந்து இருக்கையில் ''சித்தார்த் மாமா என்னை விட்டுட்டுப் போகாதீங்க. என்னைக் கல்யாணம் செஞ்சுக்கோங்க'' என குண்டைத் தூக்கிப் போட்டாள்.

''ஏய், என்ன உளறுகிறாய்?'' என உமா அதட்டினாள். ''நீ சும்மாயிரு. நான் சித்தார்த் மாமாவை கேட்கிறேன். அவர் பதில் சொல்லட்டும். நான் உனக்கு இருக்கிறேன் என்று நீங்க தானே மாமா சொன்னீங்கள்? கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவது தானே பெரியவர்களுக்கு அழகு? நீங்க மட்டும் என்னைக் கல்யாணம் செய்து கொள்ளா விட்டால் நான் தற்கொலை செய்து கொள்வேன்.''

''சீ! என்ன பேச்சுடி இது? வாயைக் கழுவு: முதலில் போய் ஒழுங்காய் படிக்கிற வழியைப் பார். கண்ட சினி மாக்களைப் பார்த்து கன்னா பின்னாவென்று பேசுவதை நிறுத்து.''

''உமா அவள் சொல்வதில் என்ன தப்பு இருக்கிறது? சித்தார்த் ரமாவைக் கல்யாணம் செய்து கொண்டால் என்ன? அக்கா, தங்கை ஒரே வீட்டில் ஒருவருக்கொருவர் அனுசரணையாய் இருக்கலாம் தானே? தாய் இல்லாமல் வளர்ந்த குழந்தை.

இன்றைக்கு தந்தையையும் இழந்து நிற்கிறாள். அவள் மனசு கோணாமல் நடந்து கொள்ளுங்கள்.''

"சும்மாயிருங்கள் பாட்டி. நீங்கள் தான் அவள் மனதை கெடுத்ததா? அப்பா இருந்தால் இப்படி நீங்கள் பேசுவீர்களா?"

"ஏண்டி என் வாயை அடைக்கிறாய்? அன்றைக்கு நீதானே சித்தார்த் கல்யாணத்தைப் பற்றி அப்பா ஆசையாகப் பேசினார் என்று கூறினாய். இன்றைக்கு நீயே மாறி விட்டாயே?"

"சித்தார்த் கல்யாணம் என்றுதான் சொன்னேன். ரமா கல்யாணம் என்று சொல்லவில்லை. ஏன் இப்படி புரியாமல் பேசி எல்லார் வாழ்க்கையையும் கெடுக்கிறீர்கள்?"

"ஆமாம்டி அம்மா! நான்தான் உங்கள் வாழ்க்கையை கெடுப்பவள். அல்பாயுசுல நானும் போயிருந்தால் உங்களை வளர்க்க ஒரு நாதியும் இருந்திருக்காது. சின்னவள் வாழ்க்கை சிதறிப் போயிடக் கூடாதேன்னு நான் தவிப்பது உனக்கு எங்கே புரியப் போகிறது? நீ பாதுகாப்பாய் இருக்கிறாய். அவள் நிலைமையை நினைத்துப் பார். உன்னை மகேஷ் தாங்குவது போல அவளை சித்தார்த் தாங்குவதில் உனக்கு என்ன வருத்தம்?"

"புரியாமல் பேசாதீர்கள் பாட்டி. சித்தார்த்திற்கு பெண் எல்லாம் பார்த்தாகி விட்டது."

"ப்பூ! பெண் தானே பார்த்தீர்கள்? கல்யாணம் ஒன்றும் நடக்கவில்லையே! அதற்கு ஏன் இப்படி அலட்டிக் கொள்கிறாய்?"

"முடியாது பாட்டி. நான் இதற்கு ஒத்து..."

"அண்ணி" எனக் குறுக்கிட்டான் சித்தார்த். "இது என் பிரச்சனை; நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள்

சண்டையிட வேண்டாம். நீங்கள் எல்லாரும் ஊருக்குக் கிளம்புங்கள். அம்மா மட்டும் இங்கே இருக்கட்டும்."

பதறி அவனிடம் ஏதோ சொல்ல வந்த உமாவை கண்களால் மெல்ல எச்சரிக்கை செய்தான் சித்தார்த். அப்போதைக்கு ஒன்றும் சொல்லாமல் உமா கிளம்பி விட்டாலும் தன் கணவனிடம் புலம்பித் தீர்த்து விட்டாள்.

"அது எப்படிங்க நியாயம்? சித்தார்த் மனதை எப்படிக் காயப்படுத்த முடியும்? அவன் எத்தனை கனவுகள் கண்டு கொண்டிருந்தான். மகாலெஷ்மிக்காக ஒன்றரை வருடங்கள் தவம் இருந்து இருக்கிறான். அவன் அறையை வந்து பாருங்கள். எத்தனை விதமான புடவைகளை வாங்கி அவளுக்காக அடுக்கி வைத்திருக்கிறான் தெரியுமா? இதுவரை அவன் எதற்கும் ஆசைப்பட்டது கிடையாது. அவன் வாழ்க்கை இது! இதை எப்படி மற்றவர் முடிவு செய்யலாம்? அவனது விருப்பத்தை, கனவை, ஆசையை எப்படி அழிப்பது? அவனுக்கெல்லாம் மனசில்லையா? அவன் மனசை உடைக்கலாமா?"

"ரமா உன் தங்கை உமா!"

"இருக்கட்டுமே? அதற்காக அநியாயம் செய்ய நான் தயாரில்லை."

"அவள் ஆசைப்படுகிறாளே!"

"என்ன பொல்லாத ஆசை! ரெண்டு மணி நேரத்தில் முளைத்த ஆசையை இரண்டு அறையில் மாற்றி விடலாம்."

"விடும்மா! டென்ஷன் ஆகாதே. எல்லாம் சித்தார்த் பார்த்துக் கொள்வான். நாட்டில் பல பிரச்சனைகளை

தீர்த்து வைப்பவனால் இதைத் தீர்க்க முடியாதா என்ன? கவலையை விடு. கடவுள் மீது பாரத்தைப் போடு.''

''நிஜமாலுமே என்னால் நிம்மதியாக இருக்க முடிய வில்லை. ரமா புரியாமல் உளறுகிறாள். எல்லாம் பாட்டு தப்பாக சொல்லிக் கொடுத்து அவள் மனத்தை கெடுத்து வைத்து இருக்கிறார்கள். அவர்களுக்கு தன் இந்த வேண்டாத வேலை? எல்லாருக்கும் துன்பத்தை ஏற்படுத்தி விட்டார்கள்.''

''உமாம்மா! சித்தார்த் மேல் கொஞ்சம் நம்பிக்கை வை. பாட்டி மேலும் தப்பு சொல்ல முடியாது. ரமா வாழ்க்கைக்கு பாதுகாப்பு வேண்டும் 'என நினைக்கிறார்கள். அதுதான் இங்கே பிரச்சனை ஆகி விட்டது. அம்மாவைப் பார், எதுவும் பேசாமல் சித்தார்த் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். அவர்களிடம் நீ கற்றுக் கொள்.

இந்தப் பிரச்சனை தீரும் வரை என்னால் நிம்மதியாக இருக்க முடியாது. அப்பா வந்ததும் உடனடியாக சித்தார்த் கல்யாணத்தை முடிக்க வேண்டும் என்று நினைத்தேன். இப்படியாகிப் போனதே?'' என மறுபடியும் புலம்பியவளைப் பார்த்து சிரித்து விட்டு அவளை தன்னருகே மகேஷ் இழுத்துக் கொண்டான்.

''ஹாஸ்பெட்டலில் நீ சொன்னது போல் செய்த மாற்றங்களை அனைவரும் பாராட்டுகிறார்கள். குழந்தைகள் விளையாட சின்னதாய் ஒரு பூங்கா. படிப்பதற்கு புத்தகங்களுடன் கூடிய ஒரு புத்தக அறை. வாழ்த்து அட்டையுடன் மலர்க் கொத்தும் விற்கும் 'பொக்கே ஷாப்' எல்லாம் ஏற்பாடாகி விட்டது. ஆபரேஷன் ஆகி வந்தவர்களுக்கு 'Get well soon' என வாழ்த்து அட்டையுடன்

மலர்க் கொத்தும் வழங்குவதால் அவர்கள் எத்தனை உற்சாகம் ஆகிறார்கள் தெரியுமா? ஒவ்வொருவரும் உன் சின்னச் சின்ன யோசனைகளை அப்படி பாராட்டுகிறார்கள். என் அருமை மனைவியை மற்றவர்கள் பாராட்டினால் எனக்கு எவ்வளவு பெருமையாக இருக்கிறது தெரியுமா?''

''நம்முடைய மருத்துவமனைக்கு வருபவர்கள் அச்சத்துடன் வரக்கூடாது; நம்பிக்கையுடன் வந்து குணமாகி செல்ல வேண்டும். எல்லாரும் எளிமையானவர்களுக்கும் ஏற்றதாய் இருக்க வேண்டும். உடல் நலம் பெற்று செல்லும்பொழுது மனம் நிறைவுடன் வாழ்த்துவது தான் மிகப் பெரிய அங்கீகாரம். அதை பெறுவதற்கு உங்கள் திறமையும், அர்ப்பணிப்பும் தான் காரணம். நான் ஏதோ சில வேலைகளைச் செய்தேன். அதற்காக என்னால் தான் எல்லா பெருமையும் என்பது ரொம்பவே அதிகமாக உள்ளது.''

''உன்னை மாதிரி அருமையான மனைவி கிடைத்தால்தான் என்னால் அர்ப்பணிப்பு உணர்வுடன் வேலை செய்ய முடிகிறது. என்னை பாராட்டினால் அது உனக்கும்; உன்னை பாராட்டினால் அது எனக்கும் உரியது தான். சித்தார்த்தும் நம்மைப் போலவே அருமையாக வாழ்வான். நீ அந்த மகாலெஷ்மி பெண்ணைத் திரும்பப் பார்த்தாயா? கல்யாணம், நிச்சயம் எல்லாம் தள்ளிப் போவதால் நீ அவளை அடிக்கடி சந்தித்துப் பேசிக் கொண்டிரு. எக்காரணம் கொண்டும் அவள் வேறு யார் வீட்டு மருமகளாகவும் போகக்கூடாது. இந்த விஷயத்தில் கொஞ்சம் கவனமாயிரு.''

''நானே என்ன செய்வது என்று தவித்துக் கொண்டிருந்தேன். நீங்களே வழிகாட்டி விட்டீர்கள். கண்டிப்பாய்

சித்தார்த்தின் கனவை நனவாக்குவேன். எத்தனை இடையூறுகள் வந்தாலும் அவனுக்கும், மகாலெஷ்மிக்கும் திருமணத்தை நடத்தி வைப்பேன். இது உறுதி'' என்றவள் தொடர்ந்து ''ஆமாம். அவன் தந்தையைப் பார்த்தால் எதற்கும் வளைந்து கொடுத்து போகிறவர் மாதிரிதான் தெரிகிறார். ஏனோ அவரைப் பார்த்தால் அத்தனை மரியாதை மனதுக்குள் தோன்றவில்லை. அவரிடம் அவர் மனைவிக்கு மிகுந்த பயம் இருக்கும் போல'' எனக் கூறினாள்.

''என் மனைவி மிகுந்த கெட்டிக்காரி'' என மகேஷ் புன்னகைத்தான்.

சித்தார்த் வாரக்கடைசியில் பெங்களூருக்கு வந்து கொண்டிருந்தான். ரமா அவனையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தாள். அவளிடம் எந்த விகல்பமும் இல்லாமல் பழகினாலும் அவளுடன் பேசும் தருணங்களில் இயல்பாய் ஏதோ வேலை செய்து கொண்டே ஜானகி உடனிருந்தாள். அன்றைக்கு டி.வி. செய்தியில் பள்ளிச் சிறுமிக்கு திருமணம் செய்தவர்களை காவல் துறையினர் கைது செய்த நிகழ்ச்சியை காண்பித்தனர். ரமா அதை ஆழ்ந்து பார்த்ததை ஜானகியும், சித்தார்த்தும் கவனித்தனர். அவன் அதைப் பார்த்துவிட்டு புன்னகையுடன் தன் மடிக்கணினியில் ஆழ்ந்தான். ரமா ஆர்வமாய் பார்த்துக் கொண்டிருந்த நிகழ்ச்சியைப் பார்த்த அவள் பாட்டிக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

''இது என்னடி பார்க்கிறாய்?'' என ரிமோட்டைப் பிடுங்கி அணைத்து விட்டு ''கல்யாணம் பண்ணிக் கொள்ள ஆசைப்படுகிறவள், போய் சமையல் வேலை யெல்லாம் கற்றுக் கொள். அதை விட்டுவிட்டு வெட்டிப்

பொழுது போக்குகிறாய். என்னிடம் வேலை செய்ய டிமிக்கி கொடுத்தவள், இனி அப்படி இருக்க முடியாது. அத்தையிடம் எல்லாவற்றையும் கேட்டு செய்ய ஆரம்பி.''

''ம்ஹூம், நான் கட்டாயம் வேலை செய்ய வேண்டுமா? அத்தை நீங்களே சொல்லுங்கள். சமையல் அவசியம் நான் கற்றுக் கொள்ள வேண்டுமா? சமையல் செய்ய 'குக்' இருக்கும்பொழுது நான் ஏன் கற்றுக் கொள்ள வேண்டும்?''

''ஆயிரம் பேர் இருந்தாலும் நீ உன் கையால் பாசத்துடன் சமைப்பது போல் ஆகுமா? சித்தார்த்தும் அதைத் தான் விரும்புவான்'' என அவனைப் பார்த்துக் கொண்டே கூற,

அவன் முறுவலுடன் தலையசைத்தான்.

''போர் மாமா! எனக்குச் சாப்பிட மட்டும் தான் பிடிக்கும். இந்த சமையல், கிமையல் எல்லாம் செய்யப் பிடிக்காது'' என அலுத்துக் கொண்டே பாட்டியுடன் சமையல் அறைக்குள் சென்றாள். கண்ணீர் வழிய வெங்காயம் நறுக்கியவள் பாட்டியின் 'அதை எடு, இதை எடு' இப்படி கவனி; 'இது போட வேண்டும்; அது போட வேண்டும்' என்ற அதிகாரத்தில் எரிச்சலுற்றாள். மிளகாய்ப் பொடியை தொட்டக் கையால் முகத்தில் விழுந்த முடியை ஒதுக்க முகம் கைப்பட்ட இடங்களில் எல்லாம் எரிய ஆரம்பித்தது. உடனே 'ஓ'வென்று அழ ஆரம்பித்தாள். என்ன வென்று எட்டிப் பார்க்க முயன்ற ஜானகியை சித்தார்த் தடுத்து விட்டான். ''என்னடீ இது? புதுசா எல்லாத்துக்கும் அழ ஆரம்பித்து இருக்கிறாய்? எதையுமே ஒழுங்காய் கற்றுக் கொள்ள மாட்டாயா? உனக்கு எதிலும்

அக்கறையும். ஆர்வமும் இல்லை. எல்லாவற்றையும் எடுத்தேன். கவிழ்த்தேன் எனச் செய்கிறாய். இப்படியிருந்தால் போற இடத்தில் மொத்து வாங்க வேண்டியது தான். ஆளு வளர்ந்திருக்கிற அளவுக்கு அறிவு வளரலை.''

''போ, பாட்டி. நீ எப்ப பாரு திட்டிக் கொண்டே இருக்கிறாய். உன்னைப் பற்றி நான் யார் கிட்டே கம்ப்ளெய்ண்ட் பண்ணுவது? எனக்குத் தான் அப்பாவும் இல்லே. அம்மாவும் இல்லையே?''

''ஐயோ கண்ணு! உன்னை நான் ஒன்றும் வேணும்னு திட்டலை. உனக்கு நான் இருக்கிறேன். நீ வேறு யார்கிட்டேயும் திட்டு வாங்கக் கூடாது; பொறுப்பான பெண்ணாக இருக்க வேண்டும் என்றுதான் உன்னிடம் கோபித்துக் கொள்கிறேன்.''

''அதுக்காக ஒரே நாளில் நான் வளர்த்துட முடியுமா பாட்டி? கொஞ்சம் கொஞ்சமாய் தானே கத்துக்க முடியும்.''

''சரிதான்டி கண்ணு. நான்தான் அவசரப்பட்டுட்டேன்'' என கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''ரமா ஈவினிங் மூவி போகலாமா? வீட்டில் எல்லாரையும் கிளம்பச் சொல்.''

''வாவ்! நிஜமாகவே போகலாமா மாமா.''

''என்ன படம் போகலாம்? தமிழ் படம் இங்கே ஓடாதே; என்ன செய்யலாம்?''

''கன்னட படம் போகலாமா?''

''மாமா, மகேஷ் பாபு படம் ஏதாவது பார்க்கலாம்.''

''தியேட்டருக்கு போக வேண்டும் என்றால் நம்ம விருப்பத்திற்குப் பார்க்க முடியாது.''

''சரி மாமா. ஏதோ ஒரு படம் போகலாம். தியேட்டருக்கு நான் போனதே இல்லை.''

மாலை நால்வரும் கிளம்பினர். வரும் வழியில் இரவு உணவை ஹோட்டலில் முடித்துக் கொள்வதாக ஏற்பாட்டுடன் புறப்பட்டனர். சுநீலும் அங்கே வந்து சேர்ந்து கொள்ள படத்தைப் பார்த்து விட்டுத் திரும்பினர். வழக்கமான கமர்ஷியல் சினிமா தான். ஹீரோவின் சூப்பர் ஸ்டார் அந்தஸ்தை நிறுவும் மற்றுமொரு படம். ஆனால் விறுவிறுப்பாய் இருந்ததால் ரசிக்க முடிந்தது. ஹீரோ தன்னுடன் குழந்தை நட்சத்திரமாய் நடித்த பெண்ணையே இப்போது ஹீரோயினாக கொண்டு நடித்திருந்த படம்.

''என்ன ரமா படம் எப்படி? உனக்குப் பிடித்திருந்ததா?''

''போங்க மாமா. எனக்கு படம் பிடிக்கவே இல்லை.''

''ஏனம்மா?''

''ஹீரோயின் டீன்ஏஜ் கேர்ள்; ஹீரோ அரை கிழவர் மாதிரி இருக்கிறார். இரண்டு பேருக்கும் கொஞ்சம் கூட பொருத்தமே இல்லை. பதினாறு வயசு பெண்ணுக்கு நாற்பது வயசு ஆண் எப்படிப் பொருத்தமாய் இருப்பார்? அவளைவிட கொஞ்சம் தான் பெரியவனாக ஹீரோ இருக்க வேண்டும்.''

''அது எப்படி அம்மா? நிஜ வாழ்க்கையில் நடப்பதைத்தானே சினிமாவாக எடுக்கிறார்கள். எத்தனையோ பெண்கள் இப்படி வயதில் பெரியவர்களைக் கல்யாணம் செய்து கொள்வது இல்லையா? தன் பாட்டிக்கும், தாத்தாவுக்கும் பத்து வயது வித்தியாசம் இல்லையா?''

''அதெல்லாம் அந்தக் காலம். இப்பொழுது எல்லாம் அப்படி கிடையவே கிடையாது. தங்களுடன் படிக்கும்

பையன்களையோ, அல்லது ஒன்றிரண்டு வயது மூத்தவர்களை மட்டும் தான் நாங்கள் மணந்து கொள்கிறோம். வயசு அதிகமானவரை மணந்து கொண்டால் அப்பா - பெண் போலத் தோன்றும். சே, சே வயது அதிகமானவரை கல்யாணம் செய்து கொள்ளவே மாட்டார்கள் என் தோழிகள்; நானும் அப்படித்தான்."

"எப்படி?"

"என்ன?"

"நானும் அப்படி என்றால்... எப்படி?"

"ஏன்?"

"என்னை மணந்து கொள்வதாக நீதானே சொன்னாய்? உனக்கும், எனக்கும் வயசு வித்தியாசம் எவ்வளவு தெரியுமா? உன் பாட்டி, தாத்தா வயது வித்தியாசத்தை விட அதிகம். பரவாயில்லையா?"

"ம்ஹூம், முடியவே முடியாது. என்னால் கல்யாணம் பண்ணிக்கவே முடியாது."

"நல்லா யோசித்து சொல்லம்மா. நீ மட்டும் தனியாக வாழ முடியுமா? அப்புறம் தற்கொலை பண்ணிக் கொள்வாயோ? என எங்களால் தவிக்க முடியாது."


"நான் ஏன் தனியாக இருக்கப் போகிறேன்? நானும் பாட்டியும் எப்பொழுதும் போல இங்கே இருப்போம். நீங்கள் எல்லாம் எங்களுக்கு துணையாக இருப்பீர்கள் தானே? நான் கூப்பிட்டால் நீங்கள் இங்கு வருவீர்கள். இல்லையென்றால் நான் அங்கு வரப்போகிறேன். சரி தானே?"

"ரொம்ப சரி."

"நாளையிலிருந்து நான் ஸ்கூலுக்கு போகப் போகிறேன். என் நண்பர்கள், தோழிகளை ரொம்ப மிஸ் செய்கிறேன். நிறைய படிக்கப் போகிறேன். நான் ஆடிட்டர் ஆகி எல்லார் கண்களிலும் விரலை விட்டு ஆட்டப் போகிறேன். அப்பா என்னிடம் கணக்கு சொல்லவே பயப்படுவார். அது மாதிரி எல்லாரையும் கணக்கு கேட்டு பயமுறுத்தும் வேலைக்குத்தான் போவேன். என்ன மாமா அதற்கு நீங்கள் உதவி செய்வீர்கள் தானே?"

"கட்டாயம்! ரமிக்குட்டிக்கு செய்யாமல் பின் யாருக்கு செய்வேனாம்?"

"ஐயோ! அப்பா கூப்பிட்ட மாதிரியே இருக்கு" என அவள் உற்சாகமாய் துள்ளிக் குதித்த பொழுது... ஜானகி, சித்தார்த் மனது நிறைந்து போனது. இவ்வளவு ஏன்? அவள் பிஞ்சு மனதில் நஞ்சை விதைத்து பாட்டியின் மனது கூட நிர்மலமாய் ஆகி நிம்மதியில் நிறைந்து போனது.



7

வந்தனா வேலை தேட வேண்டிய கட்டாயத்தில் இருந்தாள். கனகவல்லியின் மகன் மனைவியுடன் துபாயில் இருந்தான். இரண்டு பையன்கள். இரட்டையர்கள். இரண்டு வயது பூர்த்தியாகும் விழா சமயத்தில் குடும்பத்துடன் வெளியே சென்ற பொழுது விபத்து ஏற்பட்டது. பேரப்பிள்ளைகளும், மகனும் சிறு சிராய்ப்புடன் தப்பித்து விட்டனர். மருமகளுக்கு மட்டும் கைகளில்

எலும்பு முறிவு ஏற்பட்டு விட்டது. எனவே அவ
பார்த்துக் கொள்ளவும், குழந்தைகளை கவனித்து
கொள்ளவும் கனகவல்லியை துபாய்க்கு வரும்படி ம
அழைத்தான். மகனுக்கு உதவி தேவைப்படும் நேரத்
அவளால் வர முடியாது என்று மறுக்க முடியவில்லை

ஆதரவற்ற நிலையில் வந்தனாவை விட்டுச் செ
வும் இயலவில்லை. தனியாக அவள் வீட்டில் எப்
யிருப்பாள்? வேலையில்லாமல் ஹாஸ்டலில் எப்
யிருக்க முடியும்? மோசமான பெரியப்பா கண்ணில் ப
மல் வாழ முடியுமா? அவ்வளவு அழகான பெண் தரு
பாதுகாப்பு இல்லாமல் தனியாக இருக்க முடியுமா
தன்னுடன் இருக்கும் பொழுதே எத்தனை கழுகு கண்
அவளை மொய்க்கின்றன. தானும் இல்லாவிட்டா
அவள் கதி என்ன? பையன் விசா எடுத்து அனுப்பு
தற்குள் ஏதாவது சரியான, பாதுகாப்பான ஏற்பாட்
செய்துவிட வேண்டும். கனகவல்லி தோழிக்கு உத
வதற்காக தேவையில்லாத சுமையை தலைமேல் தூ
வைத்துக் கொண்டு விழி பிதுங்கி மூச்சு திணறுவா
வந்தனா விரும்பவில்லை.

கனகவல்லிக்கு வந்த இக்கட்டான சூழ்நிலை
அவள் நன்றாக அறிந்து இருந்தாள். சொந்த மகனி
குடும்பத்தை கவனிப்பது இச்சூழலில் மிகவும் அ
சியம்; அதனால் தான் எங்காவது வேலை தே
கொண்டு போக வேண்டும் என உறுதியான முடிவு எ
தான். செய்தித்தாள், இணையதளம் மூலம் பல்வே
இடங்களில் வேலை தேடலானாள். ஒரு சில இ
களில் அனுபவம் கேட்டிருந்தார்கள். இன்னும் சில இ
களில் முன்பணம் கட்ட சொல்லியிருந்தார்கள்.

"எந்த வேலைக் கிடைத்தாலும் சரி; இப்போதைக்கு
கால் ஊன்றிக் கொண்டு வேறு வேலை தேடலாம்' என
அவள் எண்ணிய பொழுது நேர்முகத் தேர்வுக்கான
கடிதம் ஒன்று வந்தது. சென்ற வாரம் புகைப்படத்துடன்
அவள் அனுப்பிய விண்ணப்பத்திற்கான பதிலாக
நேர்முகத் தேர்விற்கு அழைப்புக் கடிதம் வந்திருந்தது.
பெங்களூரு சாஃப்ட்வேர் நிறுவனத்துக்கு சொந்தமான
கால்சென்டரில் இருந்து வந்த கடிதம் அவளுக்கு நம்
மதியை அளித்தது. சம்பளம் கிட்டத்தட்ட பதினைந்து
ஆயிரம். கனகவல்லியிடம் உற்சாகமாய் கடிதத்தைக்
காட்டினாள்.

"நேர்முகத் தேர்வு எங்கே அம்மா?"

"ஹோசூரில் நடக்கிறது பெரியம்மா."

"அவ்வளவு தூரம் நீ தனியாக செல்ல வேண்டுமே!"

"அதற்கு ஒன்றும் பயம் வேண்டாம் பெரியம்மா.
நான் ஒன்றும் அடுத்த கிரகத்திற்கு போகவில்லை."

"இருக்கட்டும் அம்மா! அழகு பெண் குழந்தையாய்
இருக்கிறாய். உன்னைச் சுற்றி வல்லூறுகள் வேறு வட்ட
மிடுகின்றன. ஆதரிக்கின்ற மனிதர்களையும் காணோம்.
நானும் உனக்கு உதவ முடியாத நிலையில் இருக்கிறேன்.
பின் எப்படி கவலைப்படாமல் இருக்க முடியும்?"

"நல்ல எண்ணங்களுடன் இருந்தால் எங்கு போனாலும்
ஆபத்து சமயத்தில் யாராவது நல்லவர்கள் நமக்கு உதவு
வார்கள். உங்களை நான் பார்த்தது கூட கிடையாது;
அறிந்ததும் கிடையாது; அப்படியிருந்தும் பெரியம்மா
சொன்னவுடன் உங்களைத் தேடி வரவில்லையா? எங்
கிருந்தாலும் நல்லவர்களை கடவுள் எனக்கு துணைக்கு
அனுப்புவார் என்ற நம்பிக்கையிருக்கிறது."

''எல்லாரையும் உடனே நம்பி விடாதே. காரண காரியங்களை யோசித்து சிந்தித்து பிறகு நம்பு. கண்ணுக்குத் தெரியாத வலை நிறைய இருக்கும்; யோசித்து தான் கால் வைக்க வேண்டும் மகளே!''

''புரிகிறது பெரியம்மா'' என்றவள் யோசித்தாள். இதுவரை கையில் இருந்த பணத்தை சிக்கனமாக செலவு செய்து புத்தகங்கள் முதல் பல்வேறு அவளது தேவைகளை பூர்த்தி செய்து கொண்டாள். ஆனால் ஏறக்குறைய எல்லா பணமும் செலவாகிப் போனது. ஏற்கனவே கனகவல்லி வீட்டில் சும்மா சாப்பிடுகிறோம் என்ற உணர்வு இவளை வாட்டிக் கொண்டிருந்தது.

மேலும் அவளே வெளிநாட்டு பயணத்திற்காக பணத்தை திரட்டிக் கொண்டிருந்த பொழுது இவள் அவளிடம் எந்த பண உதவியையும் பெற்றுக் கொள்ள விரும்பவில்லை. நேர்முகத் தேர்வுக்கு செல்ல பணம் வேண்டுமே? என யோசித்தாள். பக்கத்து வீட்டு மணிமாறன் கல்லூரியில் பார்ட் டைம் வேலை செய்து கொண்டே படித்துக் கொண்டிருந்தான். அவனிடம் ஏதாவது உதவி கேட்போமா? என எண்ணியவாறே ''மணிமாறா! எனக்கு ஏதாவது வேலையிருந்தால் சொல்லேன்'' என்றாள்.

''அக்கா, என்ன வேலை உங்களுக்கு தருவது? ப்ராஜெக்ட் வொர்க்கில் ஆங்கில கிராமர் மற்றும் சொற்களின் அமைப்பை திருத்தி அமைக்கும் வேலையிருக்கிறது. செய்து தர முடியுமா? ஒரு வொர்க்கிற்கு 500 ரூபாய் கிடைக்கும்.''

''கொடு. தாராளமாக செய்து தருகிறேன்'' இரவு பகலாக கண்விழித்து விளக்கம் கேட்டு பாடப் பொருளை

விசாரித்து மூல நூலை எடுத்துப் பார்த்து நான்கு நாளில் வேலையை செய்து முடித்தாள்.

''அக்கா, இதை எங்கள் பேராசிரியரிடம் கொடுக்கிறேன். ஆனால் யாரும் இவ்வளவு சீக்கிரம் இந்த வேலையை செய்து முடிக்க மாட்டார்கள். பேராசிரியருக்கு பிடித்திருந்தால் இது மாதிரி பல வேலைகளை வாங்கித் தருகிறேன். உங்களுக்கு நல்ல ஆங்கிலப் புலமையிருக்கிறது. அதை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.''

''மணிமாறா, பார்ட் டைம் வேலை உன் படிப்பு செலவிற்கு போதுகிறதா?''

''பெரும்பாலும் போதும் அக்கா. ஆனால் நான் அதில் பாதியை வீட்டு செலவுக்கும் கொடுப்பதால் போதமாட்டேன் என்கிறது. அதனால் அவ்வப்போது கல்யாணம், வரவேற்பு, பிறந்தநாள் விழாக்கள் போன்ற இரவு நேர நிகழ்ச்சிகள் நடக்கும் பொழுது ''கேட்டரிங் மாணவர்கள்'' பரிமாறுவதற்கு வெளி ஆட்களை தேடும் பொழுது சென்று விடுவேன். எப்படியும் ஒரு நிகழ்ச்சிக்கு 500 ரூபாய் கிடைக்கும்.''

''எனக்கும் ஒரு வாய்ப்பு வாங்கிக் கொடேன்.''

''ஏன் அக்கா? அப்படி என்ன பணத்தேவை உனக்கு என்ன வந்தது? நான் வேண்டுமானால் உனக்கு பணம் தருகிறேன். இந்த வேலைக்கு எல்லாம் நீ வர வேண்டாம்.''

''இன்டர்வியூ செல்ல பணம் வேண்டுமடா. நீ எனக்கு பணம் கொடுத்துவிட்டால் உன் குடும்பத் தேவைக்கு என்ன செய்வாய்? வேலையில் கேவலமான வேலை என்று எதுவும் இல்லை. யாரையும் ஏமாற்றாமல்

நேர்வழியில் செய்யும் எந்த தொழிலும் கௌரவமானது தான்.''

''நான் கேவலமான தொழில் என்று சொல்லவில்லை. ஆனால் இது நீ செய்யக் கூடிய வேலையில். நான் ஆண்பிள்ளை. பரிமாற செல்வதால் எந்த பிரச்சனையும் வராது. நீ பெண்பிள்ளை என்பதை மறந்தாயா அக்கா? உன்னை நீ கண்ணாடியில் பார்த்தது இல்லையா? தேவையில்லாத பிரச்சனையை நாமே இழுத்து விட்டுக் கொள்ளக் கூடாது.''

''சரிடா! நான் பரிமாற வரவில்லை. அங்கேயே வேறு ஏதாவது வேலையிருக்கும் தானே? அதை நான் செய்கிறேனே?''

''ஏன் இல்லை? பத்து பாத்திரம் தேய்க்கும் வேலையிருக்கிறது. செய்கிறாயா? இதெல்லாம் வேண்டாம் என்றால் கேட்க மாட்டேன் என்கிறாயே!''

''ஏன்டா? நீ கூட இந்த மாதிரி வேலைகளைச் செய்ய தயங்குவதில்லை. என்னை மட்டும் தடுக்கிறாய்? நீ என்ன சொன்னாலும் நான் கேட்பதாயில்லை. வா.''

''நாளைக்கு கலெக்டர் ஆகப் போகிறாய். இன்றைக்கு பத்து பாத்திரம் தேய்க்கிறாயா?''

''நான் சரித்திரம் படைப்பதில் உனக்கு விருப்பம் இல்லையா? நாளைக்கு நானும் சொல்லிக் கொள்வேன் அல்லவா பத்து பாத்திரம் தேய்த்து கலெக்டர் ஆனேன் என்று.''

''ஏன் பேட்டியே கொடு. எவனும் நம்ப மாட்டான்.''

''பிறர் நம்புவதற்காக நாம் எதையும் செய்ய முடியாது. காந்தி தாத்தா டாய்லெட்டை கூட க்ளீன் செய்து

இருக்கிறார். இனியும் விளக்கம் கொடுத்துக் கொண்டு இருக்காதே. முடிவு செய்து விட்டால் நானே என் பேச்சை கேட்க மாட்டேன் என்று மறுபடியும் பழைய டயலாக்கை எடுத்து விட வேண்டியிருக்கும்.'' சொன்னபடியே அவனுடன் சென்றாள்.

மனிமாறன் தன் நண்பர்களிடம் என்ன சொல்லி வைத்திருந்தானோ? அவர்கள் அவளை மிகவும் மரியாதையாக நடத்தினார்கள். உணவை பரிமாறும் பொழுது இன்முகத்தோடு இரண்டொரு அன்பான வார்த்தைகளோடு பரிமாறச் சொன்னாள்.

''பிடித்திருக்கிறதா? இன்னும் வேண்டுமா? நன்றாக சாப்பிடுங்கள்'' சாதாரண வார்த்தைகள் தான். ஆனால் மந்திரம் மாதிரி வேலை செய்தது. எல்லாரும் நன்றாக விருந்து அமைந்ததாக பாராட்டினார்கள். இவளும் உணவை அடுக்கிக் கொடுப்பது. எந்த வரிசையில் என்ன பரிமாற வேண்டும்?

தாமதப்படுத்தாமல் அடுத்தடுத்த உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் போன்றவற்றை சரியாக மேற்பார்வையிட்டு செயல்படுத்தினாள்.

சாப்பிட்ட இலைகளை எடுப்பதிலும். இலை போடுவதிலும் சுறுசுறுப்பாய் செயல்படுத்தியதும் நன்றாக அமைந்தது.

பாத்திரத்தை கழுவுவதில் மாணவர்கள் அனைவரும் அவளுக்கு உதவியாக வந்துவிட்டனர்.

''ஏய்! என்னப்பா? என்னை ஒரு வேலையும் செய்ய விடமாட்டேன் என்கிறீர்கள்?''

''அக்கா! உங்கள் ஆலோசனைகள் எங்களுக்கு மிகவும் பலனளிப்பதாக இருந்தது. அதனால் இன்னும் மூன்று

நிகழ்ச்சிகள் எங்களுக்கு கிடைத்து இருக்கிறது. அதற்கே நாங்கள் பணம் தர வேண்டும். மேலும் கூடமாட பல வேலைகளை செய்து இருக்கிறீர்கள்.

சாம்பார் தீரும் நிலை வந்த பொழுது வெங்காயம் தக்காளி, கொத்தமல்லி, கறிவேப்பிலை நறுக்கி போட்டு சாம்பார்த் தூள் சேர்த்து சாம்பாருடன் நீங்கள் கலந்தது சுவை கூட்டியதுடன் இக்கட்டிலிருந்து எங்களையும் காப்பாற்றியது. எனவே நன்றி சொல்ல வேண்டியது நாங்கள் தான்'' என்று கூறி அவள் கையில் ஆயிரம் ரூபாய் தந்து அனுப்பினர்.

மணிமாறன் தன் பணத்தையும் அவளுக்கே தந்து விடுமாறு சொன்னது வந்தனாவிற்குத் தெரியாது. கையில் ஆயிரத்து ஐநூறு ரூபாய் சேர்ந்தது அவளுக்கு மிகவும் நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் கொடுத்தது. கனகவல்லி ஒருபுறம் அவளை இப்படி கஷ்டப்பட்டு சம்பாதித்ததற்கு கோபித்துக் கொண்டாலும், மறுபுறம் அவளை எண்ணி பெருமிதம் பட்டாள்.

''நேர்முகத் தேர்வு என்றைக்கு?''

''வரும் வெள்ளிக்கிழமை பெரியம்மா.''

''சுவனம், எல்லாவற்றையும் எடுத்து வைத்துக் கொள். வேண்டாதவர்கள் கண்ணில் படாமல் சென்று வா. கடவுள் துணையிருப்பார்.''

வந்தனாவிற்கு தன் பெரியம்மாவின் நினைவு வந்தது. அவருடன் பேச வேண்டும் போல் தோன்றியது. சத்யாவின் குட்டியை பார்க்க வேண்டும் என்றும் தோன்றியது. ஆனால் பெரியம்மா தான் எக்காரணம் கொண்டும், எந்த விதத்திலும் என்னை தொடர்பு கொள்ளாதே என்று கூறியிருக்கிறாரே? என எண்ணிக் கொண்டாள்.

அப்போது அவளையும் மீறி ஒரு கனிந்த பார்வை கொண்ட முகம் மனதில் நிழலாடியது. அது சித்தார்த்தின் முகம் என்று சொல்லவும் வேண்டுமோ? கண்ணம்மா! என்ற அழைப்பு காதில் கேட்டது. தன்னையறியாமல் வாய் ''உயிரின் உயிரே உனது விழியில் என் முகம் நான் காண வேண்டும்'' எனப் பாடியது.

மலர்ந்த முகத்துடன் நேர்முகத் தேர்விற்கு புறப்பட்டாள். ஒகூர் சென்று அடைந்த பொழுது காலை ஆறு மணி ஆகிவிட்டிருந்தது. பேருந்து நிலையத்திலேயே பல் துலக்கி முகம் கழுவிக் கொண்டு நேர்முகத் தேர்வு நடக்கும் இடத்திற்கு எப்படி செல்வது என யோசித்தாள்.

காலை உணவை முடித்துக் கொண்டு செல்லுக்கு ரீசார்ஜ் செய்தாள். பின் தன்னுடன் படித்த மாணவிக்கு போன் செய்து முகவரியைச் சொல்லி வழி விசாரித்தாள்.

''நீ சொல்கிற இடத்தில் முன்பு எந்த நிறுவனமோ, கட்டடமோ இல்லை. இப்பொழுது தான் நானுக்கு நாள் இடம் முகம் மாறிக் கொண்டிருக்கிறதே! புதிதாக ஏதாவது நிறுவனம் வந்திருக்கலாம். நான் ஒகூரை விட்டு சென்று ஆறு மாதங்கள் ஆகி விட்டன. ஏதாவது ஆட்டோவில் ஏறி முகவரி சொன்னாலே போதும். சரியான இடத்தில் கொண்டு போய் விட்டு விடுவார்கள்.''

ஆட்டோ தேடினாள். சற்று தூரத்தில் நான்கைந்து ஆட்டோக்கள் நின்று கொண்டிருந்தன. இரண்டு ஆட்டோக்களில் ஓட்டுநரை காணவில்லை. மூன்றாவது ஓட்டுனரோ அவர்கள் சென்ற பிறகு தான் தான் சவாரி ஏற்ற முடியும் எனக் கூற இன்னும் நேர்முகத் தேர்வுக்கு நேரம் இருந்தது.

எனவே காலைச் செய்தியை அறிய செய்தித் தாள் ஒன்றை வாங்கினாள். முக்கியமான செய்திகளை

குறித்துக் கொண்டு அதை மடித்து எடுத்துக் கொண்டு மறுபடியும் ஆட்டோவிடம் வந்தாள்.

''இப்ப எங்க போகணும்னு சொல்லுங்கம்மா?'' என முதலில் மறுத்த அந்த ஓட்டுநர் கேட்டான். முகவரியை அவள் சொல்ல...

''அங்க ஒரு கட்டடம் புதிசா கட்டியிருக்காங்கன்னு தெரியும். ஆனால் அது எந்த ஆபீஸும் மாதிரி தெரிய லையே? நல்லா விசாரிச்சீங்களா? அங்க தான் இன்டர் வியூ என்று நன்றாக தெரியுமா?''

''இல்லேப்பா! அப்படித்தான் முகவரியில் இருக்கிறது.''

''என்னா வேலைக்கம்மா? கூப்பிட்டு இருக்காங்க?''

''கால்சென்டர் வேலை.''

''இப்ப தான் எல்லா இடத்திலேயும் அந்த வேலைக்கு ஆள் எடுக்கிறார்களே! அது மாதிரி வேறு எங்காவது வேலை கொடுக்க இங்கு இன்டர்வியூ நடத்துகிறார்களோ? என்னவோ?''

''ஆமாம்! பெங்களூரு-ல வேலை.''

''நீங்க ஊருக்கு புதுசா? பார்த்து கவனமாய் இருந் துக்கங்க.'' என அவன் அவள் பதிலை எதிர்பார்க்காமல் எச்சரித்தான். அவளை ஆட்டோவிலேயே இருக்கச் சொல்லிவிட்டு,

''இது தாம்மா. அந்தக் கட்டடம். நீங்க சொன்னபடி ஏதாவது இன்டர்வியூ நடக்குதான்னு நான் விசாரித்து விட்டு வருகிறேன்'' என்றான்.

''இருப்பா! பக்கத்து ஆட்களிடம் நீ கேள். நான் நேரிடையாக கேட்டு வருகிறேன்.''

இருவரும் சென்றனர். ''அம்மா நான் விசாரித்த வரை யில் அக்கம் பக்கத்தில் எந்த விவரமும் தெரியவில்லை'' என திரும்பி வந்து அவன் கூறினான்.

''உள்ளே ஐந்து பெண்கள் நேர்முகத் தேர்விற்காக வந்து அமர்ந்து இருக்கிறார்கள். அக்கறையுடன் உதவிய தற்கு மிக்க நன்றி. இந்தா பணம்'' எனக் கொடுத்து விட்டு நகர்ந்தாள்.

உள்ளே சென்று இருக்கையில் அமர்ந்தவள்,

வாசலில் ஆட்டோ ஓட்டுநர் திரும்பவும் நிற்பதைக் கண்டு,

''என்னப்பா?'' என்றாள்.

''திரும்பவும் வரணுமா? எத்தனை மணிக்கு வர வேண்டும்?''

''எத்தனை மணிக்கு முடியும் என்று தெரியவில்லை. எனக்காக நீ சவாரியை விட்டு விட்டு காத்திருக்க வேண் டாம். நான் பிற பெண்களுடன் சேர்ந்து சென்று கொள் கிறேன்.''

''ஏம்மா எனக்கொரு சந்தேகம்? ஆம்பிளைங்களுக்கு எல்லாம் இங்கே வேலை தரமாட்டாங்களா? எல்லாம் பொண்ணுங்களாய் வந்து இருக்கிறார்கள்!'' என போகிற போக்கில் ஒரு கேள்வியை போட்டு விட்டு நகர்ந்தான்.

வந்தனாவும் பிறகு தான் சற்று கூர்ந்து கவனித்தாள். வந்திருந்த எல்லோருமே இளம்பெண்கள் தான். அழகு க்ரீம் விளம்பரத்திற்கு வந்தவர்கள் போல் பளிச்சென்று இருந்தார்கள். அவர்கள் வந்ததில் இருந்து ஒரு ப்யூன் தான் அவ்வப்போது வந்து செய்தி தெரிவித்துக் கொண் டிருந்தான்.

ஒன்பது மணிக்கு தொடங்குவதாக தெரிவித்துக் கொண்டிருந்தான். ஒன்பது மணிக்கு தொடங்குவதாக சொல்லியிருந்த இன்டர்வியூ பதினொரு மணிக்கு தான் துவங்கியது. சில பெண்கள் உள்ளே சென்று வந்த சில நிமிடங்களிலேயே.

"இங்கே நமக்கு வேலை கிடைக்காது. அவன் மட்டும் தான் அறிவுஜீவி என நினைத்துக் கொண்டு கேள்வி கேட்கிறான்" எனக் கூறிவிட்டு புறப்பட்டனர்.

கடைசியில் மிஞ்சியது ஐந்து பெண்கள் தான்; அதில் வந்தனவும் ஒருத்தி. மதியம் மூன்று மணிக்கு தான் அவர்களுக்கு இன்டர்வியூ முடிந்தது. ஐந்து பேரையும் அப்பாய்ண்ட்மெண்ட் ஆர்டரை வாங்கிக் கொண்டு போகச் சொல்லி காத்திருக்கச் சொன்னார்கள். வரவேற்பறையில் அமர்ந்து இருந்தனர்.

"மேடம்! உங்களையெல்லாம் ரொம்ப நேரம் காக்க வச்சுட்டோம். ஸாரி. கொஞ்ச நேரத்தில் போய்விடலாம். பாஸ் அப்பாய்ண்ட்மெண்ட்டில் சைன் போட்டதும் வாங்கிக் கொண்டு செல்லுங்கள். அடுத்த வாரம் நீங்க வந்து ஜாய்ன் பண்ணிடலாம். எங்க வரணும்னு உங்களுக்கு லெட்டர் வரும்" என்றவன் தொடர்ந்து,

"எல்லாருக்கும் ரொம்ப பசியாய் இருக்கும். இப்ப ஜூஸ் சாப்பிடுங்க" என ப்யூன் பெரிய கண்ணாடி டம்ளர்களில் ஜூஸை கொண்டு வந்து கொடுத்தான். அவர்கள் இருவரும் சென்று விட அனைவரும் ஜூஸை பருக ஆரம்பித்தனர்.

வந்தனாவிற்கு ஏனோ பெரியம்மாவின் நினைவு வந்தது. வாரா வாரம் வெள்ளிக்கிழமை வந்தனாவிற்காக

பெரியம்மா 'சந்தோஷி மாதா' விரதம் இருந்து வந்தாள். அன்றைக்கு புளிப்பான பொருள்களை சமைக்கவும் மாட்டாள். சாப்பிடவும் மாட்டாள்.

வீட்டில் அனைவருக்கும் மோர், தயிர், ஜூஸ், புளிப்பு மிட்டாய் கூட தரமாட்டாள். ஏன் பழங்களை கூட சாப்பிட அனுமதிக்க மாட்டாள்.

அன்றைக்கு அனைவருக்கும் பொரிச்ச குழம்பு, தேங்காய் சாதம், சர்க்கரைப் பொங்கல் தான். எனவே கையில் எடுத்தவள், அதை குடிக்காமல், மற்றவருக்கும் கொடுக்கக் கூடாதே என்ற எண்ணத்தில் ப்ளெஷ் அவுட்டில் ஊற்ற பின்புறம் இருந்த பாத்ரூமை தேடிப் போனாள். அப்போது தான் கவனித்தாள்; வாசல் கதவு வெளியில் பூட்டப்பட்டிருந்தது.

இயற்கையாகவே பெண்களுக்கு சூட்சும அறிவு உண்டு. அதுவும் வந்தனா மாதிரி பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டு போராடி ஜெயித்துக் கொண்டிருக்கும் பெண்ணிற்கு அது சற்று அதிகமாகவே இருந்தது.

ஏதோ தோன்ற ஜூஸை முகர்ந்து பார்த்தாள். அதன் மணம் வித்தியாசமாய் இருந்தது. அதை அவசரமாக டாய்லெட்டில் ஊற்றி விட்டு, டம்ளருடன் வரவேற்பறைக்குச் சென்றாள்.

'மற்ற பெண்களுக்கும் சொல்லி எச்சரிக்க வேண்டும். நாங்கள் ஐந்து பெண்கள் இருக்கிறோம். அவர்கள் ஏதாவது தப்பு எண்ணத்துடன் இருந்தால்... இருந்தாலென்ன? இருக்கும் போல இருக்கிறதே!'

எங்கள் எல்லோருடைய புகைப்படத்தையும் பார்த்து தான் நேர்முகத் தேர்விற்கே அழைத்து இருக்கிறார்கள்.

அதுவும் தனியான ஒரு இடத்தில்.. இன்டர்வியூ நட
பதே வெளியே தெரியாமல்... அப்புறம் இங்கு இருக்கு
அலுவலக அமைப்புக்கு ஒவ்வாத விஷயங்கள்.

வேண்டுமென்றே தாமதிக்க வைத்து, ஜூஸ் கொடுத்து,
கதவை வெளியில் பூட்டி எங்கு சென்று இருப்பார்கள்?
மதிய உணவை முடித்துக் கொண்டு வரவா? அல்லது
வேறு ஏதாவது விஷயத்திற்காகவா?

மற்றவர்களுடன் கலந்து ஆலோசித்து ஏதாவது செய்ய
லாம்!

அவள் அங்கே சென்ற பொழுது அவர்களின் நிலைமை
அவளை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. நால்வரும் இரு
கையில் மயங்கி சரிந்து இருந்தனர். அனைவரையும்
உலுக்கிப் பார்த்தாள். முகத்தில் தண்ணீர் அடித்து
பார்த்தாள்.

ஆனால் ஒருவரும் எழுந்திருப்பதாய் தெரியவில்லை.
வேறு ஒருவரின் உதவியுடன் தான் எதுவும் செய்ய
முடியும் என அவளுக்கு புரிந்தது.

'ஆட்டோ டிரைவரின் போன் நம்பர் இருந்தாலாவது
அவனைக் கூப்பிடலாம். ஆனால்... ஆகா! எச்சரிக்கை
யாக இருக்க மறந்து விட்டோமே?' என அவள் யோசித்த
பொழுதே வாசலில் பூட்டைத் திறக்கும் ஓசைக் கேட்
டது.

தனது கைப்பையை எடுத்துக் கொண்டு சட்டென்ற
பின்பக்கம் விரைந்தாள்.

கையில் கேமிராவுடன் ஒருவன் மற்ற இருவருடன்
வந்தான்.

''சே! நம்ம ஆள் இல்லாமல் எவ்வளவு கஷ்டமாய்
போயிடுச்சு! கருபா இருந்திருந்தால் இந்நேரம் வேலை
முடிந்திருக்கும். அவன் ஆக்ஸிடெண்டில் மாட்டிக்
கொண்டு ஆஸ்பத்திரியில் கிடக்கிறான். இவனை பிடிப்ப
தற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.''

''விடுடா! அதுதான் ஆள் வந்தாகி விட்டதே! பின்
ஏன் புலம்புகிறாய்? என்ன நேரம் கொஞ்சம் அதிகமாகி
விட்டது. மாலை 6 மணி எல்லாம் ஒன்றுமில்லை. இது
ரொம்பவே வசதியான நேரம் தான்.

இந்த முறை அழகான பசுங்கிளிகள் எல்லாம் மாட்டிக்
கொண்டு இருக்கின்றன. அதுவும் அந்த சிகப்பு சுடிதார்
என்னமாய் இருக்கிறாள்? போட்டோவை விட நேரில்
சும்மா அம்சம்டா! இனி இவர்கள் நமக்கு பணம் காய்க்
கும் மரங்கள். ஆயுசுக்கும் நம் அடிமை தான்; மிரட்டியே
எதையும் சாதிக்கலாம்.''

உள்ளே சென்றவன், ''ஏய் எங்கேடா? அந்த சிவப்பு
சுடிதாரை மட்டும் காணோம்?'' என அலறினான்.

''எங்கேயாவது மயங்கி கிடப்பாள்டா; நல்லா பாரு.
இந்த முறை கொஞ்சம் அதிகமாகவே மயக்க மருந்தை
கலந்து இருக்கிறேன். காலை வரை எவளும் எழுந்திருக்க
மாட்டாள்.''

''இவ்வளவு அலட்சியமாய் இருக்காதே! நாம் எப்
பொழுதும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். ஜாக்
கிரதை உணர்வு இல்லாவிட்டால் இந்த மாதிரி தொழி
லில் பணம் சம்பாதிக்க முடியாது. கம்பி எண்ண வேண்
டும். முதலில் அவளைத் தேடு. வெளியில் ஓடியிருக்கப்
போகிறாள்.''

''வெளியில் ஓடி அவளால் என்ன செய்ய முடியும்? போலீஸ் கம்ப்ளைன்ட் கூட அவளால் கொடுக்க முடியாது. யாரும் அவள் புகாரை எடுக்க மாட்டார்கள். நமது சதி மிகவும் வலிமையானது; மிகவும் விரிவானது என புரிந்து கொள்வாள்.''

எல்லாவற்றையும் வந்தனா கேட்டுக் கொண்டு தான் இருந்தாள்.

'இங்கிருந்து தப்ப வேண்டும். மற்ற பெண்களையும் காப்பாற்ற வேண்டும். அவள் தப்புவதே பெரிய காரியமாய் இருக்கும் போலிருக்கிறதே? அவர்கள் வீடு முழுவதும் அவளைத் தேட ஆரம்பித்து விட்டார்கள்.'

''வாசல் கதவை பூட்டுடா முட்டாளே! அவள் இங்கிருந்து தப்பி விடப் போகிறாள். இந்தப் பெண்களின் மயக்கத்தை தெளிவிக்க முயன்று இருப்பாள் போலிருக்கிறது. எல்லார் முகத்திலும் தண்ணீர் அடித்து இருக்கிறாள். இவர்களை விட்டு விட்டு அவள் மட்டும் செல்ல மாட்டாள். அவள் மயக்க மருந்து ஜூஸை அருந்தவில்லை. அவள் எனக்கு உடனே வேண்டும். ஓடு, ஓடு! தேடு, தேடு!''

'ம்ஹூம்! துரிதமாய் செயல்பட வேண்டும். இல்லாவிட்டால் அவளும் மாட்டிக் கொள்வாள். யார் உதவியாவது தேவை? யார்... யாரிடம் கேட்பது?

சித்தார்த்... அவரிடம் கேட்கலாமா? அவர் இருப்பது எங்கோ வட மாநிலத்தில்? இங்கு என்ன செய்ய முடியும்? இருக்கட்டும்! அவர் அதிகாரம் எவ்வளவு தூரம் செல்லும்? எதற்கும் முயற்சிக்கலாம்.'

அலைபேசியை எடுத்து விறுவிறு என அவன் எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பினாள்.

வாசல் கதவைப் பூட்டி விட்டு பாத்ரூம் அருகில் அவளைத் தேடி வந்தவன் வந்துவிட்டான். கதவை திறந்து உள்ளே எட்டிப் பார்க்க அவனை கழுத்தில் அடித்து உள்ளே தள்ளி கதவைப் பூட்டினாள். கதவை ஒங்கி அவன் உதைக்க... சத்தம் கேட்டு உள்ளிருந்தவன் வருவதற்குள் வாசலை நோக்கி ஓடினாள்.

சாவியை அதிலேயே விட்டுச் சென்றிருந்தான். வேகமாய் திறந்து கொண்டு ஓடினாள். பின்னாலேயே துரத்திக் கொண்டு வந்தனர். வேகமாக ஓடி தப்பிப்பதை விட நான்கு பெண்களை காப்பாற்ற வேண்டுமே என்ற உணர்வு அவளை அவர்களை எதிர்த்து நின்று போராடத் தூண்டியது.

என்.சி.சி பயிற்சி துணிவையும், வலிமையையும் அவளுக்கு கொடுத்து இருந்தது. முன்னால் வந்தவனுக்கு சரியான அடி விழுந்தது. போராடும் பொழுது சற்று புத்தி சாலித்தனத்தையும் பயன்படுத்தினாள்.

தாக்கியவன் கண்களை கூரிய நகத்தால் குத்தினாள். பின் அவன் எங்கே தாக்குவது? தன்னந்தனியான பெண்ணால் இரண்டு ஆண்களை எதிர்த்து போராடுவது நிஜ வாழ்க்கையில் முடிகின்ற காரியம் அல்லவே? ஆள் நடமாட்டம் உள்ள இடத்திற்குப் போனால் உதவிக்கு யாரையும் கூப்பிடலாம் என அவள் எண்ணமிடும் பொழுதே ஆட்டோ ஒன்று வந்தது.

அவள் அதனருகே ஓடினாள். அவளை இறக்கி விட்ட அதே ஆட்டோ டிரைவர்தான். அவனுக்கு ஏதோ சந்தேகம் உறுத்திக் கொண்டிருக்கவே எதற்கும் ஒருமுறை பார்க்கலாம் என அங்கு வந்தான். அவளைப் பார்த்ததும் தான்

சந்தேகப்பட்டது சரிதான் என அவனுக்கு புரிந்து போய்விட்டது.

இறங்கி வந்தவன் பின்னால் ஓடி வந்த அடியாட்களைப் பார்த்ததும், ''அம்மா சீக்கிரம் வந்து வண்டியில் ஏறுங்கள். இது பெரிய கும்பல், இவர்களை எதிர்த்து நம்மால் சண்டை போட முடியாது. போலீஸ் துணையின்றி எதுவும் செய்ய முடியாது.''

ஆட்டோவில் ஏறியவள் பின்னால் திரும்பிப் பார்த்தாள்.

''போன் செய்து அடியாட்களை கூப்பிட்டு இருப்பான் போலிருக்கிறது. அங்கே நான்கு பெண்கள் மாட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.''

''நம்மை போலீஸ் ஸ்டேஷன் மட்டுமல்ல. வேறு எங்குமே போக விட மாட்டார்கள் போலிருக்கிறது. அங்கே பாருங்கள். லாரி மூலம் நம்மை சுற்றி வளைக்க பார்க்கிறார்கள்.''

ஆனாலும் சுலபமாய் அந்த ஆட்டோ டிரைவர் விட்டுக் கொடுப்பதாய் இல்லை. சந்திலும், பொந்திலும், இண்டு, இடுக்கிலும் வளைந்து நுழைந்து தப்பிக்க முயற்சி செய்தான். ஆனாலும் ஒரு சமயத்தில் மாட்டிக் கொண்டார்கள். அவர்கள் அவனையும், அவளையும் சூழ்ந்த சமயத்தில் சுற்றி போலீஸ் ஜீப் வந்து நின்றது.

உரத்த குரலில் போலீஸ் அதிகாரி எச்சரித்த பிறகு தான், அடியாட்களுக்கு அவர்கள் தங்களுக்கு உதவ வரவில்லை; கைது செய்ய வந்திருக்கிறார்கள் எனப் புரிந்தது.

ஆனாலும் அவர்களால் தப்ப முடியவில்லை. கூண்டோடு கைலாசம் என்பதாய் வசமாய் மிகப் பெரிய மோசடிக் கும்பலே மாட்டியது.

நான்கு பெண்களையும் மருத்துவர் உதவியுடன் மயக்கம் தெளிவித்தனர்.

ஆட்டோ டிரைவரையும், அவளையும் போலீஸ் உயர் அதிகாரி பாராட்டி ஸ்டேஷனுக்கு கம்ப்ளெய்ண்ட் எழுதிக் கொடுக்க கூட்டிச் சென்றார்.

ஆபத்தான சமயத்தில் எப்படி போலீஸ் வந்தது? என அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

காவல் நிலையம் சென்ற பொழுது இனிய ஆச்சர்யம் காத்திருந்தது.

அங்கே சித்தார்த் நின்று கொண்டிருந்தான்.



8

சித்தார்த்தைப் பார்த்ததும் வழி தவறிய குழந்தை தாயைக் கண்டதும் பயம் விலகி நிம்மதியுறுவது போல் இருந்தது வந்தனாவுக்கு.

ஓடிப்போய் அவன் கரங்களில் சரண் புக வேண்டும் போல் தோன்றிற்று.

அவனுக்கும் அப்படித்தான் இருந்தது போல கைகளை இறுகக் கட்டிக் கொண்டு அவளையே விழியகற்றாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

கலைந்த தலை: புழுதிப் படிந்த பாதங்கள்: கலை புற்றிருந்த கண்கள்... அவள் எந்த அளவிற்கு போரா யிருப்பாள் என பறைச்சாற்றின.

மிகவும் சோர்வு உற்று இருந்தவளை நெருங்கி வந்த காரில் போய் அமரச் சொன்னான்.

ஆட்டோ டிரைவரை மிகவும் பாராட்டி விட்டு, அவர ஆட்டோ மிகவும் சேதமுற்று இருந்ததை கவனித்து த சொந்தப் பணத்தில் ரூபாய் இருபத்தைந்தாயிரத்திற் செக் எழுதிக் கொடுத்தான்.

பின் கராஜில் வண்டியை விட்டு சரி செய்ய சொல்லி விட்டு மெக்கானிக்கிடம் கூறி பில்லை தன் முகவரிக் அனுப்பி விடச் சொன்னான்.

மாட்டிக் கொண்ட பெண்களின் பெயர்கள் வெ வராதவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ள சொல்லி விட்டு வந்தனாவுடன் புறப்பட்டான்.

முதலில் வந்தனாவிடம் இருந்து குறுஞ்செய் வந்ததும் மிகவும் பதறிப் போனான். சுநீல் அவனுட தான் இருந்தான். விமான நிலையம் சென்று கொ டிருந்த பொழுதுதான் அவளது செய்தி வந்தது.

ரமாவின் மனக்குழப்பத்தை தீர்த்து அவளை ப ளிக்கு அனுப்பிய பிறகு ஜானகியையும் திருச்சி அனுப்பி விட்டு அவன் வேலைக்காக ஊருக்கு பு பட்ட பொழுதுதான் ''ஆபத்து: இன்டர்வியூ: காப்பா றுங்கள்'' என்று ஒசூர் அலுவலக முகவரியை உடன் த பாஷையில் தகவல் அனுப்பியிருந்தாள்.

அதுவே அவன் பதற போதுமானதாய் இருந்த பயணத்தை தள்ளிப் போட்டு விட்டு சுநீலுடன் கா

ஓசூர் விரைந்தான். செல்லும் பொழுதே கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவரை தொடர்பு கொண்டு விவரம் சொல்ல அவர் உடனே ஓசூர் காவல் நிலைய மேலதிகாரிக்கு உத்தரவிட சரியான சமயத்தில் வந்தனா விற்கு உதவி கிடைத்து அவளும், மற்றவர்களும் தப்பித் தார்கள்.

அந்தக் கும்பலுடன் அடுத்த மாநிலங்களில் தொடர்பு உடையவர்களையும் பிடிக்க தகவல் அனுப்பப்பட்டது. கிருஷ்ணகிரி கலெக்டருக்கு நன்றி தெரிவித்து விட்டு கிளம்பினர்.

சுநீல் கார் ஓட்ட, சித்தார்த் முன்புறம் அமர்ந்தான். வந்தனா பின்சீட்டில் கண்ணை மூடிக் கொண்டு சாய்ந்திருந்தாள். சுநீல் பிரபல ஹோட்டல் முன் காரை நிறுத்தினான். சித்தார்த் இறங்கி வந்து பின் கதவை திறந்துவிட்டான்.

''மகிம்மா, கீழே இறங்கு'' சட்டென கண்விழித்தாள்.

புன்னகையுடன் கதவைத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்துக் கூப்பிட்டவன் அவள் கீழே இறங்க உதவியாய் கையை நீட்டினான்.

ஆனால் அதற்குள் மறுபுறம் கதவைத் திறந்து அவள் கீழே இறங்கி விட்டாள்.

அவன் ஏமாற்றத்தை அவளது சிறு புன்னகை ஈடு செய்தது.

''முகத்தை கழுவிக் கொண்டு வா. சாப்பிடலாம்.''

அவள் போய் முகம் கழுவி தலையை ஒடுக்கி வந்து அமர்ந்தாள்.

அதற்குள் சாப்பிட உணவு வகைகளை ஆர்டர் செய்து இருந்தான்.

'காளான் சூப்' சாப்பிட்டதும் பஞ்சு அடைத்தார் போல் இருந்த காது சரியானது. பசி வேகத்தில் விடுவிடென நான்கு இட்லிகளை சாப்பிட்டு முடித்துவிட்டாள். பின் சூடான பாதாம் பால் வந்தது.

'காலையில் இருந்தே சாப்பிட்டு இருக்க மாட்டாள் போல!'

உண்மையில் அவள் காலையில் சாப்பிட்டது ரெண்டு பிரட் துண்டுகளும் ஜாமும் தான். அவளிடம் அவனுக்கு பேச வேண்டியது நிறைய இருந்தது. ஆனால் சுநீல் முன்னிலையில் அவளை சங்கடப்படுத்தும் கேள்விகளை அவன் கேட்க விரும்பவில்லை. சுநீல் எழுந்து வெளியே சென்றான். போகும் பொழுது குனிந்து அவனிடம் ஏதோ சொல்லிவிட்டு சென்றான்.

''வா மகி!'' என அவளை கைப்பற்றி ஹோட்டலின் முன்புறம் அமைந்திருந்த பூங்காவின் நிழற்குடை மேசைக்கு அழைத்துச் சென்றான்.

''இன்னும் சிறிது நேரத்தில் பெங்களூரு விமான நிலையம் நான் செல்ல வேண்டும்.''

''நீங்கள் செல்லுங்கள்; நான் ஊருக்கு போய் கொள்கிறேன்.''

''நீ வேலைக்கு வர வேண்டிய அவசியம் என்ன வந்தது? உன் கலெக்டர் கனவு என்ன ஆனது? முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சிப் பெற்றதே போதும் என தூக்கி எறிந்து விட்டாயா?''

''இல்லையே! என் இலட்சியத்தில் வெற்றி பெறத் தான் நான் வேலை தேடுவதே! எத்தனை கனவுகளுடன் வந்தேன். எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகி விட்டது. உழைத்து சம்பாதித்த பணத்தில் நோமுகத் தேர்விற்கு வந்தேன்; ஒரு மோசடி கும்பலை கண்டுபிடிக்க அது பயன்பட்டதே என ஆறுதல் அடைய வேண்டியது தான்.''

''என்ன மகி? ஏன் அமைதியாக இருக்கிறாய்? மெயின் தேர்வுக்கு நீ தயாராகவில்லையா?''

''நன்றாக தயாராகிக் கொண்டிருக்கிறேன்.''

''பின் ஏன் இங்கே வேலை தேடி வந்தாய்? உன் வீட்டினருக்கு தெரியுமா? என்ன பிரச்சனை? கனகவல்லி அத்தையிடம் கேட்கட்டுமா?''

''வேண்டாம். அவர்கள் பிரச்சனையே அங்கே பெரிதாக இருக்கிறது. வெளிநாடு செல்ல.. அண்ணிக்கு உடல் நலம் சரியில்லாததால்... அரைகுறை மனதோடு கிளம்பிக் கொண்டிருக்கிறார்கள். எந்த காரணமும் இல்லை; நான் என் சொந்தப் பணத்தில் படிக்க விரும்புகிறேன். அவ்வளவு தான்!''

''நல்ல கொள்கை. ஆனால் மெயின் தேர்வு முடியும் வரை நீ படிப்பில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. இரட்டைக் குதிரை சவாரி... இரண்டு திசைகளில் செய்ய முடியாது. கடினமான தேர்வை முழு முயற்சி, கவனத்துடன் அணுக வேண்டும். உன் அம்மா, அப்பா பணம் வேண்டாம் என்றால் கல்விக் கடனுக்கு நான் ஏற்பாடு செய்கிறேன். உன்னால் தேர்வில் வெற்றிப் பெற்று கடனை அடைக்க முடியும் என்று நம்பிக்கை இருந்தால்...

''கண்டிப்பாய் என்னால் முடியும்.''

''அப்ப சரி! பணத்திற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்.''

''கடன் தானே?''

''நிச்சயமாய். நீ எனக்கொரு வாக்கு கொடு.''

''என்ன?''

''என்மேல் என்றைக்கும் நம்பிக்கை இருக்கும் தானே?''

''என்னை விட உங்கள் மேல் நம்பிக்கை அதிகம்; போதுமா? இல்லாவிட்டால் ஆபத்து நேரத்தில் உங்கள் நினைவு வந்திருக்குமா? உங்களுக்கு எப்படி நன்றி தெரிவிப்பது?''

''நமக்குள் நன்றி வேண்டாம். சரி கிளம்பு. சுனீல் பஸ் டிக்கெட்டுடன் வந்துவிட்டான். மனமறிந்த தோழன் அவன். பத்திரமாக போய் வா. போனதும் போன் செய்.''

அவளை பேருந்தில் ஏற்றிவிட்டு கையசைத்து சுதீலுடன், சித்தார்த் விமானநிலையம் சென்றான். அவள் கல்லூரி படிக்கும் காலத்தில் படிப்பு செலவிற்கு உதவித் தொகை கிடைத்ததாலும், பெரியம்மாவின் உதவியாலும், பள்ளிக் குழந்தைகளுக்கு டியூசன் எடுத்ததாலும் எந்த விதமான சிரமமும் இல்லாமல் போய்விட்டது.

சித்தார்த் என்ன சொன்னாலும் அவளுக்கு அப்படியே நம்பத் தோன்றியது. கல்லூரி படிப்பை முடித்த பிறகு ஐ.ஏ.எஸ் கோச்சிங்கிற்கு எப்படி கல்விக் கடன் கிடைக்கும்? என்ற கேள்வி பேருந்தில் வரும் பொழுது தான் அவளுக்கு யோசனையில் உதித்தது.

'இருக்கட்டும்! அவர் பணத்தை கல்விக்கடன் என்ற பெயரில் தருகிறார். அப்படியே இருந்தாலும் நான்

அதை திருப்பிக் கொடுத்து விடுவேன். அது கடனாகவே இருக்கட்டும்' என எண்ணிக் கொண்டாள்.

வீட்டிற்கு சென்று நடந்ததை கனகம் பெரியம்மாவிடம் கூறிய பொழுது அவள் அப்படியே பதறிப் போனாள். அவள் கவலை கூடிப் போனது கண்களிலேயே தெரிந்தது.

''நல்லவேளை சித்தார்த் வந்து சேர்ந்தான். கடவுள் சரியான நேரத்தில் அவனை அனுப்பிவிட்டார். உதவி கிடைக்கவில்லை என்றால் உன் நிலைமை என்னவாகி இருக்கும்? நினைத்தாலே... உடம்பே நடுங்குகிறது.''

''பெரியம்மா! அதுதான் ஒன்றும் நடக்கவில்லையே! துன்பங்கள் தான் நம்மை வலிமை உள்ளவர்களாக மாற்றுகின்றன. அன்றாட வாழ்க்கையில் நாம் எத்தனையோ பேர்களை கடந்து செல்கிறோம். ஆனால் ஒரு சிலரைத் தான் திரும்பிப் பார்க்கிறோம். கடந்து செல்பவர்களை ஒரு கணம் திரும்பிப் பார்க்க வைப்பதில்தான் நாம் சாதித்த செயல்கள் இருக்கின்றன.

பூமி எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் சுழன்று கொண்டிருப்பது போல நாமும் இயங்கிக் கொண்டிருப்போம். நற்செயல்களுக்கான விதைகளை விதைத்துக் கொண்டே செல்வோம். எதையும் எதிர்பார்க்காமல் நல்ல காரியங்கள் செய்வது அடுத்த தலைமுறைக்கு இயற்கையை பாதுகாப்பதாக அர்த்தம். நான் மற்றவர்களுக்கு உதவ எண்ணினேன்;

எனக்கு உதவி தன்னாலே கிடைத்தது. நாம் செய்கின்ற செயல்கள் சுழலும் சக்கரம் போல நமக்கு திரும்பி வரும். அது நல்லதாக இருந்தாலும் சரி, தீயதாக இருந்தாலும்

சரி. பறவைகள் பழம் சாப்பிட்டு எத்தனை வனங்களை உருவாக்கிச் செல்கின்றன. நாமும் நம்மால் முடிந்த வற்றை விதைப்போம்; அவை விருட்சமாகட்டும். ஒரு கவிதை சொல்லட்டுமா?

''விதியெனும் காரணம்
சொல்லி சளைத்த
மனதிற்கு உரக்கச்
சொல்வோம்!
வனத்தை உருவாக்கிய
எந்த பறவையும் விதியை
காரணம் காட்டவில்லை!
அலை கடலில் வாழும்
எந்த மீனும் தன் விதியை
நொந்ததில்லை!
புதைந்து போன எந்த
விலங்கும்
விதியைக் கண்டு
அஞ்சியதில்லை!
ஆனால் நீ மட்டும்
ஏன்
விதிவிலக்காகாமல்
வீழ்ச்சியுற
எண்ணுகிறாய்!
துணிந்து நில்

தொடர்ந்து செல்
நாளை உனதே!''

''கண்ணே! உன்னை தூண்டிவிடும் கோல் மட்டும் இருந்திருந்தால் நீ எங்கோ சென்றிருப்பாய். சித்தார்த் உனக்கு தூண்டுகோலாய் இருந்தால் எனக்கு மிகவும் சந்தோஷம் தான்.

அவன் மிகவும் அருமையான பிள்ளை; வீட்டில் எவ்வளவு வசதியிருந்தாலும் தன் சொந்தக்காலில் நிற்க வேண்டும்; சமுதாயத்திற்கு உதவ வேண்டும் என்று இரண்டு பிள்ளைகளுமே நன்றாக படித்தார்கள். அவர்கள் அப்பா படிப்பிற்காக நன்கொடை, சிபாரிசு எதுவும் பிடிக்கவில்லை.

சொந்த உழைப்பால் உயர்ந்தார்கள். அதனால் சொந்த செலவில் பெரிய மருத்துவமனையை கட்டிக் கொடுத்து உன் விருப்பப்படி சேவை செய் என்று சொல்லி விட்டார்.

சின்னவன் அப்பாவிடம் எதையுமே எதிர்பார்ப்பதில்லை. அவன் மேல் எல்லாருக்கும் ரொம்ப பாசம். அவன் இன்னும் கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லை என்று அவன் அம்மாவிற்கு தான் ரொம்ப வருத்தம். என்றைக்குந்தான் அவன் மனமிரங்குமோ? என காத்திருக்கிறார்கள்.''

வந்தனாவின் முகம் சிவந்ததை கனகவல்லி கவனிக்க வில்லை.

''அவன் மனசு எதில் மாட்டிக் கொள்ளப் போகிறதோ? எந்த மகராசிக்கு கொடுத்து வைத்திருக்கிறதோ? அவன் மனசுக்கு பிடித்தவள் அமைய வேண்டும்.

அப்போதுதான் அந்த பிள்ளையின் வாழ்க்கை நன்றாக யிருக்கும். மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பார்கள். உமா-மகேஷிற்கு அமைந்தது போல இவனுக்கும் நல்ல மனைவி அமைந்து விட்டால் போதும் என அவன் அம்மா நினைக்கிறாங்க.''

வந்தனாவின் முகம் மலர்ந்து ரோஜாப் பூவாய் மிளிர்ந்தது.

சித்தார்த்திடம் நிறைய பேசிப் பழகவில்லை: இருந்தாலும் சந்தித்த தருணங்களை சிந்திக்கின்ற வேளையில் மனம் முழுசும் அலாதியான ஆனந்தத்தால் நிறைந்திருந்தது. அதுவும் காவல்நிலையத்தில் அவன் உருகி நின்ற நேரத்தில்... அவளுக்காகவே அவன் இருப்பது போன்ற நிம்மதி வந்தது.

வார்த்தைகளில் வெளிப்படாத நேசம் ஒவ்வொரு செயலிலும் அன்பை உணர்த்திக் கொண்டிருந்தது. அன்பு செய்வது ஆனந்தம் தான்: ஆனால் அன்பு செய்யப் படுவது அதை விட பேரானந்தத்தை தருவதாக இருந்தது.

உண்மையாலுமே சித்தார்த்தின் அன்பு தனக்கு உரியது தானா? மலைக்கும், மடுவுக்கும் உள்ள வேறுபாட்டை அவள் அறியாதவளா? அவன் குடும்பம் அவளை ஏற்றுக் கொள்ளுமா?

சீ! சீ! என்ன நினைப்பு இது? அவள் கனவு இலட்சியத்தை விட்டு தடம் புரளலாமா? அவள் இலட்சியத்தில் வென்றாலே எல்லாமே கிடைத்த மாதிரி தானே?

சித்தார்த்தை மணப்பதில் கூட இடையூறுகள் அகன்று விடுமே! வேறு ஏதும் பிரச்சனைகள் இராதா? கு!

இப்பொழுதே அதைப் பற்றி கவலைப்படுவானேன்? முதலில் என் இலக்கை அடைய வேண்டும். பின் மற்றவற்றை யோசிக்கலாம்.

முதல் செமஸ்ட்டரில் கோல்டு மெடல் வாங்கியாகி விட்டது. அடுத்த செமஸ்ட்டரில் அதை தவற விடாமல் தொடர வேண்டும். என் கனவு வெறும் வேலை சம்பந்தப்பட்ட கனவல்ல. ஒரு தலைமுறைத் தாண்டி பாரம்பரியமாய் வரலாறாய் பொற்காலமாய் விதைக்கப் பட வேண்டிய விஷயமல்லவா? செயல்கள் வரலாற்றில் பேசப்பட வேண்டும்;

சமுதாயத்தில் வளர்ச்சியை முன்னேற்றத்தை உருவாக்க வேண்டும். அதை செய்ய எந்த தியாகமும் அவள் செய்வாள்.

கல்லூரியில் N.C.C கேம்ப்பிற்கு மலைப்பயணம் மேற்கொண்டார்கள். வந்தனாவிற்கு காண்டேகர் கதாநாயகி போல் மலைப்பயணம் என்றால் மிகவும் பிடிக்கும். மலையேற்றத்திற்கு விருப்பம் மட்டும் இருந்தால் போதாது. கடுமையான உடற்பயிற்சியும், மனப்பக்குவமும் தேவை. இமயமலையின் சிகரங்களில் ஏறுகின்ற ஷெர்பாக்கள் மிகுந்த தைரியசாலிகளாகவும், அயராத உழைப்பாளிகளாகவும் இருப்பார்கள்.

டென்சிங்கும் ஒரு ஷெர்பா தான். அவர் வாழ்க்கை வரலாற்றைப் படித்த பொழுதே தானும் அதே போல வாழ்க்கையின் உயரத்தை தொட வேண்டும் என்று உறுதி கொண்டாள். ஒரு முறை எவரெஸ்ட் மலை ஏறுவதற்கு ஒரு ஆளுக்கு குறைந்த பட்சம் 80 ஆயிரம் டாலர் செலவாகும்.

இந்திய மதிப்பில் 44 இலட்ச ரூபாய் ஆகும். பணம் மட்டும் இருந்தால் போதாது. எவரெஸ்ட்டில் ஏற நேபாள அரசிடம் அனுமதி வாங்க வேண்டும். தற்போது அனுமதி கேட்டு இரண்டு ஆயிரம் பேர் காத்திருக்கிறார்கள்.

அப்படியிருக்கையில் கல்லூரிகளில் கல்வி அறிவை வளர்ப்பதுடன் ஆற்றலை வளர்ப்பதாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நெருக்கடியான சமயங்களை சமாளிக்க மாணவர்களுக்கு சில பயிற்சிகளை தருகின்றனர். அதற்காகவே ட்ரக்கிங் எனப்படும் மலையேற்றப் பயிற்சியும் தரப்படுகிறது.

14 முதல் 25 வயதுக்கு உட்பட்ட இளைஞர்களின் ஆளுமைத் திறனை மேம்படுத்தவும், அவர்களுக்கு உரிய அங்கீகாரம் கொடுக்கவும் 'தி எடின்பர்க் அவார்ட் ஸ்கீம்' திட்டம் THE INTERNATIONAL AWARD FOR YOUNG PEOPLE - IAYP என்ற சர்வதேச விருது வழங்கி வருகிறது. விருது வாங்கும் நோக்கில் அவளது கல்லூரி பல சேவைகளை செய்து வருகிறது.

ஆதரவற்றோர் இல்லத்துக்கு சென்று மாணவிகள் அங்குள்ளவர்களுக்கு பல உதவிகள் செய்து இருக்கிறார்கள். உற்றார், உறவினர் இன்றி தனித்து இருக்கும் முதியவர்களிடம் அன்போடும், அக்கறையோடும் உரையாடியிருக்கிறார்கள்.

கண்தானம், உறுப்பு தானம், சாலையோர பாதுகாப்பு விதிகள், புற்றுநோய், தொற்றுநோய் விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தியிருக்கிறார்கள்.

சுற்றுப்புற சூழல் பேணல், மலைகளில் மரக்கன்றுகளை நடுதல் போன்ற பல பணிகளை செய்துக் கொண்டிருந்தனர்.

வந்தனா இது போன்ற பல பணிகளை முன்பே செய்து இருந்தாள். அதன் தொடர்ச்சியாக இங்கு வந்து செய்வதில் அவளுக்கு எந்தக் கஷ்டமும் இல்லை.

திருச்சிக்கு அருகிலிருந்த மலை கிராமத்திற்கு ஒரு வார கால பயணம் மேற்கொண்டனர். அங்கே மேலே செல்ல சரியான பாதை அமையவில்லை. கற்களும், முட்களும், புதர்ச்செடிகளும் மண்டியிருந்த பாதையில் மலைவாழ் மக்கள் சென்று வர மிகவும் சிரமப்பட்டனர். தங்கள் மலைப்பாதையை தாங்களே செப்பனிட முயன்று அப்பணியில் ஈடுபட்டனர்.

பல பேர் தொடர்ச்சியாக இடைவிடாமல் செய்து கொண்டிருந்தனர். என்.சி.சி. மாணவிகளும் அதில் கலந்து கொண்டனர். உத்வேகத்துடன் செய்யப்படும் எந்தப் பணியிலும் சோர்வு வராது. அப்படித்தான் இருந்தது வந்தனாவின் வேலை. அவள் தங்களுடன் இணைந்து இடைவிடாமல் பணிபுரிவதைக் கண்டு அந்த ஊர்மக்களுக்கு அவள் மேல் அன்பும், மரியாதையும் அதிகமானது.

அன்றைக்கு கிராமத்து பெண் ஒருத்தி தன் நான்கு வயது மகனுடன் சாலையை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தாள். வானம் இருண்டு கொண்டிருந்தது. எந்நேரத்திலும் மழை வரலாம் போன்ற அறிகுறி.

டெண்ட்டிற்கு திரும்ப ஒருங்கிணைப்பாளர் உத்திரவிட மாணவிகள் புறப்பட்டனர். அப்போது அந்த சம்பவம் நடந்தது. விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் மலையின் சரிவான பகுதிக்கு சென்றுவிட்டான்.

பதறிப்போய் தாய் அலற சிறுவன் பயந்து போய் கால் தடுமாறி ''அம்மா'' என அலறியவாறே கீழே விழுந்தான்.

வந்தனா அருகே ஓடினாள். கீழே அதல பாதாளம் மரங்கள் அடர்ந்து இருந்ததால் சிறுவனை மரக்கிளையில் மாட்டிக் கொண்டிருந்தான். சரியான பகுதியில் பற்றிக் கொண்டு இறங்குவதற்கு ஏந்த ஆதாரமும் இல்லை. என்ன செய்வது? என ஆளாளுக்கு தலித்துக் கொண்டிருந்தார்கள்.

மலைச்சரிவில் இறங்கும் கந்தப்பனும் மலை மேலே இருந்தான். ஆள் போய் அழைத்து வரும் வரையில் சிறுவனை அக்கிளை தாங்கிக் கொண்டிருக்குமா? குழந்தையோ பயத்தில் அழுதுக் கொண்டிருந்தது.

வானம் பொத்துக் கொண்டு மழை பெய்ய ஆரம்பித்தால் கற்களும், மண்ணும் அக்குழந்தை மேல் சரிந்து விழ ஆரம்பிக்கும். இதையும் தாண்டி பூச்சிப் பொட்டுகளின் அபாயம் வேறு இருந்தது.

வந்தனா ஒருங்கிணைப்பாளரான ஆசிரியையிடம் பேசினாள்.

ஆனால் அவர் தயங்க... இடுப்பில் உறுதியான கயிற்றைக் கட்டிக் கொண்டு மறுமுனையை எதிர்ப்புறம் மரத்தில் இணைத்து தன் தோழிகளிடம் கொடுத்துவிட்டு கீழே இறங்கினாள்.

சார்ஜ் செய்யப்பட்ட பேட்டரி லைட்டை தோழி ஒருத்தி அடிக்க மிக மிக கவனமாய் உத்தரவு கொடுத்துக் கொண்டே கயிறை தளர்த்த சொன்னாள்.

குழந்தையின் அருகே செல்லும் முன் அவன் பயத்தில் அசைந்தால் கீழே விழுந்து விடுவான் என்று இலாவகமாய் சற்று விலகி கொண்டு சென்ற கயிற்றில் அவனை தன்னுடன் பிணைத்துக் கட்டினாள்.

கிளையில் மாட்டியிருந்த சட்டையை வெட்டி கீழே விடுவித்தாள்.

கயிறை மேலே இழுக்கச் சொல்ல... மெல்ல மெல்ல மேலே உயரும் பொழுது கயிறு சற்று அறுந்து போக ஆரம்பித்ததை அதன் சத்தத்தில் உணர்ந்தாள்.

இன்னும் மேலே சில அடி தூரம் தான். குழந்தையை பிணைத்திருந்த கயிற்றின் மறுமுனையை தன்னிடம் இருந்து பிரித்து மேலே தூக்கிப் போட நழுவ விடாமல் அவள் தோழி ஒருத்தி பிடித்து மேலே இழுத்தாள்.

குழந்தை பத்திரமாக மேலே வந்தது. மழை கொட்ட ஆரம்பித்தது. இடியும், மின்னலும் அதிகமாகி முழங்கின. ஒருங்கிணைப்பாளர் அவளை சீக்கிரம் மேலே வரச் சொல்லி பதட்டத்துடன் கூப்பிட்டார். மழைத் தூறலும், மண் துகள்களும் அவள் கண்களில் விழுந்து அவளை செயல்பட விடாமல் தடுத்தன.

காலை எதன் மீதாவது ஊன்றி தான் எம்பி மேலே செல்ல வேண்டும். கயிறு இழுக்கும் வரை தாங்காது; அறுந்து போகும் நிலை உறுதியாகி இருந்தது.

மலையோ செங்குத்தாய் மழை ஈரத்தால் வழுக்குவதாய் இருந்தது! என்ன ஆனாலும் ஆகட்டும்; அதோ அந்தப் பாறையின் மீது கால் வைத்து எழும்ப வேண்டியது தான்! அவள் பாறையின் மீது கால் வைத்து எழும்பும் முன் ஒரு வினாடி கனிந்த புன்னகையுடன் சித்தார்த்தின் முகம் நினைவிலாடியது.

அவள் கால்களுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு வலிமை வந்ததோ? (ஹை ஜம்ப்) உயரத் தாண்டலில் புதிய சாதனையை உருவாக்குவது போல் உயர்ந்து

மலைப்பாதை நுனியில் கால் பதிக்க... கவனமுடன் அவளுடன் இணைந்து பணியாற்றிக் கொண்டிருந்த தோழிகள் அவளைப் பற்றி இழுத்து விட்டனர்.

அவள் உடலில் ஒரு சிலிர்ப்பு ஓடியது. குழந்தையின் தாய் அவள் காலிலேயே விழுந்து விட்டாள். ''அம்மா தாயே! எங்க குலதெய்வம் நீதானம்மா!''

மறுநாள் அவள் தீரச்செயல் பத்திரிகைகளில் வந்தது. நல்லவேளை அவளது புகைப்படத்தை அதில் போட வில்லை. 'இது என்ன வம்பாகி போயிற்று. இந்த செய்தி பெரியப்பாவின் கண்களில் பட்டால் பிரச்சனை வருமே?' என அஞ்சினாள்.

துன்பத்திலும் ஆறுதலாக அந்த செய்தி திருச்சி மாவட்ட பதிப்பில் மட்டுமே வெளிவந்து இருந்தது.

அவள் அலைபேசி அழைக்க எடுத்தாள்.

''ஹலோ'' என்றதும்,

''ஹாய் மகிம்மா! வாழ்த்துக்கள். செய்திப் படித்தேன். ஆனாலும் முன் எச்சரிக்கை. போதிய பாதுகாப்பு இல்லாமல் எந்த ஆபத்துதவி சாகசங்களிலும் இறங்கி விடாதே. டேக் கேர்.''

எத்தனை தான் தன்னம்பிக்கை வாய்ந்த பெண்ணாய் இருந்தாலும் யாராவது தூண்டுகோலாய் இருந்தால் இன்னும் மிளிர முடியும். சின்னதான பாராட்டு கூட அவர்களை மிக உயர்த்தும். அதுவும் பிரியமானவர்களிடம் இருந்து கிடைக்கும் தகுதியான பாராட்டு... நினைக்க முடியாத அளவிற்கு சாதிக்க வைக்கும்.

நாள் முழுவதும் பறப்பது போல் உணர்ந்தாள்; இரவெல்லாம் தூக்கம் மறந்து விழித்திருந்தாள். மனம்

நிறைய மகிழ்ச்சி நட்சத்திரங்கள் பூத்திருந்தன. நிலவின் குளிர்ச்சி இதயத்தில் நிறைந்திருந்தது. வாழ்வில் எதையும் எதிர்கொள்ளலாம் என்ற நம்பிக்கை வந்தது.

கல்லூரிக்கு களப்பணி முடித்து திரும்பினர். மற்றவர்கள் அனைவரும் திரண்டு நின்று கைத்தட்டி வரவேற்றனர். IAYP விருதுக்கு தங்கப்பதக்கம் பெற விண்ணப்பித்தனர். கனகவல்லிக்கு மிகவும் பெருமையாய் இருந்தது.

''உயிரை பொருட்படுத்தாது இன்னொரு உயிரை காப்பாற்றுவது பெரிய விஷயமல்லவா? இந்த மனிதநேயம் எல்லாருக்கும் வாய்த்துவிடுமா?'' எனக் கூறி அவளுக்கு கண்ணேறு கழித்தாள்.

ஊருக்கு கிளம்பும் முன் 'பழனி முருகனுக்கு பால் காவடி' எடுத்துவிட்டு செல்ல கனகவல்லி விரும்பினாள்.

நெடுநாளைய பிரார்த்தனை அது. மகன் நலமாக இருக்க வேண்டியிருந்தது. இன்றைக்குப் போகலாம்; நாளைக்கு போகலாம் என தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தது வருடங்களாகி கடந்து விட்டது. இனியாவது அதை நிறைவேற்றி விட வேண்டும் என தீர்மானித்தாள்.

மேலும் தன்னுடன் வந்தனாவையும் அழைத்துச் செல்ல விரும்பினாள். அவளுக்கு அந்த பழனி முருகன் கண் திறக்கட்டும்; வாழ்க்கை வளமாகட்டும்! ஒரு பாதுகாப்பான இடத்தை, நல்ல மனிதர்களை அவளுக்காக அனுப்பட்டும். தன்னுடைய உளப்பூர்வமான வேண்டுதல் அவளுக்கு பாதுகாப்பான வளையமாக அமையட்டும் என எண்ணி ஏற்பாடுகளை செய்தாள்.

பொன்னிறத்தில் ஜார்தோசி வேலைப்பாடு செய்த பருத்திப் புடவை சற்று மங்கியிருந்தாலும் அவளுக்கு

மிக அழகாய் இருந்தது. அவளிடம் அதிகமாய் ஆடைகள் இல்லையென்றாலும் இருக்கும் ஒன்றிரண்டும் ரசனைக் குரியதாய் இருந்தன.

கனகாவும் அவளுக்கு நான்கு ஐந்து உடைகள் வாங்கித் தந்திருந்தாள். எளிமையானவை தான்.

பட்டும், பனாரஸுமாய் இல்லாவிட்டாலும் மதிப்புத் தரும் ஆடைகளாய் இருந்தன. பருத்திப் புடவையும் தேர்ந்தெடுப்பவரின் ரசனையில், உடுத்தும் பாங்கில் உயர்வைத் தேடித் தரும். இயற்கை எழிலுக்கு பட்டும், வைரமும் எதற்கு? ரோஜாவுக்கு அலங்காரம் என்னத் திற்கு? பழனி மலைக்கு இருவரும் உற்சாகமாய் கிளம் பினர். விதி இழுக்கின்ற கயிறு தெரியாமல்!

கோவையில் பல இடங்களில் பெரியப்பா வலை வீசித் தேடியும் வந்தனாவை கண்டுபிடிக்க முடியவில்லை. சென்னையில் பணக்கார கிழவர் அவளைத் தேடிக் கொண்டிருந்தார். பல இடங்களுக்கு ஆட்களை அனுப் பியும் குண்டர் படை, தண்டல் படை சென்றும் எந்த விதமான துப்பும், உளவும் கிடைக்கவில்லை.

முதல் நிலைத் தேர்வு முடிவை கூட இணையதளத் தில் இருந்து அவள் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு இருந்ததால் வீட்டினரை தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பம் வரவில்லை.

''பாசக்கார பெரியம்மாவை கூட அருமை மகள் மறந்து விட்டாளா?'' என தன் மனைவியைச் சீண்டினார் பெரியப்பா. ஆனால் பெரியம்மாவோ, கல்லுளிமங்காத் தாவாக இருந்துவிட்டாள். இந்த சின்னவள் சத்யா வந் தனாவைப் பற்றி சிறுமூச்சு விட வேண்டுமே, ஆனாலும்

அவள் கிடைத்தால் என்ன? கிடைக்காவிட்டால் என்ன? எக்கேடோ கெட்டு ஒழியட்டும்.

கிழவனுக்கு நகை பணம் எதுவும் திருப்பி தர வேண் டாம். எல்லாம் வருமான வரி கணக்கில் வராத சொத்து தானே? கொஞ்ச நாள் பெண்ணைப்பார்த்து ஜொள்ளு விட்டதற்கோ, வரக் கூடாத வயதில் வந்த ஆசைக்கோ அபராதமாக இருக்கட்டும் என பெரியப்பா சும்மா இருந்து விட்டார்.

ஆனால் ஆசைப்பட்ட கிழவனால் சும்மா இருக்க முடியவில்லை. எங்கு தேடியும் கிடைக்காததால் கட வுளை நம்பும் நிலைக்கு சென்றார். 'என் அப்பன் முருகன் அவளை என் கண்ணில் காட்டுவான்' என நம்பிக்கை யோடு மனைவிகள் சகிதம் பழனிக்கு புறப்பட்டார்.

வந்தனாவும், கனகாவும் சென்ற அதே நாளில் தானா அவரும் செல்ல வேண்டும்? இதுதான் விதி என்பதோ? மலையேறும் முன் விநாயகரை வணங்கி பால்காவடி எடுக்க சென்ற பொழுது கனகாவிற்கு அலைபேசியில் செய்தி வந்தது.

அவள் நெருங்கிய உறவினர் இறந்துவிட்டதாக. பால்காவடி எடுக்க முடியாமல் தடை ஏற்பட்டதற்கு கனகா கலங்க... வந்தனா ஆறுதல் படுத்தினாள்.

''நீங்க கவலைப்படாதீங்க! நீங்க தான் பால்காவடி எடுக்கக் கூடாது. ஆனால் நான் எடுக்கலாம் இல்லையா? அண்ணனுக்காக வேண்டிக் கொண்டு பிராத்தனையை நான் நிறைவேற்றுகிறேன். எனக்கு துணையில்லையே என கவலைப்படாதீர்கள். அதுதான் வேலைக்காரப் பெண் சாந்தி துணையிருக்கிறாளே! எல்லாவற்றிற்கும்

மேலாக குன்றின் மேல் நின்றாடும் குமரக் கடவுள் யாமிருக்க பயமேன்? என அபயக்கரம் வேறு நீட்டுகிறார். அதனால் அஞ்சாதீர்கள். நான், சாந்தியுடன் மேலே சென்றுவிட்டு வருகிறேன்.''

''சரிம்மா. கவனமாக செல். நான் கீழே காத்திருக்கிறேன். கந்தன் கருணை இங்கேயே எனக்கு கிடைக்கும்.''

பால் காவடியுடன் அவள் செல்லும் பொழுது தான் ரோப் காரில் பயணித்த கிழவனார் பார்த்தார்.

''என் அம்முக்குட்டி அங்கே போகுது பார்! முருகன் அவளை என் கண்ணில் காட்டிவிட்டார். உடனே போய் அவளை பிடிக்க வேண்டும். இந்த முறை கை நழுவ விட்டு விடக்கூடாது. வண்டியை நிறுத்தச் சொல்.''

''சும்மாயிருங்க மாமா! இது நம்ம வீட்டுக்கார் இல்லே! எங்கே போயிடப் போறாள்? தலையிலே காவடியிருக்கு; மேலே தான் வந்தாகணும். அவளுக்கு முன்னாடி நாம் மேலே போய் நின்னு அவளை பிடிக்கலாம்.''

''ஆங்! சரியாய் சொன்னாய். கொஞ்சம் சீக்கிரம் போப்பா.''

''மாமா! நாம போறது ரோப்பு காரு. சித்த நேரம் வாயை மூடிக்கிட்டு இருங்க. அப்புறம் உங்க புத்திசாலித்தனம் எல்லாருக்கும் புரிஞ்சிடப் போகுது.''

ஆனாலும் கிழவர் பதறிக் கொண்டு தான் இருந்தார். மேலே போன வினாடி துள்ளிக் கொண்டு இறங்கி ஓடினார்.

''வாங்க மாமா! சாமியை கும்பிட்டு வந்துடலாம். அப்புறம் மேலே ஏற தாமதமாகும்.''

''சூ! தூ! நீ போய் சாமியை எனக்கும் சேத்துக் கும்பிடு. நான் போய் என் அம்முக்குட்டியை கைப்பிடிக்கிறேன்.''

எந்த வழியாக அவள் வருவாள் என மாறி மாறி இங்கும் அங்கும் அலைந்து மூச்சிரைத்தது. ''கண்மணி சீக்கிரம் வா. வயசான காலத்திலே ரொம்ப அலைய முடியலை.''

அவர் எண்ணிய வினாடி... அதோ.. அவளே... தான் அருகே ஓடினார்.

''என்ன கண்ணு! இப்படி தவிக்க விட்டுட்டு ஓடிப் போயிட்டாய்? உன்னை காணாமல் எப்படி துடிச்சுப் போயிட்டேன் தெரியுமா? இந்நேரம் நம்ம கல்யாணம் முடிஞ்சு ஆறுமாசம் ஓடியிருக்கும். ம்ஹூம்! எவ்வளவு நாள் வேஸ்ட்டா போயிடுச்சு?

ஆமாம்! நீ ஏன் இப்படி பழைய புடவையை கட்டிக் கொண்டு இருக்கிறாய். கையிலே கண்ணாடி வளையல். நீ ஊம்-னு ஒரு வார்த்தை சொல்லு; உன்னை தங்கமும், வைரமுமாய் இழைச்சுடுறேன். நடக்கவே வேண்டாம்; வேளைக்கொரு காரு...''

அவர் முடிக்கும் முன் சாமி கும்பிட்டு வந்த அவர் மனைவி குறுக்கிட்டாள்.

''பறக்கிறதுக்கு ப்ளேனு, படுக்கிறதுக்கு கப்பல்னு... அல்லாத்தையும் மாமா வாங்கிப்பிடுவாரு. உன்னை காணாமல் மாமா துரும்பாயிட்டாரு. மாமனை நம்பி நாங்க ஏற்கனவே ரெண்டு சம்சாரங்க கிடக்கிறோம்.

அவருக்கு ஏக்கத்திலே ஒண்ணுகிடக்க ஒண்ணு ஆயிடக் கூடாதுங்கிற கவலையிலே நாங்கக் கிடக்கிறோம்.

எங்க கவலையெல்லாம் தீர்த்து வச்சிடு மகராசி. முன் ஜென்மத்துல நீ செஞ்ச புண்ணியம் தான் மாமா உன் மேல ஆச வச்சது.

கண்ணுக்கு கண்ணாய் அவரை பார்த்துக்கிட நாங்க கிடக்கும் பொழுது உன் மேல பார்த்த வினாடியிலிருந்து ஆச வைத்து பைத்தியமானது நீ செஞ்ச புண்ணியம் இல்லாமல் வேறு என்னவாம்? என்னா இந்த முழி முழிக்கிறாய்?

கோயம்புத்தூரில் இருந்து உன்னைத் தேடி நாயாய் அலைகிறோம். வேலையை விட்டுப்புட்டு மாமா அலையாத இடமில்லே. சின்னவ தான் நல்லா அழகாய் இருக்காளே! அதோட திருப்தியடைஞ்சு அந்த கருமத்தை தேடுறது நிறுத்துங்க மாமான்னா கேட்கிறதில்லே; இப்பக் கூட உன்னைத் தேடி நேர்ந்துக்கிட்டு இங்கன மாமா மொட்டைப் போட வந்துருக்காரு.''

''ஆமாம்; வழுக்கைத் தலையிலே மொட்டைப் போட என்ன இருக்கு? நாலு முடி கூட தேறாது போலிருக்கு!'' என சாந்தி வந்தனாவிடம் முணுமுணுத்தாள்.

''சாமியக் கூட பாக்காம உன்னை பார்க்கத்தான் காத்துக்கிடக்கிறாரு. நீ வாயை திறந்து மாமா மனசை குளிர வையம்மா!''

''நீங்க யாரு? வழி விடுங்க. நான் பிரார்த்தனையை நிறைவேற்ற செல்ல வேண்டும்.''

''என்ன கண்ணு? ஒண்ணும் தெரியாத மாதிரி கேட்கிறாயே? உன்னை கண்ணாலம் கட்ட வந்தால் தப்பிச்சுக்கினு ஓடிட்டியே! இனி எங்கக்கிட்ட இருந்து நீ தப்ப

முடியாது. இங்ஙனயே தாலியைக் கட்டி உன்னை இழுத்துக்கிட்டு போகப் போறோம். முரண்டு பண்ணாமல் சம்மதிச்சிடு. அடியாள் எல்லாம் சுத்தி இருக்காங்க. உன்னை குண்டுக்கட்டாய் தூக்கிட்டு போறது பெரிய காரியமில்லை. ஆனால் நாங்க அப்படிச் செய்ய விரும்பலை. கௌரவமாய் கூட்டிப் போக விரும்பறோம்.''

''ஐயோ! என்ன அநியாயம் அக்கா இது! இந்தக் கிழவனையா கல்யாணம் கட்டிக்கிட போறீங்க? மலையிலிருந்து இவனை உருட்டித் தள்ளுங்க அக்கா.''

''இவர்களுடன் நமக்கு என்ன பேச்சு சாந்தி? வா போகலாம்.''

''இரு கண்ணு'' என கிழவர் வழிமறிக்க.

''முதல்ல கையை எடுங்க. நான் சத்தம் போட்டால் உங்க மானம், மரியாதை எல்லாம் போயிடும். கோவிலில் இப்படி நடந்து கொள்ள உங்களுக்கு வெட்கமாயில்லை. பேத்தி வயசில் இருக்கும் பெண்ணை கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படலாமா?

நான் போலீசில் புகார் கொடுத்தால் எழுபது வயது ஆம்பிளைக்கு வந்த ஆசையைப் பாருன்னு உங்களை முட்டிக்கு முட்டி தட்டி கூட்டிக்கிட்டு போவாங்க. இந்த வயசிலே இதெல்லாம் தேவையா உங்களுக்கு?

ஏற்கனவே ரெண்டு மனைவிங்க இருக்கும் பொழுது மூணாவதா ஒண்ணு வேணுமானு இங்க சுத்தி இருப்பவங்களும் நாலு போடுவாங்க. அவசியமான்னு யோசிங்க'' என அவள் சொல்லிக் கொண்டிருந்த பொழுதே

கும்பலில் பலர் திரும்பி பார்த்துக் கொண்டே சென்றனர்.

அன்றைக்கு நகர இடமில்லாத அளவிற்கு மிக அதிகமான கும்பல் இருந்தது. இதில் வட நாட்டைச் சேர்ந்த முக்கியமான அரசியல்புள்ளி வேறு அங்கு தரிசனத்திற்கு வந்திருந்தார். 'வேல் வேல் வெற்றிவேல்' 'கந்தனுக்கு அரோகரா' என குரல் எடுத்து பக்தியுடன் கோஷமிட்டுக் கொண்டே சென்றனர். அந்த சத்தத்தில் கிழவனாரின் மானம் கப்பல் ஏறவில்லை.

''அடியாத்தி போலீஸிலே கம்ப்ளெய்ண்ட் பண்ணுவாளாமே? கனவுல கூட நினைக்காத வாழ்க்கையை காட்டாலம்னா. இந்தப் போடு போடுறாளே. நம்ம மாமா செல்வாக்கைப் பத்தி அம்முவுக்கு புரியலை. சின்னவளே! நாமளே அமுக்கிடலாமாடி?''

''தாயி! என்ன பால் குடத்தோட நின்னுக்கிட்டு இருக்கிறாய்? பாலை அபிஷேகத்துக்கு போய் கொடு'' என காவடியுடன் சென்ற யாரோ ஒரு பெண் கூற வந்தனா நகர்ந்தாள். அவளைச் சுற்றி முன்னும், பின்னும் ஆட்கள் தொடர்ந்தனர். ஆனால் அவள் இவ்வளவு கும்பலில் யார் என்ன செய்ய முடியும்? என. தைரியமாகவே சென்றாள்.

கிழவனார் அங்கேயிருந்த போலீஸ்காரரிடம் போய் பேசினார். பின் அலைபேசி மூலம் யாரிடமோ தொடர்பு கொண்டு அந்த போலீஸ்காரரிடம் கொடுத்தார். பின் அந்த போலீஸ்காரர் கிழவரிடம்,

''சார்! பட்டபகலில் இவ்வளவு கும்பல் நடுவில் இளம் பெண்ணை கடத்துவது சாதாரண விஷயமில்லை. அது மிகுந்த பிரச்சனை ஆகிவிடும்.''

''அதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். இங்கே எந்தப் பிரச்சனையும் வராது. நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். அந்தப் பெண் உங்களிடம் புகார் செய்யலாம்.''

''அதை கண்டுக்காமல் விடச் சொல்றீங்களா?'' என கேட்டுக் கொண்டிருந்த பொழுது திமுதிமுவென கும்பல் வந்தது. அதை கவனிக்க காவல்காரர் சென்றார். முருகன் சந்நிதிக்குள் சிறப்பு வழியாக காவலர்கள் புடை சூழ ஒருவர் மரியாதையுடன் அழைத்துச் செல்லப்பட்டார்.

மக்கள் கடலில் நீந்திச் சென்று முருகனை தரிசிக்க இன்னும் எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டுமோ? என எண்ணிக் கொண்டே நின்று கொண்டிருந்தாள் வந்தனா. கூட்டம் மிக மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. கும்பலில் அவளை பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்த ஆட்கள் காணாமல் போயிருந்தனர்.

சீக்கிரம் சாமி கும்பிட்டால் இருள் சூழும் முன் கீழே சென்றுவிடலாம். முரட்டுக் கிழவனிடம் இருந்தும் தப்பி விடலாம். 'சே! இன்றைக்குப் பார்த்தா இந்தக் கிழவன் வந்து சேர வேண்டும். இவ்வளவு நாள் கண்ணில் படாமல் இருந்தது வீணாகிப் போனதே. இவனிடம் இருந்து எப்படி தப்பிப்பது? எல்லா கஷ்டத்திலும் ஏதாவது ஒரு நல்லது இருக்கும். நம்பிக்கையை தளர விடக்கூடாது. முருகன் கை விட மாட்டான்.'

அப்போது அவளருகே ஒரு போலீஸ்காரர் வந்தார்.

''மேடம், சார் உங்களை அழைத்து வரச் சொன்னார்'' என பவ்யமாகக் கூறினார்.



9

சித்தார்த் அணுகுமுறையும், செயல்திறமையும் எல்லாருடைய பாராட்டைப் பெறுவது மட்டுமல்ல மாநில வளர்ச்சிக்கும் உதவியது.

மாற்று எரிபொருள் உற்பத்திக்கு நிபுணர்களை கலந்து ஆலோசித்தான்; சாதக, பாதகங்களை அலசி ஆராய்ந்து திட்டங்களை தீட்டினான். ஜெட்ரோபா என்ற காட்டா மணக்கு எண்ணெயை பெட்ரோலில், டீசலில் கலந்து பயன்படுத்தலாம்.

1 டன் காட்டாமணக்கில் இருந்து 300 கிலோ எண்ணெயும் 700 கிலோ புண்ணாக்கும் கிடைக்கும். புண்ணாக்கை இயற்கை உரமாகப் பயன்படுத்த முடியும்.

காட்டாமணக்கு காற்றிலுள்ள கார்பன்-டை - ஆக்ஸைடை குறைக்கக் கூடியது. அதனால் சுற்றுச்சூழலுக்கு நல்லது. காட்டாமணக்கை வறட்சிப் பகுதிகளில் பயிரிட முடியும். டீசல் என்ஜீன்களில் காட்டாமணக்கு கலந்த டீசலை பயன்படுத்தி தஞ்சாவூர் - நாகூர், திருச்சி - லால்குடி, திண்டுக்கல் - கரூர் ஆகிய இடங்களில் சரக்கு ரயில்கள் ஓடியிருப்பதால் சத்தீஸ்கர் மாநிலத்திலும் அதை செயல்படுத்த விரும்பினான்.

முதல் அமைச்சருடன் கலந்து ஆலோசித்து 16 மாவட்டங்களிலும் 16 கோடி காட்டாமணக்குச் செடிகளை பயிரிட ஏற்பாடு செய்தான். இதன் மூலம் 2015 ஆம்

ஆண்டு வாக்கில் விதைகளை விற்று 400 கோடி ரூபாய் திரட்ட திட்டமிட்டு செயல்பட்டான்.

காட்டாமணக்கு எண்ணெயிலிருந்து எஸ்டிரிபிகேன் முறையில் கிளிசராலைப் பிரித்தால் 'பயோ டீசல்' கிடைக்கும். இதை விவசாயிகளிடம் எடுத்துச் சொல்லவும், காட்டாமணக்கு எண்ணெயை பயோ டீசல் தயாரிக்கும் நிறுவனங்கள் வாங்கிக் கொள்ளவும் ஒருங்கிணைந்த திட்டங்களைத் தீட்டினான்.

உலகின் சராசரி மழை அளவை விட அதிகமாக இந்தியாவில் பெய்கிறது. மழை மூலம் 70 ஆயிரம் டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கிறது.

இதில் 20 ஆயிரம் டி.எம்.சி. மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

மீதி 50 ஆயிரம் டி.எம்.சி கடலில் கலக்கிறது. அதை மானாவாரி நிலங்களுக்குத் திருப்பிவிட்டு கரும்பு சாகுபடியை அதிகரிக்கலாம்.

கரும்பிலிருந்து எத்தனால் எடுத்து பெட்ரோலோடு கலந்து பயன்படுத்தினால் கணிசமான அளவு பெட்ரோல் மிச்சப்படும், சற்றுச்சூழல் மாசும் குறையும்.

அமெரிக்கா, பிரேசில் போன்ற நாடுகளும் எத்தனால் கலந்த பெட்ரோலை பயன்படுத்துகின்றன. என்ஜீன் வடிவமைப்பில் மாற்றங்கள் செய்து எத்தனால் கலப்பை அதிகப்படுத்தலாம். இவற்றைப் பற்றி கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்து மாநில அரசாங்கத்தை கொள்கை ரீதியாக சில முடிவுகளை எடுக்க வைத்தான்.

பெட்ரோல் எத்தனாலை பயன்படுத்த ஆரம்பித்தால் விவசாயியின் தரம், மதிப்பு உயரும். ஒவ்வொரு

விவசாயியும் சொகுசுக் காரில் பயணம் செய்யலாம் என்பதை தெளிவாக ஆதாரப்பூர்வமாய் விளக்கினான்.

அதனால் நல்லது செய்ய வேண்டும்; தங்கள் மக்கள் உயர வேண்டும் என நினைத்துக் கொண்டிருந்த அருமையான முதலமைச்சருக்கு மிகவும் நெருக்கமானவன் ஆனான்.

பல நல்லத் திட்டங்கள் தீட்டப்பட்டன; மக்களுக்கு பயன் அளிக்கும் வகையில் அது உடனுக்குடன் செயல் படுத்தவும் பட்டது. மக்களும் சித்தார்த்தை வேற்று ஆளாகவே எண்ணவில்லை. தங்களின் ஒருவனாகவே நினைத்தனர். தன் கடமையை நேர்மையான அதிகாரியை சாமான்ய மக்களுக்குப் பிடித்துப் போவதில் எந்த வியப்பும் இல்லை.

அதே போல் முடிவு எடுப்பதில் என்றுமே தயங்கியது கிடையாது. பெரும்பாலும் சிந்தித்து எடுக்கின்ற முடிவுகள் தவறாகி விடுவதில்லை. தவறு நேர்ந்து விடுமோ என்ற நினைப்பில் பல விஷயங்களில் முடிவு எடுக்கத் தயங்குகிறோம்.

நம் சார்பாக யாராவது முடிவு எடுக்க மாட்டார்களோ? என காத்திருப்பது கூட பிரச்சனை வந்தால் உன்னால் தான் என கைக்காட்டி தப்பித்துக் கொள்வதற்காகத்தான். சில சமயம் நம் முடிவுகள் தப்பாகலாம். ஆனால் முடிவே எடுக்காமல் இருப்பதால் ஏற்படும் விளைவுகள் இன்னும் மோசமானதாக இருக்கும்.

வேலைக்கு நேர்முகத் தேர்விற்கு செல்ல முடிவெடுத்தாள் வந்தனா. அவள் முடிவு ஒரூரில் தப்பாகிப் போனது. ஆனாலும் அவள் 'ஐயோ! இப்படி ஆகிப்போனதே!' என கலங்கித் தவித்து புலம்பிக் கொண்டிருக்கவில்லை.

ஆற்றில் இறங்காமல் ஆழத்தை அறிய முடியாது. துணிச்சலுடன் செயலில் இறங்கினால் தான் வழி பிறக்கும்; தயங்கி நிற்பவர் தலை உயர வாழ முடியாது. வருகின்றவற்றை நேர்மையாக எதிர் கொள்ள வேண்டும்.

தன்னை அறிந்தவன், தாழ்விலும், உயர்விலும் ஒரே மாதிரிதான் இருப்பான். ஏன் வந்தனா வேலைத் தேடி வந்தாள்? என்ற கேள்வி அவனை குடைந்து கொண்டே இருந்தது.

ஏதோ யோசனைகள் வேலையின் நடுவே ஓடிக் கொண்டே இருந்தது. அவளுடன் பேச வேண்டும்? அவளுக்கு என்ன பிரச்சனை? பருந்தைக் கண்டு அஞ்சி ஓடும் கோழிக்குஞ்சாய் அவள் இல்லை; ஆனாலும் ஓர் மென்மையை அவளிடம் உணர முடிந்தது.

அவளை தன் உள்ளங்கையில் வைத்து பாதுகாக்க வேண்டும் போல் உணர்வு எழுந்தது. மடிக்கணினியைத் தட்டினான்; அழகாய் அவள் படம் மலர்ந்தது. 'என்ன மாயம் செய்தாய் பெண்ணே? என்னை இப்படி கட்டிப் போட்டு இருக்கிறாய்! உன்நினைவு என்னைச் சுற்றி சுழன்று கொண்டே இருக்கிறதே? வெகு சீக்கிரம் உன்னை மணந்து கொள்ள வேண்டும்.'

அப்போது தான் முதலமைச்சரிடம் இருந்து அவனுக்கு அழைப்பு வந்தது. தமிழக முதலமைச்சரை புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு இவன் வேலை செய்த முதலமைச்சர் சந்திக்க கிளம்பிக் கொண்டிருந்தார். சித்தார்த்தும் உடன் வந்தால் நன்றாக இருக்கும் என விரும்ப அவனும் மகிழ்வாய் புறப்பட்டான்.

வாய்ப்புக் கிடைத்தால் வந்தனாவையும் பார்க்கலாம் என்று மெல்ல உதித்த ஆசை வினாடியில் விஸ்வரூப

மாய் வளர்ந்தது. சந்திப்பு முடிந்ததும் பழனி முருகனை முதலமைச்சர் வணங்க ஆசைப்பட்டார். உடனே அவருடன் பழனிக்கு கிளம்பினான். பழனி முருகனை வணங்கி சிறப்பு மரியாதையுடன் உள்ளே அழைத்துச் செல்லப் படும் போது தான் வந்தனா கும்பலில் தவிப்புடன் நிற்பதைப் பார்த்தான்.

மின்வெட்டும் நேரம் தான்; அதற்குள் அவனருகே அவளை காவலரின் உதவியுடன் வந்து சேர்ந்து விட்டாள். அவளுக்கும் முதலில் காவலர் வந்து அழைத்த வுடன் ஒன்றும் புரியவில்லை; சற்று ஐயத்துடன் தான் யோசித்தாள்.

மரியாதையுடன் கண்ணியமாய் முருகன் சந்நிதானத்திற்குள் கூப்பிடும் பொழுது... எண்ணத்தில் பளீரென்று மின்னியது. ஒருவேளை... ஒருவேளை... சித்தார்த்தோ?... உள்ளுணர்வு உந்த சென்றாள்.

தண்டாயுதபாணி சிரிப்பது போல் இருந்தது. வார்த்தைகள் சொல்லாததை விழிகள் மௌனமாய் வினவிக் கொண்டன. குருக்கள் அருகே வர,

''மகாலெஷ்மி; மகம் நட்சத்திரம்'' என அவன் கூற,

அவளோ ''சித்தார்த்; பரணி'' என்றாள்.

முன்னே நின்றுக் கொண்டிருந்த முதலமைச்சர் முருகனை தியானித்துக் கொண்டிருந்தார்.

மாலை மரியாதையுடன் திருப்தியாய் தரிசனம் முடித்து முதலமைச்சர் போகும் பொழுது சித்தார்த்திடம் குனிந்து ஏதோ சொன்னார். பின், அவளிடம் ''எலிஜிபில் பேச்சிலர்... லவ்வபிள் பாய் ஆகிவிட்டான். டேக் யுவர்

ஓன் டைம்; சேப்ளைட் விடுகாலையில்தான்'' என ஹிந்தியில் கூறிவிட்டு நகர்ந்தார்.

அவளையே வைத்தக் கண் வாங்காமல் பார்த்தான். எந்த வித ஒப்பனையும் இல்லாமல் அழகுடன் மிளிர்ந்து கொண்டிருந்தாள்.

வருடத் தோன்றும் பட்டுப் போன்ற சருமம்; நிலவைத் தில் மலரும் இதழ்கள்; எல்லாவற்றையும் விட இதயத்தை கவர்ந்து இழுக்கும் காந்த விழிகள்; மங்கிய சேலையில் கூட புத்தம் புது மலராய் ஈர்த்தாள்.

இருவருக்கும் பேசவே தோன்றவில்லையா? மௌனமாய் கடந்த வினாடிகளை அவர்களை கடந்த முதாட்டு ஆட்கள் இருவர் கலைத்தனர்.

''எப்படியிருக்கிறது உன் படிப்பு?''

''ம். நன்றாக படித்துக் கொண்டிருக்கிறேன். சில சந்தேகங்கள் இருக்கின்றன.''

''என்னுடைய ஈ.மெயிலுக்கு அனுப்பி விடு. ஆமாம்! அந்தக் கிழவன் ஏன் இப்படி வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்? ஏதாவது பேத்தி சாயலில் நீ இருக்கிறாயா?''

''வாருங்கள்! நாம் போகலாம்'' பதட்டத்துடன் நகர்ந்தவளின் கையைப் பற்றிக் கொண்டான்.

உள்ளுக்குள் ஓடிய நடுக்கத்தை அவனால் உணர முடிந்தது.

மென்மையாய் உள்ளங்கையை அழுத்தி 'மகிம்மா! பயப்படாதே. நான்தான் உன்னுடன் இருக்கிறேனே? வருங்கால கலெக்டர் இப்படி அஞ்சலாமா?' என அவன் சொல்ல நினைத்ததை விரல் வழியே உணர்த்தினான்.

''மன்னித்துக் கொள் கண்ணம்மா! நான் கிளம்ப வேண்டும். தனியாகவா வந்தாய்? உன்னை எங்கு இறக்கி விட வேண்டும்? இது அபீஸியல் விசிட். அதனால்தான் உடன் புறப்பட வேண்டும்.''

''நான் கனகா பெரியம்மாவுடன் வந்தேன். நீங்கள் கிளம்புங்கள். நான் போய்க் கொள்கிறேன்.''

''இல்லையில்லை உன்னை இப்படியே விட்டு விட்டு போக முடியாது மகி. வா, கீழே அத்தையிடம் ஒப் படைத்து விட்டு செல்கிறேன்.''

முதலமைச்சருடன் சித்தார்த், வந்தனா ரோப் காரில் ஏறிக் கொள்ள அடிவாரத்திற்கு வந்து சேர்ந்தனர்.

கரம் குவித்து வணக்கம் சொன்னவளிடம்,

''பேட்டீ, யூ ஆர் வெரி லக்கி. காட் ஃபிளஸ் யூ'' என்றார்.

கனகம் பெரியம்மாவை சந்திக்கும் முன் அவள் கரம் பற்றி தன்னருகே இழுத்தான். யாரோ இருமும் சத்தம் கேட்டது எதேச்சையாய் நிமிர்ந்தவள் அதிர்ந்தாள். அந்தக் கிழவன்!

கண்கள் வெறி கொண்டாற் போல் பயமுறுத்த பற் களை நறநறவென கடித்தான் அந்தக் கிழவன்.

கைகளில் அணிந்திருந்த கண்ணாடி வளையலை ரசித்தவாறே விரல்களால் சுண்டினான்.

அது எழும்பும் இனிய ஓசையை ரசித்தவனை விழி விரியப் பார்த்தாள். ஒரு வினாடி அவளுக்கு அவளது ஆபத்தான சூழலே மறந்து போனது.

அந்தக் கிழவனாரின் அருவெறுப்பான பார்வையி லிருந்து தப்பி ஓடி விட வேண்டும் என்று தோன்றியது:

அதே சமயம் சித்தார்த்தை விட்டு விலகிப் போகவும் மனம் வரவில்லை.

எதற்கும் துணிந்து மிரட்டும் பார்வையைப் பற்றி அவனிடம் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை. இந்த விஷயத்தைச் சொன்னால் அவளைப் பற்றிய எல்லா விஷயத்தையும் சொல்ல வேண்டுமே? யாரும் ஆதர வற்ற நிலை; தன்னைச் சுற்றி வட்டமிடும் வல்லூறுகள் எல்லாம் சொல்லி விடலாம் தான். ஆனால் அவளுக்கு வேண்டியது பரிதாபம் இல்லையே!

சரிசமமாய் மதித்து நேர்மையாய் வழி நடத்தப்பட வேண்டியது தானே தவிர வேறு ஒன்றுமில்லை. நேர்மை யான வாழ்விற்கு ஈடு இணை உண்டா? எத்தனையோ துன்பங்கள் வந்தாலும் மனசாட்சி உறுத்தும் அளவிற்கு வாழாமல் நிம்மதியாய் படுத்தவுடன் உறங்கி மனம் லயித்து சிரிப்பதே வாழ்வின் வெற்றியைத் தான் உணர்த்திக் கொண்டு இருக்கின்றது.

நூற்றாண்டுகள் கழிந்தாலும் நம் வாழ்வின் அடை யாளம். சாதனை பிறருக்கு பயன் தருவதாய் நிலைத் திருக்க வேண்டும். சுய பச்சாதாபம், கழிவிரக்கம், பரி தாபம் எதுவும் தனக்கு வேண்டாம். நான் காலில் சுய மாய், கௌரவமாய் நிற்க வேண்டும்.

அப்படி நிற்கும் நிலையில் எல்லா உண்மைகளையும் மறைக்காமல் உங்களிடம் சொல்லி விடுவேன். என் னைப் பற்றி சிறு உண்மை கூட உங்களுக்கு தெரிந்து விடும். அதுவரை நான் எதுவும் சொல்லப் போவது இல்லை; இந்த ரகசியம் நெடு நாட்களுக்கு நீடிக்கப் போவதில்லை.

எல்லாவற்றையும் மனம் விட்டு சொல்லி அவன் தோள் மீது சாய்ந்து ஆறுதல் காண்பது நினைக்கவே எத்தனை அருமையாக இருக்கிறது! ஆனால் இவ்வளவு கலபத்தில் தைரியத்தை இழந்து விடக் கூடாது. சித் தார்த்திற்கு ஏற்றவளாக அவள் மாற வேண்டும்.

''ஹேய்! என்ன? நான் கிளம்பட்டுமா?''

''இப்படி விழி அசைக்காமல் பார்த்தால் என்னால் கிளம்ப முடியாதும்மா! உன்னைப் பார்க்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டே வந்தேன். எண்ணங் களின் வலிமை உன்னை இங்கே கட்டி இழுத்து வந்து சேர்த்து விட்டது. என் எண்ணங்கள் நீ இந்த உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் என்னிடம் கொண்டு வந்து சேர்த்து விடும்'' என தொடர்ந்து எண்ணியவாறே அவள் முன்னே சொடக்குப் போட்டான்.

யோசனையிலிருந்து விடுபட்டு அவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

மின்னிய அவள் முகத்திலிருந்து விழிகளை அவனால் அகற்ற முடியவில்லை.

மனதில் அன்பெனும் நீரூற்று பொங்கினால் முகம் எத்தனை அழகாகிவிடுகிறது! இருவரும் அன்பு ததும்ப வேறு எண்ணம் தோன்றாமல் நின்று கொண்டிருந்தது விநாடி நேரம் தான்.

ஆனால் யுகங்களாய் நீண்டது போல் தோன்றியது. கனகா வந்து விட மூவரையும் பத்திரமாய் காரில் ஏற்றி அனுப்பி விட்டு தான் அவன் புறப்பட்டான்.

கிழவன் போலீஸ்காரரைப் பார்த்து என்ன விஷயம்? என்று விசாரிக்க...

''ஐயா! முதலில் கிளம்புங்கள். உங்கள் வீர பராக்கிர மத்தைக் காட்ட இது சரியான இடமல்ல. அந்தப் பெண் பெரிய இடத்துக்கு வேண்டியப் பெண் போல. உன் னோட சபலத்தை மூட்டைக் கட்டி வச்சிட்டு ஊர் போய் சேர். மீறி நடந்தால் உடம்பு புண்ணாவதுடன் பேரும் நாறிப் போகும்;

வயசான காலத்திலே தேவையா உனக்கிது? ஒண் ணுக்கு ரெண்டு சம்சாரத்தை வச்சுக்கிட்டு மூணாவ துக்கு ஏய்யா அலையறே? அதுவும் சின்னப் பொண்ணு கேட்குதா? பணம் இருந்திட்டால் எதுவும் செஞ்சிட முடியும்னு நினைக்காதே. நான் கூட உன் மகனுக்கு பொண்ணை கடத்திட்டு போகிறியோன்னு நினைச்சேன். விசாரிச்சா 'தூ'ன்னு துப்புற மாதிரி இருக்கு.

அடியாட்களை கூட்டிக்கிட்டு கிளம்பு. இன்னும் ஏதா வது பேராசையோடு நின்றாய் என்றால் நானே நட வடிக்கை எடுக்க வேண்டி வரும். இடத்தைக் காலி பண்ணு.''

கிழவன் காவலரை விசாரித்துக் கொண்டிருந்த நேரத்தில் வந்தனா சென்று விட்டிருந்தாள். சித்தார்த்தும் பின்னோடு சென்று விட... அவர்களை தவற விட்ட கிழவன் ஏகப்பட்ட டென்ஷனில் இருந்தான்.

அவன் கண் முன்னே மிக அழகான, கம்பீரமான, வசதியான, செல்வாக்கான இளைஞன் அவள் கைப்பற்றி நெருக்கமாக பேசிக் கொண்டிருந்தது வயிற்று எரிச்ச லுடன் இயலாமையால் கொலை வெறியைத் தூண் டியது.

'எந்த விதத்திலும் தான் அவனுக்கு ஈடாக முடியாது' என்ற பேருண்மையை கிழவனால் ஏற்றுக் கொள்ள

முடியவில்லை. 'செய்ய வேண்டும்; ஏதாவது செய்ய வேண்டும். அவள் எனக்கு கட்டாயம் வேண்டும்' என வன்மத்துடன் உள்ளுக்குள் குளுநரைத்தான்.'

முதலில் அந்த இளைஞன் யாரென்று விசாரிக்க வேண்டும்; பின் அவனை அவளிடம் இருந்து அப்புறப் படுத்த வேண்டும் என பல எண்ணங்கள் தோன்ற கிழவன் சென்னை விரைந்தான். தொழிலில் ஜெயிக்க எத்தனை தகிடுதத்தங்கள் செய்திருப்பார்.

அவற்றில் ஒன்றை எடுத்துவிட்டால் கூட போதும்; இவனை காலி செய்து விடலாம். இந்த மாதிரி வேலைக்கு எல்லாம் செல்வம் தான் தகுந்தவன்; அவனை பிடிப்பது தான் கொஞ்சம் கஷ்டம்; பிடித்து விட்டால் என் எண்ணம் ஈடேறியது மாதிரித்தான். உடனே செல்வத்தை தொடர்பு கொள்ள வேண்டும் என பரபரப்போடு வாயு வேகத்துடன் ஊர் போய் சேர்ந்தான்.

வந்தனா மனசுக்குள் நிம்மதியாய் உணர்ந்தாள். பழனி முருகன் தான் அந்தக் கிழவனிடமிருந்து அவளை காப்பாற்ற சித்தார்த் வடிவத்தில் வந்ததாக கனகம் கூறினாள்.

'எப்படியோ கடவுள் அவளை இப்போது காப்பாற்றி விட்டாலும், அவள் ஊருக்குச் சென்ற பிறகு யார் பாது காப்பார்கள்?' என கவலைப்பட்டாள்.

நாளுக்கு நாள் கவலை அதிகமாகிக் கொண்டே வந்தது. கல்லூரி விடுதியில் தங்கலாம் என்றால் வெளி யில் இருக்கும் எதிரி என்ன நாடகம் வேண்டுமானாலும் நடத்தி அவள் கல்வியை கெடுப்பதுடன் அவளுக்கு அவப்பெயரையும் ஏற்படுத்தலாம்.

அவளை அணுக முடியாத சக்தி வாய்ந்த இடத்தில் தான் விட்டு செல்ல வேண்டும். கே.எஸ். அண்ணன் வீடு இரும்புக் கோட்டை போன்றதுதான். அவர் மாதிரி வீடு வந்தனாவுக்கு அமைய வேண்டும். பாண்டவர்கள் 'அஞ்ஞாதவாசம்' செய்த மாதிரி யார் கண்ணிலும் தென் படாமல் அவள் கல்வியை முடிக்க வேண்டும். பின் அவள் ஆசைப்படி கலெக்டரோ, அல்லது நல்ல வேலையோ தேடிக் கொண்டால்... தேவையான பாதுகாப்பு கிடைத்து விடும்.

சித்தார்த் தான் இரண்டு முறையும் இவளை காப்பாற்றி யிருக்கிறான். ஒன்று நேர்முகமாக, மற்றொன்று மறை முகமாக. இந்தப் பெண் கிழவனைப் பற்றி நேரிடை யாகவே அவனிடம் சொல்லியிருக்கலாம்; கண்டிப்பாய் அவன் உதவியிருப்பான்.

சுயகௌரவம் பார்த்துக் கொண்டு பேசாமல் வந்து விட்டாள். எத்தனை நாட்களுக்குத் தான் வலிகளை தானே சுமப்பாள்? பணபலமோ, பக்க பலமோ இல்லாமல் இவ்வளவு நாட்கள் அவள் தாக்குப் பிடித்ததற்கு காரணம் அவள் தன்னம்பிக்கை தான்.

ஊரெல்லாம் பாராட்ட வேண்டும்; உலகம் எல்லாம் புகழ வேண்டும் என திட்டமிட்டு எதையும் செய்யாமல் தனக்குப் பிடித்ததை, நேர்மையானதை சரியாகச் செய் கிறாள். அதுவே பாராட்டையும், பெருமையையும் தேடித் தருகிறது.

எந்தச் சூழ்நிலையிலும் மனிதனாக வாழ்வதே பெரிய விஷயமல்லவா?

கடவுளே! சரியான இடத்தில் இந்தப் பெண்ணை நீ தான் கொண்டு சேர்க்க வேண்டும் என மனப்பூர்வமாக வேண்டிக் கொண்டாள்.

சித்தார்த் ஊருக்குச் சென்றதும் முதல் வேலையாய் உமாவிற்கு போன் செய்தான். உமா உடனே ஜானகி மிடம் போய் நின்றாள்.

''அத்தை, என்றைக்கு மகாலெஷ்மி வீட்டிற்கு போவது? நாம் பெண் பார்த்து விட்டு வந்தே பல மாதங்கள் ஓடி விட்டன. அப்பா மட்டும் இருந்திருந்தால் இந்நேரம் கல்யாணமே முடிந்திருக்கும். இப்பொழுதே ரொம்ப தாமதப்படுத்தி விட்டோம். இவ்வளவு நாள் அவனுக்கு கல்யாணம் செய்ய வேண்டும் என்று புலம்பிக் கொண்டிருந்து விட்டு பெண் பிடித்ததும் அலட்சியமாக இருந்து விட்டோம். சும்மா இருந்தவனை சீண்டி விட்டு ஒன்றும் தெரியாத அப்பாவி போல் நம் வேலையை பார்த்துக் கொண்டிருந்தால் எப்படி? அவன் கல்யாணத் திற்கு சம்மதித்ததே பெரிய விஷயம்! மறுபடியும் அவன் மறுத்துவிட்டால்....''

''சூ! விடம்மா! அவனாவது மறுப்பதாவது? லேப் டாப்பில் அவள் போட்டோவை வைத்துக் கொண்டு கனவு கண்டு கொண்டு இருக்கிறான். இப்பவும் அவன் உன்னிடம் இதைப் பற்றி பேசி இருப்பான் என்றே நினைக்கிறேன். பெண் நமக்கு பிடித்து விட்டது. அவள் குடும்பத்தைப் பற்றி விசாரிக்க வேண்டாமா? முதலில் நானும் அவன் சம்மதித்தால் போதும் என்று தான் நினைத் தேன். ஆனால் நல்ல தலைமுறை உருவாக அவசரப்படக் கூடாது. அதனால் விசாரிக்க சொல்லியிருக்கிறேன்.''

''இருக்கட்டும் அத்தை. நாம் ஒரு நிச்சயம் செய்து விட வேண்டும். எவ்வளவு நாட்கள் அவர்கள் நமக்காக காத்திருப்பார்கள்'' என்றவள் குறும்பு விளையாடும் அவள் முகத்தைப் பார்த்துவிட்டு,

''என்ன அத்தை?'' என்றாள்.

''நான் ஏற்கனவே ஏற்பாடு செய்துவிட்டேன். நாளை மறுநாள் நல்ல நாள் இருப்பதால் அன்றைக்கே வருவ தாக தரகர் மூலம் சொல்லி அனுப்பி விட்டேன். மரு மகளுக்கு போட வைரமாலையும் தயாராகி விட்டது. என் மாமியார் கொடுத்த ரெண்டு வைரமாலைகளில் ஒன்று உனக்குப் போட்டேன்; மற்றொன்றை மகாலெஷ் மிக்கு போடப் போகிறேன்.''

''சித்தார்த்தை வரச் சொல்லலாம் அத்தை.''

''நம்ம வீட்டில் நிச்சயதார்த்தத்திற்கு பையனை அழைத்துச் செல்லும் வழக்கமில்லை. விஷயம் தெரிந் தால் நாம் கூப்பிடாவிட்டாலும் அவன் ஓடி வந்து விடு வான். நீதான் பக்குவமாக சொல்ல வேண்டும். அவன் வருகிறேன் என்று சொன்னால் என்னால் மறுக்க முடி யாது. அத்தை காலம் மாறிவிட்டது. மகேஷ் கூட நிச்சயத் திற்கு வந்தாரே?''

''அதற்கு என் வீட்டுக்காரர் அல்லவா உடந்தையாக இருந்தார். உடம்பு ஏதோ செய்கிறது. நல்ல காரியம் அத னால் தடைப்படக் கூடாது மகேஷ் என் கூடவே இருக்க வேண்டும்.

அப்படி, இப்படி என்று என்னை கலவரப்படுத்தி தானே தன் காரியத்தை சாதித்துக் கொண்டார். நான் ஏன் வரக்கூடாது என்று சொல்லப் போகிறேன்? என கொஞ் சம் கூட யோசிக்கக் கூடாதா? பிள்ளைகள் நன்றாக இருக்க வேண்டும்; எந்தக் கெட்டப் பார்வையும் படக் கூடாது; என்று தான் சொல்வேன்.''

''நானும், மகேஷும் நன்றாகத்தானே இருக்கிறோம்?''

''கடவுள் புண்ணியத்தில் நீங்கள் நன்றாகத்தான் இருக்கிறீர்கள். சித்தார்த் மனசு மாறவே எவ்வளவு நாட்களாகி விட்டன? இருந்தும் தொட்டதும் காரியம் முடிந்ததா? என்று பார்; தடங்கல் வந்து விட்டது. தடங்கலும், பிரச்சனைகளும் வராமல் இருக்க வேண்டுமே? எனக் கடவுளை வேண்டிக் கொண்டே இருக்கிறேன்.''

''என்னம்மா? உன் அத்தை புலம்பலை ஆரம்பித்து விட்டாளா? மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம். எனக்கும், இவளுக்கும் திருமணமாகி 40 வருடங்கள் ஆகின்றன. பத்து வருடங்களுக்குப் பிறகு மகேஷ் பிறந்தான். பின் ஐந்து வருடங்கள் கழித்து சின்னவன் பிறந்தான். எங்கள் வாழ்க்கையில் நாங்கள் சண்டை போட்டுக் கொண்டதே இல்லை. அதில் எந்த பெருமையும் எனக்கு இல்லை.

ஏனென்றால் நான் எவ்வளவு கோபப்பட்டாலும் இவள் அமைதியாக இருந்துவிடுவாள். எனக்குதான் பின்னால் மிகவும் வருத்தமாகப் போய்விடும்: இவளைப் போய் திட்டி விட்டோமே என்று. கடுமையான சண்டை எங்களிடையே வந்ததில்லை.

கனிவான முகத்தைப் பார்க்கையில் கடும் கோபத்தில் கூட அடிக்க மனம் வராது. இவள் இல்லையேல் என்னால் வாழ்ந்திருக்கவே முடியாது. என் மனைவி எனக்கு எல்லாமுமாக இருந்துக் கொண்டிருக்கிறாள். இவள் நான் கேளாமலே கிடைத்த வரம்: இவள் மூலம் இறைவன் எனக்கு எல்லாவற்றையும் கொடுத்து விட்டான்.

அதனால் இவள் கிடைத்த பிறகு நான் இறைவனிடம் பிரார்த்திக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போய் விட்டது.''

''அம்மா. நம்பி விடாதீர்கள். அப்பா அப்துல் ரகுமான் கருத்தைச் சுட்டு விட்டார்.''

''மருத்துவருக்கு கவிஞரைப் பற்றி படிக்கக் கூட நேரம் இருக்கிறதா என்ன? அப்துல் ரகுமான் கருத்து எனக்கும் பொருந்திப் போனது: அதனால் சொன்னேன்; மேலும் நான் ஒன்றும் கவிஞன் அல்ல; அழகாய் என் கருத்தை சொல்லத் தெரியாது.''

''ஏனப்பா உங்களுக்கு கவிதை எல்லாம்? அம்மாவைப் பார்த்து சாப்பிட்டாயா? என ஒரு கேள்வி கேட்டாலே போதும். அவர்கள் புளகாகிதம் அடைந்து விடுவார்கள். அம்மாவின் முகத்தில் ஒரு புன்னகையைப் பார்க்க அப்பா ஓடி ஓடி உழைப்பார்கள்.

உங்களுக்கு இடையே அன்பை உணர்த்த வார்த்தைகளே தேவையில்லை; ஓர் கண் அசைவு, ஒரு புருவ உயர்வு போதும். உங்களை மாதிரி வாழ நாங்கள் தான் கற்றுக் கொள்ள வேண்டும். அன்பு மனதின் ஆழத்திலிருந்து பொங்கிப் பெருக வேண்டும். அதை சொல்லாமலே கூட உணர்ந்து கொள்ள பக்குவத்துடன் நல்ல புரிதல் வேண்டும்.''

''ஆமாம். நீ எனக்கு கிடைத்த அருமையான துணை. உன்னை என் உயிரைப் போல நினைக்கிறேன். எந்த சூழ்நிலையிலும் இன்பத்திலும், துன்பத்திலும் உறு துணையாக இருப்பேன். இமை போல் காப்பேன் என மனைவிக்கு புரிய வைத்துவிட்டால் போதும். வாழ்க்கை அருமையாக அமைந்துவிடும். உமாவும், நீயும் கூட நல்ல புரிதலுடன் இருக்கிறீர்கள். சின்னவன் அதிர்ஷ்டம் எப்படியோ?''

''அவன் எல்லாவற்றையும் சரியாகத்தான் முடிவு செய்வான். அதே போல் அவன் தேர்ந்தெடுத்தப் பெண் சோடை போக மாட்டாள். அவளுக்காக இரண்டு வருடம் இவன் எதுவும் சொல்லாமல் காத்திருக்கிறான் என்றால் எந்த அளவிற்கு இவனை கவர்ந்து இருப்பாள்? அவ வளவு சீக்கிரம் இவனுக்கு யாரையுமே பிடித்துப் போகாது.

உமா, சுந்தலைத் தவிர நெருங்கிய நண்பர்கள் கூட கிடையாது. எல்லாரிடமும் நன்றாகப் பழகுவானே தவிர நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள மாட்டான். அவனுக்கு பிடித்தவர்கள் அருமையானவர்களாகத்தான் இருப்பார்கள்.''

''உண்மை தான். அந்தப் பெண்ணைப் பார்த்ததும் வணங்கத்தான் தோன்றியது. முகத்தில் அறிவு கடி விடுகிறது. அடக்கமாய் இருக்கிறாள். படித்துக் கொண்டு இருக்கிறாளா?''

''படித்து கொண்டு தான் இருக்கிறாள். என்.சி.சி. கேம்ப் சென்ற இடத்தில் மலைப்பாதையில் தவறி விழுந்த குழந்தையை காப்பாற்றி இருக்கிறாள். பேப்பரில் கூட போட்டிருந்தான். நீங்கள் படிக்கவில்லையா அப்பா?''

''பலே, பலே! சித்தார்த்திற்கு பொருத்தமானவள் தான். சீக்கிரம் திருமணத்தை முடித்து விட வேண்டும். படிப்பை அவள் தொடர வேண்டும் என்றால் திருமணத் திற்கு பிறகு தொடரட்டுமே! அவனும் தன்னந்தனியாக கஷ்டப்பட வேண்டாம். மனதுக்கு பிடித்த பிறகு நல்ல காரியத்தை தள்ளிப் போட வேண்டாம். ஏற்கனவே ரொம்ப தள்ளிப் போய் விட்டது. பெண் வீட்டில் கலந்து ஆலோசித்து முதல் முகூர்த்தத்திலே திருமணத்தை

நடத்தி விடலாம். நாளை மறுநாள் நாம் வருவதாக செய்தி சொல்லிவிட்டாய் அல்லவா?''

''அதெல்லாம் சொல்லிவிட்டேன். அவர்கள் தயாராக இருப்பார்கள். என் சின்ன மருமகளுக்கு கும்பச்சையில் ஜரிகை வேலைப்பாடுகளால் ஜொலிக்கும் புடவை வாங்கி இருக்கிறேன். ஆனால் கனமில்லாத மென்பட்டு. மகாலெஷ்மிக்கு மிக அழகாய் இருக்கும். கல் வேலைப் பாடு செய்யப்பட்டிருந்தாலும் கனமில்லாமல் இருக்கும். அவள் இந்த வீட்டிற்கு வரட்டும்; விதவிதமாய் வாங்கித் தந்து அசத்தி விடப் போகிறேன்.''

''மகராசியாய் செய். நீயும் உன் மகனும் போட்டி போட்டுக் கொண்டு செய்யுங்கள். யார் ஜெயிக்கிறார்கள் எனப் பார்க்கலாம்?''

''தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயு மாம். என் மகனை வெற்றி கொள்ள என்னால் முடியாது. அவன் வென்றால் எனக்கு சந்தோஷம் தான்.''

அதே நேரம் தரகர் நான்கு முறை கே.எஸ் வீட்டிற்கு அலைந்து விட்டு பூட்டிய வீட்டைக் கண்டு ஏமாந்து திரும்பி வந்து கொண்டு இருந்தார். 'எங்கே போயிருப் பார்? குடும்பத்துடன் சென்றிருக்கிறாரா? என்றைக்குத் திரும்பி வருவார்? போனும் ஸ்விட்ச் ஆஃபில் இருக் கிறது. இந்தக் கல்யாணம் முடிந்தால் ரெண்டு பக்கமும் அவருக்கு நல்ல வருமானம் கிடைக்கும். அதை வைத்துக் கொண்டு அவர் வீட்டை நன்றாக கட்டி முடித்து விடலாம் என திட்டம் போட்டு முனைந்து செயல்பட் டால் சாண் ஏறினால் முழம் சறுக்குகிறது.

பல தடங்கல்களுக்குப் பிறகு பெண் பார்க்கும் படலம் நடந்தது. அதற்குப்பின் பெரிய இடைவெளி விழுந்து

விட்டது. இரு வீட்டினரும் கண்டு கொள்ளாமல் இருக்க அவர் மட்டும் முட்டி மோதி என்ன பயன்? என்று வாளா விருந்து விட்டார்.

இப்பொழுது நேரம் கனிந்து வந்திருக்கிறது. அப்படியே அமுக்கி விடலாம் என்றால் இவர்கள் எங்கு போய் தொலைந்தார்களோ? தெரியவில்லை. ஆனாலும் அவசரப்பட்டு ஏதாவது சொல்லி கோட்டை விட்டு விடக் கூடாது. ஒருநாள் முழுதாக ஓடிவிட்டது.

அங்கும் இங்கும் அலைந்து திரிந்து கே.எஸ். எங்கே சென்றிருப்பார்? என அறிந்தார். திருப்பதிக்கு மனைவியுடன் சென்றிருந்தார். அவர் வரும் நாளை அறிந்து வாசலிலேயே காத்திருந்து கே.எஸ்ஸை பிடித்து அவர் மாப்பிள்ளை வீட்டார் நிச்சயம் செய்ய வரப்போகிறார்கள் என விஷயத்தை சொன்னார்.

முத்துமணிக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. ஆனால் கே.எஸ். எப்படியாவது சமாளிக்க யோசித்தார். இன்று மாலைக்குள் மகிளாவை வரவழைக்க மடியாது. அப்போதுதான் கனகம் வந்து சேர்ந்தாள். எந்த இடமும் கிடைக்காவிட்டால் வந்தனாவை கல்லூரி விடுதியில் சேர்த்து விட்டுவிடலாம் என்ற முடிவில் இருந்தாள்.


மதியம் அவள் விமானநிலையத்திற்கு செல்ல வேண்டும். அதற்குள் கொஞ்சம் பணம் வாங்கி வந்தனாவிடம் கொடுக்கலாம் என எண்ணித் தான் கே.எஸ் வீட்டிற்கு வந்தாள்.

பேச்சு வாக்கில் முத்துமணி வந்தனா பற்றி விசாரித்தாள்.

''அவளும் என் பெண் மாதிரித்தான் அண்ணி. கெட்டிக்காரி. கல்லூரியில் படிக்கிறாள். நான் வெளிநாட்டிற்கு

செல்ல வேண்டியிருக்கிறது. மருமகளுக்கு விபத்து ஏற்பட்டு விட்டது. உதவிக்கு செல்ல வேண்டியிருக்கிறது. இவ்வளவு நாள் அவள் அம்மா வந்து பார்த்துக் கொண்டிருந்தாள். இன்றைக்கே நான் புறப்பட வேண்டும். வந்தனா பெண்ணை விடுதியில் சேர்த்து விடலாம் என்று இருக்கிறேன்.''

''அட! ஏனம்மா, நம் வீடு இருக்கும் பொழுது அங்கே இங்கே விடுகிறாய்? அவள் நீ வரும் வரை நம் வீட்டிலேயே இருக்கட்டும்'' என்றார் கே.எஸ்.



10

கனகம் நிம்மதியாய் விமானத்தில் ஏறிப் போனாள். கிளம்பு முன் வந்தனாவிடம் எல்லா விவரங்களையும் கூறிவிட்டு கே.எஸ் வீட்டில் பேயிங் கெஸ்ட்டாக தங்கிக் கொள்ளலாம் என்று சொல்லி விட்டு தான் புறப்பட்டாள்.

வந்தனா சற்று நிம்மதி பெருமூச்சு விட்டாள். காலையில் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சி மன அமைதியை குலைப்பதாய் இருந்தது.

முதல் வகுப்பு நடந்து கொண்டிருந்த பொழுது கல்லூரி முதல்வரிடம் இருந்து அவளுக்கு அழைப்பு வந்தது. அங்கே பிரின்ஸியை சந்திக்க அவள் அனுமதி கேட்டுக் கொண்டு நுழைந்த பொழுது கிழவன் கால் மேல் கால் போட்டு கொண்டு அமர்ந்திருந்தான்.

''என்ன கண்ணு சௌக்கியமா?'' என்றதை சட்டை செய்யாமல் பிரின்ஸிக்கு வணக்கம் தெரிவித்தாள்.

அவளை ஏற இறங்க பிரின்ஸி பார்த்தார். சற்றே நிறம் மங்கியிருந்த வெளிர் நீல சுடிதார்; காதுகளில் மணியாலான நீள தொங்கட்டான்; கழுத்தில் நீலவண்ண கயிற்றில் கோக்கப்பட்டிருந்த அடர் நீல குண்டு மணிகள்; கைகளில் இரு கண்ணாடி வளையலோ, பீங்கான் வளையலோ அவளுக்கு மிக அழகாய் இருந்தது.

அடிக்கடி சீருடை போல் மூன்று சுடிதார்களைத் தான் மாறி மாறி போடுகிறாள். ஒப்பனை எதுவும் செய்து கொள்வது இல்லை. நன்றாக படிக்கிறாள். போட்டிகளில் கலந்து கொள்கிறாள்; கல்லூரிக்கு பெருமை சேர்க்கிறாள். அதற்காக அவள் மேல் வந்திருக்கும் புகாரை கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது.

வீட்டிலிருந்து பணம், நகையை எடுத்துக் கொண்டு ஓடி வருவது மிகப் பெரிய குற்றம். ஆனால் இவளைப் பார்த்தால் பணம், நகையுடன் வந்தவள் மாதிரி தெரியவில்லையே? என அனுபவசாலியான பிரின்ஸி யோசித்தார்.

"வாம்மா! உட்கார். கல்லூரிக் கட்டணத்தை கட்டிவிட்டாயா?"

"இன்னும் இல்லை மேம்! உதவித் தொகைக்காக காத்திருக்கிறேன்" என்ற பொழுது அவளது துறைத் தலைவி உள்ளே வந்தார்.

"மேடம்! இவள் கட்டணத்தை இவளது தோழிகளும், நானும் சேர்ந்து கட்டிவிட்டோம். உதவித் தொகை வந்ததும் நாங்கள் அதைப் பெற்றுக் கொள்கிறோம்."

உடனே பிரின்ஸி அவளிடம் திரும்பி, "இவர் யார் என்று தெரியுமா? உன் மேல் குற்றம் சொல்லி வந்திருக்கிறார்."

"என்ன குற்றம் மேடம்?"

"இவர் பணம், நகையுடன் நீ ஓடி வந்து விட்டாயாம்."

"மன்னிக்க வேண்டும் மேடம். என்னிடம் பணமோ, நகையோ இருந்திருந்தால் கல்லூரி கட்டணம் கட்ட காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. விருப்பமில்லாத திருமணத்திலிருந்து பெரியம்மாவின் அனுமதியுடன் தப்பி வந்துவட்டேன். நான் படிக்க ஆசைப்படுகிறேன் அவ்வளவு தான்."

"ஒரு பெண்ணுக்கு திருமணம் தான் பாதுகாப்பானது. அப்படி படிக்க ஆசைப்பட்டால் கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டு படிக்கலாம்னு சொல்லுங்க அம்மா" கிழவனார் குறுக்கிட,

அவர்புறம் கூட திரும்பாமல்,

"இந்த கிழவனாருக்கு மூன்றாம் மனைவியாக என்னால் முடியாது மேடம்" என்றாள்.

"என்னது?" என பிரின்ஸியே அதிர்ந்து போனார். இந்தக் காலத்திலும் இப்படி அநியாயம் நடக்கிறதா? என அதிர்ந்து நின்றவரிடம்,

"எனக்கு வயசு தான் ஆச்சுதே ஒழிய, நான் ரொம்ப ஸ்டிராங்கான ஆள். சொத்து பத்தெல்லாம் நிறைய இருக்கு. மகாராணி மாதிரி இருக்கலாம். கல்லூரியில் இருந்து நீங்கள் அனுப்பி விட்டால் போதும். வேறு எதுவும் செய்ய வேண்டாம்" எனக் கூற.

கோபத்தில் கொதித்துப் போனார்.

"ஐ ஸே கெட் அவுட். என்ன தைரியம் இருந்தால் இப்படி பேசுவீர்கள்? நான் போலீஸில் கம்ப்ளெய்ண்ட்

கொடுப்பேன். கோர்ட்டில் கேஸ் போடுவேன். முதலில் இடத்தை காலி செய்யுங்கள். செய்கிற தப்பை வெட்கமில்லாமல் நியாயப்படுத்தி பேச வந்துவிட்டீர்கள். என் நேரத்தை வீண் செய்யாமல் கிளம்புங்கள். நீ போம்மா வகுப்பிற்கு. உனக்கு என்ன உதவி வேண்டும் என்றாலும் தயங்காமல் கேள்'' எனச் சொல்லி அனுப்பி வைத்தார்.

''உன்னை வேறு வழியில் பார்த்துக் கொள்கிறேன்'' என கிழவன் அவளிடம் உறுமி விட்டுக் கிளம்பினார். எப்படியோ அவள் படிக்கின்ற கல்லூரியை கண்டுபிடித்து வந்து சேர்ந்துவிட்டானே இந்தக் கிழவன்! இவனை சாதாரணமாக எடைப் போடக் கூடாது போலிருக்கிறது! கவனமாக இருக்க வேண்டும் என எண்ணிய பொழுது கனகம் அவள் கே.எஸ் வீட்டில் தங்கிக் கொள்ளலாம் எனச் சொன்னது பிரச்சனை தீர உதவியது போல் இருந்தது.

கல்லூரி வகுப்பு இரண்டரைக்கே முடிந்து விட்டதால் நேரே வீட்டிற்கு சென்று தன் பொருட்களை எடுத்துக் கொண்டு கே.எஸ் வீட்டிற்கு சென்றாள். அவளிடம் பெரிதான பொருட்கள் ஏதுமில்லை; புத்தகங்களும் தேவைக்கேற்ற உடைகளும் தான். எனவே சிறிய அறைக்குள் இருப்பது ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல.

கே.எஸ்ஸின் வீட்டில் இருந்தது எல்லாம் பெரிய அறைகளே. பெரிய அறையே சிறிய வாடகை வீட்டைப் போல சகல வசதிகளுடன் இருந்தது. தான் தங்குவதற்கான வாடகை பணத்தை தந்துவிட தயாராய் இருந்தாள்.

தொடர்ச்சியாய் பிராஜெக்ட் வொர்க்கை திருத்தித் தரும் வேலை அவளுக்கு கிடைத்ததால் மாதத்திற்கு

ஆறாயிரம் கையில் பணம் வரவு இருந்தது. அதனால் நம்பிக்கையுடன் 'பேயிங் கெஸ்ட்டாக' கே.எஸ்ஸின் வீட்டிற்குச் சென்றாள்.

வந்தவளை வரவேற்று முத்துமணி கொண்டு போய் அறையில் விட்டாள். குடிக்க ஜூஸ் கொண்டு வந்து கொடுத்தாள். அவளுக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்தாள்.

''அம்மா. போதும் நானே எல்லாவற்றையும் செய்து கொள்வேன். உங்கள் உதவிக்கு நன்றி.''

''இருக்கட்டும் அம்மா. நீயும் என் பெண் மகிளாவைப் போல் தான் இருக்கிறாய். அவளை விட ஒன்றிரண்டு வயது சிறியவளாய் இருக்கக் கூடும். அவளைத்தான் அருகில் இருந்து கவனிக்க முடியவில்லை. உன்னை யாவது கவனித்து என் ஏக்கத்தைத் தீர்த்துக் கொள்கிறேனே!''

வந்தனா அப்படியே உருகிப் போய்விட்டாள். தாயற்ற குழந்தைக்குத் தான் தாயின் அருமை புரியும். சிறு துளி அன்பிற்கே தத்தும்பிப் போகிறாள்.

முத்துமணிக்கும் அவளை பிடித்து தான் இருந்தது. பிரமிப்பான அழகும். அடக்கமான நடவடிக்கையும் அவளை மிகவும் கவர்ந்துவிட்டன.

இவளிடம் தங்கள் நிலைமையைச் சொல்லி உதவிக் கேட்டால் உதவுவாளா? ஆனால் இது மிகப் பெரிய விஷயமல்லவா? தன் பெண்ணிற்கு பதிலாக இவளை நிறுத்தி நிச்சயம் செய்த பிறகு மணமேடையில் தன் பெண்ணை நிறுத்த ஒத்துக் கொள்வாளா? இவளை எதுவும் ஏமாற்றப் போவதில்லை.

இன்றைக்கு இவள் 'செய்யும் உதவிக்கு இவள் எதிர் பார்க்காத அளவு பணத்தைக் கொடுத்துவிடலாம். பணத்தேவை நிறைய இருக்கும் என நன்றாகவே தெரிகிறது.'

தன் பெண்ணையே இளைத்து போயிருக்கிறாள் எனக் கூறுபவள் அவளை விட மெலிந்த பெண்ணைப் பார்த்தால் சோற்றுக்கு இல்லாமல் கஷ்டப்படுவதாகத் தான் தோன்றும். வந்தனா முறையான உடற்பயிற்சியும், யோகப் பயிற்சியும் செய்பவள் எனத் தெரியாதல்லவா?

ரொம்ப நேர்மையான பெண் போலிருக்கிறாள். இங்கே தங்குவதற்கு பணம் தந்துவிடுகிறேன் என மறுக்க முடியாமல் உறுதியாக தெரிவித்தாளே?

ஏமாற்றுதல் இவளுக்கு சரி வருமா? நாம் வேண்டுமென்று ஏமாற்றவில்லையே? திட்டம் போட்டு ஏமாற்ற எண்ணவில்லையே? ஏதோ சந்தர்ப்ப சூழ்நிலை. என் பெண் என்ன அல்ப சல்பமா? இவள் அழகு இல்லாவிட்டாலும் அவளும் அழகி தான்.

மேலும் இலட்ச ரூபாய் சம்பாதிக்கும் திறமைசாலி. அவள் கிடைக்க கொடுத்தல்லவா வைத்திருக்க வேண்டும். இந்த சம்பந்தம் தட்டி போகக் கூடாது என்று தானே இப்படி செய்ய வேண்டி இருக்கிறது.

மாப்பிள்ளை தான் இன்னும் என் மகிளாவை பார்க்கலையே? அவருக்கு நிச்சயம் அவளைப் பிடிக்கும். அவருக்கு மகிளாவை பிடித்து விட்டால் மாப்பிள்ளை வீட்டார் என்ன சொல்ல முடியும்?

மேலும் அவர்கள் கொஞ்சம் ஒரு மாதிரி இருந்தாலும் என் மகள் கெட்டிக்காரி மாப்பிள்ளையை தனியாக

பிரித்து அழைத்து வந்து விடுவாள். பின் ஏன் கவலைப் பட வேண்டும்?

ஆயிரம் பொய்யைச் சொல்லி ஒரு கல்யாணத்தை நடத்தலாம் என பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் செய்யப் போவது கண்ணாமூச்சி போல் ஒரு சின்ன ஏமாற்று வேலை; அவ்வளவுதான்.

இது ஒன்றும் பெரிய குற்றமில்லை. ஊர் உலகத்தில் நடக்காததையா நாங்கள் செய்யப் போகிறோம்? எவ்வளவோ இடத்தில் அழகான பெண்ணைக் காட்டி அழகற்ற தொத்தலான எற்றுப்பல் பெண்ணை மணம் செய்துவிக்கவில்லையா என்ன? ஆனால் என் பெண் அழகானவள். மேலும் படித்து சம்பாதிப்பவள்; கோடீஸ்வரரின் குலக் கொழுந்து.

எத்தனையோ பேர் வெறும் பணத்திற்காக மிக சாதாரணமான பெண்களை மணந்து கொள்ளவில்லையா? அழகான, வசதியான படித்த, கெட்டிக்காரப் பெண்ணை கல்யாணம் செய்து கொள்ள யாரும் மறுக்க மாட்டார்கள். முட்டாள்களுக்கு கூட அப்படித் தோன்றாது.

எல்லாம் சரிதான். ஆனால் இந்த பெண்ணை எப்படி சம்மதிக்க வைப்பது? என்ன சொல்லி சம்மதிக்க செய்யலாம்? எந்த விதமாய் சொன்னால் மறுக்காமல் ஏற்றுக் கொள்வாள்? நேரமோ குறைவாக இருக்கிறது. அதற்குள் இவளுக்கு விளங்கச் சொல்லி தயாராக வேண்டுமே?

எப்படியும் இது நடந்தாக வேண்டும். வேறு ஏதும் சாக்கு சொல்ல முடியாது. கட்டாயம் மகாலெஷ்மி எங்கள் மகளாக இன்றைக்கு நடித்து விட வேண்டும்.

ஆள் மாறாட்டம் செய்தே ஆக வேண்டும். இதைவிட்டால் வேறு வழியே இல்லை. இவளுக்கு புரிகிற மாதிரி

என்னால் சொல்ல முடியுமா? குழப்பமில்லாமல் தெளிய வைக்க வேண்டும்.

ம்ஹூம். இவள் சரி என்பாளா? இவளைப் பற்றி சரிவர எடை போட முடியவில்லையே? எளிமையாய், அடக்கமாய் இருக்கிறாள். என் பெண்ணிடம் இல்லாத பொறுமையும், பெரியவர்களை மதிக்கும் பண்பும் இருக்கிறது.

என் பெண்ணிடம் நானே மனம் விட்டு பேச முடியாது. இவள் எது சொன்னாலும் காதுக் கொடுத்துக் கேட்கிறாள். மறுத்து எதுவும் பேசவில்லை. என் பெண் ஐந்து நிமிடத்தில் ஆயிரம் முறை மறுத்துவிடுவாள்.

மகிளாவிற்கு காட்டுவதற்காக வாங்கி வைத்த சித்தார்த் போட்டோவை அவள் கடைசி நிமிடம் வரை பார்க்கவே இல்லை. அதை எங்கே வைத்தேன்? மாடியறையிலா? மகிளா அறையிலா?

''இங்க பாரும்மா மகா, அன்றைக்கு முதன்முதலாய் நீ எங்கள் வீட்டிற்கு வந்த பொழுது என் பெண்ணை பெண் பார்க்க வந்திருந்தார்கள். நீ கூட பார்த்திருப்பாய்...'' என்றவள் மேலே எப்படிச் சொல்லலாம் என யோசிக்க,

வந்தனாவின் கவனம் அலமாரியில் சென்றது. புத்தகங்களை அலமாரியில் அடுக்கும் பொழுது போட்டோ ஒன்று கீழே விழுந்தது. அதை கையில் எடுத்தாள். வசீகரமான புன்னகையுடன் சித்தார்த் காந்தம் போல் கவர்ந்து கொண்டிருந்தான்.

யாரோ கூப்பிட வெளியே சென்றாள் முத்துமணி.

'எப்படி சித்தார்த்தின் போட்டோ இங்கே வந்தது? ஒருவேளை அவர் கொடுத்த புத்தகத்தில் இருந்ததோ?

இதை நான் எப்படி இவ்வளவு நாள் கவனிக்காமல் இருந்தேன்?' புகைப்படத்திலிருந்து சித்தார்த் 'ஹாய் கண்ணம்மா' என அழைத்து கனிந்துப் பார்க்க... அவள் முகம் சிவந்து போனது.

இனிய கனவில் இருந்தவளுக்கு கே.எஸ் அறை வாசலில் நின்று அவளை கூர்ந்து கவனித்ததை அறிய முடியவில்லை. விநாடியில் அவளை எடைப் போட்டார். சிவந்த முகம் எப்படி பேசினால் அவளை கவிழ்க்க முடியும்? என அவருக்கு உணர்த்தியது. ''என்னம்மா மகா, சித்தார்த்தை உனக்குப் பிடித்திருக்கிறதா?''

திடுக்கிட்டு அவரைப் பார்த்தாள். ''என்னைப் பார்த்து ஏனம்மா அதிர்ச்சி அடைகிறாய்? எல்லாம் இறைவன் செயல். இன்னாருக்கு இன்னார் என்று எழுதி வைத்தான் தேவன் என்று சும்மாவா சொன்னார்கள்? என் பெண்ணை பார்க்கத் தான் சித்தார்த் வீட்டினர் இங்கு வந்தனர். ஆனால் உன்னை இங்குப் பார்த்ததும் அவர்களுக்கு மிகவும் பிடித்துப் போனது. நீதான் வேண்டுமென்று ஒத்தக் காலில் நிற்கிறார்கள். என் பெண்ணிற்கு ஆயிரம் பேர் கிடைப்பார்கள். உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை கிடைப்பது எனக்கு சந்தோஷம்தான். நீயும் என் பெண் போல் தான். எனக்கு இன்னொரு பெண் இருந்தால் செய்ய மாட்டேனா? கனகா எனக்கு மிகவும் நெருங்கிய உறவினள். அவளுக்கு வேண்டப்பட்ட பெண் நீ. உனக்கு ஒரு அருமையான வாழ்க்கை கிடைக்கப் போகிறது.''

''இல்லை சார். நான் படிக்கப்....''

''என்னை அப்பா என்றே கூப்பிடலாம். கல்யாணத்தை பண்ணிக் கொண்டு படியம்மா. யார் வேண்டாம் என்றார்கள்? நல்ல பையன் அமைவது கடினம். அருமை

யான குடும்பம் வேறு. அதற்காக என்ன வேண்டு மானாலும் செய்யலாம்.

போ, தயாராகு. இன்று மாலையே உன்னைப் பார்த்து முடிவு செய்ய வருகிறார்கள். நேரம் சிறிது தான் இருக் கிறது. முத்துமணிக்கு உன்னிடம் சரியாக எடுத்துச் சொல் லத் தெரியாது என்று தான் நான் வந்தேன். தயங்காதே. கனகம் இருந்தாலும் இதைத் தான் உனக்கு கூறுவாள்.

யோசிக்காதே. உனக்கு நாங்கள் நல்லது செய்வோம் என்று நம்பிக்கை இருந்தால் தயாராகு. உன் பெற்றோர் போல் எங்களை நினைத்துக் கொள். தந்தை ஸ்தானத்தில் இருந்து நான் எல்லாம் செய்வேன்.

சித்தார்த் வீட்டினரும் பெருந்தன்மையானவர்கள். நான் எல்லாவற்றையும் அவர்களிடம் சொல்லி விட் டேன். உன்னைப் பற்றி அவர்களுக்கு எந்த தயக்கமும் இல்லை. நீ மட்டும் அவர்களுக்கு போதுமாம். சரி, சரி சீக்கிரம் தயாராகி விடு. அவர்கள் வந்துவிடுவார்கள். நேரம் கூடி வருவது என்பது இதுதான்'' என அவள் பேசவோ, யோசிக்கவோ நேரம் கொடுக்காமல் முடிவை அறிவித்துவிட்டு சென்றார்.

வந்தனாவிற்கு சட்டென முடிவுக்கு வர முடியவில்லை. ஏதோ ஓர் உணர்வு உறுத்திக் கொண்டே இருந்தது. ஆனாலும் இன்னொரு பக்கம் ஆசை கொண்ட மனது அவளை தயாராகச் சொல்லி உசுப்பி விட்டுக் கொண்டே இருந்தது.

'இதெல்லாம் உண்மையா? நிஜமாகவே சித்தார்த் வீட்டினர் அவளை மருமகள் ஆக்கிக் கொள்ள விரும்பு கிறார்களா? தன்னைப் பற்றி அவர்களுக்கு என்ன

தெரியும்? சித்தார்த் ஏதாவது சொல்லி இருப்பாரா? ஒவ் வொரு முறையும் என்னை காப்பாற்ற அவர் தான் வரு கிறார்.

அவர் எனக்கு நல்ல தோழனாக, கணவனாக இருப் பார். அவர் கிடைக்க நான் பூர்வ ஜென்மத்தில் புண் ணியம் செய்திருக்க வேண்டும். அவருடன் இணைய கிடைக்கும் வாய்ப்பை தவற விட்டு விடக்கூடாது.

என் கனவு நனவாகவும் அவர் உதவுவார். அவரை மணந்து கொண்டால் நான் யாருக்கும் பயந்து ஓடி ஒளிய வேண்டாம். பெரியம்மாவும் அக மகிழ்ந்து போவார். சரி என்று சொல்லி விடலாமா? கே.எஸ்ஸை அதிகம் தெரியாதே. இவர் சொல்வதை எவ்வளவு தூரம் நம்ப லாம்? எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும்.

சித்தார்த்தை மணந்து கொள்ளும் வாய்ப்பை நழுவ விட்டு விடக்கூடாது. அவர் அன்பு எனக்கு வேண்டும். பாலைவனத்தில் பசுஞ்சோலை, பாற்கடலில் வலம்புரி சங்கு, வான்வெளியில் செஞ்சுடர் அவர். அவர் கிடைத் தால் உலகமே என் வசமானது போலதான்!

அந்த கனிந்த பார்வைக்கு ஈடு இணை எதுவுமில்லை; யோசித்துக் கொண்டே தன்னையறியாமல் அவளிட மிருந்த ஒரே பட்டுப்புடவையை உடுத்திக் கொண்டாள். மறுபடியும் சித்தார்த்தை ஸ்ரீரங்கத்தில் சந்தித்த போது கட்டியிருந்த அதே புடவைதான்.

இன்று அன்றை விட மிக அழகாய் இருந்தாள். மனதில் மகிழ்ச்சி கூடினாலே முகத்தில் அழகும், களையும் கூடி விடுகின்றன. பெரியம்மா வாங்கித் தந்த ஜிமிக்கியுடன் கூடிய வளையத்தை அணிந்து கொண்டாள்.

ஆரஞ்சும், கருப்பும் கலந்த கண்ணாடி வளையல்களை கையில் அடுக்கினாள். சின்ன தங்க நிற புள்ளியிட்ட வளையல்கள் அவள் கைகளில் மிக அழகாய் இருந்தன. உள்ளே வந்து பார்த்த முத்துமணி அசந்து போனாள்.

'அன்றைக்கு இவள் அழகை நான் சரியாய் கவனிக்கவில்லை. இவள்.. இவள்.. எத்தனை அழகாயிருக்கிறாள். கழுத்தில் பாசிமணியோடு இவளை நிற்க வைக்க முடியாது' என எண்ணியவாறே தன் கெம்புக்கல் அட்டிகையை கொண்டு வந்து கொடுத்தாள்.

ஆனால், வந்தனா அதை அணிந்து கொள்ள அன்போடு உறுதியாக மறுத்துவிட்டாள். மெல்லிய செயின் சின்ன லாக்கெட்டுடன் கூடியதை அணிந்து கொண்டாள்.

தலையில் முல்லைச்சரம். வழு வழுவென்று பின்னப்பட்ட கூந்தல் மீரா சிகைக்காய் விளம்பரத்தை நினைவுப் படுத்தியது. உச்சியிலிருந்து நுனிவரை அடர்த்தியான நீண்ட கூந்தல்; உரிமையுடன் ஒரு கூந்தல் சுருள் அவள் முகம் தொட்டு விளையாடியது.

மை தீட்டப்படாமலே அருமையான அழகான இமைகள் விழிகளுக்கு அழகு சேர்த்தன. அடர்த்தியான அளவான புருவங்கள். எடுப்பான நாசி. மாதுளை நிறங்கொண்ட ரசனைக்குரிய ஓவிய பிரம்மா வரைந்த உதடுகள். வரிசையாய் பளிரிட்ட முத்துப்பற்கள் - எந்த விதத்திலும் மாசு மருவில்லாத, குறை சொல்ல முடியாத அழகு ஒளி வீசிக் கொண்டிருந்தது அவளிடத்தில்.

நெற்றியில் சின்னதான திலகம் வர்ணனைக்கு எட்டாத அழகுடன் மிளிர்ந்தது. உலகில் உள்ள அழகெல்

லாம் அவளோடு போட்டி போட முடியாமல் ஓடி ஒளியப் போகின்றன. மலர்ப் பாதம் பதிய மென்மையாய் நடந்து வந்தாள்.

முத்துமணிக்கு உள்ளுக்குள் ஓர் பயம் ஒடியது. 'இந்த பேரழகை மாப்பிள்ளைப் பார்க்க நேர்ந்தால் என்ன நேருமோ?' கடவுளே இவளை கனவில் கூட மாப்பிள்ளை கண்டு விடக் கூடாது...' என மனதிற்குள் வேண்டிக் கொண்டாள்.

ஜானகி முக்கியமான உறவினர்களுடன் வந்த பொழுது சித்தார்த் வராதது நிம்மதியை ஏற்படுத்தியது.

"என்ன ஜானகி உன் மருமகள் இப்படி உருவி விட்டாற் போல் வந்து நிற்கிறாள். கோடீஸ்வரன் பொண்ணு ஒற்றை நகையுடன் வந்து நின்றால் என்ன அர்த்தம்?"

"எளிமையாய் இருப்பதும் அழகுதான்" என ஒரே வார்த்தையில் ஜானகி முற்றுப்புள்ளி வைக்க,

"ராசியான புடவை என்று இதைக் கட்டிக் கொண்டாள்" என முத்துமணி அன்று கட்டியிருந்த புடவையே இன்று கட்டியிருப்பதற்கு விளக்கம் கூறினாள்.

"அதனால் என்ன? உமா, புதுப்புடவையை மகாலெஷ்மிக்கு கொடு அம்மா. அவள் கட்டிக் கொண்டு வரட்டும்."

உமா தட்டுடன் அவளை அழைத்துச் செல்ல, வைர மாலையை வந்தனாவிற்கு போட பெட்டியை திறக்க, முத்துமணி சட்டென்று சொன்னாள்.

"சம்பந்தி இப்ப சும்மா பாக்கு தானே மாற்றிக் கொள்ளப் போகிறோம். நிச்சயதார்த்தம் கல்யாணத்திற்கு

முதல் நாள் மாலையில் செய்யும் பொழுது நீங்கள் நகை போடுங்கள். இப்போதே எதற்கு?''

''எப்பொழுது போட்டாலும் என் மருமகளுக்கு தானே போடப் போகிறேன். இருக்கட்டும்; இன்றைக்கு என் ஆசைக்கு போட்டு விடுகிறேன். பின் வாங்கிக் கொள்கிறேன். அதனால் மறுத்து எதுவும் சொல்ல வேண்டாம்.'' ஜானகிக்கு இதற்கு மேல் முத்துமணியால் மறுப்பு தெரிவிக்க முடியவில்லை.

கரும்பச்சை பட்டு உடுத்தி வந்தவள் மேல் வைத்த கண்ணை யாராலும் எடுக்க முடியவில்லை. ரெடிமேட் ப்ளவுஸ் மிக இயல்பாய் பொருந்தி இருந்தது. வைர மாலையை ஜானகி அணிவித்தாள். கண்படும் அளவிற்கு ஜொலித்தவளின் கன்னத்தில் சிறு புள்ளியை மையில் வைத்தாள் உமா.

திருமணம் இரண்டு மாதத்தில் வைப்பது என தீர்மானித்தார்கள். வெகு நேரம் ஆகிவிடவில்லை. இருந்தபோதிலும் ஜானகி வீட்டிற்கு கிளம்ப அனைவரையும் துரிதப்படுத்தினாள்.

''ஏனம்மா; இவ்வளவு அவசரப்படுகிறீர்கள்.''

''மகேஷ், புது மருமகளை கோவிலுக்கு அழைத்து வருவதாக மாணிக்க விநாயகருக்கு வாக்கு கொடுத்து இருக்கிறேன். அதனால் மகாலெஷ்மியை கோவிலுக்கு அழைத்து செல்ல வேண்டும். சம்மந்தியம்மா, நீங்களும் வருகிறீர்களா?''

''நானா..?'' என முத்துமணி தயங்க,

''நீ வேண்டாம் முத்துமணி. அவங்க மகாவை மட்டும் அழைத்துச் செல்லட்டும். இனி அவள் அவங்க வீட்டுப்

பெண் தானே? நீ மற்ற வேலைகளை கவனி'' என கே.எஸ். கூற.

வந்தனாவை அழைத்துக் கொண்டு புறப்பட்டனர். மலைக்கோட்டை வாசலில் காரை நிறுத்தும் பொழுது உமா கூறினாள்.

''அத்தை அங்கே பாருங்கள் சித்தார்த்.''

''அப்படியா?'' என்றவர் அருகே சித்தார்த் வந்து கார் கதவை திறந்து விட்டான்.

''இந்தா அழைத்துச் செல் உன் மனைப் பெண்ணை. பிள்ளையாரை வணங்கி விட்டு எங்கு வேண்டுமானாலும் போய் கொள்ளுங்கள். ஆனால் அரை மணி நேரத்தில் காருக்கு நீங்கள் வந்து விட வேண்டும்.''

''தேங்க் யூ அம்மா. ஹாய் வா! ஏற்கனவே ஐந்து வினாடிகள் வீணாகி விட்டன. வா, வா சீக்கிரம்'' என அவள் கைப்பற்றி கோவிலுக்குள் அழைத்துச் சென்றான்.

கண்மூடி விநாயகரை தியானித்து தீபராதனை முடிந்ததும் அர்ச்சகர் சின்ன நகைப்பெட்டியை அவனிடம் கொடுத்தார். அவள் விழிகளால் கேள்வி எழுப்ப அவன் புன்னகையுடன் பெட்டியைத் திறந்தான்.

அழகான வைர மோதிரம் வெல்வெட் உறையினுள் மின்னியது. வலக்கையின் மோதிர விரலைப் பற்றி அதை அணிவித்தான்.

நீண்ட அழகான விரல்கள். நகங்கள் சீராக வெட்டப் பட்டிருந்தன. நகங்கள் இளம் பிங்க் நிறத்தில் அவள் விரலுக்கு மேலும் அழகூட்டிக் கொண்டிருந்தன. விரல்களை மென்மையாய் வருடினான்.

''வா, நடந்து கொண்டே பேசலாம். அரைமணி நேரம் அரை வினாடியாய் ஓடிவிடும்'' இருவரும் படியேறினார்கள். சிறிது தூரம் படிகளை கடந்த பிறகு ஒரு தெரு வந்தது. ''இந்த தெருவில் நடந்து கொண்டே பேசலாம்; நெரிசலும் இருக்காது; நம்மை தெரிந்தவர்களோ, கவனிப்பவர்களோ கிடையாது; மனம் விட்டு பேசலாம்'' என்றவன்,

''ஏய்! இப்படி நிமிர்ந்து பார்! ஏன் கண்களில் கண்ணீர்? ஏதோ உன் மனதில் இருக்கிறது. என்னிடம் சொல்லலாம் என்றால் சொல்லலாம்.''

''எனக்கு அன்பை அனுபவித்து பழக்கமில்லை; அதுதான் கண்ணீர் வந்துவிட்டது. நான் உங்களுக்கு...''

சட்டென்று கைப்பிடித்து, அவளை தன்புறம் திருப்பி ஒற்றை விரலால் அவள் முகவாயைத் தொட்டு, ''இங்கே பார் கண்ணம்மா! எனக்கு ஏற்றவள் நீ மட்டும் தான். உன்னை பார்த்த கணமே நீதான் என் மனைவி என்று தீர்மானித்து விட்டேன். இப்பொழுதே உன்னை என் மனைவியாகத் தான் நினைக்கிறேன்.

உன்னுடைய இன்ப துன்பங்கள் வாழ்வு தாழ்வு எல்லாம் என்னைச் சார்ந்தது. உன் தனித்தன்மை பளிச்சிட நான் என்றும் உறுதுணையாக இருப்பேன். உன்னுடைய நிறை குறைகளுடன் உன்னை ஏற்றுக் கொள்கிறேன். என்னிடமும் நிறைகுறைகள் இருக்கும். எல்லா மனிதர்களும் அப்படித்தான். நீ எதைப் பற்றியும் கவலைப்படாதே. எனக்கு நீ மட்டும் தான் வேண்டும். வேறு எதைப் பற்றியும் அக்கறை இல்லை.''

''ஏன் சித்து அப்படி? நான் மட்டும் அப்படி என்ன உசத்தி?''

''தெரியலை. ஆனாலும் நீ உசத்தி தான். நீ ரொம்ப நல்ல பெண் வேறு.''

''ஒரு கல்யாணத்திற்கு நல்ல பெண் மட்டும் போதுமா?''

''போதாதம்மா போதாது; நல்ல மாப்பிள்ளையும் வேண்டும். நீ சொல் நான் நல்ல மாப்பிள்ளை தானா?''

''ரொம்ப, ரொம்ப'' எனச் சொல்லி மலர்ந்து சிரித்தாள்.

''ஹேய், இன்றைக்கு நீ மிகவும் அழகாய் இருக்கிறாய். அப்படியே நில்; உன்னை என் செல்லில் படம் பிடித்துக் கொள்கிறேன்.''

அவளை தனியாக நிற்க வைத்தும் அவளோடு சேர்ந்தும் படம் பிடித்துக் கொண்டான்.

''நமக்கு என்பதாம் கல்யாணம் நடக்கும் பொழுதும் இங்கே வந்து இதே மாதிரி படம் எடுத்துக் கொள்ள வேண்டும்.''

''அப்பொழுதும் யாருக்கும் தெரியாமல் இப்படித் தான் வர வேண்டுமா?''

''அப்படி வருவதில் தான் த்ரில்லிங் இருக்கிறது. ஆனாலும் நாம் யாருக்கும் தெரியாமல் வரவில்லையே? அம்மா, அண்ணிக்கு தெரியுமே? உனக்கு ஒன்று தெரியுமா? நிச்சயம் செய்யும் விழாவிற்கு நான் வரக் கூடாது என்று வலியுறுத்தி அதன்படியே நடத்தியது அம்மா தான்.

ஆனால் இன்று நான் உன்னை பார்க்காமல் ஏமாறக் கூடாது என்று தான் உடனே விமானம் பிடித்து வரச் சொன்னார்கள். திரும்ப காலையில் விமானத்தில் கிளம்ப வேண்டும்.

''சரி நேரமாகி விட்டது. வாருங்கள் கிளம்பலாம்; எல்லாரும் காத்திருப்பார்கள்.''

''மனசே வரவில்லை; இருந்தாலும் பெரியவர்களின் சலுகையை தவறாக பயன்படுத்தக் கூடாது என்பதால் போகலாம் வா'' என்றவன் அவள் கை வளையல்களைத் தட்டி,

''கீதம் அவளது வளையோசை

நாதம் அவளது தமிழோசை'' என முணுமுணுத்த வாறே நடந்தான். அவன் பின்னே அவள் தொடர்ந்தாள். மறுபடியும் காரில் ஏறி அமர்ந்தாள்.

''சொன்னபடி வந்துவிட்டீர்கள். நல்லப் பிள்ளைகள்.''

''அம்மா, என்னை நம் வீட்டில் இறக்கி விட்டு விடுங்கள்.''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. நீ பேசாமல் இந்த காரில் எங்களுடன் வா. மருமகளை அவள் வீட்டில் இறக்கி விட்டே செல்லலாம்.''

''வாவ்! நிஜமாகவா அம்மா?''

''என்றைக்கடா உன் அம்மா பொய் சொல்லி இருக்கிறேன்? நீங்கள் மூவரும் பின்னால் உட்காருங்கள். நான் முன்னால் உட்காருகிறேன்.''

வந்தனாவை நடுவில் விட்டு உமாவும், சித்தார்த்தும் இருபுறமும் அமர்ந்தனர்.

''சித்தார்த் மகாவுக்கு இனிப்பு ஏதும் வாங்கிக் கொடுத்தாயா?''

''ஓ! ஸாரி உமா! நான் மறந்தே போனேன்.''

''சூ! இதற்கு எதற்கு வருந்துகிறாய்? ஸ்வீட் எடு கொண்டாடு'' என கைப்பையை திறந்து சாக்லெட் பாரை எடுத்து நீட்டினாள்.

''நன்றி மோளே!'' என அவளிடமிருந்து வாங்கிப் பிரித்து வந்தனாவிடம் நீட்ட ''ஹேய் கையில் கொடுக்காதே; வாயில் போடு.''

வந்தனா முகம் சிவக்க சாக்லெட்டைக் கடித்தாள்.

''முழுசும் உனக்கில்லை; எங்க சித்தார்த்திற்கும் கொஞ்சம் கொடு.''

''ஐய! எச்சிலாயிடுச்சே!''

''அதற்கு அவன் அல்லவா கவலைப்பட வேண்டும்? பார்! அப்படியே வாயில் போட்டுக் கொண்டதை.''

''வாழ்வில் இதெல்லாம் இனிமையான தருணங்கள் என்று மகேஷ் உனக்கு சொல்லி தந்திருப்பானே? அது தான் அம்மா எந்நேரமும் பையில் சாக்லேட்டை வைத்துக் கொண்டு திரிகிறாயா?''

''சீ! போ சித்தார்த்'' என உமா சிணுங்க,

''இன்னும் அண்ணன் என்னென்ன சொல்லி தந்து இருக்கிறான்? எனக்கும் கொஞ்சம் டிப்ஸ் கொடு உமா.''

''டேய், அம்மா இங்கே உட்கார்ந்து இருக்கிறேன்டா.''

''எங்கே? எங்கே? காணோமே? நான் இதுவரை மை ஸ்வீட் கோள் பிரெண்ட் இருப்பதாக அல்லவா நினைத்துக் கொண்டிருந்தேன்.''

எல்லாரும் சிரிக்க... டிரைவரும் சிரித்தான்.

அப்போது தான் நினைவு வந்தவள் போல, ''அத்தை! இந்தாருங்கள்'' என வைரமாலையை கழட்டி நீட்டினாள்.

''ஏனம்மா கழட்டுகிறாய்? நீ போட்டுக் கொள்ள வேண்டியது தானே?''

''இதை பத்திரமாக பாதுகாக்க நீங்கள் தான் பொருத்தமானவர். அம்மாவும் இதை உங்களிடம் கழட்டி கொடுத்து விட்டு ஆட்டோவில் வீட்டிற்கு வந்து விட சொன்னார்'' என்றதும் மற்ற மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

ஏதோ சொல்ல வாயைத் திறந்த உமாவிடம் கண்களை காட்டிவிட்டு. சித்தார்த்திடமும் சைகை செய்து ''அதெல்லாம் வேண்டாம்; தெருமுனையில் காரை நிறுத்துகிறேன். உமா நீ கொண்டு போய் அவளை வீட்டில் விட்டு வா'' என்றாள் ஜானகி.

வைரமாலையை ஜானகியிடம் தந்துவிட்டு உமா பின்னே கீழே இறங்கினாள் வந்தனா.

அவர்களுடன் டிரைவரையும் அனுப்பி வைத்தனர்.

பின் ஜானகி யோசனையுடன் இருந்த சித்தார்த்திடம்,

''என்னப்பா?'' என்றாள்.

''ஒன்றுமில்லையம்மா; இந்த வீட்டில் என்னமோ தப்பாகத் தெரிகிறது. எதையோ நாம் முக்கியமான ஒன்றை தவற விட்டாற் போல் தோன்றுகிறது.''

''அப்படி ஏதும் இருக்காதுப்பா. ஊதாரி வருங்கால பிச்சைக்காரன்; கஞ்சன் என்றைக்கும் நிரந்தர பிச்சைக்காரன் என்பார்கள். இவர்கள் இரண்டாம் வகை போலிருக்கிறது. ஆனால் என் மருமகள் கிடைத்தற்கரிய ரத்தினம்; பிறந்த இடத்தைப் பார்த்து அவளை தவற விட்டு விடக் கூடாது. ஒரு வேடிக்கை பாரேன். மகாவுக்கு அவங்க

அம்மா, அப்பா இருவரின் சாயலும் இல்லை. குணத்திலும் அப்படித்தான் போலும். பார்வையில் கனிவு, அன்பு, நிறைவு எல்லாம் இருக்கிறது.

சின்ன வயசு தான். ஆனால் எந்த விஷயத்திலாவது பேராசை.. வேண்டாம்... ஒரு சின்ன ஆசையாவது இருக்கிறதா? உரிமையுடன் போட்டுக் கொள்ள வேண்டிய நகையைக் கூட வருத்தமின்றி கழட்டித் தருகிறாள். யாரை பார்த்தாலும் வசீகரித்து விடுவாள். என் பிள்ளை தலைச்சுற்றி விழுந்ததில் எந்த ஆச்சரியமும் இல்லை. அவளும் உன்னிடம் அப்படித்தான் இருக்கிறாள்.''

''எப்படியம்மா அப்படி சொல்கிறீர்கள்? அவள் என்னிடம் வார்த்தைகளை எண்ணி எண்ணி தானே பேசுவாள்.''

''போடா. அவள் கண்ணும், முகமும் ஆயிரம் கதைகள் பேசுகின்றன. அதைக் கூட புரிந்து கொள்ளத் தெரியாமல் என்ன கலெக்டர் நீ? ஒரு பெண்ணின் மனதை படிக்கத் தெரியாதவன் எப்படி பல்லாயிரக்கணக்கான மக்களின் மனங்களை படிப்பாய்?''

''என்ன செய்வது? கெட்டிக்கார அம்மாவிடம் இதற்கு ட்ரெய்னிங் எடுத்துக் கொள்ள எனக்கு நேரமில்லாமல் போய்விட்டதே. அம்மா என் ஈமெயில் முகவரி தான் உங்களுக்கு தெரியுமே! தினமும் ஒன் அவர் வேண்டாம்... ஒரு பதினைந்து நிமிடமாவது எனக்கு வகுப்பு எடுங்கள்.''

''இதெல்லாம் சொல்லிக் கொடுத்தால் வராது. உன் சொந்த புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி கற்றுக் கொள். ஐ.ஏ.எஸ் பரீட்சை கூட சுலபம் என்பாய்.''

''எங்களுக்கு முன்னுதாரணமாய் நீங்களும், அப்பாவும் இருக்கும் பொழுது நாங்கள் கற்றுக் கொள்ள கஷ்டப்பட வேண்டியதில்லை. வாழ்க்கை, தொழில், அன்பு எல்லாவற்றிற்கும் நீங்கள் தான் முன்மாதிரி. மகாலெஷ்மி எல்லாருக்கும் உதவுவதில் உங்களை மாதிரியே தான்.''

''தம்பி, நீ எனக்காக சொல்லாதே. தன் உயிரை பொருட்படுத்தாமல் அடுத்தவர் உயிரை காப்பாற்றுவது சாதாரண விஷயமல்ல. ஆனால் அவளை அவள் வீட்டில் கொண்டாடுபவர்கள் இருப்பார்களோ என்பது சந்தேகமாய் இருக்கிறது.''

''உண்மை தான் அம்மா. முதல் முறையிலேயே ஐ.ஏ.எஸ். முதன்மைத் தேர்வு தேறியிருக்கிறாள். ஆனால் அவள் வீட்டில் அதை பெருமையாக நினைக்காவிட்டாலும் அவளை ஊக்கப்படுத்தவாவது செய்யலாம் அல்லவா? அவளிடம் நான் எதுவும் கேட்கவில்லை. இருந்த போதிலும்... எரிகின்ற விளக்காய் இருந்தாலும் தூண்டிவிட ஆள்வேண்டும்.''

''இல்லை: நீ எதுவும் கேட்க வேண்டாம். அவளே சொல்வாள். அப்புறம் நீ அவளுக்கு போன் செய்து நீ வந்த விஷயத்தைச் சொல்ல வேண்டாம் என்று சொல். வீட்டில் யாரிடமாவது சொல்லி வைக்கப் போகிறாள். ஏனோ அந்த வீட்டினர் மேல் நம்பிக்கை வரமாட்டேன் என்கிறது.''

அலைபேசியில் அவளை தொடர்பு கொண்டான்.

''ஹாய்! நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். நான் சொல்வதை மட்டும் கேட்டுக் கொள். நாம் சந்தித்த

விஷயத்தை யாரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டாம்; சில பாதுகாப்பு காரணத்தால் சொல்கிறேன்.''

''ம். சரி'' தீவிரவாதிகள் அவன் வேலை செய்யும் மாநிலத்தில் இருப்பதை அறிவாள். மேலும் அவன் பணி மிகுந்த பிரச்னை நிறைந்தது என்பதும் தெளிவாய் தெரிந்திருந்ததால் அவன் சொன்னதை எந்தவித மறுப்பும் இன்றி ஏற்றுக் கொண்டாள். வீட்டில் கொண்டு வந்து விட்ட உமாவிடம்,

''உனக்கு ஏனம்மா சிரமம்? ஆட்டோவில் ஏற்றி அனுப்பி இருந்தாலே மகா வந்திருப்பாளே?'' என முத்து மணி கேட்டாள்.

''எங்கள் வீட்டுப் பெண்ணை தனியாக அனுப்ப மாமாவும், அத்தையும் விரும்பவில்லை.''

அவள் கிளம்பிச் சென்றதும் முத்துமணி வந்தனாவிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டு துளைத்து விட்டாள். ''என்னம்மா ஆச்சு? ஏன் இவ்வளவு நேரம்? எல்லாருமே கோவிலுக்குப் போனீங்களா? அல்லது யார் உன்னுடன் கோவிலுக்கு வந்தார்கள்? பின் வீட்டிற்கு போனீங்களா? இன்றைக்கு அவ்வளவு கும்பல் இருக்காதே? அப்படியிருக்கையில் ஏன் அதிக நேரமாகியது? உன் மாமனார் என்ன சொன்னார்? எல்லாரும் உன்னிடம் எப்படி பழகுகிறார்கள்? நன்றாகப் பேசினார்களா? என்ன சொன்னார்கள்? வைர மாலையை கழட்டிக் கொண்டார்களா? வேறு ஏதும் முக்கியமான விஷயம் பேசினார்களா? உன்னைக் கொண்டு வந்து விட்டுப் போன பெண் எப்படி?''

வந்தனா மென்மையாய் புன்னகைத்தாள். ''ஒன்றும் கவலைப்பட வேண்டாம் அம்மா; அவர்கள் நல்ல

மனிதர்கள் கோவிலுக்கு மாமா வரவில்லை. அவரும் மகேஷ் அண்ணாவும் சென்று விட்டார்கள். நான் வீட்டிற்குச் செல்லவில்லை. இங்கே வந்து விட்டேன். சரிம்மா, எனக்கு படிக்கும் வேலையிருக்கிறது'' என நகர்ந்தாள்.

அவர்கள் நல்லவர்களாய் இருப்பது தான் கவலைக் குரிய விஷய'ாக இருக்கிறது. உன்னைப் போன்ற அருமையான பெண்ணை யாருக்குமே பிடித்துப் போகுமே? உன்னை அவர்களுடன் நெருங்க விடக்கூடாது. வை மாலையை கழட்டிக் கொண்டு போகவே அவர்களுக்கு இஷ்டமே இல்லையே? அதனால் தான் இவளிடமே சொல்லி அனுப்பினேன் கழட்டிக் கொடுத்து விடுமாறு. இரண்டு மாதங்கள் எப்படியாவது சமாளிக்க வேண்டும். என் பெண்ணை இப்பொழுது இவர்கள் முன் காட்டினால் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்; மாப்பிள்ளை என் பெண்ணை சந்தித்து சம்மதிக்கும் வரை மகாவை வைத்து தான் காய் நகர்த்த வேண்டும். இந்த நிமிடம் கூட மகாவை வீட்டை விட்டு இந்த திருமணத் திலிருந்து விரட்டி விடலாம். ஆனால் இவளால் எனக்கு ஆக வேண்டிய காரியம் இருக்கிறது. அதனால் அனு சரித்துதான் போக வேண்டும். எதற்கும் இரண்டு மடங்கு அதிக கவனமாய் இருக்க வேண்டும். இவள் நல்ல பெண் தான்; இருந்தாலும் என் பெண்ணுக்கு போட்டி என்றால்...

நான் எதைச் செய்யவும் தயங்க மாட்டேன். எங்க வீட்டு பெண்ணாமே? என் பெண்ணையல்லவா அப்படிச் சொல்ல வேண்டும்? கவனமாய் விஷயத்தைக் கையாள வேண்டும். மகிளா அங்கேயே இருக்கட்டும்.

காலம் கனிந்ததும் அவளை இங்கே வரவழைக்கலாம். மகாவுக்கும், மாப்பிள்ளை வீட்டிற்கும் எந்தத் தொடர்பும் இல்லாமல் செய்ய வேண்டும் என எண்ணிக் கொண்டே திட்டங்களைத் தீட்டினாள் முத்துமணி. கடவுளின் கணக்கு என்னவோ?



11

''மேடம் வணக்கம். இதோ நீங்க கேட்ட விவரம் எல்லாம் இந்த ஃபைலில் இருக்கிறது.''

''விவரங்களை சுருக்கமாகச் சொல்லுங்கள். மேட்டூரில் அனல் மின் நிலையம் மூலம் 600 மெகாவாட் மின் சாரத்தைத் தயாரித்து அதை 400 கிலோ வாட் உயர் அழுத்த கம்பி வழியாக அரசூருக்கு கொண்டு சென்று, மற்ற பகுதிகளில் விநியோகிப்பதற்கான திட்டம் அக்டோபர் இரண்டாம் தேதி 2009-ல் அறிவிக்கப் பட்டது. மேட்டூர் - அரசூருக்கு இடையே 110 கி.மீ. நீளத்தில் மின் வழித்தடம் அமைக்க வேண்டும். அதற்கு மொத்தம் 324 மின் டவர்கள் அமைக்க வேண்டும். எந்தெந்த இடங்கள் வேண்டுமென திட்டமிட்டு, மின் வழித்தடம் செல்லும் பகுதியில் உள்ள நிலம் எடுக்கவும் தகுந்த ஏற்பாடுகள் செய்தார்கள். இதை எதிர்த்து விவ சாயிகள் சிலர் வழக்கு தாக்கல் செய்தார்கள். அப்புறம் என்ன நடந்தது?''

''உயர் அழுத்த மின் கம்பித்தடம் குறித்து, சம்பந்தப் பட்டவர்களை அழைத்துப் பேசி திருப்பூர் மாவட்ட

கலெக்டரே முடிவு செய்யலாம் என்று ஐகோர்ட்டு உத்தரவிட்டது. அதனால் மாவட்ட கலெக்டர் கூட்டம் நடத்தினார். விவசாயிகளை அழைத்துப் பேசினார். சாத்க பாதகங்கள் அலசி ஆராயப்பட்டன. கலெக்டர் வாதத்தை அவர் செயலில் இருந்த நியாயத்தை விவசாயிகள் புரிந்து கொண்டனர். முதலில் திட்டமிடப்பட்ட பாதையி லேயே மின் கோபுரங்கள் அமைக்க அனைவரது சம் மதத்துடன் உத்திரவிட்டார்.''

''பின் ஏன் திட்டம் நிறைவேற்றப்படவில்லை? விவசாயிகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் தடையற்ற மின்சாரம் வழங்கவேண்டும் என்ற நோக்கத்தில் தொடங்கப்பட்ட திட்டம் நிறைவேறியிருந்தால் கடந்த மார்ச் மாதமே மின்விநியோகம் தொடங்கி இருக்குமே?''

''இல்லை மேடம்; திருப்பூர் மாவட்ட கலெக்டர் பணியிட மாற்றம் செய்யப்பட்டார். பணியில் சுணக்கமா யிடுச்சு. ஏறக்குறைய முக்கால்வாசி வேலையை அவர் முடித்து இருந்தார்.''

''அடுத்து வந்தவர் முடித்து விட்டாரா? இல்லையா? என்ன பிரச்சனையால் பணி தாமதப்படுகிறது?''

''அடுத்த கலெக்டர் வேலை நிறுத்தச் சொல்லிவிட்டு அந்த மின் கம்பித் தடத்துக்காக வேறு பாதையைத் தேர்வு செய்து 2011 ஜூலை மாதம் அதற்கான உத் தரவை பிறப்பித்தார்.''

''அடடா! நேரவிரயம், பண விரயம் எவ்வளவு ஆகி யிருக்கும்?''

''அதைவிட இந்த புதிய மாற்றுப் பாதையால் பாதிக் கப்படுவதாகக் கூறி வேறு சில விவசாயிகள் ஐகோர்ட் டில் வழக்கைத் தாக்கல் செய்து விட்டனர்.''

''ஐகோர்ட் என்ன தீர்ப்பு அளித்தது?''

''மாவட்ட கலெக்டரின் உத்தரவை பெரிதாகக் கருதாமல் மக்களின் நலன் சார்ந்த பாதையில் திட்டத்தை மின்சார வாரியம் செயல்படுத்தலாம் என்று கடந்த ஏப்ரல் மாதமே ஐகார்ட் உத்தரவிட்டது. ஆனால் இந்த உத்தரவை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் தனியார் நிறுவன நிர்வாக மேலாளர் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்து இருக்கிறார். இந்த வழக்கில் நாம் நம் மின்சார வாரியம் சார்பாக பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும்'' என்ன செய்யலாம்? என இயக்குநரான நீங்கள்தான் சொல்ல வேண்டும்.''

''எது நியாயமோ, எது நேர்மையான நன்மை தரும் முடிவோ, அதைத்தான் தாக்கல் செய்ய வேண்டும். நாட்டோட பொருளாதாரம் தொழில் துறையைச் சார்ந்தது. ஆரம்ப காலத்தில் இந்தியா பொருளாதாரம் பொதுத் துறை நிறுவனங்களை சார்ந்து இருந்தது. இப்ப தனியார் துறையைச் சார்ந்ததாய் மாற்றிக் கொண்டு வருகிறோம். அதற்காக தனியார் நிறவனங்கள் என்ன சொன்னாலும் ஏற்றுக் கொள்ள முடியுமா? அவர்கள் வளர்ச்சிக்காக மக்கள் நலனை புறக்கணிக்கக் கூடாது. மக்கள் நலனுக் காகத்தான் நாம் இருக்கிறோம். தனியார் நிறுவன வளர்ச்சி மக்கள் வளர்ச்சி ஆகாது. மொத்தமுள்ள 324 மின்சார டவர்களில் இன்னும் எத்தனை டவர்கள் பாக்கி யிருக்கின்றன?''

''திருப்பூர் மாவட்டம் அவிநாசி நம்பியம்பாளையம் சுண்டக்கம்பாளையம் ஆகிய கிராமங்களில் நிறுவப்பட வேண்டிய 9 மின்கோபுரங்கள் தவிர மற்றவை அனைத் தும் நிறுவப்பட்டு விட்டன. முதலில் திட்டமிட்ட

மின்தடத்தில் அதிகமாக பஞ்சாயத்து நிலங்களிலேயே டவர்களை அமைத்து விடலாம். ஆனால் புதிய மின் தடத்தில் சென்றால் விவசாய நிலங்கள் அதிகம் தேவைப் படும்.''

''சரி, இதை அப்படியே எழுதி எனவே இந்தத் திட்டத்தை பழைய மின் தடத்திலேயே நிறைவேற்ற அனுமதிக்க வேண்டும் என மனு தாக்கல் செய்து விடுங்கள். முதல்வரிடம் நான் பேசுகிறேன். மின்சார பற்றாக்குறை தீர அவரும் பெரு முயற்சி செய்து வருகிறார்.''

''சரிங்க மேடம். அப்படியே உடனே செய்துவிடுகிறேன்'' என அவர் கிளம்பிச் சென்றார்.

சற்று நிம்மதிப் பெருமூச்சு விட்டு ஒலி அளவை குறைத்து வைத்திருந்த அலைபேசியை கவனித்தாள். அழைத்துச் சித்தார்த்தன்.

''என்னங்க மேடம். வேலை முடிந்து விட்டதா? மணி ரெண்டாகி விட்டது. சாப்பிட்டீர்களா இல்லையா?''

''ஐயோ ஸாரி சித்து. முக்கியமான வேலை: ஐகோர்ட்டுக்கு பதில் மனுதாக்கல் செய்ய வேண்டும். அதைப் பற்றி பேசிக் கொண்டிருந்தோம்.''

''என்ன விஷயம்?''

விஷயத்தை எடுத்துச் சொன்னாள் வந்தனா. ''நீ செய்தது சரிதான் மகி. நாம் நேர்மையாக நடந்து கொண்டால் தான் நிர்வாகம் நன்றாக இருக்கும். எக்காரணம் கொண்டும் நியாயத்தையும், நேர்மையையும் மக்கள் நலனையும் விட்டுக் கொடுத்து விடக்கூடாது. அதற்காக உன் உடல்நலத்தைக் கெடுத்துக் கொள்ளாதே. நம் மகள் பசிக்கிறது என உன்னை வயிற்றில் கிள்ளவில்லையா?''

''ம். அவள் கிள்ளுவது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

''நீ வேலையில் கவனமாய் இருந்ததால் என் மகள் போன் பேசினாள்.''

''ம்; பேசுவாள், பேசுவாள் இன்னும் பிறக்காத மகள் உங்கள் கைப்பிடித்துக்கூட நடப்பாள்.''

''அவள் என் மகளாக்கும்; எதுவும் செய்வாள். முதலில் நீ சாப்பிடு. உன் பக்கத்தில் இருந்து உன்னை கவனிக்க முடியவில்லை கண்ணம்மா.''

''சூ! நீங்கள் தான் என் மனதிலேயே இருக்கிறீர்களே! நமக்குள் தூரம் எல்லாம் ஒரு பொருட்டல்ல. நான் மின்சாரத்துறை இயக்குநராய் இருப்பதால் இங்கு இருக்க வேண்டியிருக்கிறது. நீங்கள் வட மாநிலத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். இதெல்லாம் நமக்குள் தற்காலிக இடைவெளிதான்.''

''ஏய்! மகா என்ன தூங்கி விட்டாயா? கனவா? லைப்ரரியில் படிப்பாய் என்று வந்தால் இப்படி தூங்கிக் கொண்டிருக்கிறாயே? யுனிவர்சிட்டி மெடல் ஸ்டூடண்ட் தூங்கலாமா? இந்த செமஸ்ட்டர்லேயும் அடிச்சு தூள் கிளப்பி விட்டாய். நீ வகுப்பிலேயே தூங்கலாம். அதற்காக இங்கே வரவேண்டியதில்லை. ஏய் உன் கனவிலேயாவது ரொமான்ஸ் உண்டா? இல்லே அங்கேயும் படிப்பு பினாத்தல் தானா?''

''உதைக்கப் போகிறேன் உன்னை. வெகு நேரம் கண் விழித்து தொடர்ச்சியாகப் படிப்பதால் கொஞ்ச நேரம் கண் அயர்ந்து விட்டேன். செய்தித் தாளில் அன்றைக்கு நான் உன்னிடம் கூறியது போலவே ஐகோர்ட் தீர்ப்பு

வந்திருக்கிறது. அதை படித்தேனா? அப்படியே உறங்கி விட்டேன்.''

''என்ன தீர்ப்பு மகா?''

''நான் சொன்னது போலவே மின்சார வாரியம் பதில் மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். அதற்கு நேற்று ஐகார்ட் பிறப்பித்த உத்தரவு என்ன தெரியுமா? ஆம் பத்தில் திட்டமிடப்பட்ட பாதையில் அதிகமாக பல் சாயத்து சாலைகளே வருகின்றன. அதனால் பாதிக்கப் படும் விவசாயிகளின் எண்ணிக்கை குறைவு. மற்றொரு பாதையில் இந்தத் திட்டத்தை செயல்படுத்தினால் பாதிக்கப்படும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிக மாகும். மேலும் முதலில் நிர்ணயிக்கப்பட்ட மின் பாதை பல்வேறு நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் திட்டமிடப்பட்டதாகும். ஆனால் அதை புறக்கணித்து விட்டு, வேறு பாதைக்கும் அடுத்த கலெக்டர் உத்தர விட்டுள்ளார். மின் பாதைகள் தொடர்பான முடிவை எடுக்கவோ, பாதையை அமைத்துக் கொடுக்கவோ கலெக்டருக்கு அதிகாரம் இல்லை. எனவே ஆரம்பத்தில் நிர்ணயிக்கப்பட்ட பாதையில் மின்சாரத்தைக் கொண்டு செல்லலாம். இந்தத் திட்டத்தை எவ்வளவு சீக்கிரம் முடியுமே அவ்வளவு சீக்கிரம் நிறைவேற்ற வேண்டும். அப்பீல் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என சொல்லி யிருக்கிறார்கள்.''

''வாவ்! அன்றைக்கு நீ எப்படியப்பா அவ்வளவு சரி யாகச் சொன்னாய்? இப்பவே நீ கலெக்டர் ஆகிவிட் டாய். மின்சாரத்துறை இயக்குநர் மாதிரி சிந்தித்து இருக் கிறாய். உன்னை மாதிரி ஆட்கள் தான் நம் நாட்டிற்கு

தேவை. மின் பற்றாக்குறையால் மாநிலமே தவித்துக் கொண்டிருக்கிறது. எத்தைத் தின்றால் பித்தம் தெளியும் நிலை. தொலைநோக்குத் திட்டங்கள் நான் நம் மாநிலத்தை உயர்த்தும்.''

''ராகினி. நாம் இப்படி பேசிக் கொண்டிருந்தால் போதாது. நாம் தான் ஏதாவது செய்ய வேண்டும். நம்மைப் போன்ற இளைஞர்கள் நல்லது செய்ய முன் வரவேண் டும். கிராமங்களில் அடிப்படை வசதிகள் கூட இல்லாத மக்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் தெரியுமா? நாம் கேம்ப் சென்று வந்த மலைக்கிராமத்தில் மருத்துவ வசதியே இல்லை. அவர்களுக்கு நாம் ஏதாவது உதவி செய்ய வேண்டும்.''

''நாம் என்னப்பா செய்ய முடியும்? மெடிக்கல் கேம்ப் பிற்கு ஏற்பாடு செய்தால் கூட ஒரு வாரம் அல்லது பத்து நாட்கள் தான் இருக்க முடியும்.''

''அவர்கள் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு செவிலியர் பயிற்சி மாதிரி ஏதாவது கொடுக்கலாம். அதற்கு லயன்ஸ் கிளப் ரோட்டரி கிளப் உதவியைக்கூட நாடலாம். மற்ற கல்லூரி சேர்மன்களிடம் பேசலாம்.'' என்று சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

''இரு மகா; நானும் வருகிறேன். கனவில் கொஞ்சம் சிரித்துக் கொண்டிருந்தாயே? வந்தது எந்த கய்?''

''சூ! சும்மாயிரு.''

''ஏய்! என்ன சொல்லும்பொழுதே முகம் சிவப்பாகிறது? ரூஜ் பூசினாற் போல் கன்னங்கள் இளம் சிவப்பாகி விட்டன. ம்... சம்திங் சம்திங்... கோயிங்... சொல்லிடு.''

''ம்ஹூம். ஒன்றுமில்லையப்பா. நான் வருகிறேன்.''

நழுவி ஓடியவளைப் பார்த்துக் கிண்டலடித்துச் சிரித்தாள் தோழி.

நிச்சயம் முடிந்த நாள் இரவு அவள் அலைபேசியில் தொடர்பு கொண்டான் சித்தார்த். ''மகி! நான் இரவு ஊருக்குக் கிளம்புகிறேன். நேரம் கிடைக்கும் பொழுது பேசுகிறேன். இரவில் நீ ப்ரீ தானே? அப்போது பேசலாமா?''

''ம். நான் படித்துக் கொண்டுதான் இருப்பேன். நீங்கள் பேசுங்கள்.'' அதன்படியே தினமும் இரவு அவளுடன் சிறிது நேரம் கிட்டத்தட்ட அரை மணி நேரம் பேசுவான். பின் மனமில்லாமல் 'குட்நைட்' சொல்லி வைத்து விடுவான். இதை கே.எஸ். வீட்டில் ஒருவரும் அறியவில்லை. அன்றைக்கு பகலில் விடுமுறை என்று வீட்டில் இருந்தாள். தன் அறையை விட்டு அதிகம் வீட்டினுள்ளே அவள் புழங்கியது இல்லை. அதே போல் தான் தங்குவதற்காக இரண்டாயிரம் ரூபாயை கே.எஸ்ஸிடம் அவள் கொடுத்து விட்டிருந்தான். எனவே குற்ற உணர்ச்சியோ, குறுகுறுப்பு உணர்வோ இல்லாமல் அந்த வீட்டில் தங்கியிருக்க முடிந்தது. படித்துக் கொண்டிருந்தவளுக்கு ஏனோ பாடத்தில் கவனம் செல்லவே இல்லை. சித்தார்த் கைவிரல்களைப் பற்றி வருடுவது போன்ற உணர்வு எழுந்தது. காதுக்குள் ''மகிம்மா'' என கிசுகிசுப்பது போல் ஓர் ஆனந்தும் அலை அலையாய் எழ... உடனே அவனைப் பார்க்க வேண்டும்... இல்லாவிட்டால்... குரலையாவது கேட்க வேண்டும்... எனத் தோன்றியது. அலைபேசியை எடுத்து அவன் எண்ணை அழுத்தினாள். பின் தான் 'சே! என்ன முட்டாள்தனம்!

அவர் வேலை நேரத்தில் தொந்தரவு செய்யலாமா?' எனத் தோன்ற ஒரு ரிங்கிலேயே தொடர்பைத் துண்டித்து விட்டாள். ஆனால். அவள் துண்டித்த மறுகணமே அலைபேசி அழைத்தது. சித்தார்த் தான் ''மகிம்மா!'' அழைப்பே அமுதமாய் இருந்தது. ''ம்.'' சித்து...''

''இப்பொழுது தான் உன்னை நினைத்தேன். உன்னைப் பார்க்க வேண்டும் என்று மனது துடித்தது. அட்லீஸ்ட் உன் குரலையாவது கேட்க வேண்டும் என்ற பரபரப்பு எழுந்தது. ஆனால் நீ கல்லூரியில் இருப்பாயே? என்று மனதை கட்டுப்படுத்திக் கொண்டேன். அடுத்த வினாடி உன் மிஸ்டு கால்.''

''இன்றைக்கு கல்லூரி விடுமுறை. பவுண்டர்ஸ் டே. படிப்பில் கவனமே போகலை. அதான்...'' என இழுத்தவளை வினாடியில் புரிந்து நகைத்தான்.

''தேங்க்யூ டியர். இன்றைக்கு தான் நீ இப்படிச் சொல்லியிருக்கிறாய்! ஐ மிஸ் யூ.''

''ஐ டூ...'' என தன்னை மறந்து அவள் சொல்ல...

''உடனே கிளம்பி வரவா?''

''எதற்கு?''

''நாளைக்கே கல்யாணம் செய்து கொள்ளலாமா?''

''ம்ஹூம். எக்ஸாம் முடியட்டும்.''

''ம். இன்னும் எத்தனை நாட்களுக்குக் காத்திருப்பது? நீ வருகிறாயா இங்கே?'' என்றவன்.

''ஒன் மினிட்.''

''ஓ.கே. ஓ.கே.''

''நான் பிறகு பேசுகிறேன்'' என போனை அணைத்தான். ஏதோ வேலை வந்திருக்கும் என நினைத்த பொழுது குறுஞ்செய்தி வந்தது. ''ப்ளூ டூத் ஒப்பன் செய்யச் சொல்லி வந்திருந்தது. சொன்னது போலவே செய்தாள். உன் பார்வையில் பைத்தியமானேன்.

பாடலை அவள் அலைபேசிக்கு அனுப்பினான்.

''பெண்ணாக இருந்தவள் உன்னை நான் இன்று காதலி செய்தேன்.''

அது பாடிய பொழுது முத்துமணி வந்து சேர்ந்தாள். சிவந்த கன்னங்கள். கனவில் மிதந்த கண்கள். சிரித்த உதடுகள். அலைபேசியில் ஒலித்த பாட்டு அவளது குட்டும புத்திக்கு என்ன நடக்கிறது என்பதைத் தெளிவாக உணர்த்தி விட்டது.

'ஆகா போன் கனெக்ஷன் உருவாகி விட்டதா? நான் எவ்வளவு கஷ்டப்பட்டு மாப்பிள்ளை வீட்டார் இரண்டு முறை பார்க்க வந்த பொழுது இவளை வெளியே அனுப்பி சமாளித்துக் கொண்டு இருக்கிறேன்.

வீட்டிற்கு போன் வந்தபோது கூட இதெல்லாம் அவளுக்குப் பிடிக்காது என்று பட்டென்று சொல்லி தடுத்து இருக்கிறேன். ஆனால் வேறு ரூட்டில் கதை ஓடிக் கொண்டிருக்கிறதே? எப்படி இவளைப் பார்க்காமலேயே இப்படி உருகி வழிகிறான்? ஆத்தாள் ஆகா ஓகோ என்று இவளை இப்படி உருகி வழிகிறான்? ஆத்தாள் ஆகா ஓகோ என்று இவளை புகழ்ந்து வைத்திருக்கிறாளா? இது நல்லது அல்லவே? முதலில் இந்த தொடர்பைத் துண்டிக்க வேண்டும். எதிலும் ஆசை இல்லாதவள் மாதிரி படிப்பு ஒன்றே முக்கியம் என்பது மாதிரி காட்டிக்

கொண்டாளே? எல்லாம் நடிப்பா? ஒடு மீன் ஓட உறு மீன் வரக் காத்திருக்குமாம் கொக்கு என காத்திருப்பவளா? என் பெண் வாழ்க்கையை நீ பறிக்க விடமாட்டேன்.'

முத்துமணி உள்ளூர கறுவிக் கொண்டே காத்திருந்தாள். வந்தனா எழுந்து வெளியே சென்றபொழுது மெதுவாய் அவள் அலைபேசியை எடுத்துக் கொண்டு நழுவினாள். பின் அதைத் தூக்கி தண்ணீர்த் தொட்டியில் போட்டாள். வந்தனா அலைபேசியைத் தேடினாள். 'பிறகு பேசுகிறேன் என்றாரே. எப்பொழுது பேசுவார்? எல்லாரும் இருக்கும்பொழுது பேசிவிடப் போகிறார். அப்புறம் கேலி, கிண்டல் பேசியே ஒரு வழியாக்கி விடுவார்கள். எல்லா இடங்களிலும் தேடி முடிவில் எதேச்சையாக தண்ணீர் தொட்டியில் செயல் இழந்து கிடந்ததைக் கண்டாள். பதறி எடுக்க இனி உபயோகப்படாது என்பது புரிந்தது.

எப்படி தண்ணீர்த் தொட்டியில் விழுந்தது? என யோசித்தாள். அவளுக்கு ஒன்றும் தெரியவில்லை. இருக்கும் செலவில் இன்னொரு அலைபேசி வாங்குவது அவளுக்குக் கட்டுப்படியாகாது. இந்த அலைபேசியும் வாங்கி பல வருடங்கள் ஆகிவிட்டன. சிலர் உபயோகிக்கும் விதத்தில் பொருட்கள் பல நாட்கள் பழுதாகாமல் இருக்கும். அது போலத்தான் அவளது அலைபேசியும். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என விட்டு விட்டாள். ஆனால் சித்தார்த்துடன் பேசாமல் இருப்பது சிரமமாக இருந்தது.

இரவு நேரத்தில் வெளியில் சென்று பேச முடியாது. பகல் நேரத்திலோ இரண்டு முறை வெளியில் இருந்து முயற்சி செய்து லைன் பிஸியாக இருந்ததால் விட்டு விட்டாள். அவன் வேலை; இவள் கல்லூரி வகுப்பு தொடர்ந்து பேசுவதற்கு நேரம் தரவில்லை. 'எப்படியாவது அவர் பேசலாம் இல்லையா?' என மனசுக்குள் ஏக்கமாக இருந்தது. 'வீட்டு போனிற்காவது முயன்று இருக்கலாமே?' என எண்ணினாள்.

ஆனால் அவளுக்கெங்கே தெரியும்? அவன் தினமும் முத்துமணியிடம் பேசி அவளைத் தொடர்பு கொள்ள முயற்சித்துக் கொண்டு இருக்கிறான் என்று. பெரிய பதவியில் இருக்கும் பந்தா, கௌரவம் எதுவுமின்றி அவளுடன் பேசினால் போதும் என்று தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருந்தான்.

ஆனால் முத்துமணி சுருக்கமாய் பேசி போனை வைத்து விடுவாள். மரியாதையான நாசுக்கான பேச்சை மீறி அவனால் எதுவும் அவளிடம் கேட்க முடியவில்லை. ஜானகி இரண்டுமுறை பழக்கூடைகள், பூ மருமகளுக்கு அனுப்பி வைத்தாள். பழம் என்ன ஆனதோ? தெரியாது. ஆனால் பூ கோவிலுக்குப் போய் சேர்ந்தது.

உமாவிற்கு உண்மையிலேயே ரொம்ப கோபம். ''என்ன அத்தை மகாலெஷ்மியை பார்க்க நம்மை விடவே மாட்டேன் என்கிறார்கள். அந்த அம்மா ரொம்ப பழங்காலமா? அல்லது வேண்டுமென்றே செய்கிறாரா? பெண்ணை மாப்பிள்ளையுடன் தான் திருமணத்திற்கு முன் சகஜமாகப் பழக அனுமதிக்க மாட்டார்கள். அதற்காக நம்முடன் கூடவா? போன் செய்தாலும் அவளுடன் பேச முடிவதில்லை. வாருங்கள் நாம் இன்றைக்கு நேரே

அவர்கள் வீட்டிற்குச் சென்று ரெண்டில் ஒன்று பார்த்து விடுவோம்.''

''பொறு உமா. எனக்கும் கொஞ்சம் அவர்கள் செயல் பாடுகளில் இடர்பாடு உண்டு என்றாலும் 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என எதையும் செய்துவிட முடியாது. அவர்கள் வீட்டிற்குச் செல்ல ஏதாவது காரணம் வேண்டுமே?''

''போங்கள் அத்தை. இதற்கு எல்லாம் காரணம் தேடிக்கொண்டு இருக்கிறீர்கள். நம் பெண்ணைப் பார்க்க ஒரு காரணம் வேண்டுமாக்கும். அம்மா அகிலாண்டேஸ்வரியைப் பார்க்க வந்தோம். கல்யாணத்திற்கு பட்டுப் புடவை வாங்க வேண்டும்; பெண்ணை அழைத்துச் செல்ல வேண்டும் என கேட்கலாம் வாருங்கள்.''

''சரிதான். சித்தார்த்தை விட நீ தான் அவளை இங்கே கொண்டு வர துடித்துக் கொண்டு இருக்கிறாய். கிளம்பு போகலாம். எனக்கும் அவளைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது.''

அதற்குள் உமா கல்லூரி விடுமுறையா? என விசாரித்து விட்டாள்.

''அத்தை, மகாவிற்கு இன்று விடுமுறைதான். சனிக்கிழமை எப்பொழுதும் விடுமுறைதானாம்.''

இருவரும் கிளம்பினர். கோவிலுக்குச் சென்றுவிட்டு கே.எஸ். வீட்டிற்குச் சென்றனர். திடீரென அவர்களைப் பார்த்து முத்துமணி தடுமாறிப் போனாள். எப்பொழுதும் போன் செய்து விட்டு வருவார்கள். அவர்கள் வருவதற்குள் வந்தனாவை நாசுக்காய் எங்காவது வெளியே அனுப்பி வைத்து விடுவாள். இன்றைக்கு சொல்லாமல் கொள்ளாமல் திடுதிப்பென வந்தால் வந்தனாவை

எங்கும் அனுப்ப முடியவில்லை. இன்றைக்கு முழங்கால் வலி அதிகமாய் இருந்ததால் வெகு தாமதமாகத்தான் படுக்கையில் இருந்து எழுந்தாள். மெதுவாய் பல் துலக்கி காலையுணவை முடித்தபோதே மணி பதினொன்று ஆகிவிட்டது. குளிக்கும் உணர்வே எழவில்லை. இந்த வந்தனா எப்படி நாள் தவறாமல் விடியற்காலையிலேயே எழுந்து விடுகிறாள்? பனி, வெயில், குளிர், மழை இப்படி எதையுமே பொருட்படுத்துவதில்லை.

அதே போல் நேரம் காலம் பார்க்காமல் உழைப்பதிலோ, படிப்பதிலோ அவனை மிஞ்ச முடியாது. எதைப் பார்த்தும் ஒரு சின்ன முகக்களிப்பு இல்லை; கஷ்டத்தை நினைத்துக் கவலையில்லை; எல்லாவற்றிற்கும் மேலாக வாழ்க்கை ஓர் வெறுப்போ, வெறுமையுணர்வோ அவளிடம் இல்லவே இல்லை. எதைச் செய்தாலும் நேசித்து செய்கிறாள். இந்த நேரத்தில் அவள் அறையில் படித்துக் கொண்டிருப்பாளோ? எப்படி இவர்களைச் சமாளிப்பது? என முத்துமணி யோசிக்கும்பொழுது வேலைக்கார பெண் உள்ளே வந்தாள்.

''அம்மா, மகா அக்கா எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸிற்கு செல்வதாக உங்களிடம் சொல்லச் சொன்னார்கள்'' வயிற்றில் பாலை வார்த்ததுபோல் இருந்தது முத்து மணிக்கு.

''மகாவுக்கு படிப்பு தான் எப்பொழுதும். அதான் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பயிற்சி எனக் கிளம்பிப் போய் விட்டாள். வருவதற்கு மிகவும் தாமதமாகும். நீங்கள் வரும் ஒவ்வொரு முறையும் இப்படித் தான் ஏதாவது நடந்து அவளை சந்திக்க முடியாமல்

போகிறது. இருக்கட்டும் இதுவும் நல்லதுதான். பழகப் பழக பாலும் புளிக்கும்.

கொஞ்ச நாளைக்குப் பார்க்காமல் இருந்தால்தான் பாசம் கூடும். ஆற்று வெள்ளத்தை அடித்துப் போவது யார்? எப்படியும் உங்கள் வீட்டிற்கு வரப் போகிறவள் தானே? என்ன விஷயமாய் வந்தீர்கள்? அதை கேட்காமலேயே நான் பேசிக் கொண்டே இருக்கிறேன்.''

''கல்யாணப் புடவை எடுக்க வேண்டும். மகாவையும் அழைத்துச் சென்று அவளுக்குப் பிடித்த மாதிரி எடுக்கலாம் என்று வந்தோம்.''

''சே சே. கல்யாணப் பெண் புடவையையே பார்க்கக் கூடாது. அதுதான் ஐதீகம். எல்லாம் சாஸ்திர சம்பிரதாயத்திற்கு விரோதமாய் மாறிக் கொண்டு வருகிறது என்றாலும் நம்மால் சட்டென்று மாற முடிவதில்லை. நான் சொல்வது சரிதானே சம்மந்தி?''

ஜானகி பேசாமல் இருக்க,

''வேண்டுமானால் நான் வருகிறேன். என் மகளுக்குப் பிடித்தது எனக்குத் தெரியாதா என்ன? எனக்குக் கல்யாண வேலை நிறைய இருக்கிறது. இருந்தாலும் உங்களுக்காக உடன் வருகிறேன்.''

சட்டென்று உமா, ''வேண்டாம் அம்மா. நீங்கள் வேலையைப் பாருங்கள். சஸ்பென்ஸ் உங்களுக்கும் இருக்கட்டும். எங்க வீட்டுப் பெண்ணிற்கு ஏற்ற மாதிரி நாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம். வருகிறோம் அம்மா'' என்றாள்.

இருவரும் வந்தனா வருவதற்குள் கிளம்பினால் போதும் என்றிருந்தது. முத்துமணிக்கு. வருவதற்கு தாமதமாகும் என ஒரு உத்தேசத்தில் அடித்து விட்டிருந்தாள். அவர்கள் சென்றதும் நிம்மதி மூச்சு விட்டாள். 'அவர்கள் பெண்ணிற்கு பொருத்தமாய் புடவை எடுத்துக் கொள்வார்களாமே? எனக்கல்லவா தெரியும் என் பெண்ணிற்கு என்ன பிடிக்கும் என்று! ஏதோ ஒன்று எடுத்துத் தொலைக்கட்டும். என் பெண்ணுக்கு ஆயிரம் கல்யாணப் புடவைகள் அவளுக்குப் பிடித்த மாதிரி நான் வாங்கித் தருவேன்.'

உமாவிடம் சித்தார்த் பேசிய பொழுது ஏதோ சுரத்தில்லாமல் பேசுவதை உணர்ந்தாள். ''என்னாச்சு சித்தார்த்? உடம்பு ஏதும் சரியில்லையா? ரொம்ப டல்லா பேசுகிறாய்? கல்யாண மாப்பிள்ளை கலகலப்பாய் இருக்க வேண்டாமா? என்ன விஷயம் சொல்?'' எனத் தூண்டினாள்.

''ஒன்றுமில்லை உமா. வேலை அதிகம்.''

''நீ வேலைக்கு எல்லாம் சளைத்தவன் இல்லியே? மகாவுடன் பேசினாயா? அவளுடன் பேசினாலே உன் களைப்பு எல்லாம் பறந்து போயிடுமே?'' ஒரு விநாடி மௌனத்தின் பின்,

''அவளுக்கு மெயின் எக்ஸாம் நெருங்குவதால் தொந்தரவு செய்ய வேண்டாம் என்றிருக்கிறேன்.''

''என்ன? இரண்டு வார்த்தை பேசுவதில் என்ன தொந்தரவு? நீ பேசினால் மகாவிற்கு மாரல் சப்போர்ட்டாகத் தான் இருக்கும். பின் ஏன் தயங்குகிறாய்? போனில் அவளைப் பிடிக்க முடியவில்லையா?''

''அவள் போன் உபயோகத்தில் இல்லை என வருகிறது. வீட்டிற்கு போன் செய்தால் அவள் அம்மா ஏதேதோ பேசி நழுவி விடுகிறார். நேரடியாக அவளிடம் பேச வேண்டும் என்று சொல்ல முடியவில்லை.''

''இதை எனக்கு முன்பே நீ சொல்வதற்கு என்ன? அந்த அம்மா அத்தனை குணம் போதாது. மகா என்ன செய்வாள் பாவம்? புடவை எடுக்க அவளைக் கூப்பிடப் போனோம். அந்த அம்மா அதெல்லாம் குறையில்லை என்று சொல்லி விட்டார்கள்.''

''அவளைப் பார்த்தீர்களா? பேசினீர்களா?''

''அவள் எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸிற்குப் பயிற்சிக்காக சென்றிருந்தாள். கவலைப்படாதே. நான் அவளைப் பார்த்துப் பேசுகிறன்.''

'சரி' என்று வைத்துவிட்டான். ஏனோ அவன் உள் ளுணர்வில் வந்தனாவிற்கு என்னமோ? என்று உறுத்திக் கொண்டே இருந்தது. உமாவிடம் சொல்லி இருப்பதால் ஏதாவது தகவல் வரும் என காத்திருந்தான்.

உமா திங்கட்கிழமை கிளம்பி கல்லூரி வாசலிலேயே போய் நின்று விட்டாள். அன்றைக்குப் பார்த்து சற்று தாமதமாக வந்தனா வந்தாள். ஏறக்குறைய இரண்டரை மணி நேரம் காத்திருந்து அவளைப் பிடித்தாள்.

''என்ன உமா அக்கா? நீங்கள் எங்கே வந்தீர்கள்? இனிய சர்ப்ரைஸ் கொடுக்கிறீர்கள்? நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? அத்தை நன்றாக இருக்கிறார்களா?''

''எல்லாரும் நன்றாக இருக்கிறோம். நீதான் சற்று வாடினாற் போல் இருக்கிறாய். அது சரி; உன் போன்

நம்பரை கொஞ்சம் கொடு. உன்னிடம் பேச வேண்டும் என்றால் சட்டென்று தொடர்பு கொள்ளலாம்.''

''மன்னித்துக் கொள்ளுங்கள் அக்கா. என் செல் ரிப்பேராகி விட்டது. வேறு ஒன்று வாங்க வேண்டும். பிறகு வாங்கிக் கொள்ளலாம் என்று விட்டுட்டேன்'' என்றவள் பின் மெதுவாக ''அவர் எப்படியிருக்கிறார்?'' என்றாள்.

அவளைக் கூர்ந்து பார்த்தாள். கண்ணும் முகமும் ஏதோ விஷயத்தைச் சொல்லின. ''வா, காரில் ஏறு. போய்க் கொண்டே பேசலாம். என்னுடன் ஒரு காபி சாப்பிடலாம் இல்லையா?'' என தன்னுடன் அழைத்துச் சென்றாள். காரில் டிரைவர் சீட்டில் அவள் அமர்ந்து கொண்டாள். ''பையனை ஸ்கூலில் போய் கூப்பிட வேண்டும். டிரைவர் லீவு. அதனால் நானே கார் எடுத்து வந்தேன். உனக்கு கார் ஓட்டத் தெரியுமா. மகா?''

''இல்லை அக்கா.''

''ஏறு காரில். அடடா! முன் பக்கம் குட்டிப் பையன் உட்கார வேண்டுமென அடம் பிடிப்பான். உனக்கு பின் சீட்டில் அமர்வதில் எந்த ஆட்சேபணையும் இல்லையே?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை அக்கா'' என பின்புறம் ஏறி அமர்ந்தாள். பின் தயங்கி மறுபடியும் அவளிடம், ''அவர் என்றைக்கு வருவார்?'' என.

''யார் மாமாவா? அவர் அடிக்கடி வெளியூர் போவார். வந்துடுவார். அத்தை மாமாவை கெட்டியாய் பார்த்துக் கொள்வார். இப்பவெல்லாம் அடிக்கடி வெளியில் செல்வ

தில்லை'' என்றவள் முன்புற கண்ணாடி வழியே வந்தனா வின் முகத்தைப் பார்த்து தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

''என் தோழனை தவிக்க விட்டாயே என் அருமை தங்கையே! நீயும் கொஞ்சம் தான் தவியேன்.''

வீட்டுக்கதை, தன் கணவனின் மருத்துவமனை கதை என ஊர்பட்ட கதைகளை வளவளத்துக் கொண்டே வந்தாள். பின் பையனை ஸ்கூலில் இருந்து அழைத்துக் கொண்டு வந்து ஹோட்டலுக்குச் சென்றனர். பேமிலி ரூமில் நுழைந்ததும், பேரரிடம் ஆர்டர் கொடுத்து விட்டு அலைபேசியை ஆன் செய்தாள். பிறகு அதை வந்தனா விடம் நீட்டினாள்.

''பேசு.''

''யார்...?'' என்றவாறு வாங்கியவள்,

''மகிம்மா...'' என்றதும் கரகரவென்று கண்ணீர் வழிந்தது. அதை உமா கவனியாதவள் போல் ''இவனை பாத்ரூமிற்கு அழைத்துச் சென்று வருகிறேன்'' எனக் கூறிவிட்டு நகர்ந்தாள்.

ஒருவாறு தன்னை சமாளித்துக் கொண்டு, ''சித்து எப்படியிருக்கிறீர்கள்? என் போன் தண்ணீரில் விழுந்து வீணாகி விட்டது. இரவில் அதனால் பேச முடியவில்லை. பகலில் பலமுறை முயற்சி செய்தேன். உங்கள் லைன் கிடைக்கவே இல்லை'' என பேச,

''ஹேய்! அழாதே! நானும் உன்னுடன் பேசாமல் தவித்துப் போனேன். அடுத்த வாரம் மெயின் எக்ஸாமிற்கு தயாராகி விட்டாயா? உன் எக்ஸாம் முடியட்டும்;

நாம் நாள் முழுக்கப் பேசலாம். நீ சுதந்திரமாக, மகிழ்ச்சி யாக தேர்வை எழுது. ஆல் த பெஸ்ட்.''

''எனக்குக் கொஞ்சம் டென்ஷனாக இருக்கிறது. நன் றாக எழுத வேண்டும். இது எனக்கு வாழ்க்கை பரீட்சை. இதில் நான் கண்டிப்பாக ஜெயித்தாக வேண்டும். இதில் வெற்றி பெறுவது எனக்கு நானே நிரூபித்துக் கொள்வது மாதிரி. என் வாழ்வின் அர்த்தமே இதில்தான் பொதிந்து இருக்கிறது.''

''பீ ரிலாக்ஸ்; நீ கண்டிப்பாய் ஜெயிப்பாய். நீ வெற்றி பெறா விட்டால் பின் வேறு யார் வெற்றி பெறுவார்கள்? நம்பிக்கையுடன் இரு. பொறுத்திரு. நல்லதே நடக்கும். உன் உழைப்பிற்கு நிச்சயம் பலன் கிடைக்கும்.

''தேங்க்ஸ் எலாட். உங்களுடன் பேசியது உத்வேகம் வந்தது போல் உள்ளது. நான் நன்றாக பரீட்சை எழுது வேன்.'' லைன் கட்டாகியது.

''ரெண்டு பேருக்கும் பரீட்சை, படிப்பு, வேலைத் தவிர பேசுவதற்கு வேறு விஷயமே கிடையாதா? அவன் என்னடாவென்றால் உன்னிடம் பேசாமல் காய்ச்சல் வந்தவன் போல் கிடக்கிறான். நீ ஒரு வார்த்தைக்கே உருகி கண்ணீர் வடிக்கிறாய். ரெண்டு பேரையும் தனி யாகப் பேச விட்டால் படிப்பு, புத்தகம் தானா கிடைத் தது? கொஞ்ச நேரம் இருவரும் உங்கள் மனசை உணர்ந்து பேசுங்கள். இது தான் எங்க மனசு என்காதீர்கள். அன்பு வலிமையாகும் பொழுது இதையும் தாண்டி வார்த்தை கள் வெளிவரும்.''

வந்தனா ஒரு வாரம் அவளாகவே இல்லை. உண் மையில் அவளே புத்தகமாகிப் போனாள். சித்தார்த் கொடுத்த நம்பிக்கையுடன் தன்னம்பிக்கையும் சேர்ந்து கொள்ள திட்டமிட்டு படித்தாள். விவரங்களை புரட்டிப் பார்த்தாள். கற்ற விஷயங்களை சிந்தித்து தெளிவுப் படுத்திக் கொண்டாள்.

கல்லூரி முகவரிக்கு இரண்டு பூங்கொத்துகளும், வாழ்த்துமடல்களும் அவளுக்கு வந்தன. ஒன்று சித்தார்த் திடமிருந்து மற்றொன்று அவன் குடும்பத்தினரிட மிருந்து. அவள் தேர்வில் ஜெயிக்க வாழ்த்தி வந் திருந்தன. அவன் அனுப்பிய சிகப்பு நிற ரோஜாக்கள் வாழ்த்துடன் மயிலிறகாய் மனதை வருடி அவன் அன் பையும் அல்லவா சொல்லின. தேர்விக்காக சென்னை புறப்பட்டாள். முத்துமணிக்கே, அவள் பெண்ணா? அல்லது வேறு ஏதாவது அதிசயப் பிறவியா? என்று தோன்றியது.

வேறு சிந்தனையே இல்லாமல் அவளால் எப்படி படிக்க முடிகிறது? என ஆச்சரியம் வந்தது. வேறு எங்கும் அவள் கவனம் பிறழவில்லையே? அது எப்படி சாத் தியம்? இருபது வயது பெண்ணிற்கு வரவேண்டிய கனவுகள் ஏதும் இவளுக்கு வராதா? கவனம் சிதறாமல் காரியம் செய்ய எங்கு கற்றாள்?

வாழ்க்கையில் அடிபட்டு, துன்புற்று, ஆதரவற்று அல்லலுற்று வளர்பவர்களுக்கு இயற்கையிலேயே இத்தகைய குணம் வாய்த்துவிடுகிறதா? இவ்வளவு கஷ்டப்பட்டும் யார் மேலும் இவளுக்கு வெறுப்போ, கோபமோ தோன்றவில்லையே? அது எப்படி? எந்த ஆசையுமே இவளுக்கு கிடையாதா? என் பெண் இவளை மாதிரி இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

அவளிடம் விழுந்து வணங்கி ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டு கிளம்பியவளை மனதார வாழ்த்தி அனுப்பி வைத்தாள்.

'அன்பினால் சிங்கத்தின் முடியைக்கூட பிடுங்கலாம்' என வந்தனா அறிந்து வைத்திருந்தாள். அவள் விடிகாலையில் இரயிலில் வந்து இறங்கிய பொழுது ஸ்டேஷனில் காருடன் வந்து சித்தார்த் காத்திருந்தான்.

அவளே எதிர்பார்க்காத இனிய ஆச்சரியம் அது. சந்தோஷத்தில் வார்த்தைகள் வராமல் தவித்தவளை கைகளைக் கட்டிக்கொண்டு புன்னகையுடன் பார்த்தான். வெள்ளை பைஜாமா குர்த்தாவில் கம்பீரமாய் எளிமையாய் இருந்தான். விடியற்காலை மங்கிய ஒளியில் அவள் நெற்றியில் புரண்ட கூந்தல் சுருளை ஒதுக்கியவாறே ''வா, சீக்கிரம். சற்று நேரம் நீ ஓய்வெடுத்துக் கொண்டு தேர்விற்கு தயாராகலாம்'' என்றான்.

பேசவே தோன்றாது அவன் பின்னே மதிமயங்கிச் சென்றாள். ஹோட்டலுக்குச் சென்றதும் அறையில் அவளை உறங்க விட்டு கதவை பூட்டிக் கொண்டு அவன் வெளியே சென்றான். ஆறுமணிக்கு கதவைத் தட்டி அவளை எழுப்பினான்.

ஒரு மணி நேர நிம்மதியான உறக்கம். புத்துணர்ச்சியைத் தந்தது. பின் பல்துலக்கி குளித்து வந்து பொழுது ஃபேபி பிங்க் புத்தம் புதிய சுடிதார் தயாராக இருந்தது. விழி விரிய பார்த்தவளை கன்னத்தில் செல்லமாக தட்டிவிட்டு தயாராகச் சொல்லி வெளியே சென்றான். புதிய ஆடை அணிந்து பூத்திட்ட புத்தம் புதுமலராய் வந்தவளை விழி அசையாமல் பார்த்து ''வாவ்.

வொண்டர்புல்!' என்றான். அவள் கன்னங்களில் ரோஜாக்கள் பூத்தன. சாப்பிட்டுவிட்டு தேர்வு மையத்திற்கு அழைத்து செல்லும் பொழுது சின்ன கேள்விகள் மூலம் அவளுக்கு சில குறிப்புக்கள் கூறிவிட்டு விரல்களில் முத்தமிட்டு 'ஆல் த பெஸ்ட்' என்றான்.

உலகத்திலேயே மிக உயர்ந்த மனுஷியாய் தன்னை உணர்ந்த உணர்வுடன் இனிமையாய் நம்பிக்கையுடன் ஹாலிற்குள் நுழைந்தாள்.



12

உறவினர்களின் பெயர்களையும் நண்பர்களின் பெயர்களையும் தனித்தனியாக எழுதி பட்டியல் தயார் செய்து கொண்டிருந்தாள் உமா. முக்கியமான உறவினர்கள் பட்டியலை தனியாக எழுதி வைத்தாள். அவர்களுக்கு புத்தம் புதிய பட்டாடைகளும், சூட்டிங் ஷர்ட்டிங் வாங்கித் தரவேண்டி அதற்கு ஆகும் செலவை ஏறக்குறைய உத்தேசமாய் பட்டியல் போட்டாள். பத்திரிகை அடிக்க கொடுத்தது எப்பொழுது வரும் என விசாரித்து விட்டு யார் யார் எந்தெந்த வேலைகளை பார்க்க வேண்டும் என்று பிரித்து எழுதி வைத்தாள். கல்யாண மண்டபத்திற்கு அட்வான்ஸ் கொடுத்தாகிவிட்டது. அதன் இன்டீரியர் டெக்ரேஷன் எப்படி அமையவேண்டும்; மணமேடை இயற்கையை பிரதிபலிப்பதாய் பூஞ்சோலை போல் அமைய வேண்டும்.

எதிலும் ஆடம்பரமும் படாடோபமும் தெரியாமல் அழகுணர்ச்சியும், எளிமையும் கண்ணை உறுத்தாது எழிலும் வெளிப்பட வேண்டும்.

அதனால் அதை யாரிடமும் ஒப்படைப்பது என யோசித்தாள். இணைய தளத்தில் ஆராய்ந்து அவர்களை தொடர்பு கொண்டாள். பியூட்டி பார்லர் புடவை செலக்ஷன், விருந்துக்கு எந்த சமையல் நிறுவனம், மெஹந்தி வரும் பெண்கள் அனைவருக்கும் போட்டு விட குழந்தைகள் விளையாட பொழுதுபோக்க ஏற்ற அமைப்புகள், நிகழ்ச்சிகள் என பலவற்றை குறித்துக் கொண்டு அத்தை எங்கே போனார்கள்?

கோவிலுக்கு போய் விட்டு வருகிறேன் என்றார்கள். ஆனால் இன்னும் காணோமே? சீக்கிரம் வந்தால் சில ஆலோசனை சொல்வார்கள் என அவள் எண்ணிய பொழுதே ஜானகி வந்து சேர்ந்தாள்.

ஜானகியின் முகத்தைப் பார்த்தவள் ஒரு வினாடி அதிர்ந்து போனாள். ''என்னாச்சு அத்தை? ஏதாவது உடம்பிற்கு முடியவில்லையோ? இப்படி முகம் வெளிறி, வியர்த்து விறுவிறுத்து வந்து இருக்கிறீர்கள்?'' என்று பொழுதே தலைச்சுற்றி சரிய சட்டென்று பாய்ந்து தாங்கிப் பிடித்து சோபாவில் அமர வைத்தாள். மின் விசிறியை சுழலவிட்டாள்.

மொட்டை மாடியில் சோலார் பேனல் அமைக்கப்பட்டிருந்ததால் மின்பற்றாக்குறை சூழலிலும் அவர்கள் வீட்டு மின்வசதி தடைபடாமல் வந்து கொண்டிருந்தது. மகேஷ் வீட்டிற்கு சாப்பிட வரும் நேரம்தான். எனவே முகத்தில் தண்ணீர் தெளித்து குடிப்பதற்கு சூடாக குப் கொண்டு வந்து கொடுத்தாள்.

உள்ளங்கை, உள்ளங்காலை பரபரப்பாய் குடுபறக்க தேய்த்து விட்டாள். ஜானகி கண் விழிக்கவும் மகேஷ் உள்ளே வரவும் சரியாய் இருந்தது. ''என்னம்மா ஆச்சு?'' என மகேஷும் பதற,

''ஒன்றுமில்லையடா; இலேசாய் தலைச்சுற்றல்.''

''இல்லீங்க. முதலில் அத்தையை பரிசோதனை செய்யுங்கள். அவங்க வந்த நிலைமையைப் பார்த்து நானே பதறிப் போனேன்.''

அவன் பரிசோதித்துவிட்டு, ''ஏம்மா திடீர் என்று பிரஷர் ஏறியிருக்கிறது? நீங்கள் கவலைப்படும்படி என்ன விஷயம் நடந்தது?''

அவன் கேட்கும் பொழுது ஒன்றும் சொல்லாமல் ஜானகி கண்ணை மூடிக் கொண்டாள். ''இந்த மாத்திரையை போடுங்கள். உமா, அம்மா கொஞ்ச நேரம் தூங்கட்டும். சாப்பிட்டீங்களா அம்மா?''

''சங்கரி வீட்டு கல்யாணத்தை விசாரிக்கப் போனேன்; அங்கேயே சாப்பிட்டேன்.''

''சரி போய் படுங்கள்'' என்று தன் தாயை கைத்தாங்கலாக அழைத்துச் சென்று படுக்க வைத்தான்.

''டேய் தம்பி! உங்க அப்பாவை வரச் சொல்லுடா.''

''அவர் மதுரைக்கு போயிருக்கிறார் அம்மா. சீக்கிரம் வந்துவிடுவார்; நான் போன் செய்கிறேன்.''

''எனக்கு உடம்பு சரியில்லை என சொல்லி விடாதே; பதறிப் போவார்.''

''அதை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் தூங்குங்கள்.''

அறைக் கதவை மூடிவிட்டு வெளியே வந்தவனிடம் கவலையுடன் உமா கேட்டாள். ''என்ன மகேஷ்? அத்தைக்கு என்ன?''

அவள் முகத்தைப் பார்த்துவிட்டு ''ஹேய் பயப்பட ஒன்றுமில்லை. ஆனால் அதிர்ச்சி ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வெளியே ஏதோ நடந்து இருக்கிறது. அது தான் அம்மாவை மிகுந்த அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது. அம்மா கண் விழித்ததும் மெதுவாக விசாரி.''

''கல்யாண வேலைகள் நிறைய இருக்கிறது. இந்த நேரத்தில் அத்தைக்கு உடல்நலமில்லாமல் போவது மனதுக்கு மிகவும் கஷ்டமாக உள்ளது. மகாலெஷ்மி மேல் எந்த பழிச்சொல்லும் வராமல் இருக்க வேண்டும்.''

''நீ கவலைப்படும்படி எதுவும் ஆகாது உமா. நாங்கள் எல்லாரும் இருக்கிறோம் அல்லவா? எந்த பிரச்னையையும் தீர்த்து விடலாம்.''

''சித்தார்த் கல்யாணத்திற்கு சம்மதிக்கவே நாம் வெகுநாட்கள் காத்திருந்தோம். பெண் பார்த்ததும் மணம் முடித்திருந்தால் கிட்டத்தட்ட ஒருவருடம் வந்து இருக்கும். இடையிடையே பல தடைகள் கடந்து இப்பொழுது தான் எல்லாம் கூடி வந்திருக்கிறது. அவனே எதற்கும் ஆசைப்படமாட்டான்; முதன்முதலாக அவன் ஆசைப்பட்டது மகாலெஷ்மியைத்தான். இந்தக் கல்யாணம் இனியும் தள்ளிப்போகக்கூடாது. சீக்கிரம் அத்தையை குணப்படுத்திவிடுங்கள்.''

''கவலைப்படாதே கண்மணி. உன் நண்பன் கல்யாணம் தடைபடாமல் நடக்க நான் பொறுப்பு ஏற்றுக்

கொள்கிறேன். நீ டென்ஷன் ஆகாதே'' என அவளை மெல்ல தட்டிக் கொடுத்தான். அவனை ஆழ்ந்து பார்த்தாள்.

''உண்மைதான் கண்மணி. மருத்துவமனையை அக்கறையாய் கவனித்துக் கொள்வது போலவே ஜாக்கிரதையாய் விஷயத்தை கையாளுகிறேன் போதுமா?''

''ம். நம்புகிறேன். என்னை கவனித்துக் கொள்வது போல் கவனித்து கொள்வதாக சொல்லியிருந்தால் நம்பியே இருக்கமாட்டேன்.''

''அதனால் தான் கண்ணம்மா நான் இப்படிச் சொன்னேன். நீதான் என்னையே கவனித்துக் கொள்கிறாய். உன்னை மாதிரி ஒரு அருமையான பெண்ணை மணந்து கொண்டிராவிட்டால் என்பாடு திண்டாட்டமாய் போயிருக்கும். நான் மிகைப்பட பேசவில்லை. மருத்துவரை விட மருத்துவரின் மனைவி தான் பொறுமைசாலியாகவும் விட்டுக் கொடுப்பவராகவும், தியாக உள்ளம் நிரம்பியவராகவும் இருக்க வேண்டும். அப்பொழுது தான் மருத்துவரால் சேவை செய்ய முடியும். நீ எனக்கு கிடைத்த ரத்தினம்.''

''ஏனப்பா இவ்வளவு ஐஸ் பிடிக்கிறீர்கள்? என்ன காரியம் ஆகவேண்டும்?''

''சொல்லட்டுமா? அல்லது அப்புறமாக நம் அறையில் பூங்கொத்து கொடுத்து சொல்லட்டுமா?''

''அட போங்கப்பா! அப்புறம் என்றால் அது உங்கள் அகராதியில் கிடையவே கிடையாது என்றல்லவா அர்த்தம்? நீங்கள் சாப்பிட்டு கிளம்புங்கள். மருத்துவமனைக்கு

போய்விட்டு வந்து நல்ல குல்லாய் தைத்து போடலாம். உங்கள் மதிப்பிற்குரிய நோயாளிகள் வெகுநேரம் காத்திருக்க நேரும்.''

''நல்லவேளை ஞாபகப்படுத்தினாய். வா சீக்கிரம்; சாப்பாடு வை. நான் கை, கால் கழுவி வருகிறேன்.''

அவன் கிளம்பிச் சென்ற பிறகு ஜானகியைப் பார்க்க அறைக்குச் சென்றாள். சரியான உறக்கத்தில் அவள் இல்லை; புரண்டு படுத்தவளிடம் சென்று ''என்ன வேண்டும் அத்தை?'' என்றாள்.

''அந்த தலையணையை எடுத்து சற்று சாய்த்தாற் போல் வையம்மா!''

''சரிங்க அத்தை''

''உமா சாப்பிட்டாயா?''

''சாப்பிட்டேன் அத்தை. அவர் என்னை வற்புறுத்தி சாப்பிட வைத்துவிட்டு தான் சென்றார்.''

''சந்தோஷம். உன்னை மாதிரியே இரண்டாவது மருமகளும் வேண்டும் என்று ஆசைப்பட்டேன்; அது பேராசையம்மா.''

ஒன்றும் புரியாமல், ''ஏன் அத்தை அப்படி சொல்கிறீர்கள்? அவளும் மிக நல்லப் பெண்தான்''.

''எல்லாம் வெறும் கனவாகிப் போனது.''

''எப்படி? என்ன சொல்கிறீர்கள்?'' ''ஆமாம் அம்மா. இந்தக் கல்யாணம் வேண்டாம்; இது நடக்காது; நான் இது நடப்பதற்கு ஒத்துக் கொள்ளமாட்டேன்.''

''அத்தை...'' என அதிர்ந்து போனாள். மேலே மறுத்து பேச வாயைத் திறந்தவள் ஜானகியின் கண்களில்

இருந்து வடிந்த கண்ணீரை கண்டு மேலே பேச முடியாமல் திகைத்து நின்றாள். 'ஏன்? ஏன் இப்படி? அப்படி என்ன நடந்தது? எல்லாவற்றையும் பெருந்தன்மையாய் ஏற்றுக் கொள்ளும் அத்தை நிராகரிக்கும் காரணம் என்ன?

ஏழை, வசதி வாய்ப்பு, அந்தஸ்து கௌரவம் இப்படி எதுவும் பார்க்காதவர், சித்தார்த்திற்கு அவனுக்கு பிடித்த எந்தப் பெண்ணையும் மணம் முடித்து வைக்க தயங்காதவர் இன்றைக்கு ஏன் இப்படி சொல்கிறார்.

இவர் மகாவையும் சந்தித்திருக்க முடியாது. அவள் தேர்வு எழுத சென்னைக்கு சென்று இருக்கிறாள். என்ன நடந்தது? ஐயோ! சித்தார்த் நிலைமை என்ன? அவன் எவ்வளவு ஆசைப்பட்டான்? அவளுடன் போன் பேசாததற்கே எப்படி நொந்து போனான்? மகாவும் தான் கண்ணீர் விட்டாளே? இதை எப்படி அவர்கள் தாங்கப் போகிறார்கள்?

இருவரும் ஒருவருக்கொருவர் பிறந்தவர்களைப் போல அல்லவா இருக்கிறார்கள்? எத்தனை கனவுகளை சுமந்து கொண்டு இருக்கிறார்கள்! அதை எப்படி கலைப்பது? கனவில் சிறகடித்து பறப்பவர்களின் சிறகுகளை ஒடித்துப் போடலாமா? இது என்ன? விதியின் குரூர விளையாட்டா?

அத்தைக்கும் இந்த முடிவு சிரமமாய் இருந்திருக்குமோ? அதனால் தான் இடைவிடாமல் கண்ணீர் பெருகுகிறதா? இருந்தாலும் இளம் மனங்களை குறிப்பது கடுமையான பாவம் அல்லவா? இது நம் வீட்டில் நடை

பெற வேண்டுமா? இது அன்பான வீடல்லவா? இதில் வெறுமை புகலாமா? இந்த திருமணம் நடக்கவில்லை என்றால் 'சித்தார்த்தின் வாழ்வே வெறுமையாகி விடுமே? புத்தனின் இயற்பெயரை வைத்ததால் அவனும் வாழ்வை துறக்க வேண்டியதா என்ன? ம்ஹூம் இதை இப்படியே விடக்கூடாது; ஏதாவது செய்ய வேண்டும். சித்தார்த்தும், மகாவும் இணைய வேண்டும். அவ்வளவு சுலபத்தில் இதை நான் விட்டுக் கொடுக்கப் போவ தில்லை.

மகேஷிற்கு உடனே வரச் சொல்லி போன் செய்தாள். அவன் செல்லை எடுக்கவில்லை. ரவுண்ட்ஸ் போயிருப் பார் என்று எண்ணியவள் தொடர்ச்சியாக கால் பண் ணியும் குறுஞ்செய்தி அனுப்பியும் தொடர்பு கொண் டாள்.

ஆனாலும் பதில் எதுவும் வராது போகவே நகம் கடித்து என்ன செய்வது? என்று யோசித்த விநாடி மகேஷ் வந்து கண் முன்னால் நின்றான். ''என்னடா ஆச்சு? நீ இப்படி தொந்தரவு செய்கிறவள் இல்லையே? அம்மாவுக்கு ஏதாவது முடியலையா?''

''அதெல்லாம் இல்லை. அத்தை சித்தார்த் கல் யாணத்தை நிறுத்தச் சொல்கிறார். அவன் மனம் என்ன பாடுபடும்? அந்தப் பெண் நிலை என்ன? எனக்கு என்ன சொல்வது என்றே புரியவில்லை. நீங்கள் வாரும் கள், அத்தையிடம் எடுத்துச் சொல்லுங்கள். சித்தார்த் மனம் ஒடிந்துவிடும். என்ன செய்வீர்களோ அத்தையை சம்மதிக்க வைக்க வேண்டும்.''

''பொறு கண்ணம்மா! ஏனாம்? அம்மாவுக்கு என்ன ஆச்சு? என் இப்படி சொல்கிறார்கள்?''

''எனக்கு ஒன்றுமே புரியவில்லை. மை டியர் மகேஷ்: ஏதாவது செய்யுங்கள். அவர்கள் மனம் ஒடிந்துவிடக் கூடாது. எத்தனை கனவுகள் கண்டுகொண்டு இருக் கிறார்கள் தெரியுமா?''

''புலம்பாதே கண்ணம்மா. நான் பேசுகிறேன். அப் பாவும் வரட்டும். அப்பா சொன்னால் அம்மா மீறமாட் டார்கள்.''

''முதலில் ஏன் வேண்டாம் என்கிறார்கள் என்பதற்கு காரணம் கேளுங்கள்.''

''இதோ உடனே போய் கேட்கிறேன்'' என எழுந்தவன் ''அதோ அப்பாவே வந்துவிட்டார்களே!'' என்றான்.

''என்னடா ஆச்சு உங்கம்மாவிற்கு?''

''பிரஷர் ஏறிடுச்சு அப்பா.''

''எதனால்? தேவையில்லாமல் ஏதாவது கவலை மூட்டையை முதுகில் ஏற்றிக் கொள்வாள். எங்கே அவள்?''

''அறையில் படுத்து இருக்கிறார்கள்.''

''என்ன ஜானகி, உன் உடம்புக்கு என்ன?'' தலை மாட்டில் அமர்ந்து தலையை வருடியபடி கேட்க,

''ஏங்க சித்தார்த் கல்யாணத்தை நிறுத்திடுங்க'' என்றாள்.

''மருந்து, மாத்திரை சாப்பிட்டாயா? இப்பொழுது உடம்பு எப்படியிருக்கிறது?''

''பரவாயில்லை. கல்யாணத்தை நிறுத்திடுங்க''.

''ஏன்? காரணம் இல்லாமல் ஒரு கல்யாணத்தை நிறுத்த முடியாது. நம் மரியாதை குலைந்து போகும். நீ முதலில் காரணத்தை சொல்லு.''

''நம்ம மரியாதை, குலகௌரவம் கலையக்கூடாது என்பதற்காகத்தான் நிறுத்தச் சொல்கிறேன்''.

''ஏன் அதற்கு என்ன வந்தது?''

''அந்தக் குடும்பம் நமக்கு வேண்டாம்.''

''ஸோ, குடும்பம் தான் பிரச்சனை. பெண்ணைப் பற்றி எந்த குழப்பமும் இல்லைதானே? பின் சொல்வதற்கு என்ன?''

''அந்தப் பெண்ணின் அப்பாவிற்கு...''

''யார் கே.எஸ்ஸா?''

''ஆமாம்.''

''அவருக்கு என்ன?''

''அவருக்கு மேலும் இரண்டு குடும்பங்களும், இரண்டு மனைவிகளும் இருக்கிறார்கள்.''

''என்ன?'' என அனைவரும் அதிர்ந்து போயினர்.

''அதை கண்ணாலே பார்த்தேன்; நம்பாமல் விசாரித்து உறுதி செய்து கொண்டு தான் வந்தேன். அவர்களுக்கு வேண்டுமானால் இது சாதாரண விஷயமாக இருக்கலாம். இதை நம்மால் சுலபமாக எடுத்துக் கொள்ள முடியாது.

ஒழுக்கம் என்பது மனிதனுக்கு தேவையான அவசிய மான விஷயம். நாம் ஒன்றும் விலங்குகள் இல்லை; எப் படியும் வாழலாம் என வாழ முடியாது. நம் குடும்பத்தில்

இப்படி யாரும் இல்லை. அப்படி இருந்தாலும் நாம் அவர்களை ஏற்றுக் கொள்வதில்லை. நீங்களே சொல் லுங்கள். என் அருமை மகனுக்கு நம் கண்மணிக்கு எப்படி இந்தக் குடும்பத்தில் இருந்து பெண் எடுக்க முடியும்?''

''உண்மை தான் ஜானகி. ஒரு வெற்றிகரமான மனித னுக்கு ஒழுக்கம், கல்வி, உழைப்பு, சிக்கனம் அவசியம் தேவை. இதில் எது இல்லாமல் போனாலும் அவன் தோற்றுப் போவான். தற்காலிக வெற்றிகள் எந்த நீதியை யும் மாற்றுவதில்லை.

அந்த ஆள் மோசமானவராகவே இருந்துவிட்டு போகட்டும். நாம் நம் பெண்ணை அவர்கள் வீட்டிற்கு கொடுக்கப் போவதில்லையே? பெண்ணை கொடுத்தால் தான் கவலைப்பட வேண்டும். இதற்காக நீ இப்படி உடலை வருத்திக் கொண்டு கவலைப்பட வேண்டாம். உன் விருப்பம் தான் எங்கள் எல்லாரின் விருப்பமும்.

சின்னவனும் உன் விருப்பத்தை மீறமாட்டான். அவன் செல்லப்பிள்ளை வேறு. நீ வேண்டாம் என்றால் அவனும் திருமணம் செய்து கொள்ள மாட்டான். வேறு எந்த பெண்ணையும் மணந்து கொள்ளவும் மாட்டான். அதற்காக சரியில்லாத குடும்பத்தில் பெண் எடுக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

அந்தப் பெண்ணிற்கு அவங்க அம்மா, அப்பா சாயல் உருவத்திலோ, குணத்திலோ இல்லையென்று நீதானே சொன்னாய்? என்னவோ போ, ஒரு நல்ல பெண் நம் குடும்பத்திற்கு வர நாம் கொடுத்து வைக்கவில்லை. சிப்பியில் முத்து போல, சேற்றில் செந்தாமரைப் போல

சிலர் பிறந்து விடுகிறார்கள்'' என வெட்டியும், ஒட்டியும் சரளமாய் பேச.

''இருங்க, இருங்க. நாம் பெண் தானே எடுக்கப் போகிறோம்? நல்லப் பெண்ணை நாம் ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும்? அவர்கள் குடும்பம் எப்படியோ போகட்டும். அவள் நம் வீட்டிற்கு வந்தபிறகு நம் பெண்ணாகி விடுவாளே?

பின் ஏன் அவர்களைப் பற்றி நினைக்க வேண்டும்? என்மகன் ஆசைப்பட்டவளை மணந்து கொண்டு நிம் மதியாக வாழட்டும். அவன் மனத்தை கஷ்டப்படுத்தும் பாவம் நமக்கு வேண்டாம். திருமணம் ஒரு மனிதனை முழுமையாக்கும்.

நம் கண்மணியும் முழுமையான மனிதனாக்கட்டும். அவன் மனசைக் கொன்று உயிரற்ற வாழ்க்கை வாழ வேண்டாம்; அப்பாடி! இப்போதுதான் எனக்கு நிம்மதி யாக இருக்கிறது. நான் சொல்வது சரிதானே?''

''நீ சொன்னால் எதுவும் சரிதான்.''

''எல்லார் முகத்திலும் இப்போதுதான் சந்தோஷமே வருகிறது.''

''அம்மா, அவர்கள் குடும்பத்தைப் பற்றி நன்றாக விசாரித்து விடுகிறேன்.''

''வேண்டாம் அப்பா! குப்பையைக் கிளறினால் நாற்றம் தான் வரும். சீக்கிரம் திருமணத்தை முடித்து ஒதுங்க வழியைப் பாருங்கள்''. உமாவிற்கு அப்பொழுது தான் மூச்சே வந்தது. அவள் முகத்தை பார்த்துவிட்டு மகேஷ் புன்னகைத்தான். மெல்ல அவளருகே சென்று

''பிரச்சனை தீர்ந்ததற்கு பரிசு ஏதேனும் உண்டா?'' என வினவினான்.

''உஷ்! அதெல்லாம் அப்புறம்; அத்தையும், மாமா வும் கவனிக்கிறார்கள்'' அவனைவிட மெதுவாய் முணு முணுத்தாள்.

''நான் வேண்டுமானால் அவர்களை திரும்பிக்கொள்ள சொல்லட்டுமா?''

''சும்மாயிருங்கள்.''

''என்னப்பா? உமா என்ன சொல்கிறாள்?'' என ஜானகி கேட்க,

''என்னை சும்மாயிருக்க சொல்கிறாள். அது எப்படி அம்மா முடியும்...?'' என இழுக்க ''அவள் சொல்வதும் நியாயம் தானே அப்பா, நீ கொஞ்ச நேரம் வேலை செய்யாமல் ஓய்வெடுத்துக் கொண்டால் என்ன?''

உள்ளுக்குள் பொங்கிய சிரிப்பை அடக்க உமா தலையை குனிந்து கொண்டாள்.''அதான் அம்மா, நான் ஓய்வெடுக்கச் சென்றால் இவள் கொஞ்சம் காலை பிடித்துவிட வேண்டும். அதற்கெல்லாம் வருவாளா? தலைமேல் வேலையை மூட்டைக்கட்டி வைத்திருப் பாள்.''

''ஏனப்பா என் மருமகளைப் பற்றி இப்படிச் சொல் கிறாய்? உன்னுடன் எங்கு வேண்டுமானாலும் வருவாள். நீ போம்மா.''

''எங்கே உங்கள் செல்ல மருமகள் வருகிறாளா என பார்க்கலாம்'' என அவன் நகர்ந்தான்.

''இது என்ன?'' என சிணுங்கியவாறே அவன் பின்னே தொடர்ந்தாள். அவர்களைப் பார்த்து நிறைவுடன் சிரித்தனர் பெரியவர்கள்.

இரவு உணவு முடித்து படுத்தபொழுது மகேஷின் அலைபேசி ஒலித்தது.

''சொல்லு சித்தார்த்'' என்று உறங்கும் மனைவியை பார்த்தவாறே எழுந்து பால்கனிக்குச் சென்றான்.

''வாட்? இப்பொழுது எப்படியிருக்கிறான்? சரி தான் உடனே புறப்பட்டு வருகிறேன்.''

யோசித்தான்; 'வீட்டில் யாருக்கும் எதுவும் தெரிவிக்க வேண்டாம்; உமாவிடம் கூட எதுவும் சொல்ல வேண்டாம். அவளே காலையில் இருந்து மிகவும் பதறிப்போய் இருக்கிறாள். உடல் மிகவும் இளைத்து இருக்கிறாள்; வெளிறிப் போய் இருக்கிறாள். வீட்டு வேலை, மருத்துவ மனை நிர்வாகம் அதிகமாய் படுத்துகிறதோ? ஒரு விநாடி இவளிடம் மட்டுமாவது சொல்லிவிட்டு கிளம்பலாம் எனத் தோன்ற அவளை எழுப்ப கைப்பற்றினான்.

நாடித்துடிப்பு அவனுக்கு ஏதோ உணர்த்தியது. ஹேய்! எவ்வளவு நாட்களுக்குப் பிறகு... எதிர்பார்க்காத இனிமை! இந்த நேரத்தில் மனம் சங்கடப்படும் எதையும் சொல்ல வேண்டாம்.

அப்பாவிடம் மட்டும் சொல்லிவிட்டு போகலாம் என்று அவரை அலைபேசியில் தொடர்பு கொண்டான். அவர் பதட்டத்துடன் வெளியே வந்தார். ''அப்பா,பதற வேண்டாம். பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. நான் போகிறேனில்லையா? பார்த்துக் கொள்கிறேன். வீட்டில் யாருக்கும் சொல்ல வேண்டாம்.''

''நானும் அதுதான் நினைத்தேன். நான் உடன் வரட்டுமா?''

''வேண்டாம் அப்பா. விமானத்தில் கிளம்புகிறேன். வருத்தப்படும்படி எதுவும் இல்லை என நம்புங்கள். போனதும் தொடர்பு கொள்கிறேன்.''

மனதுக்குள் ஓர் கலக்கம் இருந்துகொண்டே இருந்தது. என்ன ஆச்சு? ஏன்? அப்படி யார் செய்திருப்பார்கள்? உனக்கு எதுவும் நேராது. நம்பிக்கையை என்றும் நான் இழக்கமாட்டேன்.'

அடுத்த ஒரு மணி நேரத்தில் சென்னையில் இருந்தான். மருத்துவமனைக்குச் சென்றபொழுது சித்தார்த் கண்விழித்து இருந்தான்.

''ஐயாம் ஆல்ரைட் அண்ணா!'' எனச் சிரித்தான். பக்கத்தில் வாடிப்போய் வந்தனா அமர்ந்திருந்தாள். அவனை பரிசோதனை செய்துவிட்டு அவனுக்கு ட்ரீட்மெண்ட் அளித்த மருத்துவரைப் பார்த்து விவரங்கள் கேட்டான்.

''காயம் ஒன்றும் ஆழமில்லை; விரைவில் குணமாகி விடுவார். கவலைப்படவேண்டாம். இரத்தம் தான் தேவைப்பட்டது. வந்தனா கொடுத்தார்கள். இனி எந்த ஆபத்துமில்லை.''

அங்கே சுநீல் வந்தான். ''ஹாய் அண்ணா, ஹௌ ஆர் யூ?''

''நீ எங்கே இங்கே?'' ''அபீஷியல் விசிட்டிற்கு சென்னை வந்தேன். ஹோட்டலில் இருந்து புறப்படும் நேரத்தில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்துவிட்டது.''

''என்னதான் நடந்தது?''

''மகா தேர்வு எழுத சென்னைக்கு வர அவளைப் பார்க்க நம்ம ஆள் அரக்க பரக்க வந்திருக்கிறார். மாலை இருவரும் ஊருக்கு புறப்படும் பொழுது எவனோ கத்தியை இவன் மேல் வீசிவிட்டான். விஷம் தடவிய கத்தி வேறு. ஆளை பிடித்து விட்டார்கள். நல்லவேளை அருகில் மகா இருந்ததால் உடனே உதவி நன்றாகி விட்டான்.''

''யாரென்று தெரிந்ததா? இவன் கொஞ்சம் கவனமாக இருந்திருக்க வேண்டாமா?''

''பல நல்ல நியாயமான நேர்மையான நடவடிக்கைகள் எடுக்கையில் இந்த மாதிரி பல ஆபத்துக்களை சந்திக்கத்தான் வேண்டியிருக்கிறது. அவன் மாநில முதலமைச்சர் கூட போன் செய்து விசாரித்தார்.

என்ன 'மோடிவ்' என போலீஸ் தீவிரமாக விசாரித்துக் கொண்டிருக்கிறது. மேலிடத்தில் இதை உடனடியாக விசாரித்து தண்டிக்கச் சொல்லி உத்தரவு வந்திருக்கிறது. நல்ல அதிகாரிக்கு இந்த மாதிரி அனுகூலங்களும் உண்டு. கமிஷனரே நேரிடையாக வந்து விசாரித்து விட்டு போனார். அவரது கூடுதல் அக்கறையில் என்ன காரணத்தால் கொலை முயற்சி நடந்தது என்று விரைவில் தெரிந்துவிடும்.''

''சரி வா. போய் அவனை பார்ப்போம்.''

அவ்வளவு நேரம் அருகிலிருந்த வந்தனாவை சித்தார்த் வற்புறுத்தி போய் உறங்கச் சொன்னான். மகேஷ் வந்திருப்பதால் அவன் பார்த்துக் கொள்வான். மேலும்

சீருடையில்லாத காவலர்கள் வேறு வெளியில் இருப்பதால் எந்த ஆபத்தும் வராது என எடுத்துக் கூறி அவளை தூங்கச் சொன்னான்.

மறுக்காமல் மறுபுறம் இருந்த கட்டிலில் படுத்தவள் அடுத்த வினாடியே உறங்கிப் போனாள். மகேஷிற்கு அவளை நினைத்து சந்தோஷமாக இருந்தது. தன் சகோதரனை இத்தனை அக்கறையுடன் கவனித்துக் கொள்வதில் இருந்த உண்மையான அன்பு அவனை நெகிழச் செய்தது.

அன்பானவர்களுக்காக எதை வேண்டுமானாலும் செய்யலாம் எனத் தோன்றியது. சித்தார்த்துடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு, வீட்டிற்கு தகவல் சொன்னான். அவனே போனில் பேசவும் வீட்டில் ஆபத்தில்லை என்று ஆறுதல் உற்றனர். சித்தார்த் அம்மாவிடம் பேசி விட்டு உமாவிடம் பேசினான். வந்தனா உடனிருக்கிறாள் என்றதும் 'நீ அவசரப்பட வேண்டாம் மெதுவாக வா' என நகைத்தான்.

ஜானகிக்கும் வாய் நிறைய புன்னகை மலர்ந்தது. தன் மகனுக்கு ஏற்றவள்தான். அவனுக்கு ஆபத்து சமயத்தில் உடனிருந்து பார்ப்பதுடன் இரத்தம் கொடுத்து காப்பாற்றியிருக்கிறாளே? என பெருமிதமாக இருந்தது.

ஏதோ பூர்வ ஜென்மத்தில் தான் புண்ணியம் செய்திருப்பதாக எண்ணினாள். நல்ல குடும்பம், நல்ல கணவன், அற்புதமான பிள்ளைகள், மிக அருமையான மருமகள்கள். பேரக்குழந்தை எல்லாருக்கும் வாய்த்து விடுவதில்லை.

போலீஸ் பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து கொண்டிருந்தது. இங்கு யாராவது எதிரிகள்

இருக்கிறார்களா? யார்? யார்? அவன் மேல் வன்மத்துடன் இருந்தனர்? வெளி மாநிலத்து ஆட்கள் இங்கு கூலிப்படை பிடித்தனரா? என யோசித்தனர்.

பிடிபட்ட செல்வம் இந்திய அளவில் எவருக்காகவும் பணத்திற்காக எதையும் செய்பவன். அவன் ஏன் இதைச் செய்தான்? என பலமான கவனிப்புக்கு பின் கேட்டனர்.

அவனுக்கு உண்மையில் சித்தார்த் யாரென்றே தெரியவில்லை. வெளி மாவட்ட கலெக்டர் என அறியாமலேயே இந்தக் காரியத்தை செய்திருக்கிறான். அவன் திரும்ப திரும்ப சொன்ன வார்த்தையில் பொய் இல்லை என்று போலீஸ் அதிகாரிக்குப் புரிந்தது.

''முழுசாய் எல்லா விஷயத்தையும் சொல்லுடா!'' என அதட்ட,

''உண்மை தான் சார். இவர் போட்டோவை காட்டி கொல்லச் சொன்னாங்க. கத்தி வீசுறதுல நான் எக்ஸ்பர்ட் என்பதால் என்னிடம் இந்த வேலையை ஒப்படைச் சாங்க. சத்தியமாய் இவர் யாருன்னே தெரியாதுங்க. பெரியவருக்கும் அது தெரியாதுங்க. தெரிஞ்சு இருந்தால் இப்படி மாட்டிக்கிடுற மாதிரி திட்டமிட மாட்டார்.''

''யாருடா அந்த ஆள்?'' என இரண்டு போட பெயரைச் சொன்னான்.

''அவருக்கு இதை செய்யவேண்டிய அவசியம் என்ன வந்தது? அந்த ஆளுக்கும், இவருக்கும் என்ன சம்பந்தம்? முதலில் சித்தார்த்திடம் விசாரித்து விடலாம்'' என அவனிடம் வந்து பெயரைச் சொல்லி கேட்டனர்.

''தொழிலதிபர் என்று கேள்விப்பட்டிருக்கிறேனே ஒழிய அவரைப் பற்றி வேறு எதுவும் தெரியாது. நேரடி பழக்கமில்லை.''

எப்படி? அந்த ஆளுக்கும் சித்தார்த் பற்றி தெரியாது என்று செல்வம் சொல்கிறான். இவருக்கும் அவரைப் பற்றி எதுவும் தெரியவில்லை. இரண்டு பேரும் ஒருவரைப் பற்றி ஒருவர் அறியாமல் கொலை முயற்சி நடக்குமா? இதற்கு வேறு ஏதாவது காரணம் இருக்குமா? நேரிடையாக அந்த ஆளை விசாரித்து விட வேண்டியதுதான்.

ஆனால் அதிலும் பிரச்சனை இருந்தது. எவனோ ஒருவன் சொன்னதற்காக என்னை மாதிரி சமூகத்தில் செல்வாக்குள்ள ஆளை அவமானப்படுத்தி அசிங்கப் படுத்துகிறீர்களா? என கண்டிப்பாய் அந்த ஆள் எகிறுவான்.

டிபார்ட்மெண்ட்டிலும் அவனுக்கு ஆதரவான ஆட்கள் உண்டு.அரசியல் செல்வாக்கும் கணிசமான அளவு இருந்தது.

ஏன்? என்ற காரணத்தை கண்டுபிடிக்க முடிந்தால் குற்றவாளியை நெருங்கி விடலாம். அந்த பெரிய மனிதரை தொடர்ந்து கண்காணிக்க ஆள் அனுப்பினர். கலெக்டருடன் உடன் இருக்கும் பெண் யார்? என கேட்க அவர் வரும் முன்னரே மகேஷ் அவளை ஊருக்கு அனுப்பி வைத்தான்.

''நீ ஊருக்கு போம்மா; நான் பார்த்துக் கொள்கிறேன். உன் வீட்டிலும் தேடுவார்கள். படிப்பும் வீணாகக் கூடாது.'' அவன் அனுப்பியது ஏன் என்று சித்தார்த்திற்கு

புரிந்தது: தேவையற்ற கேள்விகளையும் பிரச்சனைகளையும் சமாளிக்கத்தான் என அறிந்திருந்தான்.

வந்தனா எந்த பிரச்சனையிலும் சிக்கிக் கொள்வதை அவனும் விரும்பவில்லை. செல்வம் காவலரிடம் மாட்டிக்கொண்ட செய்தியை அறிந்த கிழவனாரின் இளைய மனைவி சாதாரணமாக தான் வந்து அவரிடம் சொன்னாள்.

அவருக்கு ஏற்பட்ட பதட்டத்தை கவனித்ததும் ஏதோ தானறியா உள் விஷயம் இருக்கிறது என்பதை உணர்ந்தான். மெல்ல தன் சகோதரன் மூலம் என்ன விஷயம் என விசாரிக்கச் சொன்னாள். இளம் வயதில் பணமில்லாமல் பட்ட கஷ்டங்களும், அவமானங்களும் கொஞ்சம் நஞ்சமல்ல.

எல்லாவற்றையும் சகித்து வளர்ந்த பொழுது கிழவனாரின் கண்ணில் பட்டுத் தொலைத்தாள். உடனே அவளை மணந்து கொள்ள கிழவன் வலைவிரிக்க, தப்பிக்க வழியில்லாமல் அகப்பட்டு கொண்டாள். ஏதோ பணமாவது நிறைய கிடைக்கும்; கிழவன் ஒழிந்த பிறகு நிம்மதியாக வாழலாம் என எண்ணியவளுக்கு மூன்றாவது தாய் இன்னொருத்தியை மணக்க ஆசைப்பட்டது எரிச்சலை மூட்டியது.

கோபப்பட்டால் கிடைக்க வேண்டிய பணம் கிட்டாமல் போய்விடும் என அமைதி காத்தாள். கிழவனது ஜாலங்கள் அந்தப் பெண்ணிடம் எடுபடாமல் போவதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தாலும் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் கிழவன் அவளை விட்டுத் தொலைக்காமல் பித்தம்பிடித்து அலைந்தது வெறுப்பேற்றியது.

இந்த நேரத்தில் சகோதரன் விசாரித்துக் கொண்டு வந்த செய்தி வெகு கோபமடைய வைத்தது. அந்தப் பெண்ணின் கணவனைக் கொன்று அவளை தூக்கி வரவேண்டும்; சொத்து எல்லாம் அவள் பெயருக்கு எழுதி வைத்து அவளை தன் வசப்படுத்த வேண்டும் என கிழவன் எண்ணியிருந்தான்.

கிழவனிடம் இவள் தான் அவள் ரகசிய திருமணம் செய்துகொண்டு ஓடிவிட்டாள் என்று சொல்லி வைத்திருந்தாள். கல்யாணமானவள் எனத் தெரிந்தாவது விட்டு தொலைக்கமாட்டானா? என்ற நப்பாசையில் தான் அப்படிச் சொன்னாள்.

ஆனால் அந்த ஆளுக்கு பித்தம் உடலுக்கேறி தலையையும் முழுமையாக ஆக்கிரமித்து விட்டிருந்தது. செல்வத்திடம் இன்னாரை கொல்ல வேண்டும் என்று மட்டும் தான் சொல்லியிருந்தார். ஏன்? எதற்கு? என்றெல்லாம் சொல்லவில்லை. பெண்ணுக்காக இந்த கொலை என்பதை ஏனோ மறைத்துவிட்டார்.

அவள் பெயரை துரும்பிற்கு கூட பயன்படுத்த விரும்பவில்லை. அதனால் தான் செல்வம் மாட்டிக் கொண்டும் பிரச்சனை ஏதும் அவரை நோக்கி வரவில்லை. சின்னவள் அறிந்து வந்து சொன்ன விவரம் அவரை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

அவளின் கணவர் மாவட்ட கலெக்டர் என்பது கிடுகிடுக்க வைத்து விட்டது. ஆகா! தேனீக்கூட்டில் கை வைத்து விட்டோமோ? என கதிகலங்கிப் போனார். செல்வம் சொன்னான் என்று போலீஸ்காரர் வந்தால் அவனை தனக்குத் தெரியாது என சாதித்துவிட

வேண்டும். அப்படியே மாட்டிக் கொண்டாலும் அவன் பொய் சொல்கிறான்; தனக்கு கலெக்டரையே யார் என்று தெரியாது; அப்படியிருக்கையில் கொலை முயற்சியில் ஏன் ஈடுபடப் போகிறேன்?

அதற்கு என்ன காரணம் இருக்கிறது? என சாமர்த்தியமாகப் பேசி தப்பிவிட வேண்டும் என திட்டமிட்டுக் கொண்டார். அந்த நேரத்தில் வக்கீல் உயிலுடன் வந்தார். புதிதாய் 2 கோடி ரூபாய்க்கு வாங்கிய வீட்டை புதுமனைவியின் பெயரில் எழுதுவதற்காக எடுத்து வந்தார். அதுவே பெரும் பிரச்சனை எழ காரணமாயிற்று. வாக்குவாதம் எழுந்து பெரும் சண்டையில் முடிந்தது.

கிழவனாரின் போட்டோவைக் காட்டி 'இவரை உங்களுக்குத் தெரியுமா?' என விசாரித்த பொழுது சித்தார்த்தின் மனம் துணுக்குற்றது.

இந்த ஆள் பழனியில் வெறிக்க, வெறிக்க பார்த்தவன் தானே? அப்படியானால் இந்த தாக்குதல் மகாவை குறி வைத்ததா? யார் இவன்? மகாவின் உறவுக்காரனாக கண்டிப்பாக இருக்க முடியாது. அவளே அன்று பயந்து வெளிறிப்போய் இருந்தாளே? இந்த ஆளால் அவளுக்கு என்ன ஆபத்து வரமுடியும்?' என எண்ணியவாறே, ''யார் இவர்?'' என்று காவலரிடம் விசாரித்தான்.

தொழிலதிபர் பெரும்புள்ளி; கோடீஸ்வரன், இரண்டு மனைவிகள்;இப்படி குடும்பம் உள்பட அனைத்தையும் கேட்டுத் தெரிந்து கொண்டான். தெரிந்த விஷயத்தை வைத்துக் கொண்டு யோசித்ததில் ஓரளவு விஷயம் புரிந்தது. இந்த ஆள் மகாவை எதற்கோ பின் தொடர்கிறான். தான் அவளுடன் இருப்பது அவனுக்கு

பிடிக்கவில்லை. தன்னை அகற்ற இந்த வேலை செய்து இருக்கிறான். தெரிந்து கொண்ட விஷயத்தை யாரிடமும் சொல்லவில்லை. மகாவிற்கு சின்ன முகச்சுளிப்பு நேருவதைக் கூட அவன் விரும்பவில்லை.

'ஏதோ ஒரு பிரச்சனை அவளைச் சுற்றி இருக்கிறது. ஆனால் அவள் எதையும் பகிர்ந்துகொள்ள முடியாமல் தன்மானம் தடுக்கலாம்.

மிகப் பெரிய பணக்கார வீட்டுப் பெண்ணாக இருந்தாலும் எளிமையாக உடுத்துகிறாள். எந்தவித ஆடம்பரமோ, ஒப்பனையோ இல்லை. வேலை தேடி அலைகிறாள். உழைப்பை மட்டுமே நம்பியிருக்கிறாள்.

அவசிய செலவுகள் கூட செய்வதில்லை. பெற்றோரிடம் பணம் வாங்க பிடிப்பதில்லையா? அல்லது அவர்கள் தருவது இல்லையா? அவள் குடும்பத்தைப் பற்றி பேசியதே இல்லை. அதில் ஏதும் சிக்கல் இருக்குமோ? என்னவோ இருந்துவிட்டு போகட்டும்.

அவள் என் வீட்டிற்கு வந்த பிறகு மனம் நோகாமல் பூ மாதிரி பார்த்துக்கொள்ள வேண்டும்; உலகத்து ஆனந்தத்தை எல்லாம் அனுபவிக்க செய்ய வேண்டும் என அவன் யோசித்துக் கொண்டிருந்தபொழுது அறை வாசலில் பரபரப்பாய் பலர் ஓடியதைப் பார்த்தான்.

ஸ்டெக்ஷரில் வைத்து தள்ளிப் போகப்பட்டவர் அந்தக் கிழவனார். என்ன விஷயம்? என்று நேரம் கழித்து உள்ளே வந்த நர்ஸிடம் கேட்டான். ''காலம் போன கடைசியில் இருக்கிற ரெண்டு மனைவி பத்தாது என்று மூணாவதாய் இன்னொரு இளம் பெண்ணை கல்யாணம் செய்து கொள்ள முயற்சிப் பண்ணியிருக்கிறார்.

அது பிடிக்காத இரண்டாவது மனைவியின் அண்ணன் கத்தியால் குத்தி விட்டார்.

எவ்வளவு பணம் இருந்தால் என்ன? நல்ல புத்தி இல்லை என்றால் இந்த நிலைமை தான். அடுத்தவர் வாழ்க்கையை கெடுக்க நினைத்தால் கடவுள் சும்மா விடுவாரா? வினை விதைத்தவன் வினையறுப்பான். இந்த ஆள் எல்லாம் அனுபவித்தால்தான் திருந்துவான்.''

ஏதோ அறிந்தும், அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும் இருந்தது சித்தார்த்திற்கு. காவலர் ஏன் தாக்குதல் அவன்மீது நடத்தினார்கள்? என அறிய முடியவில்லை என்ற பொழுது 'ஆள்மாறிப்போய் தவறுதலாக நடத்தியிருப்பார்கள்' என எடுத்துக் கொடுத்து அர்த்தத்துடன் பார்க்க அவரும் புரிந்து கொண்டு ''சரிதான்'' என்றார்.



13

உமா சொல்லிய விஷயமும் சித்தார்த்திற்கு உறுத்தலாய் இருந்தது. அம்மா வந்தனா வேண்டாம் என்று முடிவெடுத்ததும் பின் அப்பா எடுத்துச் சொல்லியதால் மனம்மாறியதும் அறிந்ததும் சங்கடத்தை ஏற்படுத்தியது.

எத்தனை தடைகள் வந்தாலும் மகா தான் தன் மனைவி என்பதில் அவன் மிக மிக உறுதியாய் இருந்தான். அதில் எள்ளளவும் பின்வாங்க அவன் விரும்பவில்லை.

எந்தப் பிரச்சனைப் பற்றியும் பேசாத தன் வேலையில் இலக்கில் கவனமாய் இருக்கும் மகாவைப் பற்றி

நினைக்கையில் அவனுக்கு பெருமிதம் ஏற்பட்டது. வாழ்வோ, தாழ்வோ எதனையும் முகத்தில் எதிரொலிக்காமல் இருப்பது இந்த சின்ன வயதில் சாத்தியப்படுமா? என வியப்பேற்பட்டது.

வாழ்க்கைச் சக்கரம் சுற்றும் பொழுது பல மேடு பள்ளங்களை கடந்து தான் செல்ல வேண்டும். அவற்றினால் பாதிக்கப்பட்டாலும் எழுச்சிக்கொண்டு முன்னேறுவது எல்லாருக்கும் முடியக்கூடிய சாத்தியப்படக் கூடிய விஷயமில்லை.

எப்படியும் வாழலாம் என நினைக்காமல் இப்படித் தான் வாழவேண்டுமென்று தன்னைப் போன்றே பல இளைஞர்கள் நினைப்பதே சந்தோஷம் தரும் விஷயமாய் இருந்தது.

எல்லாரும் தற்கால இளைஞர்களை உல்லாச பிரியர்களாகவும், மேம்போக்கானவர்களாகவும், உழைப்பதற்கு சோம்பல்படுபவர்களாகவும், கலாச்சார பண்பாட்டை உடைத்தெறிபவர்களாகவும் எண்ணுகிறார்கள்.

உண்மையில் பல இளைஞர்கள் அப்படியில்லை. வெற்றிபெறும் வேகம் இருக்கிறது; நல்லது செய்யும் துடிப்பு இருக்கிறது; அநியாயத்திற்கு எதிராக பொங்கும் இயல்பு இருக்கிறது. அவர்களுக்கு வேண்டியது ஒரு நல்ல தலைமை; அல்லது நல்ல வழிகாட்டி. அதுமட்டும் சரியாக அமைந்துவிட்டால் பாதி வழியை கடந்தாற் போல்தான்.

எவ்வளவோ நல்லது செய்ய வேண்டும் என துடிக்கின்றவர்களின் கரங்களும், கால்களும் கண்களுக்கு புலப்படாத தளைகளால் கட்டுப்பட்டிருந்தன. முன்னேற

றத்திற்கு தடையாக இருக்கும் அத்தனை விஷயங்களும் தளைகள் தான். சூழ்நிலையை மோசமாக உருவாக்கி விட்டு நல்ல இளைய தலைமுறை உருவாகவில்லை என்பது எவ்வளவு மோசமான குற்றச்சாட்டு?

அந்த மாதிரி மோசமான சூழ்நிலைகளிலும் மீறி கற்பக விருட்சமாய் வளர்ப்பவர்களை போற்றிக் கொண்டாட வேண்டும். தானும் உயர்ந்து, மற்றவர்களையும் உயர்த்துபவர்கள் உன்னதமானவர்கள். வாழ்க்கையில் நேரிய வழியில் உயர நினைப்பவர்களுக்கு கை கொடுத்து உதவ வேண்டும்.

மகாவை உடனே பார்க்க வேண்டும் போல் இருந்தது. முழு உடல்நலம் தேற வீட்டிற்கு ஒரு வாரம் தங்க வந்தான். தினமும் ஒருமுறையாவது வந்தனா பொது தொலைபேசியில் இருந்து அவன் நலம் விசாரித்து விடுவாள். அவளுடன் நினைத்த நேரத்தில் பேச முடியாததும் பெரும் துன்பமாயிருந்தது.

உமாவிடம் அலைபேசி வாங்கிக் கொடுத்தால் அவளது தன்மானத்திற்கு இழுக்காயிருக்குமோ? என யோசித்தான். ஆனாலும் உமா தான் சமாளித்துக் கொள்வதாகக் கூறி அலைபேசியை வாங்கிக்கொண்டு போய் பரிசுப் பெட்டியில் வைத்துக் கொடுத்தாள்.

"என்ன அக்கா இது?"

"நீ கோல்டுமெடல் வாங்கியதற்காக எங்கள் எல்லாரின் சார்பிலும் ஒரு சிறிய பரிசு.

'நன்றி'. சொல்லி வாங்கிக் கொண்டாலும், அவள் கண்களில் ஓர் தயக்கம் இருந்தது உமாவுக்கு புரிந்தது.

அவள் முன்னிலையிலேயே அதைப் பிரித்தாள். அழகான அலைபேசி, சிம்கார்டு போடப்பட்டிருந்தது. "இப்பொழுது எனக்கு வகுப்பு இருக்கிறது அக்கா. பிறகு நான் அவரிடம்... உங்களுக்கு... பேசுகிறேன்..."

"என்னுடன் தான் பேசிக் கொண்டிருக்கிறாயே? சித்தார்த்துடன் ப்ரீயாக இருக்கும் பொழுது பேசு. நான் வருகிறேன்" எனப் புறப்பட்டு போனாள். யாரிடமும் யாசகமாய் எதையும் அவள் பெற்றுக்கொள்ள விரும்பியதில்லை. அன்புப் பரிசாகக் கூட இதுவரை எதையும் இலவசமாக பெற்றதில்லை. தன்னால் இயன்றதை அவர்களுக்கு இவளும் செய்து விடுவாள். என்ன செய்யலாம்? பணம் வேண்டுமே? என யோசித்த பொழுது கல்வி உதவித்தொகை அன்றைக்கு அவளுக்கு வந்து சேர்ந்தது. அதில் உமாவுக்கு ஒரு காட்டன் புடவையும், சித்தார்த்திற்கு ஒரு டீ ஷர்ட்டும் வாங்கிக்கொண்டு பஸ்ஸில் ஏறிய பொழுது அலைபேசி அழைத்தது. கூப்பிட்டது சித்தார்த்தான். "ஹலோ, நானே உங்களிடம் பேச வேண்டுமென்று நினைத்தேன். அதற்குள் நீங்களே கூப்பிட்டு விட்டீர்கள்."

"உன் போன் வருமென்று காத்திருந்தேன். இனி வகுப்புகள் முடிந்திருக்கும்" என்று தான் அழைத்தேன்.

"ம், பஸ்ஸில் வந்து கொண்டு..." என்று அவள் ஆரம்பிக்கும்பொழுது பஸ் குலுங்கியது. சட்டெனத் தடுமாறி முன் கம்பியில் வேகமாக இடித்துக் கொண்டாள். தன்னையறியாமல் 'அம்மா' என வாய்விட்டு அலறிவிட்டாள்.

"என்ன? என்ன? என்ன ஆச்சு?" என அவன் பதறினான். பஸ் குலுங்கிக்கொண்டு ஓடியது. பஸ் டிரைவர்

பிரேக் போட முயற்சித்தும் முடியவில்லை. ''பஸ் பிரேக் பிடிக்கவில்லை.'' என அவள் சொல்லும் பொழுதே மற்ற பயணிகளும் அதை உணர்ந்து கொண்டு அலற ஆரம் பித்தனர்.

''எங்கே பஸ் வந்து கொண்டிருக்கிறது.''

''பாலக்கரைத் தாண்டிவிட்டோம்.''

''டிரைவரை மார்க்கெட் பக்கம் போகாமல் நெரிசல் இல்லாத பாதையில் ஓட்டச்சொல்'' டிரைவரும் புத்தி சாலித்தனமாக நிலைமையை சமாளிக்க முயற்சித்துக் கொண்டிருந்தார். போக்குவரத்து நெரிசல் இல்லாத சாலையை நோக்கி வண்டியைத் திருப்பினார்.

பயணிகள் ''காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்'' என அலற ஆரம்பித்தனர். கண்டக்டரோ, வாசலை ஒட்டி நின்று ''நகருங்கள், பாதையை விட்டு நகருங்கள். வண்டி பிரேக் பிடிக்கவில்லை'' என கூச்சலிட்டுக் கொண்டு வந்தார்.

அதைக்கேட்ட பாதசாரிகளும் மற்றவர்களும் அலறி அடித்துக் கொண்டு ஒதுங்கி ஓடினர். மற்ற பேருந்து களும் ஒதுங்கி நிற்க டிரைவர் வேகத்தைக் குறைக்க கடும் முயற்சி செய்து கொண்டிருந்தார்.

பாலத்தின் மீதேறி மறுபுறம் கீழே இறங்க வேண்டும். ஒருவழிப்பாதையாக இருந்ததால் எதிரே பஸ் எதுவும் வரவில்லை. மேலே ஏறும் பொழுது சிறிதளவு வேகம் மட்டுப்பட்டிருந்தது.

கண்டக்டரின் கூச்சலால் பலர் ஆங்காங்கே கட்டை களையும் டயர்களையும் குறுக்கேப் போட்டு பஸ்ஸை

நிறுத்த முயற்சி செய்தனர். பாலத்தின் மேலேறிய பஸ் கீழே கிடுகிடுவென்று இறங்க எதிரே நான்கைந்து டின்கள் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்ததை மோதி உருட்டி விட்டது. அதனால் வேகம் கொஞ்சம் குறைய சிலர் சரியாக டயரை உருட்டி சக்கரத்தின் முன் போட் டனர்.

பஸ் கொஞ்சம் தடங்க... அடுத்தடுத்த சக்கரங்களில் டயர் தடையைப் போட முடிவில் பஸ் நின்றே விட்டது. மிகப் பெரியதான விபத்து தடுக்கப்பட்டது. பயணிகள் ஒவ்வொருவராய் கீழே இறங்கினர். எழுபது பேருக்கு குறையாமல் இருந்தனர்.நல்லவேளை, டிரைவர் சாமர்த் தியத்தினாலும், பொது மக்களின் புத்திசாலித்தனத்தி னாலும் அவர்கள் காப்பாற்றப்பட்டிருந்தனர்.

வந்தனா கீழே இறங்கிய பொழுது சித்தார்த் அங்கே நின்று கொண்டிருந்தான். பொது மக்களுடன் அவனும் இணைந்து செயல்பட்டிருந்தான்.

அவளைப் பார்த்ததும் நிம்மதி பெருமூச்சு விட்டான். எல்லாரும் நிம்மதியாக கிளம்ப, ஓரமாக பஸ்ஸை தள்ளி வைத்து தடைகளை அதனருகே போட்டு வைத்தனர்.

வந்தனாவை காரில் ஏற்றிக் கொண்டு தனியார் கல்லூரியை ஒட்டி இருந்த ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றான். உள்ளே சென்று அமர்ந்ததும் அவளையே உள்வாங்கிக் கொள்வது போல் பார்த்துக் கொண்டே இருந்தான்.

''உஷ்!'' என அவன் முன் கை அசைத்தாள். ''ஹேய்! உனக்கு விளையாட்டாக இருக்கிறதா? எனக்கு ஒரு கணம் உயிரே போனது போல் இருந்தது. உனக்கு என்ன

ஆகுமோ? என்ற நினைப்பே என்னை நடுங்க வைத்துவிட்டது. நீயானால் சிரிக்கிறாய். நம் மரணத்தை விட பிரியமானவர்களின் மரணத்தை தான் எதிர் கொள்வது மிகக் கடினம். எதற்காக கல்லூரி விட்டு அங்கே போனாய்? இந்த பஸ்ஸில் ஏறி ஆபத்தில் சிக்கிக் கொண்டாய்?''

''உங்களுக்கும், உமா அக்காவிற்கும் ஒரு சிறிய பரிசு வாங்கப் போனேன். அவ்வளவு தான்!''

''பரிசு ரொம்ப முக்கியம்! ஆபத்தில் இப்படி சிக்கிக் கொண்டாயே?''

''அதுதான் எந்த ஆபத்தும் இல்லாமல் தப்பியாகிவிட்டதே! இன்னும் ஏன் கவலைப்படுகிறீர்கள்? நாம் நன்றாக வாழ வேண்டும் என்று கடவுள் எழுதியிருந்தால் எதுவும் நேராது. 'வாழ்க்கை எத்தனை அழகானது' என்பதை நான் இந்த நிமிடத்தில் உணர்கிறேன் சித்து. இந்த சூழ்நிலை எனக்காக துடிக்கும் ஒரு நல்ல இதயத்தை என்னை உணர வைத்திருக்கிறது.

இந்த அன்பை உணர்ந்தால் எழும் இனிமையை என்னால் வார்த்தைகளால் சொல்ல முடியாது. கடவுளுக்கு இனிய தருணத்தை கொடுத்ததற்கு நான் நன்றி சொல்ல வேண்டும்'' என கண்கள் பனிக்க பேசிய வளின் உள்ளங்கையை மென்மையாய் அழுத்தினான். தன் பரிசை எடுத்து அவனிடம் கொடுத்தாள். கண்கள் சிரிப்பில் மிளிர ''நான் இதற்கு நன்றியை சொல்லப் போவதில்லை... என நிறுத்த பார்வையின் அர்த்தம் புரிந்து முகம் சிவந்தாள்.

இருவரும் சிறிது நேரத்திற்கெல்லாம் கிளம்பிவிட்டார்கள் என்றாலும் அவர்கள் மனதில் இனிமை பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

மிகப் பெரிய குற்றம் அவர்களுக்கு செய்தவர்கள் யாரேனும் அப்போது அவர்கள் முன்னால் வந்திருந்தால் மிகச் சுலபமாய் மன்னித்திருப்பார்கள். அன்பு கொண்ட மனதிற்கு தண்டிக்கத் தெரியாது. சித்தார்த் பதறிக் கொண்டு கிளம்பிய வேகத்தைப் பார்த்து ஜானகி என்ன வென்று உமாவிடம் விசாரித்தாள்.

உமாவிற்கும் முழுசாய் புரியவில்லை. மருத்துவமனையில் இருந்து அப்போது தான் வீட்டிற்கு வந்தாள். உமாவை மகேஷ் அன்று சில பரிசோதனைகள் செய்தான். 'ஏன்?' என கேட்டதற்கு 'அவள் மிக மெலிந்திருப்பதால்' என பதில் கூறிவிட்டு தன் வேலையைத் தொடர்ந்தான்.

அதே யோசனையில் வீட்டிற்கு வந்தால் சித்தார்த் பதட்டத்துடன் கார் எடுப்பதைப் பார்த்தாள். ''மகா வந்த பஸ் பிரேக் பிடிக்கவில்லையாம்'' என ஒற்றை வரியில் சொல்லிவிட்டு விரைந்தான். ''மகாவிற்கு என்ன ஆச்சு? பிரேக் பிடிக்காத பஸ்ஸை இவன் என்ன செய்யப் போகிறான்?

இவனுக்கே இன்னும் உடல்நலம் தேறவில்லையே? என உமாவிடம் அவன் சொன்னதைக் கேட்டு ஜானகி கவலைப்பட்டாள். வெகுநேரம் கவலைப்பட வைக்காமல் சித்தார்த் வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

அவன் வந்த நேரம் வீட்டில் அனைவரும் இருந்தனர். அவன் நடந்ததை விவரிக்க ''நல்லவேளை மகா

தப்பினாள்'' என நிம்மதி மூச்சுவிட்டனர். ஜானகிக்கு மட்டும் 'உன் உடல்நலமே சரியாகாத பொழுது அவளை காக்க அப்படி ஓட வேண்டுமா?' என்றிருந்தது. தாயின் முகத்தைப் பார்த்தவனுக்கு அவள் நினைப்பு புரிந்தது.

'அவள் ஸ்வீட் ஹார்ட் பொண்ணும்மா! ரொம்ப நல்லவ; அருமையானவள். அவள் கிடைக்க நாம் எல்லாரும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அதை நீங்கள் ஒருநாள் கண்டிப்பாய் புரிந்து கொள்வீர்கள்' என உள்ளம் பேச அவளருகே சென்று தோளை அணைத்துக் கொண்டான்.

மாலை வீட்டிற்குள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தவனை மகேஷ் அழைத்தான். ''என்ன அண்ணா?'' அவன் காதில் இவன் கிசுகிசுக்க 'வாவ்' என்றான்; பின் 'உமா சொல்லவே இல்லையே?'' ''அவளே இதை சரிவர அறியவில்லை.''

''என் கல்யாண வேலைகளில் மூழ்கி விட்டார்களாக்கும். சரி, சரி சின்னதாய் அண்ணிக்கு ஒரு சஸ்பென்ஸ் கொடுக்கலாமா?''.

''என்னடா செய்யப் போகிறாய்?''

''சின்னதாய் ஒரு கேண்டில் லைட் டின்னர் ஏற்பாடு செய்யலாமா?''

விடுவிடென்று மொட்டை மாடிக்குச் சென்று தன் அண்ணன் உதவியுடன் மேசை குடைகள் அமைத்து விட்டு, ''நீங்க உங்க ஆளை மேலே வர விடாமல் சமாளித்துக் கொள்ளுங்கள். நான் மற்ற ஏற்பாடுகளை பார்க்கிறேன்.

''டேய் தம்பி, மெல்லிய மணம் வருகிற மாதிரி சென்ட் பயன்படுத்து. ஹெவி ஸ்மெல் அவளுக்கு பிடிக்காது. ஆர்க்கிட் மலர்கள் அவளுக்கு மிகவும் பிடிக்கும். ஆயில், மசாலா அயிட்டமெல்லாம் வேண்டாம். மாதுளை மிகவும் நல்லது.''

''சரிப்பா. உன் ஆளைப்பற்றி தெளிவாகவே புரிந்து வைத்திருக்கிறாய். முதலில் நீ கீழே போ. அப்புறம் உன்னைத் தேடி மேலே வந்துவிடப் போகிறார்கள்.''

மகேஷ் மகனை உணவு கொடுத்து தூங்க வைத்து விட்டு மனைவியை அழைத்துக் கொண்டு மேலே வந்தான். காலடி வைத்ததும் இருட்டில் இலேசாய் தடுமாற மகேஷ் அவளைப் பற்றிக் கொண்டான். மெல்ல மெழுகுவர்த்திகள் ஆங்காங்கே ஒளி பெற 'வாவ்' என ரசித்தவள் பூந்தோட்டமாய் மாறியிருந்த மொட்டை மாடியை கண்டு குதூகலித்தாள். இருந்தாலும் கிண்டலாய் ''ஏனப்பா திடீரென்று மொட்டை மாடிக்கு கேண்டில் லைட் டின்னரை மாற்றி விட்டீர்கள். தினமும் கரெண்ட் இல்லாமல் கேண்டில் லைட் டின்னர்தானே சாப்பிடுகிறோம்?'' என்றாள்.

''சரிதான். ஆனால் இது அடுத்த குழந்தையை சுமக்கும் எங்கள் அருமை மருமகளுக்கான வாழ்த்தும் விழா.''

''என்ன?'' 'ஆகா, நான் இதை எப்படி.... கவனிக்காமல்... போனேன்?' என எண்ணிக் கொண்டாள்.

''இது என் மருமகளுக்கு'' என வைர வளையலை போட்டுவிட்டாள்.

''இது என் பரிசு'' வாட்ச்சை பரிசளித்தான் சித்தார்த்.

''மகா உமாவிற்கு தந்த பரிசு'' என்று காட்டன் புட வையை தந்தான்.

''இனி வாங்க நாம எல்லாரும் போகலாம். அண்ணன் அண்ணியுடன் ஆடுவாரோ? பாடுவாரோ? அவர்கள் பாடு: ஏதோ செய்துகொள்ளட்டும்.''

''நீங்க வேறு: அவரை பேசச் சொன்னாலே மருந்து மாத்திரை பெயரைத்தான் சொல்லுவார். இதில் பாடல் வேறா?''

''கிடாரை எல்லாம் எடுத்து தூசித்தட்டி வைத்திருக் கிறேன் கண்மணி. இன்றைக்கு நான் பாடாமல் இருக்கப் போவதில்லை.''

''இந்த ஏற்பாடெல்லாம் யார் செய்தது?''

''வேறு யார்? சின்னவன் தான்?''

''வீட்டில் எல்லாரையும் சந்தோஷப்படுத்த நாம் ஒவ்வொருவரும் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். அது தான் நம்ம குடும்பத்தின் வெற்றி அல்லது சிறப்பு என்று சொல்லலாம்.''

இரண்டு நாட்களில் சித்தார்த் ஊருக்கு கிளம்பி விட்டான். ஊருக்கு செல்லும் வரை வந்தனாவை பார்க்க அவன் முயற்சிக்கவே இல்லை. பஸ் விபத்துக்கு பிறகு மறுபடியும் அவளை சந்திக்க செல்வான் என்று ஜானகி எதிர்பார்க்க, அவனோ எங்குமே செல்லவே இல்லை.

''கல்யாணத்திற்கு முன் அடிக்கடி சந்திக்கக் கூடாது'' என பேச்சுவாக்கில் அவள் உமாவிடம் சொன்னது அவனுக்கு தெரியாது தான். இருந்த போதிலும் அவன் அவளை சந்திக்க செல்லவில்லை. மன இணைப்பு

அதிகமாகி விட்டால் சந்திப்பு கூட அவசியமற்று போகின்றது. பிள்ளையின் முகம் வாடியிருக்கிறதோ? அவளை ஒருமுறை கிளம்பும் முன் பார்த்திருக்கலாமோ? என உற்று உற்று பார்த்தாள். ''என்னம்மா?''

''ஊருக்கு போகிறாயே? ஏதாவது வேண்டுமா?''

''நான் இன்றைக்கு புதிதாகவா ஊருக்கு கிளம்பு கிறேன்? எப்பொழுதும் உள்ளது தானே?''

''இரண்டு நாட்களாக நீ வெளியில் கூட எங்கும் செல்லவில்லை'' என வேறு எங்கோ பார்த்துக் கொண்டு முணுமுணுத்த அன்னையின் அருகில் வந்து, ''அதனால் என்னம்மா? நீங்கள் தானே நான் நன்றாக ஓய்வு எடுக்க வேண்டும் என்று சொன்னீர்கள்?''

''என் மனதை கஷ்டப்படுத்தக்கூடாது என்று உன்னை துன்புறுத்திக் கொண்டாயா?''

''உஷ்! என்னம்மா இது? எனக்கு என்ன கஷ்டம்? மகாவை பார்க்காததா? எங்களுக்குள் சங்கடங்கள் எல்லாம் இனி வராது. நாங்கள் நன்றாக புரிந்து கொள்ள முயற்சித்துக் கொண்டிருக்கிறோம்.

இதையெல்லாம் பெரிய விஷயமாக எடுத்துக் கொள்வ தில்லை. அதனால் நீங்கள் கவலைப்படாதீர்கள். என் அருமை அம்மா எது சொன்னாலும் அது நல்லதுக்கு தான் என்று நன்றாகவேத் தெரியும்.''

''சரிப்பா. நான் சீக்கிரம் கல்யாண வேலைகளை பார்க்க வேண்டும். உமாவை ரொம்ப தொந்தரவு செய்யக் கூடாது.''

அவன் பணியாற்றும் மாநிலத்துக்கு சென்ற பொழுது அவனுக்கு பல வேலைகள் காத்திருந்தன. அவன்

நிர்வாகத்தில் இருந்த மாவட்டத்தில் சாலை வசதிகள் செய்யப்பட வேண்டியிருந்தது. அங்கு 80 கி.மீ. தூரத்தை கடக்க அஞ்சு மணி நேரத்திற்கு மேல் ஆகும்.

அவ்வளவு மோசமான நிலைமையில் சாலைகள் இருந்தன. அங்கே 200 கி.மீ. சாலைகள் போட முதல் வரிடம் ஒப்புதல் வாங்கி இருந்தான். அதற்கான வேலை களில் தீவிரமாக ஈடுபட வேண்டியிருந்தது. எல்லாரிட மும் மிக இயல்பாக பேசி அனைவரையும் சரிசமமாக நடத்தும் தன்மை அவனிடம் இருந்தது.

அதனால் எல்லாரும் அவனை நோக்கி ஈர்க்கப்பட்டார் கள். பிரச்சனையான இடத்தில் மக்களுக்காக பணியாற்று வதே தன் பதவிக்கு சிறப்பு என்று ஈடுபாட்டுடன் செயலாற்றினான். ஏற்கனவே வேறு மாவட்டத்தில் சிறப்பாக பணியாற்றியதற்காக மத்திய அரசிடம் இருந்து மூன்று விருதுகள் வாங்கி இருந்தான்.

மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் நினைவே அவனை ஆக்கிரமித்து இருந்தது. தனக்கு பாதுகாப்பு படை தேவையில்லை என்பதே அவன் எண்ணமாக இருந்தது.

தீவிரவாதிகள் நிறைந்த மாநிலமாக இருந்த போதிலும் பாதுகாப்புக்கு போலீஸை நம்பியதைவிட இந்த மாவட்ட மக்களை பெரிதும் நம்பினான். அவனிடம் மக்கள் மிகவும் அன்பு பாராட்டினார்கள். அவன் என்ன சொன்னாலும் அதை முழுதாக நம்பினார்கள்.

மக்களுக்கு மதிப்பும் மரியாதையும் அவன் மேல் நாளுக்கு நாள் அதிகரித்தது. போற போக்கைப் பார்த்தால் அவனைச் சுற்றி ஒளிவட்டமே இருப்பது போல் நம்ப

ஆரம்பித்து விடுவார்கள் போலிருக்கிறது. குறைந்த அளவு நேரத்தையே உறங்குவதற்கோ, ஓய்வு எடுப்ப தற்கோ பயன்படுத்தினான். எந்நேரமும் எங்கும் செல்ல அவன் தயங்குவதில்லை.

ஐ.பி. ரிப்போர்ட் அவரை எச்சரிக்கையாக இருக்கச் சொல்லி வந்தது. அதை பெரிதாக அவன் எடுத்துக் கொள்ளவில்லை. சட்டீஸ்கர், ஒரிஸ்ஸா, மகாராஷ்டிரா, ஆந்திரா ஆகிய மாநில எல்லைகளை இணைத்து தண்ட காரண்யா காடு இருந்தது. இது பழங்குடிகளின் பிரதேசம். டோங்ரியா, கோண்டு இன மக்களின் தாயகம்.

பல காலமாக இந்த மக்கள் இந்தக் காடுகளில் தான் வாழ்கிறார்கள். இந்தியா என்ற ஒரு நாடு உருவாவதற்கு முன்பிருந்தே அவர்கள் இங்கு வாழ்கிறார்கள். அவர் களுக்கு இயற்கை தான் கடவுள்.

காட்டை உயிரைவிட நேசித்தார்கள். தண்டகாரண்யா காட்டில் இருந்த மலைத்தொடர்களில் பாக்ஸைட் தாதுவெட்டி எடுக்கப்படுவதை எதிர்த்து போராடி வந்தார்கள். அவர்களை போலீஸ், ராணுவம் மூலம் அரசு அடக்கி ஒடுக்க ஆரம்பித்தது. பழங்குடி மக்கள் வீரத் துடனும், தீரத்துடனும் எதிர்த்து போரிட்டனர். ஒடுக்கப் படும் பழங்குடி மக்களுக்கு ஆதரவாக மாவோயிஸ்ட் டுகள் ஆயுதம் ஏந்தி களத்தில் போராட ஆரம்பித்தனர். இதில் போராடும் மக்களை ஒடுக்க அவர்களிடையே பிரிவினைகள், வேற்றுமைகளைத் தூண்ட பல செயல் கள் செய்யப்பட்டன.

அதில் ஒன்றுதான் அவர்களிடையே சாதிப்பிரிவினைத் தூண்டி ''சல்வா ஜூடும்'' என்ற கூலிப்படைகள் மூலம்

அவர்களை சொந்த வாழ்விடத்தில் இருந்து விரட்டி அடிக்கும் அக்கிரமமும் நடந்து கொண்டிருந்தது. இந்த சூழ்நிலையில் தங்களுக்கு உண்மையிலேயே நல்லது செய்து வரும் சித்தார்த்தை அவர்கள் உயர்வாக மதித்ததில் வியப்பில்லை.

அந்த நேரத்தில் கேம்ப் விஷயமாக வந்தனா ஒடிஸா மாநிலத்துக்கு வந்தாள். வந்ததும் அவனுடன் தொடர்பு கொண்டாள். ''ஹேய் கண்ணம்மா எப்படியிருக்கிறாய்? ப்ளசண்ட் சர்ப்ரைஸ் கொடுக்கிறாய்? வகுப்பிற்கு செல்லவில்லையா?''

''இல்லேப்பா, கேம்ப்பிற்காக உங்கள் பக்கத்து பகுதிக்கு தான் வந்து இருக்கிறேன். ஒடிசா எல்லை உங்கள் மாவட்டத்துக்கு அருகில் தான் இருக்கிறோம்.''

''உங்கள் சேவை எங்களுக்கு தேவை. நமக்கிடையில் காடு தான் இருக்கிறது. நீங்கள் நடத்துங்கள் உங்கள் ராஜ்ஜியத்தை. நாங்கள் எங்கள் வேலையைத் தொடர்கிறோம்.''

''பார்த்து கவனமாக இருங்கள். மற்றவர்கள் உங்களைப் பத்தி உயர்வாக பேசுவதைக் கேட்க ஒரு பக்கம் பெருமிதமாக இருக்கிறது; இன்னொரு பக்கம் ஆபத்து ஏதும் நேர்ந்துவிடக் கூடாதே என்று கவலையாக இருக்கிறது.''

''அடடா, காலரை தூக்கிவிட்டுக் கொள்கிறேன். நீயும் கவனமாய் இரு. உதவி செய்கிறேன் என்று உயிரை ரிஸ்க்கில் நுழைக்காதே.''

''என்றைக்கும் கம்ஃபர்ட் சோனில் இருந்து கொண்டே உதவ முடியாது சித்து சவால்களை எதிர்கொண்டு தான் ஜெயிக்க வேண்டும். சாதித்தவர்களைப் பாருங்கள் வெளியே வந்துதான் போராடியிருப்பார்கள். சாதிப்பது கடமை மட்டுமல்ல; உரிமையும் கூட. நல்லவற்றை நாம் ஆரம்பித்து வைப்போம்; அதை யாராவது தொடர்வார்கள்.''

''உண்மைதான். இளைஞர்கள் சக்தி மகத்தான சக்தி. கனவுகள் ஏக்கங்கள். ஆர்வம் இலட்சியம், கறைபடாத மனத்துடன் இருப்பவர்கள் இளைஞர்கள். அவர்கள் எல்லா துறையிலும் பங்கேற்க வேண்டும். சமூகத்திற்கு உபயோகமாக, பயன்படும் விதத்தில் ஏதாவது செய்ய வேண்டும்.''

யாரோ அழைக்கும் குரல் கேட்டது. ''சரிம்மா! நான் பிறகு பேசுகிறேன்'' என போனை வைத்தான்.

கடும் மழையால் பாதிக்கப்பட்டிருந்த சாலைகளை மாணவர் படை திறம்பட செயல்பட்டு ஓரளவுக்கு மேல் சீரமைத்து விட்டிருந்தனர்.

பல கல்லூரிகளிலிருந்து மாணவர்களை ஒருங்கிணைந்து வந்திருந்தனர். பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு முதலில் அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தனர். நோய் தடுப்பு மாத்திரைகளை விநியோகித்தனர். தினமும் பல மைல்கள் அலுக்காமல் மாணவர்கள் நடந்து மக்களுக்கு பல உதவிகளைச் செய்ததால் வெகுவிரைவில் மக்களின் நன்மதிப்பை பெற்றனர்.

அதுவும் பெண்கள் செல்வாக்கு அவர்களுக்கு அதிகம் வர ஆரம்பித்தது. தங்கள் வீட்டுப் பிள்ளைகளாகவே

நினைக்க ஆரம்பித்தனர். இரண்டு நாட்களாக சித்தார்த் துடன் வேலை காரணமாக வந்தனாவால் பேசக்கூட முடியவில்லை. நான்காம் நாள் விடுமுறை தினமான தால் ஜீப்பை எடுத்துக் கொண்டு சித்தார்த் அங்கு வந்து விட்டான்.

மாணவர்களுடன் இயல்பாய் பழகியவனை நிரம்ப பிடித்து போயிற்று. உணவு பொட்டலங்கள், பழங்கள் நிறைய எடுத்து வந்திருந்தான். ''சார் உங்க ஆள் புண் ணியத்தால் எங்களுக்கு சூப்பரான சாப்பாடு கிடைச் சுருக்கு. அம்மா அன்னபூரணி நீ வாழ்க!'' என்றவன் தொடர்ச்சியாக ''அடிக்கடி அல்லது இரண்டு நாளுக்கு ஒருமுறை இப்படி வந்துட்டு போங்க சார்'' என்றான்.

மாணவர்களுக்கும் ஓய்வு நாளாக இருந்ததால் சிறிய கலைநிகழ்ச்சியை திடீரென ஏற்பாடு செய்து விட்டனர். ஆடல், பாடல், மிமிக்ரி என அசத்திவிட்டனர். அதில் ஒரு குறும்புக்கார மாணவன் சித்தார்த் அருகில் வந்து மகாலெஷ்மி மாதிரி அபிநயித்து 'ஐ லவ் யூ டார்லிங்' என காகித ரோஜாவை நீட்டினான்.

சித்தார்த்தும் புன்னகையுடன் ''என் மகி கொடுப்ப தால் வாங்கிக் கொள்கிறேன்'' எனக் கூற வந்தனாவிற்கு முகம் சிவந்தது. அனைவரும் கொல்லென்று சிரித்தனர். ''சார் சும்மா சொல்லக்கூடாது ரெண்டு பேரும் பொருத்த மான ஜோடி''.

''ஏன்டா! இப்படி ஐஸ் பிடிக்கிறாய்? சார் கிட்டே என்ன காரியம் ஆக வேண்டும்? சார் மிச்ச மீதி சாப்பாடு பொட்டலம் இருந்தால் அவன் கிட்டேயே கொடுத் துடுங்க.''

மாணவி ஒருத்தி ''சார்! அடுத்த ஜென்மத்திலாவது எங்களுக்கு சான்ஸ் கிடைக்குமா?'' எனச் சீண்ட சித் தார்த்தை முந்திக் கொண்டு ஒரு மாணவன் ''ஏம்மா, மான்குட்டியை பிடிக்குமா? கருப்பாய் சின்னதாய் தொந் தியும் தொப்பையுமாய் சாக்கடையில் திரியுமே அதைப் பிடிக்குமா?'' என்றான். மறுபடியும் சிரிப்பலைகள் பரவின.

''கவலைப்படாதீங்க சார். உங்க ரெண்டு பேருக்கும் போட்டியே கிடையாது: இணையானவங்க இருந்தால் தானே போட்டியிருக்கும்?'' ஆனந்தமாய் பொழுதை கழித்த சந்தோஷத்துடன் சித்தார்த் விடை பெற்றுச் சென்றான்.

அடுத்து வந்த நாட்கள் பரபரப்பாய் கழிந்தன. சித் தார்த்தும் முக்கிய வேலையில் மும்முரமாகி இருந்தான். இங்கு வந்தனாவும் மாணவ குழுக்களுடன் வேலையில் தீவிரமாய் இருந்தாள். ஏறக்குறைய மாணவர்கள் கிளம்பு வதற்கு இரண்டொரு நாட்களே மீதம் இருந்தன. அப்போது உயரமான மரத்திலிருந்து கீழே விழுந்து பலமாய் அடிபட்டு இரத்தக்களரியாய் இருந்த ஆளை கண் டார்கள்.

முதலுதவி செய்து மருத்துவமனைக்கு தூக்கிச் சென்று இரத்தம் கொடுத்து காப்பாற்றியதில் மாண வர்கள் பங்கு மகத்தானது. அவர்கள் தங்கி இருக்கும் இடத்திற்கு திரும்ப வெகுநேரம் ஆயிற்று. வந்தனா உட்பட அனைவரும் களைத்துப்போய் உறங்கிவிட்டனர். காலைப் பொழுது நல்லதாக விடியவில்லை. மனசுக்குள் ஏதோ சஞ்சலம் தோன்ற சரியாக சாப்பிடக்கூட

பிடிக்கவில்லை. அவளுக்கு ஏன்? ஏன் இப்படி? காலை ஆங்கில செய்தித்தாளை பார்த்த மாணவர்கள் பதறி அவளிடம் ஓடிவந்தனர்.

மாவட்ட ஆட்சியர் சித்தார்த் தீவிரவாதிகளால் கடத் தப்பட்டிருந்தார். செய்தியைப் படித்த அடுத்த வினாடி வந்தனா மயங்கி விழுந்தாள். தண்ணீர் தெளித்து அவளை எழுப்பி விட்டனர்.

கலெக்டர் கேம்ப் ஆபீஸின் ஐந்தாவது கி.மீட்டரில் இருந்தே காடுதான். முதல் நாள் காலை குறிப்பிட்ட தூரம் வரை கார்ல போயிட்டு, அப்புறம் பைக்குல சென்ற வரை தீவிரவாதிகள் கட்டுத்திவிட்டனர். பாதுகாப்பு படையை புறக்கணித்து விட்டு மக்களை நம்பி சுதந் திரமாக நடமாடியவரை எளிதாக கடத்திவிட்டிருந்தனர்.

முதலில் மயங்கி விழுந்தாலும் விரைவில் வந்தனா தேறி விட்டிருந்தாள். 'அவனுக்கு எதுவும் ஆகாது. எந்த ஆபத்தும் அவனை நெருங்காது. அவன் பத்திரமாகத் திரும்பி வருவான். அவள் சித்துவுக்கு எந்தத் தீங்கும் நேராது' என உறுதியாக, தீவிரமாக சஞ்சலமின்றி நம்பினாள். எண்ணங்களுக்கு நல்ல வலிமையுண்டு.

எதை தீவிரமாக எண்ணுகிறோமோ அதுவாகவே மாறிவிடுவோம் என்று படித்திருக்கிறாள். இன்றைக்கு அதை பரிசோதித்து பார்க்கும் வாய்ப்பு வந்திருக்கிறது. மாணவர்களே ஒரு விநாடி அவள் நம்பிக்கை கண்டு அசந்து போயினர். பல்வேறு தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டே இருந்தன.

கலெக்டர் சித்தார்த் சத்தீஷ்கார் - ஒடிசா மாநில எல்லையில் உள்ள அடர்ந்த காட்டுப்பகுதியில் ஆயுதம்

தாங்கிய 400 மாவோயிஸ்டுகளின் கண்காணிப்பில் பிணைக்கைதியாக இருப்பது தெரிய வந்தது. மாவோயிஸ் டுகள் அவரை விடுவிக்க வேண்டுமானால் மாவோயிஸ்டு களை தேடுதல் வேட்டை நிறுத்த வேண்டும். சிறையில் உள்ள 8 மாவோயிஸ்டு பிரமுகர்களை விடுதலை செய்ய வேண்டும். அவர்கள் மேலுள்ள வழக்குகளை வாபஸ் பெற வேண்டும் என்று 3 நிபந்தனைகளை விதித்தனர். இன்னும் மூன்று நாட்களுக்குள் அதை செய்ய வேண் டும் என்று கெடு விதித்தனர்.

மாநில அரசு கூடி என்ன செய்வது? என விவாதித்தது. பத்திரிகைகள் செய்தித்தாள்களில் இதுவே முதல் பக்கச் செய்தி ஆயிற்று. தமிழக பத்திரிகைகள் இந்த செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வெளியிட்டன. செய்தி அறிந்து அவன் தாய்க்கு உடல்நலமில்லாமல் போனது. வீடே துக்கத்தில் மூழ்கியது.

அண்டை, அயலார் உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லாரும் வீடு தேடி வந்து விசாரித்தனர். ஆனால் கே.எஸ்.வீட்டிலிருந்து ஈ, காக்கை, கொசு கூட எட்டிப் பார்க்கவில்லை. விஷயம் அறிந்ததும் வந்தனா, வீட் டிற்கு போன் செய்து மகேஷிடம் சொல்லிவிட்டாள்.

உமா, ஜானகி இருவரையும் தேற்ற வீட்டிலிருந்த ஆண் மகன்கள் அரும்பாடு பட வேண்டியிருந்தது. ஆறுதலும், தேறுதலும் யாருக்கு யார் சொல்வது என்ற நிலைமை, அதே சமயம் பிணைக்கைதியாய் இருந்த சித்தார்த்தை அவர்கள் மிக கௌரவமாய் நடத்தினர். அவ்வப்பொழுது அவர்களுக்குள் விவாதங்களும் எழுவ துண்டு. முதலில் ஜீப்பில் கடத்திச் சென்றவர்கள் பின்

காட்டுக்குள் பல மைல்கள் நடத்திச் சென்றனர். கால்கள் எல்லாம் புண்ணாகிப் போயின. கடும் குளிர் காய்ச்சலை வரவழைத்து விட்டிருந்தது.

ஆனால் அவன் அதை பொருட்படுத்தவில்லை. அன்றைக்கும் அவர்கள் வழிமுறை தவறு என்று சித்தார்த் விவாதம் செய்து கொண்டிருந்தான். ''ரயில் களை கவிழ்ப்பதும் அப்பாவிகளைக் கொன்றும் நீங்கள் எந்த நியாயத்தை அடையப் போகிறீர்கள்?''

''அதை நாங்கள் தான் செய்தோம் என்று என்ன ஆதாரம்? ரயில் கவிழ்ந்தவுடன் நாங்கள் தான் காரணம் என்று ஆதாரம் கிடைப்பதற்கு முன்னால் தீர்ப்பு எழுதுபவர்கள் ஆயிரக்கணக்கான மக்கள் காட்டைவிட்டு துரத்தப்பட்டபோதும், கொடூரமான முறையில் கொல்லப்பட்டப்போதும் எங்கு சென்றார்கள்? சல்வா ஜூடும் 700 கிராமங்களை தீயிட்டு அழித்திருக்கிறது. மூன்று இலட்சம் மக்களை நிலத்தை அபகரித்து காடுகளுக்குள் துரத்தி இருக்கிறார்கள். மக்களை விரட்டி பன்னாட்டு நிறுவனங்களிடம் நிலத்தை ஒப்படைக்கிறார்கள். இது எங்களுக்கான அரசாங்கமா?''

''அமைதி வழியில் போராடக்கூடாதா? வன்முறை இருபுறமும் கூர்மையான ஆயுதம் அல்லவா? அது உங்களையும் அழித்துவிடும்.''

''அமைதி வழியா? நீங்கள் ஒன்றை மறந்து விட்டீர்கள். வீட்டை இழந்து காடுகளுக்குள் தஞ்சம் புகுந்தவர்கள் காடுகளுக்குள் என்ன அமைதிப் போராட்டம் நடத்த முடியும்? உண்ணாவிரதமா? கண்டன பேரணியா? ஆர்ப்பாட்டமா? உண்மையில் காடுகளில் வேறு

வழியின்றி உண்ணாமல் தான் இருக்கின்றோம். உங்களுக்கு உணவு தரவே நாங்கள் கஷ்டப்படுகிறோம்.

நாங்கள் உண்ணாமல் இருக்கிறோம் என்பதே புரியாதவர்களுக்கு அதை போராட்டமாக செய்தால் மட்டுமா புரிந்து விடப் போகிறது? எங்கள் வீடுகளையும், நிலங்களையும் காப்பாற்றிக் கொள்ள எங்களுக்கு முழு உரிமை உள்ளது. சொந்த அரசாங்கத்தால் கைவிடப்பட்ட மக்கள் வேறு வழியின்றி தான் போராட்டத்திற்கு வருகிறார்கள்.

தீவிரவாதிகள் பிறப்பதில்லை; உருவாக்கப்படுகிறார்கள். நாடு முழுவதும் நடக்கும் எல்லா பிரச்சனைகளுக்கும் நாங்கள் தானா காரணம். எத்தனை அரசியல்வாதிகள் கோடிக் கணக்கில் ஊழல் செய்கிறார்கள். அவர்கள் யாரேனும் கடுமையாக துண்டிக்கப்பட்டிருக்கிறார்களா?''

''கோர்ட் இருக்கிறதே நம் நியாயத்தை எடுத்துரைக்க?''

''செல்வாக்குள்ள, அதிகாரமுள்ள அரசியல்வாதிகளை எதிர்கொள்வது அத்தனை சுலபமானதா? அதுவும் கோர்ட்டில் நீதியும் உடனே கிடைத்துவிடுமா? தாமதமான நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமம்.''

''கனிம வளமான பாறைகளால் நம் நாட்டில் தொழிற்சாலைகள் பெருகும். பலருக்கு வேலை கிடைக்கும். நாட்டின் பொருளாதாரமும் உயரும்.''

''ஐயா! நல்லவிலை கிடைத்தால் பெற்ற தாயையே நீங்கள் விற்று விடுவீர்களா? நாங்கள் கடவுளாக நினைக்கும் வளங்கள் உங்களுக்கு பணம் காய்ச்சி மரங்களா? எங்களுக்கு என்ன தந்தீர்கள்? உங்களிடம் நாங்கள் என்ன

வசதி அனுபவித்தோம்? உங்களால் என்ன நன்மை நடந்தது? பள்ளிக்கூடம், மருத்துவமனை, சாலை வசதி ஏதாவது உண்டா? சுத்தமான குடிநீராவது எங்களுக்கு கிடைத்ததா? எங்கள் விளைபொருள்களுக்கு நியாய மான விலையாவது கிடைத்ததா? போலீஸ் பயமற்ற வாழ்க்கையாவது இருந்ததா?

ஆனால் எங்களை நீங்கள் சிவப்பு பயங்கரவாதிகள் என்பீர்கள்! நீங்கள் தமிழர் தானே? உங்களை ஒன்று கேட்கிறேன் பதில் சொல்லுங்கள். இலங்கையில் கொடூர மான முறையில் தமிழர்கள் கொல்லப்பட்ட பொழுது நீங்கள் ஏன் அமைதியாய் இருந்தீர்கள்? பொங்கி எழுந் திருக்க வேண்டாமா? அரசியல் காரணம் எதுவாய் இருந் தாலும் அப்பாவி மக்கள் கொல்லப்பட யார், என்ன காரணம்? எதுவும் தானாக நடப்பதில்லை; வீர்யமுடன் போராட வேண்டும்.

உங்கள் கவிஞர் சொன்னதை நீங்கள் மறந்துவிட் டீர்கள். ரௌத்திரம் பழகியிருக்க வேண்டாமா? கண்ணீர் விடுவதால் மட்டும் எல்லாம் மாறிப்போகுமா? நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்கள் பிரச்சனையைப் பற்றி பேச உங்களில் ஒருவர் இல்லை; அண்டை மாநிலத்தலைவர் போய் பிரச்சனையை பேசுகிறார். உங்கள் வீட்டில் உள்ள வரின் வலியும், வேதனையும் பற்றி அடுத்த வீட்டுக் காரரை கூப்பிட்டுக் கேட்டால் எப்படி புரியும்? எதையும் சகித்துக் கொண்டு வாழ பழகி விட்டீர்கள்.

விடுதலைப் போராட்டத்தில் சைமன் குழுவை ஏன் புறக்கணித்தார்கள்? அதில் இந்தியர் ஒருவருமில்லை என்பது ஒரு முக்கிய காரணம். நாங்கள் உங்களைப்

போல் இல்லை எங்கள் நியாயத்திற்காக கடுமையாக போராடுகிறோம். யாரோ நிறுவனம் வாழ்வதற்காக எங்கள் வாழ்வாதாரம் அழிக்கப்பட வேண்டுமா? அடக்கு முறைகளுக்கு எதிராக போராடினால் எங்களுக்கு பரிசாகக்கிடைப்பது தோட்டாக்களும் சிறைவாசமும் தான். இதற்கு எல்லாம் நாங்கள் அஞ்சுவதில்லை. அவற்றுக் கெல்லாம் நாங்கள் தயாராகவே இருக்கிறோம்."

அவன் பேசிக் கொண்டே போக எந்த பதிலும் வராதிருக்கவே திரும்பிப் பார்த்தான். சித்தார்த் காய்ச்சல் வேகத்தில் மயங்கி இருந்தான்.



14

மாவோயிஸ்டுகள் விதித்த கெடு அன்றோடு முடியப் போகிறது. தமிழக முதல்வர் கலெக்டரை பத்திரமாக மீட்க நடவடிக்கை எடுக்குமாறு பிரமதருக்கு கடிதம் எழுதி யுள்ளார். தமிழ்நாட்டில் ஆங்காங்கே கலெக்டருக்காக பிரார்த்தனைகள் நடைபெற்றன.

கலெக்டரை மீட்க அம்மாநில முதலமைச்சர் தலை மையில் 4 மந்திரிகளைக் கொண்ட துணைக்குழு அமைக் கப்பட்டது. தேடுதல் வேட்டை நிறுத்தி வைக்கப்பட் டிருந்தது. கலெக்டரை பத்திரமாக மீட்க மாவோயிஸ்டு களுடன் பேச்சுவார்த்தைக்கு தயார் என்று அம்மாநில அரசு அறிவித்தது. அச்செய்தி அறிந்ததும் மாவோயிஸ்

டுகள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த 3 தூதர்களை அறிவித்தனர்.

அதில் ஒருவரான ஆதிவாசிகள் மகாசபை தலைவர் தூதராக செயல்பட மறுத்துவிட்டார். மற்றொருவரான ஊழல் எதிர்ப்பு இயக்க குழுவின் உறுப்பினரும் தான் தூதராக செயல்படமுடியாது என்றும் ஓர் அப்பாவி அதிகாரியை பிடித்து வைத்துக் கொண்டு பகடைக் காயாக பயன்படுத்தக் கூடாது. அவரை நிபந்தனை யின்றி விடுவிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

மேலும் தேடுதல் வேட்டையை நிறுத்த வேண்டும். அப்பாவி பழங்குடியினரை சிறையிலிருந்தும், வழக்கு களில் இருந்தும் விடுவிக்க வேண்டும் என்றும் மாவோ யிஸ்டுகள் இட்ட நிபந்தனைகள் நியாயமானவை. தங்கள் பகுதி நிலங்களை பெரிய கார்ப்பரேட் நிறுவனங் களுக்கு தாரை வார்க்கக்கூடாது என்ற அவர்களின் கோரிக்கைக்கு மாநில அரசு தீர்வு காண வேண்டும்.

மாவோயிஸ்டுகள் உருவாவதற்கான அடிப்படை காரணங்களை ஆராய்ந்து தீர்வு காண அரசு முன் வந்தால், அப்போது பேச்சுவார்த்தையில் பங்கேற்க தான் தயாராக இருப்பதாக தெரிவித்தார். இந்த நேரத்தில் தான் கலெக்டர் உடல்நலமில்லாமல் இருப்பதாகவும், அவ ருக்கு தேவையான மருந்து, மாத்திரைகளை அனுப்பி வைக்குமாறு மாவோயிஸ்டுகள் தகவல் தெரிவித்தனர். அதைக் கேட்டு வந்தனா துடித்துப் போனாள்.

''அவர் ரொம்ப நல்லவர், எந்த விஷயத்தையும் பக்குவமாய் கையாளுவார். கோபமே அவருக்கு வராது.

அவரை மாவோயிஸ்ட் நண்பர்கள் ஏதும் செய்யமாட் டார்கள். அவர் உடல்நலமாக மருந்து, மாத்திரைகளை கொடுத்து அனுப்புங்கள். அவர் நல்ல மனசை மாவோ யிஸ்டுகள் புரிந்து கொள்வார்கள். ஏனென்றால் அவர் களுக்கும் நல்ல மனசு உண்டு என எனக்கு நிச்சயம் தெரியும். அவங்களே அவரை பத்திரமாக அனுப்பி விடுவார்கள். எல்லாரும் அவர் பத்திரமாய் திரும்பி வரணும் என்று பிரார்த்தனை செய்யுங்கள். 'ப்ளீஸ்''' என கண்ணீர் மல்க அனைவரிடமும் வேண்டிக் கொண் டாள்.

அவள் வேண்டுதல் மாவோயிஸ்டுகளிடமும் போய் சேர்ந்தது. ஆதிவாசிகள் மகாசபை தலைவர் மூலம் மருந்து மாத்திரைகள் அனுப்ப அரசு முடிவு செய்தது. அவரும் அதற்கு சம்மதம் தெரிவித்து மருந்து மாத்திரை களுடன் ஹெலிகாப்டர் மூலம் த்ரிமெட்லா சென்று கொடுத்து வந்தார். கெடுவை மேலும் நீடிக்குமாறு முதல் மந்திரி வேண்டுகோள் விடுத்தார்.

கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த அரசு தயாராக இருப்பதால் கெடுவை நீடிக்க வேண்டும் என்றது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வந்தனா மாஞ்சிபாரா சென்று உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டாள். ''அவரை தயவு செய்து விட்டுவிடுங்கள். அவர் எவ்வளவு நல்லவர் என்று உங்கள் மக்களையே கேட்டுப் பாருங்கள் தெரியும். நல்லது செய்பவர்களை பிணைய கைதி ஆக்கினால் நாளைக்கு நன்மை செய்ய யாரும் முன்வருவார்களா? அவர் படத்தை வீட்டில் மாட்டி வைத்திருக்கும் மக்களை

கேளுங்கள். அவர் செய்த நன்மைகளை சொல்வார்கள். இந்த ஊர்மக்களும், ஏன் மாவட்ட மக்கள் அனைவருமே அவரை விடுவிக்க உங்களிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். உங்கள் மக்களுக்கு தொடர்ந்து அவர் நல்லது செய்ய அனுமதியுங்கள்.

விவசாயிகளுக்காக அவர் பல திட்டங்கள் தீட்டியிருக்கிறார்; மக்களுக்கு கல்வி கொடுக்க பல வேலைகளை தொடங்கியிருக்கிறார். நாட்டில் சிறந்த மாநிலமாக உங்கள் மாநிலத்தை மாற்ற அவர் முயற்சித்து கொண்டிருக்கிறார். அவருக்கு பதிலாக பிணைய கைதியாக வேண்டுமானால் நான் வருகிறேன். அவரை விட்டு விடுங்கள்'' என வேண்டுகோள் விடுத்தாள்.

அவள் பின்னே பல பெண்கள் அணி திரள அமைதி போராட்டம் நடத்தினர்.

அதே நேரம் கே.எஸ். உயிருடன் கலெக்டர் திரும்பி வந்தால் கல்யாணத்தை நடத்திக் கொள்ளலாம். அவனே வருவானோ? என்னவோ? இந்நேரம் சுட்டுத் தள்ளியிருந்தாலும் தள்ளியிருப்பார்கள். இங்கே அவர்கள் வீட்டில் போய் முக்காடு போட்டுக் கொண்டு இருக்க வேண்டும். பெங்களூரு போய் மகிளாவை பார்த்துவிட்டு வரலாம். அவள் வாங்கிய இடத்தையும் பார்க்கலாம். 2 கோடி ரூபாய் அவரிடமிருந்து அவள் நாசுக்காகப் பேசி வாங்கியிருந்தாள்.

அதனால் நாளை தள்ளிப் போடாமல் முத்துமணியையும் அழைத்துக் கொண்டு கிளம்பினார். அவளை இங்கேயே விட்டுப் போனால் ஏதாவது உளறி வைப்பாள். அந்த மகாலெஷ்மி கல்லூரி டீரோ என்னமோ

வடமாநிலத்துக்கு போயிருக்கிறாள். அவள் வந்தால் இவள் ஏதாவது சொல்லி குழப்பத்தை ஏற்படுத்துவாள். அதனால் இவளை அழைத்து செல்வதே நல்லது என முடிவு செய்தார்.

ஆனால் பெங்களூரு சென்றவருக்கு அதிர்ச்சி தான் ஏற்பட்டது. அவர் மகள் வேலை செய்த இடத்தை அறிய முடியவில்லை. அவள் முன்பு தங்கியிருந்த இடத்திலும் வேறு யாரோ குடியிருக்க தகவல் அறிய முடியாமல் தவித்தார்.

ஹோட்டலில் தங்கிக் கொண்டு தெரு தெருவாக அவளை தேடிக் கொண்டுத் திரிந்தார். பெண்ணை காணோமே என்று அழுத முத்துமணியை மிரட்டி அடக்கி வைத்தார். அவள் வேலை பழைய அலுவலக வாசலில் நின்று அவள் பெண்ணின் தோழி யாராவது தென்படுகிறார்களா? எனப் பார்த்தார்.

கோடீஸ்வரனான தன்னை இப்படியொரு கட்டடத்தின் முன் பிச்சைக்காரனைப் போல நிற்க வைத்து விட்டாளே? என்று கடுங்கோபம் வந்தது.

ஆனால் வெறும் கோபம் வந்து என்ன செய்ய? கோபத்தை காட்ட வேண்டியவள் எதிரே இல்லையே? வெற்றுச் சுவரிடமா அவர் கத்த முடியும்? பொல்லா கோபக்காரன்.

பெண் போன இடம் தெரியாமல் தவித்து நின்றார். அவள் மட்டும் தொலைந்து போகவில்லை இரண்டு கோடி ரூபாய் பணத்துடன் அல்லவா போயிருக்கிறாள்! அவளை வைத்து அவர் கட்டிய கோட்டை என்ன? எல்லாம் சரிந்து மணற்கோட்டை ஆனதென்ன?

தினமும் அவர் வந்து நிற்பதைப் பார்த்த வாட்ச்மேன் என்னவென்று விசாரித்தான்.

தன் மகளின் போட்டோவை காட்டி விசாரிக்க, வேலை முடிந்து வெளியே வந்த பெண்ணை காட்டி கேட்கச் சொன்னான். அவளிடமும் முழு விவரமும் கிடைக்கவில்லை.

மறுநாள் விசாரித்து சொல்வதாகக் கூறினாள். அடுத்த இரண்டு நாள்கள் அவளை பார்க்க முடியவில்லை. 'ஏனுங்க, அவ செல்லுக்கு பேசுங்களேன்'' என்ற முத்து மணியை முறைத்தார்.

''பெரிய யோசனை சொல்ல வந்துட்டா. அது எப் பவோ உபயோகத்தில் இல்லைன்னு பதில் வந்துடுச்சு.''

''ஏங்க, இப்ப என்ன பண்றது? போலீசுக்கு சொல்ல லாமா?''

''வாயை மூடிக்கிட்டு சும்மா கிட. போலீசுக்கு போனால், மானம், மரியாதை எல்லாம் காத்திலே பறந்திடும்.'' மறுபடியும் அந்தப் பெண்ணையே பார்க்கச் சென்றார். அவளிடம் எந்த தகவலாவது கிடைக்குமா? என்ற நப் பாசையில் தான் சென்றார்.

செல்லும் வழியில் இருந்த ஷாப்பிங் மாலை எதேச்சையாய் அவர் பார்த்த பொழுது அங்கே மகிளா நின்று கொண்டிருந்தாள். அவள் இடையைப் பிடித்த வாறு தாடிக்கார இளைஞன் ஒருவன். கோபத்தில் கண்கள் அப்படியே சிவந்து போயின.

மாவோயிஸ்டுகளால் கடத்தப்பட்ட சித்தார்த் பெரும் போராட்டத்திற்குப் பிறகு பதிமூணு நாட்களுக்குப் பிறகு

விடுவிக்கப்பட அனைவருக்கும் நன்றி சொல்லி வந்தனா உண்ணாவிரதம் இருந்த இடத்திற்கு வந்தான். ஜூஸ் கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்து வைத் தான். எல்லாருக்கும், தனக்காக குரல் கொடுத்த ஒவ் வொருவருக்கும் மக்கள் அனைவருக்கும் சமாதான தூதர்களுக்கும், மீடியாக்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டான். விட்டுச் சென்ற வளர்ச்சிப் பணியை அதே மாநிலத்திலேயே தொடர விரும்புவதாக அறிவித்துவிட்டு வந்தனாவுக்கு துணை நின்ற நண்பர் களுக்கு தனிப்பட்ட முறையில் நன்றியை தெரிவித் தான். அவர்கள் விடைபெற அவன் கண்கள் வந்தனா வின் கண்களை சந்தித்தன. கண்களிலிருந்து உருண் டோடிய கண்ணீர் வார்த்தைகள் சொல்லாத அன்பை சொல்லியது. கண்ணீர் மூலம் இருவரும் பேசிக் கொண் டார்கள். ''எனக்காக நீ போராடியதை அறிந்தேன். நான் எத்தனை அதிர்ஷ்டக்காரன்.''

''இல்லை நான் தான் பாக்கியசாலி. உங்களைப் போன்ற அருமையான மனிதர் கிடைக்க புண்ணியம் செய்திருக் கிறேன்.''

''வாழ்க்கை மிகவும் அழகானது'' என்றாள்.

தன் வீட்டிற்கு போன் செய்து பேசினான். வந்தனா அவனுக்கு முன்னால் கிளம்பி ஊருக்குச் சென்று சேர்ந்து விட்டாள். பின்னால் விமானத்தில் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். வாசலில் ஆரத்தி எடுத்து கண்ணேறு கழித்து வரவேற்றனர். ஜானகி மெலிந்து போயிருந்தாள். மகன் அணைத்துக் கொண்டபொழுது வீட்டிலிருந்த அனை வருக்கும் கண்ணீர் வந்தது. எவ்வளவு பெரிய ஆபத்தி லிருந்து மீண்டு வந்திருக்கிறான்.

நடந்த விஷயங்களை விலாவாரியாக அனைவருக்கும் எடுத்துரைத்தான். வந்தனாவின் போராட்டத்தைக் கேட்ட அனைவரும் நெகிழ்ந்து போயினர்.

''எவ்வளவு அருமையான பொண்ணுப்பா! அவள் கிடைக்க உண்மையிலேயே நாம் தான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். உனக்காக உயிரையே கொடுக்கும் பெண் சுலபத்தில் கிடைக்கமாட்டாள்.

கல்யாணத்தை திட்டமிட்டபடி நாளை மறுநாளே வைத்துக் கொள்ளலாம் தானே? இனியும் தள்ளிப் போட வேண்டாம். அவள் நம் வீட்டிற்கு எப்பொழுது வருவாள்? என காத்துக் கொண்டு இருக்கிறேன்.''

''நல்லது; அப்படியே செய்து விடலாம். கே.எஸ். வீட்டிற்கு உடனே பேசுகிறேன்.''

கே.எஸ். வீட்டில் இருந்த பொழுதுதான் சம்பந்தி வீட்டிலிருந்து போன் வந்தது. அந்த நேரத்தில் வந்தனா வீட்டில் இல்லை. கல்லூரிக்கு சென்றிருந்தாள். ''சரிங்க சம்பந்தி. நீங்க சொன்னால் சரியாத்தான் இருக்கும். அப்படியே செஞ்சுடலாம்.

நாளைக்கு மாலை மாப்பிள்ளை அழைப்பு; அடுத்த நாள் கல்யாணம். ஓகே தான். உங்க வீட்டுப் பெண் அவள் என்றைக்கு வந்தால் என்ன? எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஒரு பஸ்ஸை அனுப்பி உறவுக்காரங்களை எல்லாம் வளைச்சு கொண்டு வந்துடலாம் அது பெரிய விஷயமில்லை.''

பேசி முடித்துவிட்டு முத்துமணியிடமும் அவர் பெண்ணிடமும் பொதுவாய் சொன்னார். ''மாப்பிள்ளை வீட்டார் பேசினார்கள்.

அதை நீங்களும் தானே கேட்டீர்கள். உன் பொண்ணை கல்யாணம் பண்ணிக் கொள்ள தயாராய் இருக்கச் சொல்லு. அந்த தாடிக்காரனை விட அருமையான மாப்பிள்ளை. கோடி கணக்கில் சொத்து உள்ளவன். அதை விட அதிகாரமும், செல்வாக்கும் வாய்த்தவன். இவனை கல்யாணம் பண்ணிக் கொண்டால் நமக்கு பலவித ஆதாயங்கள் உள்ளன. அதையெல்லாம் உன் பெண்ணுக்கு எடுத்துச் சொல்லு.

மேலும் கண்ணுக்கு அழகானவன். உன் பெண்ணைப் போல இல்லாமல் பண்புள்ளவன். நான் போய் சில ஏற்பாடுகளை செய்துவிட்டு வருகிறேன். இவள் எங்கேயும் தப்ப முடியாது. வாசலில் காவலுக்கு ஆட்கள் இருக்கிறார்கள்'' என எச்சரித்துவிட்டு புறப்பட்டார்.

முத்துமணி தன் மகளைப் பார்த்தாள். அவள் எதற்கும் அலட்டிக் கொள்ளவில்லை. அவளுக்கே தன் மகள் யாரோ போல் தோன்றினாள். கல்யாணம் செய்து கொள்ளாமலே யாரோ ஓர் இளைஞனுடன் அவள் குடித்தனம் நடத்தியதை இன்னும் அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அவனுக்கே கல்யாணம் பண்ணி வைத்துவிடலாம் என்றால் அவன் கல்யாணம் செய்து கொள்ள தயாராய் இல்லை. தனக்கு திருமணம் செய்து கொள்ளவே பிடிக்காது என்றும், அதனால் தான் மகிளா கருவைக்கூட கலைத்தான் என்றும் கூறியபொழுது அதிர்ந்தே போனாள்.

மகிளா அப்பாவிற்குகூட பயப்படவில்லை. நீங்க செய்யாத தப்பையா, நான் செய்து விட்டேன்? என்பது

போல் அலட்சியமாக நின்றாள். அப்போது தான் சித்தார்த் விடுதலையான செய்தி தெரிந்தது. அவன் தலையில் இவளை கட்டிவிட்டால் பல பிரச்சனைகள் தீர்ந்து விடும். இவள் களங்கம் மறைந்துவிடும். தன் தொழிலுக்கு பாதுகாப்பு கிடைத்துவிடும் என்று கே.எஸ். திட்டவட்டமாய் தீர்மானித்தார்.

முத்துமணிக்கோ தன் மகள் மேல் ஆத்திரம் இருந்தாலும் வெறுக்க முடியவில்லை. எப்படியோ அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைந்தால் போதும் என்று நினைத்தாள். 'நல்ல குடும்பத்திற்கு சென்றால் நல்ல படியாகி விடுவாள்; இயல்பில் அவள் ஒன்றும் கெட்ட வளல்ல.

எவ்வளவோ நல்ல குணங்கள் அவளிடம் உண்டு. குடும்ப சூழல் அவளை இப்படி மாற்றிவிட்டது.நல்ல சூழல் அமைந்தால் அருமையாக வாழ்வாள். தப்பு செய்திருக்கிறாள்தான். மன்னிக்க முடியாத தப்பாக இருந்தாலும் அறியாமல் செய்த தவறு; அப்பாமேல் காட்ட முடியாத கோபத்தை தாறுமாறாக நடந்து வெளிப் படுத்தி இருக்கிறாள். அவ்வளவுதான். இந்தக் கல் யாணம் நடக்க வேண்டும்; கடவுளே!' என வேண்டிக் கொண்டாள்.

சித்தார்த்தின் போட்டோவைக் கொண்டு வந்து மகளிடம் நீட்டினாள்.

அலட்சியமாக பார்த்தவள் அவன் கம்பீரத்தில் கவரப்பட்டு கையில் வாங்கிப் பார்த்தாள். ''வாவ்' வெரி ஹேண்ட்ஸம்.இவனை கல்யாணம் செய்து பார்த்தால்

என்ன?' என்று அவளுக்குத் தோன்றியது. உடனே ''அம்மா நான் வெளியே போக வேண்டும்'' என்றாள்.

''ஏன்டி?''

''பியூட்டிபார்லர் போகவேண்டும். கல்யாணத்திற்கு தயாராக வேண்டாமா?'' ஒரு கணம் அகமகிழ்ந்து போனாள். ஆனாலும் மகளிடம் ஏமாந்துபோக அவள் தயாராய் இல்லை.

''உன் அப்பா வெளியே போகக்கூடாது என்று சொல்லி யிருக்கிறார். பியூட்டி பார்லரில் இருந்து ஆளை இங் கேயே வரவழைக்கிறேன்.''

சொன்னது போலவே பியூட்டி பார்லரில் இருந்து ஆள் வந்துவிட பேஸியல் செய்து கொண்டு கண்ணை மூடி மகிளா படுத்திருந்த பொழுது வந்தனா வந்து சேர்ந்தாள். ''என்னம்மா விஷயம்?'' எனக் கேட்டாள்.

''நாளை மறுநாள் கல்யாணம் அல்லவா? அந்த வேலைகள் தான் ஆரம்பமாகிவிட்டன.'' வந்தனா முகம் மலர்ந்து போனாள்.

சித்தார்த் பற்றிய நினைவே மலரால் வருடியது போல் இருந்தது. அறைக்குள் நுழைந்த மறுகணமே அலைபேசி அழைத்தது. சித்தார்த்தான் என சொல்லாமலே தெரிந்தது.

''ஹாய்! விஷயம் தெரிந்ததா? நாளை மறுநாள் நீ என்னுடையவள் என்பதை உலகத்திற்கே அறிவிக்கும் நாள்.''

''ம். எனக்கும் எப்போது அந்த நிமிடம் வரும் என்று இருக்கிறது. நீங்கள் எனக்கே எனக்கு என்பதை இன் னும்கூட முழுதாய் நம்ப முடியவில்லை.''

"உனக்கு மட்டும் தான். எனக்கு ஒரு கனவு சொல்லட்டுமா?"

"என்னவாம்?"

"ஒரு அருமையான தேசத்தில் 100 வீடுகள் இருக்குமாறு ஒரு அப்பார்ட்மெண்ட் வாங்க வேண்டும்."

"எதற்கு?"

"நம் மகள் விளையாடும் பொழுது பழக நல்ல நண்பர்கள் வேண்டுமல்லவா? அதற்குத்தான்." என்ற பொழுது அப்படியே சிலிர்த்துப்போனாள். மறுநாள் காலையில் கூட எந்தவித வித்தியாசமோ வேற்றுமையோ அவள் கண்டுபிடிக்கவில்லை.

மாலை கல்யாண மண்டபத்திற்கு கிளம்பும் பொழுது தான் தன் மகளை தகுந்த துணையுடன் காரில் ஏற்றி அனுப்பிவிட்டு கே.எஸ். அவளருகே வந்தார்.

"நீ எங்கே கிளம்புகிறாய்?"

"ஏன்?" ஒன்றும் புரியாமல் வந்தனா விழித்தாள்.

"என் மகிளாவுக்கும், சித்தார்த்துக்கும்தான் கல்யாணம். நீ எதற்கு அங்கே?"

"என்ன...? என்...ன.... சொல்கிறீர்கள்?"

"தாய், தகப்பனில்லாத அனாதை நீ! அடுத்த வேளை சாப்பாட்டிற்கே ஏங்கி நிற்கிற பிச்சைக்காரி நீ! உன்னை எப்படி பாரம்பரியமிக்க குடும்பத்தில் ஏற்றுக் கொள்வார்கள்? எவனோ கிழவனுக்கு கட்டிக் கொடுக்க இருந்தவள் கொம்புத்தேனுக்கு ஆசைப்படலாமா? கனகம்

உன்னைப்பற்றி சொல்லாவிட்டாலும் உன்னைப் பற்றி விசாரித்து அறிந்து கொள்வது எனக்கு பெரிய விஷயமில்லை."

அப்படியே வந்தனா நொறுங்கிப் போனாள்.

"நீ வெளியில் வந்தால் பிரச்சனை தான். திருமணம் முடியும் வரை அறைக்குள்ளேயே இரு" எனக்கூறி அறைக்குள்ளே அவளைத் தள்ளி கதவை பூட்டிவிட்டு மண்டபத்திற்கு பெண்ணை கண்காணிக்க கிளம்பினார்.

முத்துமணிக்கு மனது கேட்கவில்லை; 'இந்தப் பெண் என்ன தவறு செய்தாள்? ஏன் இவள் தண்டனை அனுபவிக்க வேண்டும்?' என்று தோன்றியது.

அதனால் மாற்று சாவியால் அறைக்கதவை திறந்து விட்டு.

"நீ இங்கே இருக்காதம்மா. எங்கேயாவது சென்று விடு. முடிந்தால் எங்களை மன்னித்துவிடு. உனக்கு ஆயிரம் பேர் நல்ல மாப்பிள்ளைகள் கிடைப்பார்கள். என் பெண்ணிற்கு சித்தார்த்தை விட்டால் யாரும் கிடைக்க மாட்டார்கள். உன் மனசில் ஏதாவது கனவிருந்தால் அழித்துவிடு. உன் சகோதரியாய் இருந்தால் விட்டுக் கொடுக்கமாட்டாயா?"

கண்ணீர் கட்டுப்பாடின்றி பொங்கி வழிய தன் உடமைகளை எடுத்துக் கொண்டு எங்கு செல்கிறோம்? என உணர்வின்றி புறப்பட்டாள்.

மண்டபத்திற்கு சுநீல் முன்பே வந்து சேர்ந்துவிட்டான். நண்பனை மிகப் பெரிய ஆபத்திலிருந்து மீண்ட பிறகு இப்பொழுது தான் பார்க்கப் போகிறான்.

அவனுடன் போனில் பேசினாலும் நேரில் பார்க்கும் சந்தோஷம் வருமா? ஓர் இனிய சர்ப்ரைஸ் கொடுக்கத் தான் அறிவிக்காமல் மண்டபத்துக்கு வந்தது: மகி வெட்ஸ் சித்து என்று பூக்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்ததை ரசித்தவாறே உள்ளே நுழைந்தான்.

அவன் யாரென்று கே.எஸ்ஸிற்கு தெரியவில்லை. வந்தனாவிற்கு வாழ்த்து தெரிவிக்கலாம் என்ற எண் ணத்துடன் அவள் எங்கே? என்று தேடினான்.

அவள் கண்ணில் படாததால் அருகேயிருந்தவரிடம் ''இன்னும் மணப்பெண் வரவில்லையா?'' என விசாரித் தான்.

''அவள் எப்பொழுதோ வந்துவிட்டாளே! அதோ பாருங் கள்'' என அவர் கைக்காட்டிய திசையில் மகிளாவைப் பார்த்து திகைத்தான்.

'யார் இந்தப் பெண்? என்ன நடக்கிறது இங்கே? மகாலெஷ்மி எங்கே?' என எண்ணியவாறே, ''பெண் ணின் பெயர் மகாலெஷ்மியா?'' என்றான். ''கோடீஸ்வரன் வீட்டுப் பெண் மகாலெஷ்மி தான். ஆனால் அவள் பெயர் மகிளா.''

''இந்தப் பெண்ணிற்கு சகோதரிகள் இருக்கிறார் களா?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. செல்வம் கொழிக்கும் ஒரே வாரிசுதான். ஏன் தம்பி அடுத்தப் பெண் இருந்தால் நீங்களே கட்டிக்கிடலாம்னு ஆசையா?''

என்னவோ சிக்கல் என புரிந்து போனது. சித்தார்த் திற்கு போன் செய்தால் பேண்டு வாத்திய சத்தத்தில்

அது அவனுக்கு கேட்கவே இல்லை. மாப்பிள்ளை அழைப்பில் அவன் உற்சாகமாய் கலந்து கொண்டு வந்தான்.

வாசலிலேயே நின்று அவனை அழைத்துக் கொண்டு தனியறைக்கு ஓடினான். மகிளா நேரில் அவனைப் பார்த்து கிறங்கிப் போய் நின்றாள். 'போட்டோவை விட நேரில் மிக அழகாய் இருக்கிறான்' என எண்ணிக் கொண் டாள்.

''ஹேய்! என்னப்பா என் ஆளை பார்க்கவிடாமல் இப்படி இழுத்து வருகிறாய்? நான் எவ்வளவு அவளுக் காக ஏங்கிப் போயிருக்கிறேன் என்பது உனக்குத் தெரி யாதா?''

''அது தெரிந்ததால்தானடா இங்கு இழுத்து வந்தேன்...''

'மேலே அவன் கூறும்முன் பெண் வீட்டார் வந்து நிச்சயம் செய்ய அவனை கூப்பிட்டார்கள்.'

இருடா, போய்விட்டு வந்துவிடுகிறேன். பிறகு பேசிக் கொள்ளலாம்.''

''டேய்! ஏமாந்து போகாதே. அங்கேயிருப்பது உன் மகியில்லை. வேறு யாரோ ஒரு மகிளா'' என கிசுகிசுப் பாய் அவசரமாக கூறிவிட, ''டேய் விளையாடாதே!''

''சே! உண்மையப்பா! இதில் விளையாடுவதற்கு என்ன இருக்கிறது? மகாவை நீ பார்த்த முதல் நாளி லிருந்து நான் அறிவேன் தானே? இந்தப் பெண்ணை யும் எங்கோ பார்த்த நினைவு. சட்டென்று நினைவிற்கு வரவில்லை.''

அதற்குள் உமா அங்கே வந்தாள்.

''அண்ணி மகாவை நீங்கள் பார்த்தீர்களா?''

''இல்லை; தான் போன பொழுது அவள் பாத்ரூம் போயிருப்பதாக சொன்னார்கள். சரி நிச்சயம் செய்யும் பொழுது பார்த்துக் கொள்ளலாம் என்று வந்துவிட்டேன்.''

ஏதோ யோசித்த சித்தார்த் நிச்சயம் செய்யும் ஹாலுக்கு வந்தான். ''வாங்க மாப்பிள்ளை. இப்படி வந்து உட்காருங்கள்'' என ஐயர் கூற.

''முதலில் நான் மகியை பார்க்க வேண்டும்'' என்றான்.

''அதற்குள் என்ன அவசரம் மாப்பிள்ளை? ஆயுசுக்கும் அவளைத் தானே பார்க்கப் போகிறீர்கள்?''

இருந்தாலும் அவன் பிடிவாதமாய் நின்றான். அவளை பார்க்காமல் மணமேடையில் அமர்வதில்லை என உறுதி காட்ட, அவன் தான் மகாலெஷ்மியை பார்த்ததே இல்லையே? என்ற நிம்மதியுடன் மகிளாவை அழைத்து வந்து அவன் முன் நிறுத்தினாள் முத்துமணி. அவளை பார்த்த மறுகணமே ''யாரிவள்?'' என கேள்வி கேட்டான். அவன் கேள்வி அங்கிருந்த அனைவரையும் தூக்கிவாரி போடச் செய்தது.

''என்ன? மாப்பிள்ளை கல்யாணப் பெண்ணைப் பார்த்து யாரென்று கேட்கிறார்?''

''என் மகி; மகா... மகாலெஷ்மி எங்கே?''

அதற்குள் ஜானகி, உமாவும் அங்கே வந்தனர். ''என்ன சித்தார்த்?'' என்றவர்கள் கல்யாண பெண்ணைப் பார்த்து அதிர்ந்து போனார்கள்.

''யார் இந்தப் பெண்? மகாலெஷ்மி எங்கே?'' என அவர்களும் ஏக காலத்தில் கேட்டனர்.

''என்னடா இது? குடும்பமே கல்யாணப் பெண்ணைப் பார்த்து யாரென்று கேட்கிறார்கள்? அப்படியானால் அவர்கள் பெண் பார்த்தது இவளையில்லையா? கே.எஸ். கலெக்டர் மாப்பிள்ளை என்றதும் ஏதாவது கோல்மால் பண்ணிவிட்டாரா?'' மண்டபமே கசமுசாவானது. சித்தார்த்தின் தந்தையும், மகேஷும் கூட திகைத்து போய் நின்றிருந்தார்கள்.

''என்ன சம்பந்தி கேட்கிறீர்கள்? இவன் தான் என் பெண்; உங்கள் மருமகள்'' என கே.எஸ். கொஞ்சம் கூட தயங்காமல் அழுத்தம் திருத்தமாகக் கூற, ''இல்லை; இவள் எங்கள் மருமகள் இல்லை'' என ஜானகியும் அதே அழுத்தத்துடன் சொன்னாள்.

''என் வீட்டிற்கு நீங்கள் தானே வந்து வைரமாலைப் போட்டு பாக்கு மாற்றினீர்கள்?''

''நாங்கள் பாக்கு மாற்றியது உண்மைதான். ஆனால் இந்தப் பெண்ணை நிச்சயிக்கவில்லை. அவள் வேறு ஒருத்தி.''

''என்ன சம்பந்தி இப்படி சொல்கிறீர்கள்? எனக்கு இவள் ஒருத்தி தான் பெண். இவளை நிச்சயம் செய்து விட்டு இப்படி மறுப்பது தான் நல்ல குடும்பத்திற்கு அழகா? என் பெண்ணிற்கு என்ன குறைச்சல்? அழகில்லையா? படிப்பில்லையா? இல்லை பணம் தான் இல்லையா? எங்களை இப்படி அவமானம் படுத்தாதீர்கள். உங்கள் கால்களில் வேண்டுமானால் விழுகிறேன். அவள் திருமணம் நின்று போனால் யார் அவளை

மணந்து கொள்வார்கள்? ஊரைக்கூட்டி என் பெண்ணை அசிங்கப்படுத்தாதீர்கள். இப்படி நீங்கள் செய்வது நியாயமா? ஊரையே ஆட்சி செய்யும் கலெக்டரே ஏமாற்றலாமா? உங்களுக்கு ஒரு பெண் இருந்தால் என் நிலைமை புரியும். எவ்வளவு வரதட்சணை வேண்டு மானாலும் தந்து விடுகிறேன். என் சொத்தெல்லாம் என் மகளுக்கு தானே? இதுவரை யாரிடமும் நான் கெஞ் சியதில்லை.

என் மகளுக்கு வாழ்வு கொடுங்கள்'' என உருக்கமாய் பேசினார்.

''ஐயா, நாங்கள் பார்த்து நிச்சயம் செய்த பெண் வேறு. இந்தப் பெண் வேறு. வேறு பெண்ணை காட்டி நிச்சயம் செய்ய வைத்து இன்று மணமேடையில் பெண்ணை மாற்றி நாடகம் ஆடுவது நீங்கள் தான்'' என உமா கோப மாகக் கூற,

''என்ன நான் நாடகம் ஆடுகிறேனா? இப்படி என்னைப் பார்த்து யாராவது கேட்க முடியுமா? பெண்ணை பெற்றதால் தாழ்ந்து போனேனா? நான் எப்பேர்பட் டவன் தெரியுமா? உங்களை எல்லாம் சும்மா விடப் போவதில்லை. கௌரவமான குடும்பம் என்று ஏமாந்து போனேன். என் பெண் கழுத்தில் தாலி கட்டாமல் யாரும் இங்கிருந்து நகர முடியாது.''

சுநீலுக்கு அப்பொழுது தான் அந்தப் பெண்ணை எங்கே பார்த்தோம் என்று நினைவிற்கு வந்தது. சித் தார்த்தை நெருங்கினான்.

''சித்தார்த் எல்லாரும் ஒரு நிமிடம் கவனியுங்கள். இந்தப் பெண் யாரென்று என்னால் கூற முடியும்'' என

உரக்கச் சொல்ல அனைவரும் அமைதியாய் திரும்பிப் பார்த்தனர்.

''உங்கள் பெண் படிக்கிறாளா?'' என கேள்வி கேட் டான்.

''இல்லை. பெங்களூருவில் இலட்ச ரூபாய் சம்பளத் தில் வேலை பார்க்கிறாள்.''

''சித்தார்த் ஞாபகம் இருக்கிறதா? ஹோட்டலில் ஓர் இளைஞனுடன் சேர்ந்து நடனமாடி தண்ணியடித்து கலாட்டா செய்தப் பெண். நீ மங்களூருக்கு செல்ல வந்த பொழுது பார்த்தாயே?''

''ஆமாம். எனக்கு நினைவிற்கு வந்துவிட்டது. தாடிக்கார இளைஞனுடன் ஆடி காவித் தொண்டர்களால் விரட்டியடிக்கப்பட்ட பெண்தானே?''

''ஐயோ! என் பெண்ணை ஒதுக்க அப்பட்டமாய் பொய் பேசுகிறார்களே?''

''இது பொய்யில்லை. போலீஸ் ஸ்டேஷனில் கேஸ் பதிவாகி இருக்கிறது. கோர்ட்டில் தண்டனை பெற்ற திற்கு வலுவான சாட்சிகளாக அன்றைய பத்திரிகைகள் இருக்கின்றன. ஏன் உங்கள் பெண்ணையே கேட்டுப் பாருங்கள்? உண்மையா?இல்லையா? என்று தெரிந்து விடும்.''

''அவளை ஏன் கேட்க வேண்டும்?'' என மறுப்ப தற்குள்.

''உண்மை தான். அதற்கு என்ன இப்போ? எனக் கொன்றும் கல்யாணம் செய்து கொள்ள விருப்பமில்லை. லிவிங் டூ கெதர் வாழ்க்கை தான் பிடிச்சுருக்கு. இவர்

தான் மிரட்டி என்னை இங்கு அழைத்து வந்தார்'' எனக்கூற அந்தக் கல்யாணம் நின்று போனது. மகா யார்? அப்படியானால் அவள் இவர் பெண்ணில்லையா? அவள் ஏன் இவர் பெண் போல ஏமாற்றினாள்? ஆனால் ஒருமுறை கூட தன் தாய், தந்தை இவர்கள் என்று அவள் சொல்லவில்லையே? அவளுக்கும், இவர்களுக்கும் சம்பந்தமே இல்லையே? என சந்தேகப்பட்டது சரியாகப் போனதே? மகா எங்கே? அவள் யாராய் இருந்தாலும் அவள் தான் எங்கள் வீட்டு சின்ன மருமகள். முதலில் அவளைத் தேடி கண்டுபிடிக்க வேண்டும்.

அவளை தேடிய பொழுதுதான் அவளைப் பற்றிய விவரங்கள் தெரிந்தன. எத்தனை அருமையான பெண்? எவ்வளவு துன்பங்களை அனுபவித்தும் வாழ்க்கையை நேசித்து நிறைவாய் வாழ்ந்திருக்கிறாளே! எத்தனை காலம் ஆனாலும் அவளுக்காக காத்திருக்கலாம்.

எங்களால் தேடி கண்டுபிடிக்க முடியாவிட்டாலும் அவளே எங்கள் அன்பைத் தேடி வருவாள் என குடும்பமே காத்திருந்தது. ஏனென்றால் வாழ்க்கை அழகானதாயிற்றே?

டெல்லியில் ஐ.ஏ.எஸ். நேர்முகத் தேர்வு. வந்தனா நம்பிக்கையுடன் இருந்தாலும் கனவு நனவாகும் பொழுது ஏற்படும் கடைசி நிமிட பதட்டம் இருந்தது. உள்ளே நுழைந்தவளின் ஃபைலை பார்த்ததும் பாராட்டினார்கள்.

''இரு மாநிலங்களுக்கிடையில் நதிநீர் பிரச்சனை. எப்படி தீர்ப்பீர்கள்?''

''இரு மாநில மக்களின் நிலைமைகளை அவர்களுக்கு ஒருவருக்கொருவர் புரிய வைப்பேன். ஒருத்தர் பிரச்சனையை மற்றொருவர் புரிந்து கொண்ட பிறகு நியாயத்தை எடுத்துரைப்பேன்.''

''கல்லூரியில் கலை நிகழ்ச்சிகளில் பங்கு பெற்று உள்ளீர்கள் என குறிப்பிட்டு இருக்கிறீர்கள். என்ன நிகழ்ச்சி?''

''பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகள்.''

''அப்படியென்றால்...?''

''உதாரணமாக பெண்கள் வேலைக்கு செல்லலாமா? கூடாதா? என எடுத்துக் கொள்ளலாம்;'' என்ற தலைப்பை கூறி அதை ஆதரித்தும், ஆதரிக்காமலும் பேசிக்காட்டி முடிவில் தீர்வு சொன்னாள்.

கைத்தட்டி அதிகாரிகள் ரசித்தனர். ''இப்ப ஒரு சாதாரண கேள்வி. உங்களிடம் ஒரு ஐம்பது ரூபாயை கொடுத்தால் எப்படி உபயோகமாய் செலவு செய்வீர்கள்?''

''சார்! முதலில் போய் சாப்பிடுவேன்'' என்றாள்.

சட்டென்று சிரித்தவர்கள். ''ஏன்? நீங்கள் சாப்பிடவில்லையா?'' என ''இன்டர்வியூ டென்ஷனில் சரியாகவே சாப்பிடவில்லை. அதனால் முதலில் சாப்பிடுவேன்.''

''அவ்வளவு பசியா? போய் சாப்பிடுங்கள். பிராக்டிகல் பர்ஸனாய் இருக்கிறீர்கள். பணத்தை வைத்துக் கொண்டு நான் தானம் செய்வேன்; உதவி செய்வேன் என்ற போலித்தனமான பதில்கள் உங்களிடம் இல்லை. வெரிகுட்! நீங்கள் செலக்ட்டேடு?''

''நன்றி'' கூறி வெளியே வந்தாள்.

வந்தனா என்ற மகாலெஷ்மி ஐ.ஏ.எஸ். வாசலில் நின்று கொண்டிருந்த சித்தார்த்தை பார்த்ததும் உருகிப் போய் அருகே ஓடினாள்.

''நீயில்லாமல் எப்படி நான் வாழ்வேன் என்று நினைத் தாய்? என்னை விட்டு போக எப்படி உனக்கு மனசு வந்தது? இனி நான் உன்னை ஒரு வினாடி கூட விடுவதாய் இல்லை'' என,

''நானும் உங்களை பிரிவதாய் இல்லை'' என அவன் கைகளைப் பற்றிக்கொண்டு ''வாழ்க்கை மிகவும் அழ கானது'' என்றாள்.